சிவா தியாகராஜா

# நெடுஞ்சுடர்

மானுடத்தின் நேசகியாய் வாழ்ந்து நிறைந்த
ஒரு தாயின் வாழ்வும் வரலாறும்



# நெடுஞ்சுடர்

## சிவா தியாகராஜா

# நெடுஞ்சுடர்

### மானுடத்தின் நேசகியாய் வாழ்ந்து நிறைந்த ஒரு தாயின் வாழ்வும் வரலாறும்

*தொகுப்பாசிரியர்கள்:*
*சந்திரவதனா செல்வகுமாரன்,*
*சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*

மனஓசை

# Siva Thiyagarajah

(Sivagamasunthary Thiyagarajah)

# Nedunchudar



*23.04.1934 - 18.05.2022*

**நெடுஞ்சுடர்**
***சிவா தியாகராஜா (சிவகாமசுந்தரி தியாகராஜா)***
*மானுடத்தின் நேசகியாய் வாழ்ந்து நிறைந்த*
*ஒரு தாயின் வாழ்வும் வரலாறும்*

*வெளியீடு: மனஓசை*
*மூன்றாம் பதிப்பு: செப்டெம்பர் 2023*

*அட்டை வடிவமைப்பு: துமிலன் செல்வகுமாரன்*
*நூல் வடிவமைப்பு: சந்திரவதனா*

*தொகுப்பாசிரியர்கள்:*
*சந்திரவதனா செல்வகுமாரன்*
*சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*

***NEDUNCHUDAR***
***Siva Thiyagarajah (Sivagamasunthary Thiyagarajah)***
***Memories of a mother who dedicated her life to humanity***

*© 2023 Manaosai, Germany*
*ISBN: 978-3-9813002-9-1*

*3rd Edition: September 2023*
*Language: Tamil & English*

*Cover design: Thumilan Selvakumaran*
*Book design: Chandravathanaa*
*Compilation: Chandravathanaa Selvakumran*
*Chandra Ravindran (Chandrakumary)*
*Published by Manaosai, Germany*
*Printed in Stuttgart, Germany*

ஈழத்தாய் மண்ணுக்கு...

*அம்மாவே ஒரு நூலகம்!*
*அம்மாவைப் பற்றி ஒரு நூலில்,*
*ஒரு சில பக்கங்களுக்குள்*
*எழுதி முடிப்பது எப்படி?*

# <u>உள்ளடக்கம்</u>


வீரத்தாய் .......................................................... 13
அறிமுகவுரை........................................................ 15
மாண்புரை............................................................19

1. கொச்சகக்கலிப்பா - மறம் காத்த மாதரசி ...............25
பவானி தர்மகுலசிங்கம்
2. அம்மா ...............................................................29
சந்திரவதனா
3. அம்மா ஒரு பேசும் தெய்வம் ......................................51
சந்திரா இரவீந்திரன்
4. அன்பு அம்மா .......................................................76
சந்திரபிரபா
5. கனிவு கருணை தைரியம் மிக்க என் மாமி ................77
இரவீந்திரகுமாரன்
6. மாமியின் பண்பு அரியது ...........................................89
மஞ்சுளா பிறேமராஜன்
7. White chocolate, roses, lilies and hibiscus ....................95
தீபா (Theepa)
8. எங்கள் அப்பம்மாவும் நானும் .......................................99
ஜனகன் பிறேமராஜன்
9. அன்பு அப்பம்மா .....................................................131
கௌசிகன் பிறேமராஜன்
10. அப்பம்மா...............................................................132
மொறிஸ் பார்த்திபராஜன்
11. Dear Ammama ........................................................133
தரணியன் (Tharanian)
12. அப்பம்மா பற்றிய சில நினைவுகள் ..........................135
தக்சாயினி மோகனதாஸ்
13. எங்களுக்காகவே வாழ்ந்த எங்கள் அம்மம்மா ........138
பகீந்துஷா, மயூரன், சிவகாமி
14. Dear Ammama ........................................................140
ரிஷியன் (Rishiyan)
15. Ammama I miss you so much ...................................142
தர்ஷியா (Tharshiya)

16. அன்புள்ள அம்மம்மா ........................................ 143
ராம்கிஷ் (Ram)
17. அன்பின் சிகரம் எங்கள் மூத்தக்கா ........................ 144
வடிவழகாம்பிகை ஆறுமுகம்
18. என் அன்பு மைத்துனி சிவகாமசுந்தரி ...................... 157
சகுந்தலா வேல்முருகு
19. எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் மூத்தமாமி .......... 159
வளர்மதி ஜெகன்
20. எங்கள் அன்புப் பெரியம்மா .................................. 162
ரோகினி பவானிசங்கர்
21. மூத்தமாமியின் நினைவுகள் ...................................... 165
அருள்மதி ரஞ்சன்
22. ஆத்தியடி மாமி ...................................................... 169
சுந்தரராஜா கேதீஸ்வரன்
23. எனக்கும் அவ அம்மா ............................................ 178
தர்மு
24. உறவின் வடிவான எம் அம்மா ................................ 179
கலையரசி யோகேஸ்வரன் (றஞ்சி)
25. என்னைப் பெறாத என் அன்னை .......................... 183
தமிழ்ச்செல்வி

## இரங்கற் செய்திகள்

இதய வணக்கம் .................................................................. 188
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - யேர்மனி
இறுதி வணக்கம் ................................................................ 191
மாவீரர் பணிமனை,
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - யேர்மனி
கண்ணீர் காணிக்கை.............................................................. 197
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
தமிழாலய நிர்வாகம் மன்கைம்
இரங்கற் பகிர்விதழ்.............................................................. 198
மாநில மற்றும் கோட்டப்பொறுப்பாளர்கள்
றைன்லாண்ட்பாள்ஸ் மாநிலம் -
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
இறுதி இரங்கல் வணக்கம் ................................................ 199
தமிழ்ப் பெண்கள் அமைப்பு - யேர்மனி

*இறுதி இரங்கல் வணக்கம் ....................................................200*
*தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி*
*தமிழாலயங்களின் ஒருங்கிணைப்பு நடுவம்*
*கண்ணீர் அஞ்சலி ...............................................................201*
*மன்கைம் வாழ் மக்கள்*
*கண்ணீர் அஞ்சலி ...............................................................202*
*யோகேஷ் றஞ்சி பேரப்பிள்ளைகள்*
*தியாகத்தாய்........................................................................203*
*வைரமுத்து சிவராசா 'மண்' சஞ்சிகை ஆசிரியர்*
*பூக்களோடும் புத்தகங்களோடும் பேசியவர் ..........................205*
*மு.க.சு.சிவகுமாரன் வெற்றிமணி ஆசிரியர்*
*இரங்கற் செய்தி...................................................................207*
*வேந்தனார் இளஞ்சேய் - தலைவர் OPT*
*இதய அஞ்சலி ....................................................................209*
*பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்*
*பூட்டப்பிள்ளைகள்*
*கண்ணீர் காணிக்கை...........................................................209*
*உதவும் இதயங்கள் நிறுவனம் யேர்மனி*

## வீரவணக்கம்

*சிவகாமசுந்தரி தியாகராஜா..........................215*
*அனைத்துலகத் தொடர்பகம்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

## நாட்டுப்பற்றாளர் மதிப்பளிப்பு

*சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு*
*நாட்டுப்பற்றாளர் மதிப்பளிப்பு ...................217*
*அனைத்துலகத் தொடர்பகம்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

## தேசியக்கொடி போர்த்தி மதிப்பளிப்பு

*சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு*
*தேசியக்கொடி போர்த்தி மதிப்பளிப்பு........219*
*அனைத்துலகத் தொடர்பகம்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

## பெருநினைவின் சிறுதுளிகள் நூல்

பெருநினைவின் சிறு துளிகள் நூல் ........................................ 222
அம்பை - C.S.Lakshmi
இது தமிழர்தேசத்தின் வரலாற்றின் பதிவு ................................ 225
ஆதிலட்சுமி சிவகுமார்
பல இடிதாங்கிய மடி ஒன்று................................................. 227
மு.க.சு.சிவகுமாரன்
அன்புடன் சிவா அம்மா ......................................................... 231
வைரமுத்து சிவராசா
பெருநினைவின் சிறு துளிகள் பற்றி என் மன உணர்வுகள் 232
வேந்தனார் இளஞ்சேய்

## தமிழாலய ஆசிரியையாக

தமிழாலய ஆசிரியையாக ........................................ 241

## டயறிக் குறிப்புகள்:சிவா தியாகராஜா

கணவர் தியாகராஜா ............................................................ 252
தங்கை உமையாம்பிகை ........................................................ 255
மூத்த புதல்வன் பிறேமராஜன் ............................................... 256
மைந்தன் பாலசபாபதி (மாவீரன் மயூரன்) .......................... 258
மாவீரன் மேஜர் ஜேம்ஸ் ....................................................... 261
மாவீரன் மேஜர் சிட்டு ......................................................... 264
மாவீரன் வெங்கடேசன்... ..................................................... 267
ரோகிணி, கேதீஸ். சூட்டி ...................................................... 271
பேரன் திலீபன்...................................................................... 272
மைந்தன் மொறிஸ் - என் கனவுகளிலும் நினைவுகளிலும் .. 274

## படங்கள்

தாயகத்தில் ......................................................................... 289
மாவீரர் நாளில் .................................................................... 325
புலத்தில் ............................................................................. 329
இறுதிப் பத்து மாதங்களில்.................................................... 381
இறுதி வணக்க நிகழ்வு.......................................................... 396

# வீரத்தாய்

---

*எனக்கொரு வீரத்தாய் தான் கிடைத்திருக்கிறா.*

> *"நீ எந்த நேரத்திலும் எதிரிகளிடம் உயிருடன் பிடிபடக் கூடாது. அந்நிலை வருமெனில் சயனைற் அருந்தி விடு"*

> *–இது அம்மா என்னிடம் கூறியது.*

*அம்மாவுக்கே இவ்வளவு உறுதி இருந்தால் எனக்கு எவ்வளவு உறுதி இருக்கும்!*

**–மாவீரன் மொறிஸ்**

## *அறிமுகவுரை*

# மானுடத்தை நேசித்த மாதாய்
## அமரர் சிவகாமசுந்தரி தியாகராஜா
## (திருமதி சிவா தியாகராஜா)

---

## நாட்டுப்பற்றாளர், மாவீரர்களின் அன்னை

*தமிழீழம் வடமராட்சி பருத்தித்துறை புலோலி மேற்கு ஆத்தியடியில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து, அதன் பின்னர் வந்த இருபத்தியைந்து வருடகாலம் யேர்மனியில் வாழ்ந்து, தனது சொந்த மண்ணின் விடுதலைக்காக தான் வாழும் காலம்வரை ஆற்றிய பணிகளிற்காக 'நாட்டுப்பற்றாளர்' என்ற மதிப்பையும் கௌரவத்தையும் சுமந்தபடி இவ்வுலகை விட்டு மறைந்து போன திருமதி. சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களது வாழ்வின் அறமும் மறமும் ஈழத்தமிழரின் விடுதலை வரலாற்றில் பதியப்பட வேண்டியவை என்பதனால் அது ஒரு தொகுப்பாக நூல் வடிவில் மலர்ந்திருக்கிறது!*

*இவர் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி. நூல்களின் ஆழமான வாசகி! மானுடத்தின் நேசகி!*

*இயல்பில் மென்மையான சுபாவம் கொண்ட இவர் அதிர்ந்து பேசியதை யாரும் ஒருபோதும் கண்டதில்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நற்குணங்களுக்கு என்றும் உதாரணமானவர்.*

துன்புற்றிருப்பவரைக் கண்டால் இருகரம் நீட்டியணைத்து, அவர்கட்கு உதவிடும் தயாளகுணம் கொண்டவர். உணவின்றி வாடுபவர்களைக் கண் டால் உள்ளம் கரைந்துருகி, மறுகணமே அவர்கட்கு உணவளித்து, அதில் உவகை காணும் பேருள்ளம் கொண்டவர். விருந்தோம்பல் இவரின் இரத்தத்தில் ஊறிக்கிடப்பது.அதுஎன்றைக்கும் வற்றியதேயில்லை.

தான் பிறந்த மண்ணையும் தாய்மொழியான தமிழையும் தன் உயிரினும் மேலாக நேசித்தவர்!

இவரின் குடும்பம் அழகானது! கணவர் சபாபதிப்பிள்ளை தியாகராஜா. அவர் இலங்கையின் புகையிரதஇலாகாவில் புகையிரதநிலைய அதிபராகக் கடமையாற்றியவர். தமிழ் மொழியில் அளவிலாத பற்று மிக்கவர். கூடவே ஆங்கில மொழியிலும் சிங்களமொழியிலும் புலமை மிக்கவர்.

இவரது பிள்ளைகள் பிறேமராஜன், சந்திர வதனா, பார்த்திபராஜன், சந்திரகுமாரி, சந்திரபிரபா, பரதராஜன்,பாலசபாபதி, குமாரிபாமா ஆகிய எண்மர்.

இவர்களில் தன் மூன்று புதல்வர்களை ஈழ மண்ணின் விடுதலைக்காக உவப்போடு ஈந்தளித்த வீரத்தாய் என்ற பெருமைக்குரியவர் அன்னை சிவகாமசுந்தரி அவர்கள்.

இழப்புகள் எத்தனை ஏற்பட்ட போதும் காலங்கள் எத்தனை ஓடிய போதும் மனிதர்கள் எத்தனை மாறிய போதும் தன்னியல்பில், குணத்தில், கொள்கையில் என்றுமே மாறாது நியாயத்தின் பக்கம் நின்று ஒரு சிறந்த தாயாக, ஒரு சிறந்த மனைவியாக, ஒரு சிறந்த கொடையாளியாக, தாய் மண்ணின் நேசகியாக, தன்னலமற்ற அன்பின் வாசகி யாக, மனிதத்தைப் போற்றி, ஒரு மகத்தான வாழ்வை வாழ்ந்துகாட்டியவர் எங்கள் அன்னை சிவகாமசுந்தரி அவர்கள்!

*போர்க்காலங்களில் போராளிகளுக்கும் இருப் பிடமிழந்து அலைந்து திரிந்த, அல்லலுற்ற அப்பாவி மக்களுக்கும் தன் இருகரம் நீட்டி, உணவு, உடை, உறையுள் என தன்னால் முடிந்த அத்தனையையும் உவந்தளித்து, அவர்களது உயிர்காத்த உத்தமி இவர்!*

*இவர் ஒரு வீரத்தாய் மட்டுமல்ல, மானுடத்தை நேசித்த மாதாய்! இவரின் மறைவு முள்ளிவாய்க்கால் நினைவுதினமான 18-05-2022 அன்று நிகழ்ந்தமை என்பது இந்தப் பிரபஞ்சம் அவரின் ஆத்மாவிற்கு அளித்த மரியாதைக்குரிய வரவேற்பு என்றே எண் ணத் தோன்றுகிறது!*

*இவரது தன்னிகரற்ற வாழ்வும் தளராத வழி யும் தமிழினத்தின் நெடுங்கதையைச் சொல்லும் அழியாத வரலாற்று ஆவணத்தில் தவிர்த்துவிட முடியாத இன்னுமோர் அத்தியாயமாகிறது!*

*எங்கள் மண்ணின் அழியாத நெடுஞ்சுடராய் என்றும் எம் நினைவுகளில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்அன்னை சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த அஞ்சலி!*

*-காக்கி (பண்டிதர்)*
*தமிழீழம்*



சிவகாமசுந்தரி அவர்கள்

## *மாண்புரை*

# *நெஞ்சுறுதி கொண்ட எங்கள் அம்மா!*

***ஊ***ருக்குள் பலரும் மொறிஸின் அம்மா, மயூரனின் அம்மா, சுந்தரியம்மா என்றெல்லாம் அவரை அன்பாக அழைப்பார்கள். மொறிஸுக்கு மட்டும் அவர் அம்மா இல்லை. மயூரனுக்கு மட்டும் அவர் அம்மா இல்லை. தான்பெற்ற பிள்ளைகளுக்கு மட்டும் அவர் அம்மா இல்லை. எங்கள் விடுதலைப் போராட்டத்தில் போராளிகளாக இருந்த எங்கள் அத்தனை பேருக்கும் அவர் ஒரு உன்னதமான அம்மாவாக இருந்தார்.

*காணும் போதெல்லாம் நெஞ்சு நிறைந்த அன்பை எங்களில் சொரிந்துகொண்டிருந்த அம்மா! நாம் துவளும் போதெல்லாம் தட்டிக் கொடுத்து எம்மை உயிர்ப்புடன் செயற்பட வைத்துக் கொண் டிருந்த அம்மா! பசியோடு நாம் அவரின் வீடுதேடிச் செல்லும் போதெல்லாம் பரிவோடு உணவளித்த அம்மா! கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்திட்ட அம்மா! தான் பெற்ற பிள்ளைகள் போல் கட்டியணைத்து எமக்கு ஆறுதல் தந்த அம்மா!*

*அம்மாவைப் பற்றி இன்னுமின்னும் நிறையச் சொல்லிக் கொண்டே போகலாம்.*

*விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் போராட்டம் ஒரு கொரில்லாப் போர் வடிவிலேயே நிகழ்ந்துகொண்டிருந்தது. அச்சமயம் அதற்கு ஆதரவு தருவதற்கு பலரும் அஞ்சிக் கொண்டிருந்தார்கள். அவ் வேளையிலும் தைரியமாக, நம்பிக்கையோடு எங்களை வாரியெடுத்தணைத்து மலர்ந்தமுகத்தோடு உபசரித்து, தன் பாசத்தைக் கொட்டி உணவளித்து ஆதரித்த அம்மா!*

*மாவீரன் டேவிட் அண்ணை அம்மாவைத் தேடி எப்போது வந்தாலும் "எணை பசிக்குது... சாப்பாடு தாணை" என்று கேட்டபடியே சமைய லறைக்குள் நுழைந்து விடுவார். கடற்புலி வெங்கடேசனும் அப்படித்தான். சிலவேளைகளில் சாப்பாடு அங்கே முடிந்திருக்கும். வேறு யாராவது போராளிகள் வந்து சற்றுமுன்னர்தான் அம்மாவிடம் சாப்பிட்டுவிட்டுப் போயிருப்பார்கள். ஆனால் அது பற்றி அவர் எதுவுமே சொல்லாமல் அடுத்த சமைய லுக்கு அவசரமாக அடுப்பைமூட்டுவார். மொறிஸின் இளையக்கா(சந்திரா), பிரபாக்கா, தங்கை பாமா (பாமாச்சி) எல்லோரும் தமது பசியினைக் காட்டிக் கொள்ளாமல் எங்களை உபசரித்து அன்பாக அளவளாவிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குப் பல சமயங்களில் அங்கு சாப்பாடு இருக்காது. ஆனால் அம்மாவோ இருப்பவற்றை யெல்லாம் கொட்டி அவசரமாகச் சமைத்து வந்து எமக்குப் பறிமாறத் தொடங்கி விடுவார்.*

*நான் எத்தனையோ தடவைகள் மிகுந்த களைப்புடன் மொறிஸின் வீட்டிற்குச் சென்றிருக் கிறேன். அப்போதெல்லாம் பெடியளுக்காகவே வாங்கி வைத்திருக்கும் கொர்லிக்ஸ், போன்விற்றா எல்லாம் கலந்து, சுவையான தேநீர் தயாரித்து வந்து என்னிடம் தருவார் அம்மா. நாங்கள் பசிக்களை யோடு இருக்கக் கூடாது என்பதில் அம்மா எப் போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார்.*

*இந்திய இராணுவக்காலத்தில் மொறிஸ் வீடு*

*எப்போதும் இராணுவ அட்டகாசங்களில் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டேயிருக்கும். அங்கு போகவே உறவினர்களும் அயலவர்களும் அச்சப் படுவார்கள். ஆனால் அட்டகாசங்கள் முடிந்து அங்கிருந்து இராணுவம் வெளியேறிய மறுகணமே நாங்கள் வீட்டிற்குள் நுழைந்து விடுவோம். அம்மா அடுத்த கணமே மகிழ்ச்சியோடு எங்களுக்குச் சமைக் கத் தொடங்கி விடுவார். எவ்வளவு இராணுவக் கெடுபிடிகள்,ஊரடங்குகள் இருந்தாலும் அம்மாவின், முகம் நிறைந்த புன்னகை எப்போதும் போல எங் களை உற்சாகமாக வரவேற்கும்.*

*நாங்கள் சில நாட்கள் அங்கு செல்லவே முடியாமல் எங்காவது ஒளிந்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ தடவைகள் வந்திருக் கின்றன. அச் சமயங்களில் எங்களைத் தேடி யாராவது வருவார்கள். "வந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்று அவர்களிடம் அம்மா தூது அனுப்பி விட்டிருப்பார்.*

*எண்பதுகளின் நடுவில் மொறிஸ், மயூரன் குடும்பத்தினர் இராணுவக் கெடுபிடிகள் தாளாமல் யாழ்ப்பாணத்திற்குப் போய் விட்டார்கள். அப்போது அவர்கள் மொறிஸின் அப்பாவின் உத்தியோக மனையில் குடியிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டிருந்தோம்.*

*நீண்ட மாதங்கள் அம்மாவையும் அவரின் குடும்பத்தினரையும் காணாமல் நாங்கள் உள்ளூரப் பெருந் துயருற்றிருந்தோம்.*

*கடைசியாக, மொறிஸ் 1989இல் வீர மரண மடைந்த கொடுந் துயரமான நிகழ்வுகள் யாவும் நடந்து முடிந்த பின்னர், நான் யாழ்ப்பாணத்தில் சில இரகசிய விடுதலைப் பணிகளிற்காக நியமிக்கப் பட்டிருந்தேன். இந்தியஇராணுவத்துடன் இணைந்து மாற்றியக்கங்களும் எம்மைத் தேடியலைந்து கொண் டிருந்த நேரமது.*

*ஒரு நாள்,மொறிஸ் குடும்பத்தினர் குடியிருந்த யாழ்ப்பாண வீட்டை சைக்கிளில் கடந்து செல்ல வேண்டிய சந்தர்ப்பம் எனக்கேற்பட்டது. அப்போது, ஒரு முறையேனும் அவர்களைப் பார்க்காமல் கடந்து செல்ல என் மனம் இடம் தரவில்லை. அம்மாவையும் இளையக்கா, பாமாச்சி எல்லோரையும் ஒரு தடவை யேனும் கண்டு ஒரு வார்த்தையாவது பேசி விட்டுப் போகலாமே என்றெண்ணி, என் மனம் என்னை அந்த வீட்டின் பக்கம் இழுக்கத் தொடங்கியது.*

*யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அவர்கள் குடியிருக்கும் அந்த வீட்டினைச் சுற்றி இராணுவ முகாம்களும் சென்றிப் பொயின்ற்றுகளும் நிறைந்து வழிந்திருந்தன. எவருமே போக அச்சப்படும் அந்த இடத்தில் இக்கட்டான ஒரு சூழ்நிலையில் துப்பாக்கி களுக்கு மத்தியில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந் ததைப் பார்க்க எனக்கே மனசு அஞ்சியது.*

*நான் சொல்லாமல் கொள்ளாமல் அந்த வீட்டுக்குள் திடீரென்று நுழைந்தேன். வாசலுக்கு வந்த அம்மா கண்கள்விரிய வியப்போடு என்னைப் பார்த்தார். அடுத்த கணமே மகிழ்ச்சி பொங்க, புன்னகையோடு, இரகசியக் குரலில் என்னை வரவேற்றார். உடனேயே ஓடிச் சென்று சுடச்சுடப் புட்டும், கத்தரிக்காய்க்குழம்பும் முட்டைப்பொரியலும் கொண்டு வந்து தந்து "களைச்சிருக்கிறாய் அப்பு. முதல்ல சாப்பிடு. பிறகு கதைக்கலாம்" என்றார்.*

*எனக்குக் கண்களில் கண்ணீர் நிறைந்து பொங்கியது. நான் பொங்கிய கண்ணீரைத் துடைக்கவில்லை. எனக்கு ஏற்கெனவே பசி. தலை சுற்றுவது போல் உணரத் தொடங்கியிருந்த நான் கைகளைக் கழுவிவிட்டு மளமளவென்று சாப்பிடத் தொடங்கினேன். அந்நேரம் அவ்வுணவு எனக்கு அமிர்தம் போலத் தோன்றியது. அம்மா என்னைப் பரிவோடு பார்த்தபடி இருந்தார்.*

*திடீரென்று வெளியில் ஏதோ சத்தங்கள்*

கேட்கத் தொடங்கின. நான் பரபரப்பானேன்.

"நீ... சாப்பிடப்பு. நான் போய் என்னெண்டு பார்த்துக் கொண்டு வாறன்" என்றார் அம்மா.

நான் "இப்பப் போக வேண்டாம்" என்று கையைக் காட்டித் தடுத்தேன்.

ஆரியகுளச் சந்திப்பக்கம் கேட்டுக் கொண் டிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைத் தொடர்ந்து இராணுவ 'றக்' ஒன்று வேகமாக அவர்களின் வீட்டைக் கடந்து போனது. எனக்கு நெஞ்சு திக்கென்றது. நான் உயிரோடு இருக்கும் கடைசித் தருணம் அது தான் என நினைத்தேன்.

வீட்டின் பின்புறம் யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய இராணுவ முகாம். பின்வழியாக நான் ஓடித் தப்பவே முடியாது.

சத்தங்கள் மெல்ல மெல்லக் குறைந்ததும் அம்மா வெளியில் இறங்கி, கேற்வாசல் வரை போய் வீதியை இருபுறமும் பார்த்து விட்டு வந்தார்.

"இப்பச் சந்தடி ஒண்டும் இல்லை. எல்லாரும் போயிட்டான்கள். றோட் வெறிச்சோடிப் போய்க் கிடக்கு" என்றார்.

நான் கைகளைக் கழுவிவிட்டு, தண்ணீரை மடமடவென விழுங்கியபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு "போட்டுவாறன் அம்மா.." என்றேன். என் வாய்க்குள்ளிருந்து சத்தம் வர மறுத்தது. கண்கள் என்னையும் மீறி, பொங்கி வழியத் தயாராக இருந்தன.

அம்மா தெளிவாகவும் உறுதியாகவும் சொன் னார் "எல்லாம் நல்ல படி நடக்கும் அப்பு. தைரியமாய், கவனமாய் போயிட்டு வா" என்று. அதுதான் நான் அம்மாவைக் கண்ட கடைசி நாள்!

*இப்போது எங்கள் அன்பு அம்மா மேலை நாடொன்றில் எங்கள் மண்ணை நினைந்த படியே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விப் பட்டேன். நானோ அவரை நேரில் சென்று சந்திக்க முடியாத நிலையில் வேறொரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எங்கள் மேல் அம்மா வைத்திருந்த அளவற்ற அன்பும், அசைக்க முடியாத நம்பிக்கையும்தான் இத்தனை அழிவுகளின் பின்னும் இத்தனை இழப்புகளின் பின்னும் இத்தனை துயரங் களின் பின்னும் என்னை இன்னும் உயிரோடு வாழ வைத்துக்கொண்டிருக்கிறதென்று நான் நம்புகிறேன்.*

*விடுதலையே தன் உயிர்மூச்சென எண்ணி எங்கள் எல்லோருக்குமாகவே வாழ்ந்து கொண் டிருந்த எங்கள் அன்பு அம்மா இன்னும் நெடுங் காலம் நீடூழி வாழவேண்டும்!*

*உங்கள் அன்புக்கும் பாசத்துக்கும் பரிவுக்கும் நெஞ்சுறுதிக்கும் முன்னால் நான் என்றும் தலை வணங்கி நிற்கிறேன் அம்மா!*

*–றியோ நிலவன்*
*மார்கழி 2020*

*றியோ நிலவன், அமரர் திருமதி சிவகாமசுந்தரி அவர்களுடன் நெருங்கிப் பழகிய விடுதலைப்புலிப் போராளிகளில் ஒருவர்.*

*இம்மாண்புரை அமரர் திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின் "பெருநினைவின் சிறு துளிகள்" நூலிலும் இடம் பெற்றது.*

# மறம் காத்த மாதரசி (கொச்சகக்கலிப்பா)

**பவானி தர்மகுலசிங்கம்**
*கவிஞர், எழுத்தாளர், கனடா*

*தாயகத்து விடுதலைக்காய்த் தம்முயிரை ஈந்தளித்த
நாயகர்கள் மூவரையும் நயந்தளித்த நங்கையிவர்
தூயவளாம் அன்னைதன் துயர்தந்த செய்தியினால்
காயமுற்ற உள்ளத்தில் கலங்கினேனே கருத்திழந்து!*

*நினைவுகள்தாம் கரைபுரண்டு நெஞ்சத்தில் மோதிடவே
பனுவலொன்று தாயார்க்குப் படைக்கின்ற எண்ணத்தில்
அனுக்கிரகம் வேண்டிநின்றேன் ஆண்டவன் திருவடியில்!
முனைப்புடனே அருளீந்தார்! முன்வந்து இயற்றினேனே!*

*சீர்மேவும் ஆத்தியடி செம்மைமிகு பதிதோன்று
கார்குழலாள் மங்கையிவள் கவின்மிக்க காரிகையாள்
பார்போற்றும் சிவகாமப் பதிவிரதை சுந்தரியாம்
பேர்பெற்(று) இலங்கினளே பேறுற்றார் பெற்றோர்கள்!*

*பண்பான பெற்றோர்க்குப் பாங்கான பெண்மகவாய்க்
கண்மணியாய் வந்துதித்த கன்னலவள் வீட்டினிலே
திண்மைமிகு உடன்பிறந்தார் சேர்ந்திருந்த சூழலிலே
வண்மையுடன் வலம்வந்தாள் வாய்த்தநல் மூத்தவளாய்!*

*தகைசார்ந்த குலவிளக்காய்த் தரணியிலே திகழ்காலை
புகையிரத அதிபதியாய்ப் புவிதனிலே குலவுபுகழ்
மிகையெழிலன் தியாகராஜா மேலவனைக் கைப்பிடித்துத்
தகைமைமிக்க தலைவனாகத் தன்சார்பிற் சேர்த்தனளே!*

*அன்புடமை அறிவுடமை ஆற்றல்கள் அணிகலனாய்
இன்முகத்தில் வரவேற்று ஏற்றமிகு விருந்தளித்துக்*

*கன்னலென மொழிபேசிக் கனிவுடனே கருணைகாட்டி*
*இன்புறவே தமிழுக்காய் இகத்தினிலே வாழ்ந்திருந்தாள்!*

*மனைத்தக்க மாண்புடையாள் மனம்நிறைந்த மணவாழ்வில்*
*அனைத்துலகும் போற்றுகின்ற அருள்மிகுந்த பிள்ளைகளோ*
*நனிசிறந்த பண்பிலங்கு நன்மக்கட் பேறுகளாய்*
*இனிதாகத் தோன்றினரே! இமயமென உயர்ந்தனரே!*

*விருட்சமெனக் கிளைபரப்பி வேரூன்றி வளர்ந்தகாலை*
*தருமநெறி சார்ந்திருந்து சால்பினிலே திளைத்திருந்த*
*அருள்நங்கை குடும்பத்தில் அன்புடனே பழகுதற்கு*
*அருமைமிகு வாய்ப்பெனக்கும் ஆண்டவனால் கிடைத்ததுவே!*

*சுற்றுப்பு றத்தினிலே சூழ்ந்திருந்த மனைகளிலே*
*கற்றவரும் விரும்புகின்ற கனிவான தாயவளின்*
*நற்பதியும் நிலைபெற்ற நயத்தகுவ ழியிலமைந்த*
*உற்றபெரும் அலுவலகம்  உயர்காணிப் பதிவகத்தில்*

*பணிபுரியும் வேளையதில் பண்பான குடும்பத்தில்*
*கணிசமாகச் சிலபொழுது கதைபேசி மகிழ்ந்திருக்க*
*அணிகளென மிளிர்ந்திட்ட அன்னையவர் பிள்ளைகளின்*
*பணிவான பழக்கங்கள் பவித்திரமாய்க் கவர்ந்தனவே!*

*அந்நாளில் சிறுவர்கள் அன்னைதன்  மடியொருவன்*
*பின்சேலை முகப்பதனில் பின்னிப்பி ணைந்தொருவன்*
*கன்னலென மொழிபேசிக் கைகூப்பி வரவேற்பர்!*
*பின்னாளில் அறிந்தேனே பின்னவர்தம் தியாகங்கள்!*

*நற்றவத்தால் கிடைத்திருந்த நாலாண்க ளில்மூவர்*
*செற்றம்கொள் போரினிலே சிறந்தவுயிர் துறந்தனரே!*
*சற்றுமெதிர் பாராத சங்கதியாம் செய்தியது*
*முற்றாக எந்தனது மூச்சினையும் நிறுத்தியதே!*

*என்னருமைத் தங்கையவள் எழிலார்ந்த எழுத்தாளர்*
*பன்னருங்க ருத்துக்கள் பக்குவமாய்ப் பகிருபவள்*
*தன்னலமே கருதாத தகைசார்ந்த தையலவள்*
*அன்பார்ந்த சந்திராவும் அறிவித்தாள் அவலமதை!*

*திண்மைமிகு வீரர்தம் திடம்கொண்ட வெற்றிசார்ந்த*
*மண்மீட்கும் சமர்செய்த மகத்துவங்கள் தெரிந்துகொண்டேன்!*
*பண்போடு அவைக்களத்தில் பாடல்கள் படைத்திருந்து*
*கண்ணெனவே தாய்மண்ணைக் காதலித்த தீட்சண்யன்!*

*பொறுப்பாளர் பதவியினைப் பொன்மனதில் ஏற்றுமிக்க*
*உறுதியுடன் செயற்பட்டான் உயர்பருத்தித் துறைதனிலே!*
*பெறுதற்க ரியவீரன் பேர்மொறிஸ் எனப்பெற்றோன்*
*இறுதிவரை போரிட்டு இன்னுயிரைக் கொடையீந்தான்!*

*வீரமிகு வேங்கையாய் விற்பன்னச் செயலாற்றித்*
*தீரம்கொள் திண்ணியனாம் தீந்தமிழன் மயூரன்பேர்*
*பாரதிரப் படையெதிர்த்துப் பன்நூறு வெற்றிபெற்றுத்*
*தாரணிதாம் போற்றிடவே தன்னுயிரைத் தான்கொடுத்தான்!*

*புறநாநூற் றுத்தாயாய்ப் புதல்வர்கள் மூவரையும்*
*மறம்காக்கும் மார்க்கத்தில் மாண்புடனே வளர்த்தெடுத்து*
*அறநெறியின் பாலமைந்து அரங்கேறு சமர்க்களத்தில்*
*திறலோராய்த் திளைத்திடவே திடமூட்டி வந்தவளே!*

*புகலிடத்து வாழ்வினிலும் புண்ணியவெம் பூமிக்காய்*
*மகத்துவத் தொண்டுபல மனதார ஆற்றிவந்து*
*இகத்தினிலே பதவிபட்டம் இன்வாழ்வு என்றுலவும்*
*பகட்டுமாந்தர் வரிசையிலே பவ்வியமாய்த் திகழ்ந்தமையால்*

*எவருக்கும் வாய்த்திடாத ஈடில்லாப் புலிக்கொடியில்*
*பவனிவந்த நின்மேனி பட்டொளியில் துலங்கியதே!*
*குவலயத்தில் நின்பெருமை கோடிமக்கள் அறிந்தனரே!*
*தவப்பயனின் விளைவென்று சாற்றியதே என்னுள்ளம்!*

*ஆன்றவளே தங்களுயர் ஆன்மாவும் விண்ணுலகில்*
*சான்றுயர்ந்த விறலோரைச் சார்ந்திருந்து அமைதிபெறும்!*
*ஈன்றெடுத்த அன்னையுங்கள் இணையடிதாம் பற்றியவர்*
*மேன்மையுடன் இறங்கிவந்து மேதினியிற் பிறந்திடுவர்!*

*பவானி தர்மகுலசிங்கம், அமரர் திருமதி சிவகாமசுந்தரி அவர்களின்*
*இளையமகளான சந்திரா இரவீந்திரன் அவர்களது உற்ற தோழி.*



**அம்மா**

*அண்ணனுடன் (1958)*

# அம்மா

**சந்திரவதனா**

*மனசு விட்டேந்தியாக அலைந்து கொண்டே யிருக்கிறது. நினைவுகள் சுற்றிச் சுற்றி அம்மாவிடமே வந்து குவிகின்றன.*

*அம்மா என்னுடன் பேசுவதை நிறுத்திய அந்த நாள் ஒரு கொடிய, துயரந் தோய்ந்த நாள். அன்றி லிருந்து இன்று வரை நான் ஒரு தனித்தலையும் பறவை போல அம்மாவின் நினைவுகளைச் சுமந்த படியே திரிகிறேன்.*

*அம்மா இல்லாத ஒரு காலம் வரும் என்பது எனக்கு முற்கூட்டியே தெரிந்திருந்தது. ஆனால் அது இத்தனை வெறுமையானதாய், துயர் படிந்ததாய் இருக்குமென்று நான் நினைத்துப் பார்த்ததேயில்லை.*

*"உங்கள் அம்மா இனி எழுந்து நடமாடவே மாட்டா. அவவின் முக்கியமான உள்ளுறுப்புகள் செயலிழந்து விட்டன. இனி அவவுக்கு மருத்துவம் செய்வதில் பயனேதும் இல்லை. அவவின் வாழ்வு இன்றிரவோடு முடிந்து விடலாம்" என்று ஒரு அர்த்த ராத்திரியில் தொலைபேசியில் அழைத்து மருத்துவர் கள் என்னிடம் சொன்ன போது நான் ஒரு கணம் செய்வதறியாது திகைத்து நின்றேன். தூக்கமின்றித் தவித்துக் கிடந்தேன். அழுதவிழி மூடாமல் விடியும் வரை காத்திருந்தேன். "அம்மா.., மீண்டு வந்து விடுங் கள் என்று மனசுக்குள் மன்றாடினேன்.*

ஒரு சில தினங்கள் கழித்து "இனிச் செய்வ தற்கு ஒன்றுமில்லை" என்று சொல்லி அவர்கள் அம்மாவை என்னிடம் ஒப்படைத்த போது "அம்மா இனி எழுந்து நடமாடவே மாட்டா" என்றுதான் எல்லோரும் நம்பினார்கள்.

நான் நம்பினேன். 'அம்மா எழுந்திருப்பா' என்று நம்பினேன். அது ஒரு குருட்டு நம்பிக்கை தான். ஆனாலும் எனது நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை. அம்மா எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் மருத்துவர்களின் கூற்றைப் பொய்யாக்கி விட்டு எழுந்தா. இயலாமை என்ற ஒன்று அவவைத் தாக்கியிருந்தாலும் நடந்தா. புத்தகங்கள் வாசித்தா. தனக்குப் பிடித்தவர்களுடன் தொலைபேசினா. அவ இருந்த அந்தப் பராமரிப்பு நிலையத்தில் எல்லோருக் கும் பிடித்தமான ஒரு பெண்ணாக மலர்ந்த முகத் துடன் வலம் வந்தா. மாலைப்பொழுதுகளில் அவர்க ளுடன் சேர்ந்து பாடினா, விளையாடினா... அந்தப் பராமரிப்பு நிலையமே அதிசயிக்கும் வண்ணம் இணையத்தில் கூட உலா வந்தா. பேஸ்புக்கில் பலதை வாசித்து பலருக்கும் கருத்துக்கள் எழுதினா. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண் பர்கள்... என எல்லோருக்கும் குசலம் விசாரித்து குறுஞ்செய்திகள் அனுப்பினா. குறிப்பாக, என்னோடு நிறைய உரையாடினா... மொத்தத்தில் வாழ்ந்தா.

அம்மா அப்படி வாழ்ந்ததே எனக்காகத் தானோ? நான் காலாகாலத்துக்கும் "அம்மாவுக்கு எதுவுமே செய்யவில்லையே!" என்றெண்ணி, மனம் உழன்று, வீழ்ந்து விடக் கூடாதே என்பதற்காகத் தானோ?

சரியாகப் பத்து மாதங்கள்! அந்தப் பத்து மாதங்களும் எனது நாட்களும் எனது பொழுதுகளும் அம்மாவுடனேயே கழிந்தன.என்னை, என் நேரத்தை, என் சிந்தனையை, என் வாழ்க்கையை... என, என் சகலதையும் அம்மாவுக்கே அர்ப்பணித்தது போல

அல்லும் பகலும் நான் அம்மாவுடனேயே இருந்தேன்.

அப்போதெல்லாம், நான் தான் அம்மாவுக்குத் துணை. நான் தான் அம்மாவுக்காக இருக்கிறேன். நான் தான் அம்மாவைப் பராமரிக்கிறேன்... என்றெல் லாம் நினைத்திருந்தேன். இப்போது தான் தெரிகிறது, அம்மாதான் எனக்குத் துணை, அம்மாதான் எனது பலம், அம்மாதான் என் வெற்றிகளின் இரகசியம், அம்மாதான் என்னை எப்போதும் தன் நெஞ்சில் தாங்கும் அன்பெனும் தூண்... இந்தப் பெரும் உலகில் அம்மாவுக்கு ஈடாக எனக்கு யாருமே இல்லை.

அம்மாவின் அன்பு என்னை எப்போதும் ஆரத் தழுவிக் கொண்டே இருந்தது. அம்மாவின் செவிகள் எப்போதும் என் பேச்சைக் கேட்பதற்காகக் காத்திருந் தன. அம்மாவின் கண்கள் என்னைப் பார்ப்பதற்காகத் தவமிருந்தன. அம்மாவின் மனசு என் வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தது. என் வெற்றி களிலும் மகிழ்வுகளிலும் அம்மாவின் பெருமிதமான குதூகலம் கலந்திருந்தது. என்னைத் தட்டிக் கொடுக் கும் பெருந்தன்மை இருந்தது. என் தோல்விகளிலும் துன்பங்களிலும் என்னை வார்த்தைகளாலேயே நீவி விடும், வீழ்ந்து விடாமல் தாங்கிடும் நெஞ்சம் இருந் தது. "வதனா" என்று அழைக்கையில், அந்த ஒற்றை வார்த்தையில் இந்த உலகை விஞ்சும் வாஞ்சை இருந்தது.

அம்மாவின் மூச்சு முற்றாக நின்ற அந்தக் கணத்தில் நான் அத்தனையையும் இழந்தேன்.

அப்போது எனக்கு அழவே தோன்றவில்லை. கண்ணீர் ஊற்றவில்லை. "அம்மா..! ஏன் என்னை விட்டுப் போனீங்கள்?" என்ற கேள்வி மட்டுமே எனக்குள் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அம்மா தனது வாழ்வின் இறுதி ஆறு வருடங் களும் என்னருகிலேயே இருந்தா. அதிலும் அந்தக்

*கடைசிப் பத்து மாதங்கள், அது எனக்குக் கிடைத்த வரம். அம்மாவின் எட்டுப்பிள்ளைகளில் யாருக்கும் கிடைத்து விடாத அரும் பெரும் வரம். அந்த வரம் மட்டும் எனக்குக் கிடைத்திராது போயிருந்தால் நான் மனம் வெதும்பிச் சாய்ந்திருப்பேன்.*

*அம்மாவுக்கு நான்தான் மூத்த பெண்பிள்ளை. அந்தப் பொறுப்பு எனக்கு ஒரு போதுமே இருந்த தில்லை. நான் அம்மாவுக்கு எப்போதும் குழந்தை யாகவே இருந்தேன். படிப்பு, பாட்டு, வாசிப்பு, ஏகாந்தம்.. என்று எனது உலகம் வேறு. அம்மா என்னை என் போக்கிலேயே வளர விட்டா. எனக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதெல்லாம் அம்மாவுக்குத் தெரிந்திருந்தது. எனக்கு சமைக்கப் பிடிக்காது. சாம்பல் போட்டு சட்டி பானை மினுக்கிக் கழுவப் பிடிக்காது. அதை அம்மா நன்கு புரிந்து கொண்டிருந்தா. 'நான் ஒரு பெண்' என்ற காரணத் தைக் காட்டி எனக்குப் பிடிக்காத சமையலைச் செய்யும் படியோ, சட்டி பானைகளை மினுக்கிக் கழுவும் படியோ அம்மா என்னை ஒரு போதும் வற்புறுத்தியதில்லை. அது இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முந்தையகாலம். சுற்றியிருந்தவர்கள் அம்மாவைச் சும்மா விடவில்லை. குறிப்பாக என் சித்தி "குமர்ப்பிள்ளையாகீட்டாள். கூப்பிட்டு சமைக்க விடுறதை விட்டிட்டு நீங்களே இன்னும் எல்லாத் தையும் செய்யிறிங்கள்" என்று அம்மாவை அக்கறை யோடு திட்டுவா. அம்மா, சித்தியை எப்படியோ சமாளித்து விடுவா.சித்தியை மட்டுமல்ல, எல்லோரை யும் எல்லாவற்றையும் சமாளிக்கும் அதீத வல்லமை அம்மாவிடம் இருந்தது.*

*எங்கள் எண்மரையும் அம்மா மிகவும் சுதந்திரம் தந்தே வளர்த்தா. எங்களெங்கள் விருப்பங் களையறிந்து அதற்கேற்ற படியே எங்களை வாழ விட்டா. அம்மாவின் வயதுக்கும் அம்மா வாழ்ந்த காலத்துக்கும் அம்மா மிகுந்த முற்போக்குச் சிந்தனை யுடைய ஒரு பெண்ணாகவே இறுதி வரை வாழ்ந்தா.*

அம்மா தனது பெற்றோர் வகுத்த படி சமூகக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு மிகவும் நேர்த்தியாக வளர்ந்த ஒரு பெண். எது தப்பு, எது சரி என்று பகுத்தாயும் தன்மையும் திறனும் அம்மாவுக்குள் இருந்தாலும், 'இவைதான் நியதி' என்றெண்ணி அதன் படி வாழும் மனப்பக்குவமும் அம்மாவுக்குள் தாரளமாக இருந்தது. அதனால் தன்னளவில் அம்மா அந்தக் கட்டுப்பாடுகளை மீறியதில்லை. அதேநேரம் பிள்ளைகள் எங்களை அநாவசியமான எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்குள்ளும் அமிழ்த்த நினைத்ததுமில்லை. பிள்ளைகள் நாங்கள் சமூகக்கோட்பாடுகளையோ மூடக்கொள்கைகளையோ கட்டுடைக்க முனைந்த சமயங்களில் அம்மா அதன் நல்லது கெட்டதுகளை ஆராய்ந்து எங்களுக்கு மிகுந்த உறுதுணையாகவே இருந்திருக்கிறா.

நான் காதல்வலையில் வீழ்ந்த போது (எழுபதுகளில்) அந்தக் காதலை ஊரே எதிர்த்து நின்றது. அப்போது அம்மாவுக்கு அதிக வயதில்லை. 41 வயது மட்டுமே நிரம்பியிருந்தது. அதிலிருந்து என்னை மீட்க முடியாது என்று உணர்ந்த மாத்திரத்தில் அம்மா ஊரை எதிர்த்து என் காதலை ஆதரிக்கத் துணிந்தா. அப்பாவையும் சமாதானப்படுத்தி சம்மதிக்க வைத்தா. ஊருக்குள்தான் திருமணம் செய்ய வேண்டுமென்ற எங்களூர் வழக்கத்தை மாற்றி, ஊரையே அழைத்து திருமணமும் செய்துவைத்தா.அப்படியொரு துணிவும் தன்னம்பிக்கையும் தைரியமும் பிள்ளைகளுக்குத் தேவையெனும் பட்சத்தில் அதைச் சாதித்து விடும் மனஓர்மமும் அம்மாவிடம் இருந்தன.

அம்மா எங்கள் எண்மரையம் நேர்த்தியாகவும் ஒழுக்கமாகவும் உண்மை பேசுபவர்களாகவும் கல்வியறிவுடையவர்களாகவும் வளர்க்கவேண்டுமென்பதில் அதீத கவனம் செலுத்தினா. சுத்தம் அம்மாவுக்கு மிக மிக முக்கியம். "சுத்தம் சுகம் தரும்" என்பது எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அம்மாவின் வாயிலிருந்து ஒலித்துக் கொண்டேயிருந்த மந்திரம்.

*கூடவே "பொய் சொல்லாதே. களவெடுக்காதே. பிச்சையெடுக்காதே" என்பவைகளும் ஒலித்துக் கொண்டேயிருந்தன.*

*இந்தச் சுத்த விடயத்தை மந்திர உச்சாடனத் துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், செயலிலும் அம்மா எப்போதும் கையாண்டு கொண்டே இருந்தா. கூட்டல், கழுவல், துடைத்தல் என்பன ஓயாது எங் கள் வீட்டில் நடந்து கொண்டேயிருந்தன. அண்டை அயலிலுள்ளவர்கள் (எல்லோரும் சொந்தக்காரர்கள் தான்) அவ்வப்போது இதையிட்டு, இப்படிக் கால நேரம் பாராமல் கூட்டுவதும் கழுவுவதுமாய் இருப்பது நல்லதில்லையென்றும் இதனால் வீட்டிலுள்ள செல் வமெல்லாம் அப்படியே போய் விடும் என்றும் அம்மாவை எச்சரிப்பார்கள். அதையெல்லாம் அம்மா காதுகளில் வாங்கிக் கொண்டதேயில்லை. வீட்டில் ஒரு தூசியோ, துரும்போ இருக்கக் கூடாது என்பது அம்மா தனக்குள் வகுத்துக்கொண்ட எழுதாத சட்டம். சுத்தம் என்பது அம்மாவின் இரத்தத்தோடு ஊறிய ஒன்று.*

*அம்மா எவ்வளவு தாமதமாகப் படுக்கைக்குச் சென்றாலும் அதிகாலையிலேயே எழுந்து விடுவா. காலையில் எழுந்துதான் சட்டி பானைகளை மினுக்கி கழுவ வேண்டுமென்று அம்மா காத்திருப்பதில்லை. இரவு படுக்கைக்குப் போக முன்னரே எல்லாவற் றையும் மினுக்கிக் கழுவி முடித்து, குசினியையும் கூட்டி, துடைத்து, கழுவி சுத்தமாக்கி விடுவா. அதன் பின்னர் ஒரு தடவை குளித்து விட்டுத்தான் படுக் கைக்குப் போவா. எங்கள் எல்லோரது படுக்கை விரிப்புகளும் போர்வைகளும் ´பளிச்' சென்று எப்போதும் சுத்தமாகவே இருக்கும். துணி துவைக்கும் இயந்திரம் இல்லாத அந்தக் காலத்திலேயே அம்மா அவைகளை எப்போதும் தோய்த்துச் சுத்தமாகவே வைத்திருந்தா.*

*நாங்கள் எல்லோரும் நல்ல நித்திரையாகி*

*விடுவோம். திடீரென சாமத்தில் வரும் விழிப்பில் அம்மா தெரிவா. இருந்து புத்தகம் வாசித்துக் கொண் டிருப்பா. அது அம்மா தினமும் செய்யும் வேலை. இரவு இரண்டு மூன்று மணி வரை இருந்து வாசித்து விட்டே படுப்பா. அதற்காக அடுத்த பகலில் அம்மா ஒரு போதும் சோர்ந்திருந்ததில்லை.*

*காலையில் நாங்கள் எழும்பும் போது அம்மா ஆட்டுப்பால் தேநீரை நுரைபொங்க ஆற்றிக் கொண் டிருப்பா. அதற்கு முன்னரே தனது வேலைகளை முடித்து காலைக் கருக்கலுக்குள்ளேயே ஆட்டில் பால் கறந்து, காய்ச்சி, தேநீர் தயாரித்திருப்பா. நாங்கள் எட்டுப் பிள்ளைகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசைகள், தேவைகள், விருப்பங்கள். அந்தத் தேநீரில் கூட எனக்கு பாலின் ஆடை வந்தால் பிடிக்காது. அண்ணனுக்கு ஆடைதான் விருப்பம். தம்பி பார்த்திபனுக்கு பொட்டுக் கிளாசுக்குள் தான் தேநீர் வேண்டும். வேறெதிலும் குடிக்க மாட்டான். அப்படியான எங்கள் ஆசைகள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட அம்மா ஒரு போதும் தயங்கியதில்லை. எங்கள் எல்லோரது விருப்பங் களுக்கு மேற்ப எல்லோருக்கும் தேநீரை ஊற்றித் தருவா. அதன் பின் காலைச் சமையல். சாப்பாடு. அதன் பின் பாடசாலைக்குப் போய் விடுவோம். மதியம் நாங்கள் வீட்டுக்கு வரும் போது சுடச் சுடச் சோறு, கறிகள், பொரியல்... என்று சாப்பாடு அமர்க்களமாக இருக்கும். அம்மாவின் சமையலுக்கு அப்படியொரு வாசனையும் சுவையும் இருக்கும். அம்மா கடைந்து தரும் பச்சைநிறம் மாறாத பசுந்தளிர் கீரைக்கறி, நெய் ஊற்றிய பருப்புக்கறி, பொரித்த உருளைக் கிழங்குப் பிரட்டல், நெய்த்தோசை... அவைகளை நினைத்தால் இப்போதும் வாயூறும்.*

*அம்மா எங்களுக்கு சாப்பாட்டில் ஒரு நாளும் குறை வைத்ததே இல்லை. எப்போதும் எங்கள் வீட்டில் நல்ல சாப்பாடுதான். சோறு, கறி, பிட்டு, இடியப்பம், தோசை... இவைகள் மட்டுமல்லாது*

பொரிவிளாங்காய், பயத்தம் பணியாரம், சீடை, எள்ளுப்பா, வடை, பனங்காய்ப்பணியாரம்... என்று எப்போதும் எங்கள் வீட்டில் தாராளமான நொட்டு நொறுக்குகள் இருக்கும். அவைகளையும் ஒரு ஒழுங் கோடு அந்தந்த நேரத்துக்கு எங்களுக்குத் தருவதில் அம்மாவிடம் எப்போதும் ஒரு நேர்த்தியிருக்கும். காலையில் ஒரு வாழைப்பழம், மாலையில் ஒரு வாழைப்பழம் என்பது கட்டாயம். அதே நேரம் மதியச் சாப்பாட்டை யடுத்து கண்டிப்பாக ஏதாவது பழங்கள் இருக்கும். அது அந்தந்தக் காலத்துக்கேற்ப நாவற்பழமாகவோ, பாலைப்பழமாகவோ, மாம்பழ மாகவோ, பலாப்பழமாகவோ பப்பாப்பழமாகவோ, வர்த்தகப்பழமாகவோ... இருக்கும். அவைகளும் நாங்கள் மனசு முட்டச் சாப்பிடும் படியாகத் தாராளமாக இருக்கும். போர் என்ற ஒன்று எங்கள் நாட்டில் வரும் வரை நாங்கள் அது விடயத்தில் செல்வந்தர் போலவே வாழ்ந்தோம். அப்படித்தான் அம்மா எங்களை வாழ வைத்தா.

அம்மா எங்களை மட்டுமல்ல, தன்னைச் சுற்றி யுள்ள அனைவரையும் வாழ வைத்துக் கொண்டே யிருந்தா. எங்கள் வீட்டுக்கு வந்த எவரும் பசியோடு திரும்பியதில்லை. எப்போதும் எங்கள் வீட்டில் சாப்பாடு இருக்கும். மட்டு மட்டாகச் சமைப்பது என் பது அம்மாவின் சரித்திரத்தில் இல்லை. சாப்பாடுகள் மட்டுமல்ல. அரிசி, மா, சீனி, உழுந்து, பயறு... என்று சகலதும் அதற்கென்றே உள்ள அறையில் பெரிய பெரிய சாடிகளில் எப்போதும் தாராளமாக வாங்கி வைக்கப் பட்டிருக்கும். கூடவே பெரிய பெரிய ஹொர்லிக்ஸ் போத்தல்களில் கசுக்கொட்டை, முந்தி ரிகை வத்தல், பேரீச்சம்பழம், புழுக்கொடியல்.. என்று பல நிரப்பி வைக்கப்பட்டிருக்கும்.எவர் கஷ்டம் என்று வந்து கேட்டாலும் அம்மா மறுப்பதேயில்லை. அதில் சாதி மத பேதம் எதுவுமே அம்மா பார்ப்பதுமில்லை. தனது சக்திக்கு மீறிக் கொடுப்பதற்குக் கூட அம்மா ஒரு போதும் தயங்கியதில்லை. அம்மாவுக்கு அப்படி யொரு தாராள மனசு.

எங்கள் ஊரை அண்டியுள்ள கோணந்தீவு என்னும் இடத்தில் அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் வாழ்வாதாரம் குன்றிய மக்களும் வாழ்கிறார்கள்.அவர்களில் கணவனைப் பறிகொடுத்த ஒரு பெண் அடிக்கடி அம்மாவிடம் வந்து கதைத்து விட்டுப் போவாள். அம்மா விறாந்தை நுனியிலும் அவள் கீழ் ஒட்டிலுமாக இருப்பார்கள். ஆரம்பத்தில் அவள் ஏன் அடிக்கடி வருகிறாள் என்பது எனக்குத் தெரியாதிருந்தது. சில காலம் போகத்தான், அவள் ஒவ்வொரு முறை வரும்போதும் அம்மாவிடம் தனது கஷ்டங்களைச் சொல்லி தனது பிள்ளைகளுக்குச் சாப்பாடு போட என்று பணம் வாங்கி, தனது சேலைத்தலைப்பில் முடிந்து கொண்டு போகிறாள் என்பது விளங்கியது. சில மதியம் தாண்டிய பொழுதுகளில் அவள் வந்தால் அம்மா கோப்பை நிறையச் சோறு, கறி எல்லாம் போட்டு "சாப்பிடு" என்று சொல்லிக் கொடுப்பா. அவள் மிகுந்த நன்றியோடு அம்மாவைப் பார்த்து விட்டு 'அவக், அவக்' என்று சாப்பிடுவாள். போகும் போது அவளது பிள்ளைகளுக்கும் அம்மா சாப்பாடு கட்டிக் கொடுத்து விடுவா. இப்படி, பலருக்கும் அம்மா கொடுப்பா.

எவருக்கும் பழைய சாப்பாடு கொடுக்கும் பழக்கம் அம்மாவிடம் இருந்ததில்லை. யாரென்றாலும் எங்களுக்கு என்ன சாப்பாடோ அதேதான் அவர்களுக்கும். அம்மாவிடம் ஒருபோதுமே பாரபட்சம் பார்க்கும் பழக்கமும் இருந்ததில்லை. அம்மாவுக்கு மிகப் பரந்த மனசு.

எங்கள் வீட்டின் முன்னறையில் எப்போதும் முறை முறையாக அப்பாவின் சகோதரர்களில் யாராவது ஒருவர் தங்கியிருப்பது வழமையாக இருந்தது. அவர்களின் படிப்புக்கு அது உகந்த இடம் என்று அப்பா கருதியதால் அம்மாவும் மறுக்காமல் ஒத்தே அது நடந்தது. அவர்களையும் அம்மா எப்போதும் தனது சொந்தப்பிள்ளைகள் போலவே கவனித்து சாப்பாடு கொடுப்பதிலிருந்து சகலதுமே செய்வா.

*அம்மா, அப்பாவின் குடும்பத்தை ஏந்தி வைத்துப் பார்த்தா. தீபாவளி, தைப்பொங்கல், வருசப் பிறப்பு என்று எது வந்தாலும் அம்மா எங்கள் எண்மருக்கு மட்டுமல்லாமல் அப்பாவின் சொந்தச் சகோதரர்கள், ஒன்றுவிட்டசகோதரர்கள், சீனியம்மா மார், அப்பாச்சி, அப்பாப்பாட்டா.. என்று எல்லோருக்குமே உடைகள் தைத்துக் கொடுப்பா. அனேகமான அப்படியான விசேட நாட்களில் அம்மா முதல் நாளிரவு நித்திரை கொள்வதேயில்லை. தைத்து முடிக்காத புது உடுப்புகளை இரவிரவாக இருந்து தைத்து முடிப்பா. சில சமயங்களில், அப்பா தூர இடங்களில் வேலை செய்துவிட்டு அதிகாலையில் தான் யாழ் தேவியில் வந்து சேருவார். அப்போதும் அம்மா தைத்துக் கொண்டிருப்பா.*

*தையல் அம்மாவுக்குக் கை வந்த கலை. மிக மிக அழகான சட்டைகள் பல அம்மா எனக்குத் தைத்துத் தந்திருக்கிறா. அவைகளைப் பார்த்து ஊரில் உள்ளவர்கள் ஆசைப்பட்டுக் கேட்டிருந்தாலும் அவைகளின் அருமை அப்போது எனக்கு அவ்வளவாக விளங்கவில்லை. யேர்மனிக்கு வந்த பின்னர் தான் அம்மாவின் தையற்கலையின் மகத்துவம் எனக்கு விளங்கியது.*

*அம்மாவுக்கு நிறைய வேலைகள் வீட்டில் இருக்கும்.இருந்தாலும் எங்கள் குடும்பத்தவர் தவிர்ந்த வேறு யாராவது தைத்துத் தரும்படி கேட்டால் எந்த வித மறுப்புமின்றி அவர்களுக்கும் அம்மா தைத்துக் கொடுப்பா. கஷ்டப் பட்டவர்களுக்கு தானே துணி வாங்கித் தைத்துக் கொடுத்த சம்பவங்களும் உண்டு.*

*அம்மா ஒரு கொடைவள்ளல். யார் எதைக் கேட்டாலும் கொடுப்பதற்கு அம்மா ஒருபோதும் தயங்கியதில்லை.*

*எங்கள் ஆத்தியடி என்ற ஊரை அண்டியுள்ள தம்பசிட்டி என்ற ஊரில் தோட்டக்காணிகள் பல*

உள்ளன. அங்கு வாழ் மக்களில் ஒரு பகுதியினர் அந்தக் காணிகளில் பயிர்செய்து, அதைச் சந்தைக்குக் கொண்டுசென்று விற்றே பிழைப்பை நடாத்துவார் கள். அப்படி சந்தைக்குச்செல்பவர்களில் கீரைக்காரப் பொன்னாத்தைக் கிழவி தொட்டு பெயர் தெரியாத இன்னும் பல பெண்கள் வரை அம்மாவிடம் வந்து தங்கள் முதல் விற்பனையைச் செய்துவிட்டுத்தான் சந்தைக்குச் செல்வார்கள்

அம்மா ஒரு கைராசிக்காரி என்றும்,காலையில் முதலில் அம்மாவிடம் விற்று, அம்மாவின் கையால் பணம் பெற்றுப் போனால் தங்களுக்கு சந்தையில் எல்லாம் நல்ல விலைக்கு விற்று விடும் என்றும் அவர்கள் முழுமையாக நம்பினார்கள். அம்மாவை 'மகராசி' என்பார்கள். அம்மா மனச்சுத்தியோடும் மலர்ந்த முகத்தோடும் கொடுக்கும் அந்தப் பணத்தை ஒரு தடவை கண்களில் ஒற்றி விட்டு, தங்கள் கொட்டப்பெட்டிக்குள் வைத்துக்கொண்டு போவார் கள். அம்மாவின் கை மட்டும் ராசியானதல்ல. மனமும் அப்படி. யாருக்கு எது செய்தாலும் அவர்கள் நல்லாக வரவேண்டும் என்ற மனதார்ந்த விருப்பத்துடனும் வேண்டுதலுடனுமே அம்மா செய்வா.

அம்மா, படிக்கும் காலத்தில் மிகுந்த கெட்டிக் காரியாக இருந்திருக்கிறா. அம்மாவுக்குக் கற்பித்த வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்களில் சிலர் பின்னர் எனக்கும் கற்பித்தார்கள். அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எனக்கு அதைச் சொல்லியிருக்கி றார்கள். அம்மாவின் மடிப்புக் கலையாத வெள்ளைச் சட்டையைப் பற்றியும் நேர்த்தியாகவும் அழகாகவும் துப்பரவாகவும் இருந்த அம்மாவின் கொப்பிகளைப் பற்றியும், குறிப்பாக அம்மா எழுதிய காத்திரமான கட்டுரைகளைப் பற்றியும் கூட அவர்கள் என்னிடம் பலதடவைகள் புகழ்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

அம்மாவுக்கு, தனது படிப்பை மேற்கொண்டு தொடர முடியாமல் இடை நிறுத்த வேண்டியதொரு

நிலை வந்திருக்கிறது. அதையிட்டு அம்மாவிடம் பல காலமாக தீராத கவலை இருந்தது. எனது சிறு பராயத்தில் அம்மா அதை என்னிடம் சொல்லி வருந்தியிருக்கிறா. பரீட்சை எழுதப் போக முடியாது என்ற நிலையில், பரீட்சைக்குக் கட்ட வேண்டிய இருபது ரூபாவை புத்தகத்துக்குள் பல நாட்கள் வைத்திருந்ததாகவும் அடிக்கடி தான் அதைத் திறந்து பார்ப்பதுவும் விடுவதுமாக இருந்ததாகவும் அம்மா மிக மிக வருந்திச் சொன்ன போது நானே கண் கலங்கியிருக்கிறேன்.

அதனாற்தானோ என்னவோ அம்மா எங்கள் படிப்பில் அதீத அக்கறை செலுத்தினா.

அம்மா எங்களைப் படிக்க வைத்த விதமே வேறு. எனது சிறுவயதில், அம்மா சவர்க்காரத்தைத் தேய்த்து உடைகளைத் தோய்க்கும் போது கிணற்றடி யையும் குசினியையும் இணைக்கும்ஒட்டில் சுவரோடு ஒரு பலகைக்குற்றியையோ, பலகைக்கதிரையையோ போட்டு நானிருப்பேன். உப்புத் தண்ணீரில் சவர்க் காரம் நுரைக்காது. அம்மா தேய்த்துத் தேய்த்துக் கும்மி உடைகளுடன் போராடிக் கொண்டிருப்பா. ஆனாலும் திடீர் திடீரென என்னைக் கேள்விகள் கேட்பா. "பதினாறு பதினாறு எத்தனை?" அது 256 என்று எனக்குத் தெரியும். "பன்னீர் பதின்மூன்று எத்தனை?" அது கொஞ்சம் தடக்கும்."பன்னீர் பத்து?" "120". "பன்னீர் மூன்று?" "36". மீண்டும் "பன்னீர் பதின்மூன்று?" கேட்பா. கொஞ்சம் நேரமெடுத்து "156" என்பேன். அது எனக்குத் தண்ணீர் பட்ட பாடமாக வரும் வரை அம்மா விடப்போவதில்லை. தினமும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டே இருப்பா. இப்படித்தான் அம்மா எங்கள் எண்மரை யும் படிக்க வைத்தா.

அத்தோடு அம்மா விடுவதில்லை. நாங்கள் பல் வழிகளிலும் அறிவு சார்ந்தவர்களாக இருக்க வேண்டு மென்பது அம்மாவின் பேரவா. அதற்காக அம்மா

செய்யும் உத்திகளில் ஒன்று, அப்பா எங்களுக்காக வாங்கிக் கொண்டு வருகின்ற, வாங்கி அனுப்புகின்ற புத்தகங்களில் உள்ள பொது அறிவுப் புத்தகங்களை எடுத்து அவ்வப்போது ஒவ்வொன்றாக எங்களது விளையாட்டுப் பொருட்களோடு வைத்து விடுவது. அதனால் எங்களது விளையாட்டுக்களில், பொது அறிவுப் புத்தகங்களிலிருந்து, ஆளையாள் மாற்றி மாற்றிக் கேள்விகள் கேட்பதுவும் எப்போதும் ஒரு விளையாட்டாக இருக்கும். அம்மாவும் அந்தப் புத்தகங்களையெல்லாம் ஏற்கெனவே கரைத்துக் குடித்திருப்பா. வாய்ப்பாடு கேட்பது போலவே அவ் வப்போது திடீர் திடீரென பொது அறிவுக் கேள்விக ளையும் எங்களிடம் கேட்பா.எங்கள் எல்லோருக்கும் அவையெல்லாம் அத்துப்படியாகவே இருந்தன.

வானத்து நீலத்தை அம்மா "மேகவண்ணம்" என்று சொல்வா. அந்த மேகவண்ணத்தில் அம்மாவுக் குப் பெருமோகம். அப்பாவுக்கும் அது தெரியும் என்பதால் அப்பா அந்த வண்ணத்தில் அம்மாவுக்கு சேலைகள் வாங்கிக் கொடுப்பார். அம்மா மிகவும் பிரியமாக அவைகளை உடுத்தித் திரிவா. மாலைப் பொழுதுகளில் அம்மாவுடன் சேர்ந்து நடக்கும்போது, அது கூடுதலாக பாடசாலை விடுமுறைப் பொழுது களில் அப்பாவின் ரெயில்வே குவார்ட்டஸில் இருக்கும் போதாக இருக்கும், நீலவானம், அதில் பஞ்சுப்பொதிகளாய் வெண் முகில்கள், இவைகளைக் கண்டால் போதும். அம்மா அந்த இடத்திலேயே ஒரு கல்லிலேயோ அல்லது ஒரு வாங்கிலிலேயோ எங்களையும் இருத்திக் கொண்டு, தானும் இருந்து விடுவா. இருந்து, அந்த முகில்களில் என்னென்ன உருவங்கள் எங்களுக்குத் தெரிகின்றன என்று கேட்பா. அண்ணன், நான், தம்பி பார்த்திபன் மூவரும் எங்களெங்கள் கற்பனைகளுக்கு எட்டிய படி அந்த முகிற்கூட்டங்களில் அரக்கர்களையும் அரசகுமாரி களையும் சிங்கம், புலி, கரடி... போன்ற காட்டு மிருகங்களையும் கண்டு பிடித்து போட்டி போட்டுச் சொல்லிக் கொண்டிருப்போம். அம்மா இன்னுமொரு

அழகான உருவத்தைக் கண்டுபிடித்துச் சொல்லுவா. முகில்கள் ஓட ஓட உருவங்களும் மாறிக் கொண்டே இருக்கும். அது அம்மாவுடனான மிக ஆனந்தமான தொரு அழகிய பெரு விளையாட்டாக இருக்கும்.

அம்மாவுக்கு 41 வயதாக இருக்கும் போதே நான் எனது கணவரை எங்கள் வீட்டுக்குள் கொண்டு வந்து விட்டேன். அம்மா அவரைத் தனது ஒன்பதாவது பிள்ளையாகவே ஏற்று, அன்போடும் பரிவோடும் பாசத்தோடும் அவருக்கு எல்லாமே செய்தா. எனக்குக் குழந்தைகள் பிறந்த போதும் நான் அம்மாவுக்குக் குழந்தையாகவே இருந்தேன். அம்மா எனது மூன்று குழந்தைகளையும் என்னோடு சேர்த்து தனது குழந்தைகள் போலவே தாலாட்டி, சீராட்டி, உணவூட்டி.. வளர்த்தா.

எங்கள் வீட்டுக் குசினிக்குள் சமையல் மேடை யின் அருகே ஒரு பச்சைப் பெட்டகம் இருக்கிறது. சமைத்த உணவுகளை, அதற்குள்தான் அம்மா, பூனை, நாய், கோழி... என்று எதுவும் தீண்டி விடாது பத்திரப்படுத்திவைப்பா.அந்தப் பெட்டகம் எப்போதும் எனது சிம்மாசனமாகவே இருந்தது. பாடசாலைக் காலங்களில் அதன் மேல் இருந்துதான் அம்மா சமைக்கும் பொரியல்களையும் கரியல்களையும் ஆவி பறக்கப் பறக்க எடுத்துச் சுவைத்தபடி அம்மாவோடு நான் கதையளந்து கொண்டிருப்பேன்.

கர்ப்பமாகிய பின் கூட அம்மா சமைக்கும் போது அந்தப் பெட்டகத்தின் மேல் தான் இருப்பேன். அம்மா சுடச் சுடச் சோறு சமைத்து, கீரையைக் கடைந்து, எல்லோரும் வர முன்னரே "சாப்பிடு, கீரை பிள்ளைக்கு நல்லது" என்று சொல்லித் தருவா. நான் அதன் மேலிருக்க அம்மா எனக்குச் சுட்டுப் போட்ட தோசைகளும் கர்ப்பிணியாக நான் இருந்த காலத்தில் தினம் தினம் கடைந்து தந்த பசுந்தளிர்கீரையும் நெய் யூற்றிய பருப்புக் கறியும்... காலத்துக்கும் எனக்கு மறக்காது.

அம்மா எனக்குச் செய்தவை எண்ணிலடங்கா தவை. சொல்லித் தீராதவை. அதையெல்லாம் நான் திருப்பி அம்மாவுக்குச் செய்வதற்கு அம்மா இன்னும் எத்தனையோ காலங்கள் என்னோடு வாழ்ந்திருக்க வேண்டும்.

---ஓ---

## இறுதி நாட்கள்

அம்மா தனது இறுதி நாட்களிலும் வாசித்துக் கொண்டே இருந்தா. வாசிப்பின் வேகம் குறைந்து போயிருந்தாலும் வாசிப்பதிலான ஆர்வமும் பிரியமும் அம்மாவிடம் குறையாமலே இருந்தன.

நான் அம்மாவிடம் போகும் பெரும்பாலான பொழுதுகளில் அம்மாவின் நெஞ்சில் ஏதாவதொரு புத்தகம் விரித்த படி கவுண்டோ அல்லது ஐபட் திறந்த படியோ இருக்க அம்மா ஆழ்ந்து உறங்கிப் போயிருப்பா. அம்மாவின் தலைமாட்டில் வெற்றி மணி, மண் சஞ்சிகையில் தொடங்கி புதிது புதிதாக வெளிவந்த இன்றைய ஈழத்து நூல்கள் பலவும் இருக்கும். அது மட்டுமா! கட்டிலின் அருகில் இருக்கும் சிறிய அலுமாரியின் மேற்தட்டில், இடைத்தட்டில், மேசையில், சைட்போர்ட்டில்... என்று எல்லா இடங் களிலும் புத்தகங்கள் அடுக்கியடுக்கி வைக்கப்பட் டிருக்கும். அந்த இயலாமையிலும் அம்மாதான் தட்டுத் தடுமாறி எழுந்து அந்தப் புத்தகங்களை அடுக்கி அடுக்கி வைப்பா. சும்மா அடுக்கி வைப்பதுடன் நின்று விடுவதில்லை. அத்தனையையும் வாசித்தும் முடித்து விடுவா. நான் புதிய புத்தகம் கொடுக்கத் தவறினால் வாசித்தவைகளையே எடுத்து மீண்டும் வாசிக்கத் தொடங்கி விடுவா. இந்தப் பழக்கம் அம்மாவுக்கு முன்னரேயே இருந்தது. அம்மாவுக்கு மிகவும் பிடித்தமான அம்மாவுடன் எப்போதும் கூடவே இருந்த, படுத்திருந்தபடி தூக்கி வாசிக்க முடியாத பாரமான அந்தக் கால கல்கி, சாண்டில்யன், அகிலன்,

ஜானகிராமன், இந்திரா பார்த்தசாரதி, லஷ்சுமி... போன்றோரின் நூல்களை அம்மா எத்தனையோ தடவைகள் திருப்பித் திருப்பி வாசித்ததை நான் பார்த்திருக்கிறேன்.

சும்மா வாசிப்பதுடன் அம்மா நின்று விடுவ தில்லை. ஒவ்வொரு கதை பற்றியும் நூல் பற்றியும் மற்றவர்களுடன் சிலாகித்தும் கொள்வா. அவ்வப் போது கதைக்கும்போது அந்தக் கதைகளில் வருகின்ற காத்திரமான விடயங்களைச் சொல்லி அங்க லாய்ப்பா. உண்மையாகத் தனக்கு முன்னால் அந்த விடயங்கள் நடந்தன போல வருந்திக் கதைப்பா. கதைத்த குறையில் மீண்டும் அந்தப் புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்குவா.

அம்மாவின் இந்த வாசிப்புத் தாகத்துக்கும் வேகத்துக்கும் என்னால் ஈடு கொடுக்கவே முடிவ தில்லை. பல அரச கதைகளை மின்னூலாக, தேடி எடுத்து வாசிக்கக் கொடுத்திருக்கிறேன். நான் அவை களைத் தேடித் தரவிறக்கி கொடுக்க எனக்கெடுக்கும் நேரம் அதிகம் போல இருக்கும். இரண்டு மூன்று நாட்களில் சொல்வா "எல்லாம் வாசிச்சாச்சு. புதுசு எடுத்துத் தா" என்று.

கடைசியாக, அம்மா தனக்கு அரக்கு மாளிகை, அலைகடல், காஞ்சனையின் கனவு, வீணையடி நீ எனக்கு, ஜவனராணி என்ற ஐந்து புத்தகங்களும் கண்டிப்பாக வேண்டும் என்று நின்றா. மின்னூலாக மூன்று புத்தகங்களை எடுத்துக் கொடுத்தேன். அம்மா அவற்றில் ஒரு புத்தகத்தைத்தான் 103 பக்கங்கள் வாசித்திருந்தா.அத்தோடு எல்லாவற்றுடனும் சேர்த்து வாசிப்பதையும் நிறுத்தி விட்டா.

அம்மா இறுதி வரை எழுதிக் கொண்டும் இருந்தா. அவைகளைத் தொகுத்தால் இன்னொரு புத்தகம் உருவாகும். அம்மாவின் டயறிக் குறிப்புகள் சொல்லாத பல கதைகளை எங்களுக்குச் சொல்லின.

**அ**ம்மா அப்பா இல்லாமல் இருபத்தியைந்து வருடங்கள் வாழ்ந்தா.அந்த இருபத்தியைந்து வருடங்களும் அப்பாவின் நினைவுகளை தன்னோடு கூடவே கொண்டு திரிந்தா.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் எப்போதும் சுமூகமான, இணக்கமான, புரிந்துணர்வுடனான காதலான வாழ்வே இருந்தது. அப்பா எப்போதுமே அம்மாவில் நிறைந்த பிரியமும் மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார்.

அப்பாவும் ஒரு வாசிப்புப்பிரியர். கலாரசிகர். கணிதத்திலும் வல்லவர். தாய் மொழியாம் தமிழையும் தாயகத்தையும் ஆழமாக நேசித்தவர். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். இராவண பக்தர். வெளியிலே துளி கூடத் தெரியாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் பங்காற்றியவர்.

அப்பா இலங்கையின் எந்தப்பாகத்தில் கடமையில் இருந்தாலும் வாராவாரம் ஒரு கட்டுப் பத்திரிகை எங்களுக்கு அனுப்பி வைப்பார். அதற்குள் அந்த வார டெய்லி-நியூஸ், டெய்லி-மிரர் இல் தொடங்கி தினபதி, சிந்தாமணி, ராதா... என்று பல பத்திரிகைகள் இருக்கும். அனைத்தையும் வாங்கி, தானும் வாசித்து விட்டு எங்களுக்கும் அனுப்புவார். பிறகு விடுமுறையில் வரும் போது அந்தப் பத்திரிகைகளில் வந்த கதைகள்,கட்டுரைகள்,செய்திகள் பற்றி யெல்லாம் அம்மாவும் அப்பாவும் அலசி ஆராய்ந்து நீண்ட உரையாடல்களை நிகழ்த்திக் கொண்டிருப்பார்கள்.

அம்மாவை, அப்பா "சிவா" என்றுதான் அழைப்பார். அதனால் அம்மா தனது 'சிவகாமசுந்தரி' என்ற பெயரைச் சுருக்கி ´சிவா' என்றே எழுதுவா. சுருக்கி என்றும் சொல்ல முடியாது, ´சிவா'வுடன் அப்பாவின் பெயரையும் சேர்த்து 'சிவா தியாகராஜா´ என்றே எப்போதும் எழுதுவா.

எனது சிறுபராயத்தில் வெளியூரில் கடமையில் இருக்கும் அப்பாவுக்கு அம்மா பக்கம் பக்கமாகக் கடிதங்கள் எழுதி 'சிவா தியாகராஜா' என்று கையொப்பமிட்டு அனுப்பு வதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். பிறிதொரு சமயத்தில் அப்பா அப்படிக் கூப்பிடுவதால் தனக்கு அந்த 'சிவா' என்ற பெயர் மிகவும் பிடித்திருக்கிறது என்றும் அம்மா என்னிடம் சொன்னா.

அப்பா யேர்மனிக்கு வர முடியாது போனதில் அம்மாவின் மனசின் ஓரத்தில் எப்போதும் ஒரு கவலை இருந்து கொண்டே இருந்தது. 'அப்பாவும் தன்னோடு சேர்ந்து யேர்மனிக்கு வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும், வந்து இங்கு பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைக் காண அவருக்குக் கொடுப்பனவு இல்லாமற் போய் விட்டதே! என்று அவ்வப்போது சொல்லி வருந்தியிருக்கிறா.

கொஞ்சக் காலமாகவே அம்மாவுக்கு ஊருக்குப் போகவேண்டுமென்ற பெரும் ஆசையும் இருந்தது. 2009 முள்ளிவாய்க்கால் முடிவு தந்த அதிர்ச்சியில் அம்மாவின் இதயம் மிகுந்த பலவீனமாகி, ஒரு கட்டத்தில், 2012இல் அம்மாவுக்கு இதயத்தின் சீரான இயக்கத்துக்காக பேஸ் மேக்கர் வைக்கப்பட்டது. அதன் பின் நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்ள அம்மாவின் மருத்துவர்கள் அம்மாவை அநுமதிக்கவில்லை. அதனால் அம்மாவின் ஊருக்குப் போகும் ஆசையும் நிறைவேறவில்லை.

---ஃ---

**அ**ம்மா இறுதியாக நீண்ட நேரம் என்னுடன் உரையாடிய அந்த நாளை நான் மீண்டும் மீண்டு மாய் அசைபோட்டுப் பார்க்கிறேன். அன்று அம்மா மனசால் முற்று முழுதாக அப்பாவுடன் இருந்தா. அதுவும் ஊரில் இருந்தா.

*மதியம் நான் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்தபோது அம்மா சாதாரணமாகத்தான் கதைத்தா. இரவுச் சாப்பாட்டையும் கொடுத்து விட்டுத் தான் திரும்பினேன். மாலை ஐந்து மணிக்கே இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டு விடுவார்கள். நான் அதன் பின் இரவு ஏழு மணியளவில் போன போது அம்மா மிச்சம் விடாமல் "நல்ல ருசியான சாப்பாடு" என்று சொல்லிச் சாப்பிட்டு விட்டா என்று அங்கு சொன்னார்கள். எனக்கு மகிழ்வாக இருந்தது.*

*என்னைக் கண்டதும் கட்டிலில் படுத்திருந்த அம்மா கேட்டா.*

*"எங்கை உந்தப் பெடியனைக் காணேல்லை?"*

*"எந்தப் பெடியன்?"*

*"உவன்தான் உந்த போட்டர் பெடியன். அப்பாட்டை வேலை செய்யிறவன்"*

*"அம்மா... நீங்கள் இப்ப எங்கை நிக்கிறிங்கள்?*

*"இங்கை அப்பான்ரை ரெயில்வே குவார்ட்டேசுக்கு வெளியிலை.. காருக்குக் காத்து கொண்டு நிற்கிறம்"*

*"அப்பா எங்கை?"*

*"அப்பா உங்கை உள்ளை ஸ்ரேசன்லை வேலை செய்து கொண்டு நிற்கிறார்... முடிச்சிட்டார்"*

*"என்னத்துக்குக் கார்? எங்கை போறிங்கள்? "*

*"நாங்கள் வெளிக்கிடுறம். பயணம் போறம். சாமான்கள் எல்லாம் வான் ஒழுங்கு பண்ணி, அதிலை ஏத்திட்டம். காருக்குத் தான் காத்துக்*

*கொண்டு நிக்கிறம். நீ எல்லாத்தையும் கவனமாப் பாத்துக்கொள்"*

*"அம்மா... எங்கை பயணம் போறீங்கள்?"*

*"ஊருக்குத்தான்... உவன் காரைக் கொண்டு வந்தானெண்டால் போயிடலாம்"*

*அம்மா ஏதோ மாறாட்டமாகக் கதைக்கிறா என்பது எனக்கு விளங்கியது.*

*"அம்மா... என்னை ஆரெண்டு தெரியுதோ?"*

*"ஓம் தெரியும். நீ வதனா. என்ரை மகள். உன்னைத் தெரியாமல் இருக்கிறனே!"*

*"அப்ப மற்றப் பிள்ளையள் எங்கை?"*

*"அவங்கள் ஏன் இங்கை வரப்போறாங்கள்! அவங்களுக்கு வேலை படிப்பு எண்டு எத்தினை இருக்கு. இங்கை என்னத்துக்கு அவங்கள்? இங்கை அப்பான்ரை வேலை யிடத்துக்கு அவங்கள் வாறேல்லை"*

*"அப்ப, என்ன இண்டைக்குச் சாப்பிட்டனிங் கள்? "*

*"அது நல்லருசியான சாப்பாடு. தீட்டல் பச்சை யரிசியிலை நல்ல பால் விட்டுக் காய்ச்சின பாற்கஞ்சியும் நல்ல வெங்காயம் போட்டுப் பொரிச்ச உருளைக்கிழங்குப் பொரியலும்..."*

*"ஆர் சமைச்சுத் தந்தது?"*

*"அப்பாதான் உந்த போட்டரைக் கொண்டு எடுப்பிச்சுத் தந்தவர். நல்ல ருசி. நல்லாச் சாப்பிட்டிட்டன்...*

அது சரி. காருக்குப் போனவனை இன்னும் காணேல்லை. நானும் அப்பாவும் போறதுக்குக் காத்துக் கொண்டு நிக்கிறம். நாங்கள் போய் முடிய நீ கதவுகளை எல்லாம் பூட்டிக் கொண்டு கவனமாப் போ. எல்லாத்தையும் நீ தான் சரியாப் பார்த்துக் கொள்... எல்லாத்திலையும் கவனமா இரு"

இப்படியே, அம்மா ரெயில்வே ஸ்ரேசன், போட்டர், அப்பா... என்று கதைத்துக் கொண்டிருக்க பராமரிப்பு நிலையப் பெண் அம்மாவுக்கு முகம் கழுவி, உடை மாற்ற என்று வந்தாள். அம்மாவின் நிலையில் அம்மாவால் எழுந்து போய் உடை மாற்ற முடியாது என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அம்மா "கண்டிப்பாக உடை மாற்ற வேண்டும்" என்றா.

அம்மா வழமையிலேயே செருப்புப்போடாமல் காலை நிலத்தில் வைக்க மாட்டா. அந்த நேரத்திலும் அதை மறக்காமல் "என்ரை செருப்பு எங்கை?" என்றா. அந்தப் பெண் குனிந்து செருப்புகளை எடுத்து கால்களில் கொழுவி விட்டாள். எழுந்து போக, அம்மாவுக்குக் கஸ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் அந்தப் பெண்ணின் உதவியுடன் குளியலறைக்குப் போய் பல் தீட்டி, முகம் கழுவி, மேல் துடைத்து, உடை மாற்றி வந்தா.

அம்மாவால் நிற்கவே முடியாமல் தள்ளாட்ட மாக இருந்தது. "இப்பதான் நல்ல பிறெஸ் ஆக இருக்குது" என்ற படி அந்தப் பெண்ணின் உதவி யுடன் கட்டிலில் சரிந்தா.

இப்போது அம்மா இயல்புக்கு வந்து விட்டா என்ற நினைப்புடன் கேட்டேன்.

"அம்மா... இப்ப எங்கை நிக்கிறீங்கள்?"

"இங்கை கொடிகாமத்துக்கு வந்திட்டம்"

*"அப்பாவும் பக்கத்திலை நிற்கிறாரோ?"*

*"ஓம். அப்பாவும் நானும்தான் வந்திருக்கிறம். இனியென்ன வீட்டை போய் ஆறுதலாப் படுக்கப் போறம். சரியான களைப்பா இருக்கு. நீ கவனமா இரு.  எல்லாத்தையும் சரியாப் பார்த்து கவனமாச் செய்"*

*அதன்பின் அம்மா கதைக்கவில்லை.கைகளால் ஏதோ சைகைகள் செய்து கொண்டிருந்தா.*

*அம்மாவின் உடல் மட்டுந்தான் யேர்மனியில் இருந்தது. அம்மா ஊரில் அப்பாவோடு இருந்தா.*

*அடுத்த நாள் மதியம் நான் போன போது எழுந்து சாப்பிடுவதற்கான வலு அம்மாவிடம் இருக்க வில்லை. "வேண்டாம்" என்றா. நான் வில்லங்கப் படுத்தி எழுப்பி இரண்டு வாய் ஊட்டி விட்டேன். மூன்றாவதை மறுத்து "என்னை விடு. நான் படுக்கப் போறன்" என்றா.*

*அதன் பின் அம்மா எழுந்திருக்க வில்லை. பேச்சோடு சேர்த்து மூச்சையும் நிறுத்தி விட்டா.*

*ஒரு வருடமாகிறது.*

*எந்தப் பெருந்துயரிலும் யாரும் மடிந்து விடுவதில்லை. நானும் இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறேன். அம்மா எனக்குள் நடமாடிக்கொண்டே இருக்கிறா.*

*–30.04.2023*

# அம்மா ஒரு பேசும் தெய்வம்..!

**சந்திரா இரவீந்திரன்**
*(சந்திரகுமாரி இரவீந்திரகுமாரன்)*

***அ****ம்மா இல்லாத ஒரு உலகத்தை நான் ஒரு போதும் நினைத்துப் பார்த்ததில்லை. இந்த பிரபஞ்சம் இருக்கும் வரை அம்மாவும் இருப்பா என்று ஒரு குழந்தையைப் போல் என் மனம் எண்ணியிருந்திருக் கிறது!*

*அம்மாவுடன் நேரிலும் தொலைபேசியிலும் எத்தனையோ ஆயிரம் தடவைகள், எத்தனையோ ஆயிரம் விடயங்களைப் பேசிக் களித்திருக்கிறேன், பேசித் துயர் அகற்றியிருக்கிறேன். பேசித் துயில் எழுந்திருக்கிறேன், பேசித் துயில்கொண்டிருக்கிறேன்.*

*அம்மாவின் கணீரென்ற தெளிந்த குரலின் ஓசையை, அதன் மேல் மிதக்கும் ஆறுதலான சொற் களை சுமந்தபடி எல்லா வேலைகளையும் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்து கொண்டு இருந்திருக்கிறேன். அம்மாவுடன் பேச முடியாத நாட்களிலும் அவை என்னை உற்சாகத்துடன் இயங்கவைத்திருக்கின்றன.*

*உலகின் எந்த மூலைக்கு நான் பயணித்த போதும் என்னுடைய எல்லாவற்றையும் கேட்கவும் மகிழவும் எனக்காகத் துயருறவும் எனக்காகக் காத் திருக்கவும் என் அம்மா எப்போதும் இருந்திருக்கிறா. அந்த ஒரு உணர்வே என்னைத் தைரியமானவளாக*

*வும் எதையும் தாங்கும் இதயம் கொண்டவளாகவும் வாழ வைத்துக் கொண்டிருந்திருக்கிறது.*

*என் வாசிப்பில், என் எழுத்தில், என் பேச்சில், என் நாளாந்த வேலைகளில், என் நடைபாதைகளில், பயணங்களில், என்னைச் சுற்றியிருக்கும் காற்றில், வெயிலில், மழையில் என எல்லாவற்றிலும் அம்மா வின் பாசம் நிறைந்த நிழல் என்னைத் தொடர்ந்தே வந்திருக்கிறது. அம்மாவின் மனசிலிருந்து எழும் அந்த வாஞ்சையான குரலும், அம்மாவின் அந்த மெல்லிய இதமான வாசனையும் எப்போதும் எனக்குள் நிறை ந்தே இருந்திருக்கின்றன.*

*எனக்குப் பிடித்த எல்லாவற்றையும் அம்மா வுடன் சேர்ந்தே நான் ரசித்திருக்கிறேன். எனக்குள் எழும் எல்லாத் துயரங்களையும் அம்மாவிடம் கொட் டித்தான் நான் கரைத்திருக்கிறேன். என்னுடைய சந்தோசங்களையெல்லாம் ஒரு குழந்தையைப்போல் அம்மாவின் முன்னால் தான் முதலில் பரப்பி வைத்திருக்கிறேன்.*

*இப்போது அம்மாவின் குரலற்ற பாதைகளில், அம்மாவின் நிழலற்ற வீதிகளில் தொடர்ந்தும் நடந்து கொண்டுதானிருக்கிறேன். ஆனால் அந்த உற்சாகம், அந்த ஏகாந்தம், அந்த நம்பிக்கை, அந்தத் தோழமை, அந்த ஆறுதல் எல்லாவற்றையும் எங்கோ தொலை த்து விட்டதான ஒரு தத்தளிப்பு என்னுள்!*

*"சந்திரா.. நீ கெட்டிக்காரி, தைரியமானவள், எதையும் நல்லாயோசித்து, ஒவ்வொன்றையும் சரிவர நேர்த்தியாக செய்யிற பிள்ளை நீ. எனக்கு நல்லாத் தெரியும். நீ புத்திசாலியான பிள்ளை. எதுக்கு யோசிக்கிறாய்? எல்லாம் நல்லபடி நடக்கும்.."- இது அம்மா எனக்கு அடிக்கடி சொல்லும் வார்த்தைகள்.*

*இந்த வார்த்தைகளைப் பற்றிப் பிடித்த படி எத்தனை தைரியமாக, எத்தனை துணிச்சலோடு, எத்தனை பெரிய மலைகளை நான் கடந்து வந்திருக்*

*கிறேன்! திரும்பிப் பார்க்கும் போது என்னாலேயே நம்பமுடியவில்லை. நெஞ்சு அடைக்கிறது!*

*என் வாழ்வின் இக்கட்டான தருணங்களி லெல்லாம், நான் சோர்ந்து விழாது சாய்ந்திருக்க, அம்மா ஒரு பெருந்தூணாக இருந்திருக்கிறா. வாழ் வின் உயரங்களை நோக்கி நகருவதற்கான எல்லாப் பாதைகளையும் முட்களகற்றிச் செப்பனிடுவதற்கு தன்னாலான அனைத்தும் அம்மா செய்திருக்கிறா. எனக்குப் பிடித்த எல்லாவற்றையும் நான் சுதந்திர மாகச் செய்வதற்கு ஒரு தோழியைப் போல் உடனி ருந்து கைகொடுத்திருக்கிறா. புறந்தள்ள வேண்டிய, மாற்றியமைக்கப்பட வேண்டிய சமூகக் கட்டுப்பாடு களை யெல்லாம் உடைத்தெறிந்து விட்டு, நான் வானத்தில் பறப்பதற்கான வழிகளை எனக்காகத் திறந்து விட்டிருக்கிறா.*

*எனக்கு மட்டுமல்ல எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் அம்மா அந்தச் சுதந்திரத்தை முடியு மானளவு கொடுத்திருக்கிறா. தமக்குக் கிடைக்கும் சுதந்திரத்தை அவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார் கள் என்பதில் தானே அவர்களது எதிர்காலம் அமைந் திருக்கிறது. அதனை அமைக்கவேண்டிய பொறுப்பை யும் அம்மா எங்களிடமே விட்டிருக்கிறா.*

*என் படைப்புகளின் முதல் வாசகி என் அம்மா தான்! அவற்றின் முதல் விமர்சகியும் அம்மா தான். அம்மாவின் வாசிப்பு வேகம் குதிரையை விஞ்சிவிடும். கல்கி, சாண்டில்யன், இந்திரா பார்த்தசாரதி, லக்ஷ்மி, ராஜம் கிருஷ்ணன், ஜெயகாந்தன் போன்றோரது நாவல்களில் அநேகமானவை அம்மாவின் அசுர வாசிப்பிற்குட்பட்டவை.*

*ஆழ்ந்த வாசிப்பும் நுண்ணிய புரிந்துணர்வும் நேர்மையும் உண்மையும் கண்ணியமும் ஒழுக்கமும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் மானுட நேசமும் விருந்தோம்பும் பண்பும் தமிழ் மீதான பற்றும் பேச்சில் காட்டும் இங்கிதமும் என ஏராளம் நல்லபண்புகளை*

ஒருங்கே கொண்டிருந்த எங்கள் அம்மா, வாழும் காலம் வரை எங்களுக்கும் அவற்றை போதித்துக் கொண்டே தான் இருந்திருக்கிறா.

அவ தனது எட்டுப்பிள்ளைகளையும் ஒழுக்கம் மிக்கவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் கண்ணியமானவர்களாகவும் புத்திஜீவிகளாகவும் வளர்த்தெடுக்க வேண்டு மென்பதில் எப்போதும் அதிக கவனம் செலுத்திக் கொண்டேயிருந்தா.

எங்கள் அப்பா இலங்கையின் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர். அவரின் வாழ்க்கை பெரும்பாலும் அவர் வேலை பார்த்துக் கொண்டிருந்த சிங்களப் பிரதேசங்களிலேயே அமைந்திருந்தன.அதனால் அவரின் வாழ்க்கை முறையில், பழக்கவழக்கங்களில், உணவு முறைகளில் சில வித்தியாசங்கள் இருப்பதுண்டு. அவற்றையிட்டு அம்மா ஒருபோதும் அப்பாவோடு முரண்பட்டதோ கோபித்ததோ கிடையாது. அப்பாவைப் புரிந்து கொண்டு அவருக்குப் பிடித்த, ஒரு நல்ல மனைவியாகவே அம்மா எப்போதும் வாழ்ந்திருக்கிறா.

"அம்மாவைத் தவிர வேறெந்த சீவனாலும் அப்பாவைச் சுமுகமாகக் கையாள முடியாது" என்று பிள்ளைகள் நாங்களே ஒருவர்க்கொருவர் பேசியதுண்டு. அப்பாவே பல சமயங்களில் அம்மாவைப் பற்றி எங்களுக்குக் கூறிப் பெருமைப்பட்டிருக்கிறார். அப்பாவின் கொள்கைகள், கட்டுப்பாடுகளை மீறி அம்மா தன்னளவில் எதையும் ஒரு போதும் செய்ய முற்பட்டதில்லை. ஆனால் அதே கட்டுப்பாடுகள் எங்கள் முன்னேற்றப் பாதைகளில் தடைகளேதும் ஏற்படுத்து மென உணர்ந்தால் எங்களுக்காக அவற்றை உடைத்தெறிய வேண்டி அப்பாவிடம் தன் கருத்துக்களை துணிந்து முன்வைத்திருக்கிறா. அப்பா அதனை ஏற்றுக் கொண்டு சம்மதிக்கும் வரை அதற்காகப் போராடியுமிருக்கிறா. அதற்காக தனக்கேற்பட்ட கஷ்டங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டும் இருந்திருக்கிறா.

*அம்மா எதையும் தாங்கும் வல்லமை கொண்டவர். எதற்கும் துணிந்தவர். மிகுந்த தைரியசாலி. சாதி, மத பேதங்களை யெல்லாம் கடந்து மனிதத்தைச் சலிக்காமல் நேசித்தவர். தன் பிள்ளைகளுக்காகவும் தாய்மண்ணின் விடுதலைக்காகவும் தன் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தவர்.தன்னை நாடி வந்த எவரையும் அம்மா ஒருபோதும் கைவிட்டதில்லை. அவர்களின் கஷ்டங்களை, துயரங்களைக் களைந்தெறிவதற்காகவும் அவர்களை முன்னேற்றி, அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்காகவும், தன் கஷ்டங்களைக் கூடப் பொருட்படுத்தாமல் தன்னாலான அனைத்தையும் துணிந்து செய்தவர்.*

*அம்மாவின் மனத்தைரியம் என்பது வார்த்தைகளில் சொல்லிவிட முடியாதது. அதனை என் வாழ்வில் எத்தனையோ இக்கட்டான சந்தர்ப்பங்களில் பார்த்து நான் வியந்திருக்கிறேன்.*

*"என்னைப் போல தான் நீயும்..." என்று பல சந்தர்ப்பங்களில் அம்மா என்னிடம் சொல்லியிருக்கிறா. ஆனால் அம்மாவிற்கு இருக்கும் அந்தளவு தைரியமும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் எனக்கு இருக்கிறதா என்பது மிகவும் சந்தேகம் தான்.*

*நான் சமைக்கும் சாப்பாட்டை அம்மா எப்போதும் விரும்பிச் சாப்பிடுவா. என் பிள்ளைகள் பேசும் தமிழை எப்போதும் விரும்பிக் கேட்பா. என் வாழ்க்கை முறையைப் பார்த்து எப்போதும் பாராட்டுவா. என்னையும் என் குடும்பத்தினரையும் பார்ப்பதற்காக குதூகலத்தோடு எப்போதும் காத்திருப்பா. எத்தனையோ தடவைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு அம்மாவைப் பார்ப்பதற்காக நானும் என் குடும்பமும் அம்மாவிடம் யேர்மனிக்குப் போய் வந்திருக்கிறோம். ஆனாலும் அடுத்த சில மாதங்களிலேயே மீண்டும் தன்னிடம் வரும்படி விண்ணப்பம் வைக்கத் தொடங்கி விடுவா. எங்களுக்குச் சிரிப்பும் வரும் கவலையும் வரும், அம்மாவின் பாசமும் நேசமும் அளவில்லாதது!*

***சொ***ந்த மண்ணில் நாங்களெல்லோரும் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு இனியகாலம் இருந்தது. அவை என்றைக்கும் மறக்க முடியாத இனிய கனவுகள் போலவே ஆகிவிட்டன!

*எங்கள் சொந்த மண்ணின் கொடும்போர் எங்களை எங்கெங்கோ தூக்கி வீசி விட்டன! எல்லாச் சந்தோசங்களும் சிதறிப் போயின!*

*என் பதின்மவயதுக் காலங்கள் முற்றிலும் தலைகீழாய் மாறிப்போயின. அவை பதற்றமும் கெடு பிடிகளும் போரும் நிறைந்த கடினமான காலம் தான். அது ஒரு வேறு உலகம் போல் இப்போது நினைக்கத் தோன்றுகிறது. அமைதியற்ற வாழ்வு! உயிரைக் காப்பாற்றுவதற்காக போராடிக் கொண்டேயிருந்த நாட்களவை!*

*அத்தகைய கடினமான கொடிய காலங்களில் நான், அம்மா, அப்பா, தங்கை- பாமா, தங்கை-பிரபா ஆகிய ஐவரும் ஒன்றாகவே வாழ்ந்து கொண்டிருந்தோம். அப்பொழுது மூத்தண்ணன், சின்னண்ணா, அக்கா, தம்பிமார் யாரும் எங்களோடு இல்லை. அவை மறக்க முடியாத திகில் நிறைந்த காலங்கள்!*

*ஆனால் அத்தகைய இடர் நிறைந்த காலங் களிலும் அம்மா தன்னையோ, தன் பண்புகளையோ, பழக்கவழக்கங்களையோ, நாளாந்தச் செயற்பாடு களையோ ஒரு போதும் மாற்றிக் கொண்டதில்லை. பயந்து ஒடுங்கி, ஓடி எங்கும் ஒளிந்து கொண்ட தில்லை. வழமை போலவே நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து, மலர்ந்த முகத்தோடு பளிச்சென்று சுறுசுறுப்பாகவே எப்போதும் இருப்பா. வெள்ளைக் கல் பதித்த தாமரைப்பூ மூக்குத்தியும் தாம்பூலம் தரித்த சிவந்த உதடுகளுமாக அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு உற்சாகமும் மகிழ்ச்சியும் தானா கவே பிறக்கும். அம்மாவின் அருகில் இருக்கும் போது எல்லாப் பயங்களும் ஓடி ஒளிந்து விடும். தன்னம்பிக்*

*கையும் தைரியமும் தானாகவே பிறந்து விடும்!*

*இராணுவம் எம்மைச் சூழ்ந்திருந்த அந்தக் காலங்கள் எத்தனை பயங்கரமானவை! அத்தகைய இக்கட்டான காலத்திலும் தனியாளாக நின்று எங்களையும் எங்கள் குடும்பத்தையும் மட்டுமல்ல மக்களின் விடுதலைக்காக அயராது உழைத்துக் கொண்டிருந்த ஏராளம் இளைஞர்கள் யுவதிகளையும் பாதுகாப்பதற்காக அம்மா செய்தபணிகள் அளப்பரியவை. அப்போது அவவுக்கிருந்த மனத்தைரியமும் செயற் திறனும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை.*

*1985, 86 காலங்களில் இராணுவ முகாம்களிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி 'ஷெல்' அடியும் பீரங்கி வீச்சும் நடந்து கொண்டேயிருக்கும். வானத்தில் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசுவதற்காக வட்டமடித்துக் கொண்டேயிருக்கும். மக்கள் கிலி கொண்டு தம் உயிரைக் காப்பாற்றுவதற்காக பதுங்குகுழிகளிற்குள் நாட்கணக்காகப் பதுங்கியிருப்பார்கள். நாங்கள் எங்கள் வீட்டுப் பதுங்கு குழிகளிற்குள் பதுங்கியிருப்போம். ஆனால் அம்மா மட்டும் சமையலறைக்குள் எங்களுக்காக மும்முரமாகச் சமைத்துக் கொண்டிருப்பா. குண்டு வீச்சுகள் ஓய்வுறும் சில மணிநேர இடைவெளிக்குள் நாங்கள் பதுங்குகுழிக்குள்ளிருந்து வெளியே வந்து உணவருந்த வேண்டுமென்பதற்கான அலுவல்களை அம்மா செய்து கொண்டிருப்பா.*

*"அம்மா.., குண்டு விழப் போகுது. நீங்களும் பங்கருக்குள்ளை வாங்கோ.." என்று எத்தனையோ தடவைகள் நாங்கள் அலறியிருக்கிறோம். அம்மா ஒருபோதும் ஓடிவந்து அதற்குள் தன்னைப் பதுக்கிக் கொண்டது கிடையாது.*

*என் தம்பி பரதன் (மாவீரன் மொறிஸ்) ஒரு தடவை தன் தோழர்கள் இருவரோடு வீட்டுக்கு வந்திருந்த போது பருத்தித்துறை ஹாபர் முகாமிலிருந்து இராணுவ 'ஷெல்' வீச்சு மும்முரமாக நடந்து*

*கொண்டிருந்தது. எங்கள் ஊருக்குள்ளும் சுற்றிவர வுள்ள ஊர்களுக்குள்ளும் தாறுமாறாக 'ஷெல்'கள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. வானமெங்கும் கரும்புகை. வெடிமருந்தின் மணம் வீட்டுக்குள்ளும் வந்து கொண்டிருந்தது. நாங்கள் எல்லோரும் ஓடிச் சென்று பங்கருக்குள் குதித்து விட்டோம். ஆனால் அம்மாவும் பரதனும் அவனின் தோழர்களும் எங்கள் வீட்டுப்பெரியவிறாந்தாவின் விளிம்பில் அசையாமல் உட்கார்ந்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.*

*'ஷெல்' அடி ஓரளவு குறைந்த பின்னர் நாங்கள் பதுங்குகுழிக்குள்ளிருந்து வெளியே வந்து "உங்களொருவருக்கும் பயமேயில்லையா?" என்று கேட்டோம். அதற்கு பரதன் "அம்மாவுக்குப் பக்கத்தில் இருக்கிறவரை எங்களுக்கு எந்தப்பயமும் இல்லை" என்றான் புன்னகையோடு.*

*நான் திருப்பிக்கேட்டேன் "ஏன்டா? ஷெல் இங்கை வந்து விழுந்தால் என்னாகும் சொல்லு பாப்பம்?"*

*அதற்கு அவன் சிரித்தவாறே "அதெல்லாம் அம்மாவை விட்டு வெகுதூரத்தில் இருக்கும் போது தான். அம்மாவுக்குப் பக்கத்திலை இருந்தால் ஒண்டும் கிட்ட வராது. அம்மா செய்யிற புண்ணியங்கள் எங் களைக் காத்திடும்" என்றான். அவன் சொன்ன அந்த வார்த்தைகள் எத்தனை உண்மையானவை என்று நான் பல சந்தர்ப்பங்களில் யோசித்திருக்கிறேன்.*

*அம்மா செய்த புண்ணியங்கள் அளவற்றவை தான்! அவற்றிலொன்று எனக்கு எப்போதும் மறக்க முடியாதது.*

*பருத்தித்துறையின் கடற்கரையோரப் பகுதிக ளில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் கடற்படை இராணுவத்தினரின் தொடர் பீரங்கிவீச்சால் வீடு களை இழந்து போக்கிடமின்றி அலைந்து கொண் டிருந்த எண்பதுகளின் நடுப்பகுதியில் அங்கிருந்து*

*வந்த பல குடும்பங்களிற்கு எங்கள் வீட்டிலேயே இருக்க இடம் கொடுத்து, சாப்பாடும் கொடுத்து பல மாதங்கள் அவர்களை அம்மா அன்பாகப் பராமரித்துக் கொண்டிருந்தா. அப்பொழுது சாதாரணமாக எங்களுக்கே சாப்பாடுகள் எதுவும் தாராளமாகக் கிடைக்காதளவு பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. போரினால் பொருளாதாரம் தரைமட்டத் திற்குப் போய்க் கொண்டிருந்த காலமது. அரசு பொருளாதாரத் தடை விதித்திருந்தது. அந்நேரம், வந்தவர்களை மனம் கோணாமல் அம்மா உபசரித்து, உணவளித்த விதம் என்றைக்கும் என்னால் மறக்க முடியாதது. தொடர்ந்து பசியோடு வீட்டு வேலை களைச் செய்து கொண்டேயிருப்பதால் நாங்கள் களைத்து விடுவோம். அம்மாவோ நைந்து நூலாகிப் போயிருப்பா. ஆனால் புன்னகை மாறாத அதே மலர்ந்த முகத்தோடு, வந்தவர்களை அன்பாக உபசரித்து, தொடர்ந்து சமையல் செய்து, சாப்பாடு கொடுத்து, அவர்களைப் பராமரித்து பாதுகாப்புடன் வழியனுப்பி வைத்திருக்கிறா.*

*1991இல் நான் எனது யாழ் செயலக வேலையையும் விட்டு விட்டு யாழ்ப்பாணத்திலிருந்து இலண்டன் நோக்கிய பயணத்தைத் தொடங்கு கிறேன். அந்த நாள் இன்றும் என்னுள் உயிருள்ள காட்சிப்படிமங்களாய் பதிந்து கிடக்கிறது! அன்றைய தினம் யாழ் முத்திரைச்சந்தியிலிருந்து புறப்படும் கொழும்பு பஸ்ஸில் நானும் என் கணவரும் ஏறி விட்டோம். எங்களை வழியனுப்பி வைப்பதற்காக வந்திருந்த அம்மாவும் அப்பாவும் பஸ்ஸிற்குள் ஏறி விட்ட என்னையே பார்த்த படி திகைத்துப் போய் நின்றார்கள். திடீரென்று அம்மா எப்படி அத்தனை வேகத்துடன் பஸ்ஸிற்குள் ஏறினாவோ தெரிய வில்லை. ஓடிவந்து என் கைகளைப் பற்றி கண்ணீர் மல்க குமுறிக்குமுறி அழத்தொடங்கிவிட்டா. அம்மா அப்படி அழுததை நான் முன்னர் ஒருபோதும் கண்டதில்லை. என் தம்பி பரதன்(மொறிஸ்) வீர மரணமடைந்து, அவனின் உடல் அடக்கம் செய்யப்*

பட முன்னர் ஒருதடவை கலங்கிக் கதறியிருக்கிறா. அதன் பின்னர் அன்று தான் அம்மா அப்படிக் குமுறி அழுவதைக் கண்டேன். அந்த அழுகையை நான் அம்மாவிடமிருந்து ஒருதுளியும் எதிர்பார்க்கவில்லை. அம்மாவின் கண்ணீர் என்னை உள்ளுக்குள் சுக்கு நூறாய் உடைந்து நொருங்கச் செய்து கொண்டிருந் தது! எல்லா வார்த்தைகளும் என் தொண்டைக்குள் சிக்கிப் போயிருந்தன. என் கண்கள் ஏனோ வற்றிக் கிடந்தன. நான் திகைத்துப்போய் பிரமை பிடித்தவ ளாக நின்றிருந்தேன்!

பஸ் புறப்பட ஆயத்தமாகும் பதற்றமானநேரம் அது! பயணம் அனுப்ப வந்திருந்தவர்கள் எல்லோரை யும் கீழே இறங்கும்படி நடத்துனர் பெரிய குரலில் கத்திச் சொல்கிறார். அம்மா திரும்பிப் பார்த்துப் பார்த்து மெதுவாகப் படியிறங்கி வீதியில் நின்று பஸ் யன்னல் வழியாக என்னை எட்டியெட்டிப் பார்க்கிறா. எனக்கு அம்மாவைத் தெரிகிறது. ஆனால் அம்மாவுக்கு என்னைத் தெரிந்திருக்காது. அம்மாவின் துயர் நிறைந்த அந்த முகத்தையும், கண்ணீர் பொங்கி வழிந்து கொண்டிருந்த அந்தக் கண்களையும் என் வாழ் நாள் முழுவதும் என்னால் மறக்கவே முடியாது!

நாடுவிட்டு நாடுவந்து, ஒரு அந்நிய மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்த போது உறவுகள் யாருமற்ற அந்தத் தனிமையான தருணங்களிலெல்லாம் அம்மா வின் கண்களில் பொங்கி வழிந்து கொண்டிருந்த அந்தக் கண்ணீரை மறக்க முடியாமல் தவித்திருக்கி றேன். அம்மாவின் கண்களைத் தொட்டு அந்தக் கண்ணீரை துடைத்தெறியவேண்டுமென மனதிற்குள் அரற்றியிருக்கிறேன்.

1997இல் அப்பா வவுனியாவில் காலமான பின்னர், அம்மா தன்னந்தனியாக யேர்மனிக்கு வந்து சேர்ந்த பின்னரே அம்மாவை நேரில் சென்று சந்திக்கவும், அம்மாவோடு தொலைபேசி வாயிலாகப் பேசவும் எனக்குச் சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது. அப்பாவைப் பறிகொடுத்து விட்டு தனியாளாக வந்து

சேர்ந்த அம்மாவின் கதை மிகத் துயரமானது. அந்தக் கதைகளை அம்மா சொல்லும் போது என்மனம் அதைத் தாங்க முடியாமல் கதறியழுதது. அம்மா அந்தத் துயரத்தை எப்படித் தாங்கியிருப்பா என்று யோசிக்கும் போதே எனக்குள் பெரிய பதற்றமும் உதறலும் தொடங்கி விடும்.

அப்பா தன் உயிர் பிரிவதற்கு சற்று முன்னர் சொன்னாராம் "சிவா, நீர் என்னோடை இருந்து நல்லாக் கஷ்டப்பட்டிட்டீர். இனி... பிள்ளைகளிட் டைப்போய் சந்தோசமாக நிம்மதியாக இரும். உம்மை பிள்ளைகள் வடிவாகப் பார்ப்பினம். நான் இருக்க மாட்டன். கெதியாப் போயிடுவன்... நீர் யோசிக் காதையும்.." என்று.

இதனைத் தொலைபேசியூடாக என்னிடம் சொல்லும் போது அம்மாவின் குரல் தளும்பியது. அப்பாவின் கடைசி நாட்களைப் பற்றி நிறையக் கேட்கவேணும் போல் எனக்கு அடிக்கடி தோன்றும். ஆனால் அந்த ஞாபகங்கள் அம்மாவை மிகவும் அலைக்கழிக்கும் என்பதால் நான் அதனை எப் போதும் தொடங்கிவிட்டு பின்னர் நிறுத்திவிடுவேன்.

அம்மா யேர்மனிக்கு வந்து வாழத் தொடங்கிய பின்னர் நான் எப்பொழுதும் இலண்டனிலிருந்து அம்மாவுடன் தொலைபேசியில் உரையாடுவது நள் ளிரவுப் பொழுதுகளில்தான். அதுதான் நான் வேலை முடிந்து வந்து ஆறுதலாக அமைதியாக அம்மாவுடன் தொலைபேசியில் உரையாடுவதற்கான பொருத்த மான நேரமாக இருக்கும். எனது தொலைபேசி அழைப்புகளிற்காக காத்துக் கொண்டிருந்தது போல் மறுநிமிடமே அம்மா என் அழைப்பை ஏற்றுக் கொண்டு உற்சாகமாகக் கணீரென்ற குரலில் உரை யாடத் தொடங்கி விடுவா. இலண்டனில் அதிகாலை 1.00 மணியென்றால் யேர்மனியில் அப்போது அதி காலை 2.00 மணியாக இருக்கும். அநேகமாக அவ் வாறான நேரங்களில் தான் என் உரையாடல்கள் நிகழ்ந்திருக்கின்றன.

*அப்பொழுதும் அம்மா விழித்திருந்து புத்தகங்கள் வாசித்துக் கொண்டிருப்பா. அம்மாவிற்கு இரவுப் பொழுதுகள் எப்போதும் பிடித்தமானவை. என்னைப் போலவே! அல்ல, நானும் அம்மாவைப் போலவே! இரவின் அமைதி அவவுக்கு எப்பொழுதும் வேண்டியதாக இருந்திருக்கிறது. அது அம்மாவையும் இந்த உலகத்தையும் ஒரு கோட்டில் இணைத்து வைத்திருப்பதற்கு உகந்த பொழுதாக இருந்திருக்கிறது போலும். தனக்குப் பிடித்தமானவற்றை வாசிப்பதற்கும், தனக்குப் பிடித்தமான நினைவுகளுள் தன்னைப் புதைத்துக் கொள்வதற்கும் அந்நேரம் அவவிற்கு மிகவும் கை கொடுத்திருக்கிறது. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திற்கும் தன்னைத் தைரியமாக எடுத்துச் செல்வதற்கான உத்வேகத்தை, தன்னம்பிக்கையை அந்த அமைதிப் பொழுது அவவிற்கு அளித்திருக்கிறது. இதனை அம்மாவுடன் நான் பேசும்பொழுதெல்லாம் உணர்ந்திருக்கிறேன்.*

*அம்மாவுடன் கடைசியாக நான் நீண்ட நேரம் உரையாடியது 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை. அது இலண்டன் நேரம் அதி காலை 1.00 மணி.*

*அப்பொழுது அம்மா மிகுந்த உற்சாகமாகவும் சந்தோசமாகவும் என்னோடு உரையாடிக் கொண்டிருந்தா. அந்த உரையாடலை நான் தகவல் சேகரிப்புக்காக ஒலிப்பதிவு செய்திருந்தேன்.*

*அந்த உரையாடல் இப்படித்தான் தொடங்கியது:-*

*நான்:- சும்மா போன் செய்து பார்த்தன். உடனேயே ரிசீவ் பண்ணிட்டீங்களம்மா? இப்பவும் முழிச்சிருக்கிறீங்களே?*

*அம்மா:- ஓம். எனக்கு நித்திரை வராது. நீ அனுப்பி விட்ட புத்தகங்களிலை ஒன்றை வாசிச்சுக் கொண்டிருக்கிறன்.*

நான்:- உங்கட வாசிப்பை குழப்பிப்போட்டன் போல கிடக்கு?'

அம்மா:-ச்சாச்சே.. இதிலையென்ன இருக்கு? பிள்ளை களின்ரை குரலைக் கேட்கிறதைவிட வாசிப்பு முக்கியமே? எனக்கிங்கை நிறை...ய நேர மிருக்கு. நான் பிறகும் வாசிக்கலாம் தானே? இங்கை எனக்கு முன்னாலை ஏழு புத்தகங்கள் இருக்கு. எல்லாம் வாசிச்சு முடிச்ச புத்தகங்கள். நீ உங்கை யிருந்து அனுப்பின புத்தகங்களும் வதனா கொண்டுவந்து தந்த புத்தகங்களும் இதுகள். இனி யெனக்கு வேறை புத்தகங்கள் வேணும். உன் னட்டை வேறை இருக்கும்தானே. அனுப்பிவிடன்.

நான்:- சரியம்மா. உங்களுக்குப் பிடிச்சதுகளாகப் பார்த்து அனுப்பி விடுறன்.

தொடர்ந்து குசலங்கள் விசாரித்த பின்னர் அம்மாவின் இளம்பராயத்து வாழ்வின் ஞாபகங்கள் சிலவற்றை விசாரிக்கத் தொடங்கினேன். அம்மாவிற்கு நான் கேட்ட விடயங்கள் அத்தனை சந்தோசத்தைக் கொடுக்குமென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. நான் கேட்கும் போது அம்மா சலிப்புக் கொள்வாவோ அல்லது மறந்து போனேனெனச் சொல்வாவோ என்று தான் முதலில் யோசித்தேன். ஆனால் அதற்கு மாறாக அம்மா ஒரு புதிய உற்சாகத்தோடு, தன் இளவயதிற்கே திரும்பிப் பிரயாணம் செய்து, அங்கு போய் நின்று கொண்டு பேசுவது போல் பேசத் தொடங்கினா. அது நான் எள்ளளவும் எதிர்பாராதது.

எனக்கது ஒருவித புல்லரிப்பை ஏற்படுத்தியது. அம்மா ஒரு சிறுமியைப் போலவே முழுமையாக மாறி என்னோடு உரையாடுவது போலிருந்தது.

அந்தக் கதைகளைச் சொல்லும் போது அம்மாவின் வின் மனதிற்குள் ஒருவித துள்ளல் ஒளிந்திருப்பதை நான் அனுபவித்தேன். அவவின் குரலில் ஒரு உற்சாகம் தொற்றிக் கொள்வதை அவதானித்தேன்.

அம்மா என்னோடு உற்சாகமாக நீண்ட நேரம் உரையாடிய அந்த இரவை *(10-04-2022)* என்னால் இன்றைக்கும் மறக்க முடியாது. அந்த உரையாடலில் அம்மாவிடம் நான் கேட்ட கேள்விகளைத் தவிர்த்து, அம்மா சொன்ன பதில்களை மட்டும் தொடர்ந்து அவவின் மொழியிலேயே இங்கு பதிவிடுகிறேன். இதில் அம்மாவின் ஆரம்பகால வாழ்க்கை வரலாறு அடங்கிக் கிடப்பதால் எமது அடுத்த சந்ததியினரின் அறிதலுக்கும் புரிதலுக்கும் நிச்சயம் இது பெரிதும் உதவும் என்றும் நம்புகிறேன்.

அம்மா சொன்னவை:-

"...நான் மூன்று வயசிலை இருந்தே அரிவரி படிக்கப் போகத் தொடங்கிற்றன். வீ.எம் றோட்டிலை இருந்த சின்னத்தம்பிச் சட்டம்பியார் வீட்டுப் பள்ளிக்கூடத்திலை தான் முதன் முதலாக அரிவரி படிச்சனானன். அவற்றை மகன்ரை பெயர் பஞ்சாட்சரம்.

பிறகு ஓராம் வகுப்பு, இரண்டாம் வகுப்பெல்லாம் தம்பசிட்டிப் பள்ளிக்கூடம் தான். பிறகு மூன்றாம் வகுப்பிலையிருந்து பத்தாம் வகுப்பு வரை வட இந்துப் பள்ளிக்கூடம்.

நான் மூன்றாம் வகுப்பிலை அங்கை சேருகிற பொழுது தான் வட இந்துப் பள்ளிக்கூடம் முதன் முதலாகத் தொடங்கினது. நாங்கள் தான் முதல் 'பட்ச்' மாணவிகள்.

ஆனால் வட இந்து பள்ளிக்கூடம் முதன் முதலாய் ஒரு வீட்டிலை தான் தொடங்கினது. அந்த வீடு இப்ப இருக்கிற வட இந்து மகளிர் கல்லூரிக்குப் பின்னாலைபோகிற ஒழுங்கைக்குள்ளைஇருக்குது.

எங்கட வீட்டிலையிருந்து போகேக்கை, கல்லூரி வீதியாலை போய் தம்பசிட்டி வீதியிலை இடப் பக்கம் திரும்பினால் வாற காத்தவராயர் கோயில் மதவடியிலை வலப்பக்கமாக இறங்கிற ஒழுங்கை

இப்ப இருக்கிற வட இந்து பள்ளிக்கூடத்திற்கு பின் பக்கமாய் போகும். அந்த ஒழுங்கைக்குள்ளை இறங்கின உடனே நேரே தெரியிற வீட்டிலை தான் எங்களுக்கு முதல் முதலாய் வகுப்புகள் நடந்தது. அந்த வீடு ஒரு இரண்டறை வீடு. அந்த வீட்டு விறாந்தையிலை தான் எங்களை வைச்சுப் படிப்பிச்சவையள். அது சாவித்திரி அக்காவின்ரை வீடு. சாவித்திரி அக்காவின்ரை தகப்பன் தான் கார்த்திகேசு மாஸ்ரர். அவரும் வேறை கொஞ்சப் புலோலி ஆக்களும் ஆத்தியடி ஆக்களும் சேர்ந்து தான் அங்கை பள்ளிக்கூடம் தொடங்கினவை.

அப்ப சாவித்திரி அக்காவும் எங்களுக்குப் படிப் பிச்சவ. எங்களுக்கு அப்ப இங்கிலீஸ் படிப்பிச்சது மிஸ்.செல்லம் என்றொரு இன்டியன் ரீச்சர். ஒரு வருசம் மட்டிலை அந்த வீட்டிலை வகுப்புகள் நடந்தது. அந்த நேரம் வட இந்துப் பள்ளிக்கூடக் கட்டுவேலைகள் கொட்டகைகள் வடிவில் கட்டுப்பட்டுக் கொண்டிருந்தது.

அதுக்குப் பிறகு பெரிய பெரிய புதுக் கொட்ட கைகள் அமைக்கிற வேலை முடிஞ்சதும், புதிய வட இந்துப் பள்ளிக்கூடம் என்று சொல்லி, அங்கை எல்லாரையும் அழைச்சுக் கொண்டு போனார்கள்.

பிறகு காலப் போக்கிலை தொடர்ந்து பல கொட்டகைகள் போட்டு, இடையிடையே திரைச்சீலைகள் போட்டு வகுப்புகளைப் பிரிச்சு மற்ற வகுப்புகளும் நடக்கத் தொடங்கிட்டுது. என்ரை தம்பியவங்களும் அங்கை தான் ஐந்தாம் வகுப்பு வரைக்கும் படிச்சவங்கள். பல வருசங் களுக்குப் பிறகு தான் உயரமான கோப்புசம் எழுப்பி, அது பெரிய சீமேந்துக் கட்டிடமாகக் கட்டப் பட்டது.

நான் ஆறாம் வகுப்புப் படிக்கிற பொழுது பெரிய பிள்ளையாயிட்டன். அப்ப எனக்கு பதினொரு வயசு. அந்த நேரம் சாமத்தியவீடு எல்லாருக்கும்

*பெரிசாக செய்யிறதில்லை. ஆடம்பரமில்லாமல் சின்னதாகச் செய்வினம். ஆனால் எனக்குக் கொஞ்சம் பெரிசாக, எல்லாச் சொந்தக்காரருக்கும் சொல்லிச் செய்தார்கள். அந்தக் காலத்தில் போட்டோக்கள் எடுக்கிறது குறைவு. என்ரை சாமத்திய வீட்டுக்கு போட்டோ ஒன்றும் எடுக்கேல்லை. அன்றைக்கு மெல்லிய கத்தரிப்பூ நிறத்திலை தங்கச் சருகைக்கரை போட்ட ஒரு ஜோர்ஜெற் சீலை எனக்கு உடுத்திவிட்டிருந்தவை. அந்தச் சீலை சரியான வடிவாயிருக்கும். அப்ப சீலை வியாபாரிகள் வீடு தேடிவந்து நல்ல நல்ல சீலைகள் விற்பார்கள். எனக்காக அம்மா அந்தச் சீலையை வாங்கியிருந்தா.*

*எனக்கு எப்பவும் புசுபுசுவென்று அடர்த்தியான தலைமயிர். பள்ளிக்கூடத்திலை என்ரை தலை மயிரைப் பார்த்து 'சிங்கக்குட்டி' என்று செல்ல மாகக் கூப்பிடுவினம். அன்றைக்கு என்ரை தலை மயிரை வாரிப் பின்னிக் கொண்டை போட்டு விட்டிருந்திச்சினம். மல்லிகைப்பூ, றோஜாப்பூ வெல்லாம் வைச்சு என்ரை கொண்டையைச்சுற்றி அலங்கரிச்சும் விட்டிருந்திச்சினம். அன்றைய அந்த நாளும் எனக்கு மறக்க முடியாத ஒரு நாள் தான்.*

*அதுக்குப் பிறகு நான் 'காவ்' சாறி தான் உடுத்திக் கொண்டு பள்ளிக்கூடம் போவன். வெள்ளைப் பாவாடையும் வெள்ளைநிற பிளவுஸ்ம் வெள்ளை நிற 'வொயில்' தாவணியும் அணிஞ்சு கொண்டு போவன். கழுத்திலை ஒரு 'ஓம்' பென்ரன் போட்ட தங்கச்சங்கிலி இருக்கும். கையிலை ஒரு மோதிரம், ஒருசோடி தங்கக்காப்பு, காதிலை கல்லுத்தோடும் தொங்கிட்டானும் போட்டிருப்பன்.*

*அந்த வயசிலையே நான் உடுப்புகள் எல்லாம் தைப்பன். ஐந்தாம் வகுப்புப் படிக்கிற பொழுது என்ரை பள்ளிக்கூட உடுப்புகளெல்லாம் நானே தைப்பன். எங்களிட்டை அப்ப தையல் மெஷின் இருந்தது. கையாலை சுற்றித் தைக்கிறது. அதிலை*

தான் நான் என்ரை உடுப்புகள் தைக்கிறனான். நானே வெட்டி, நானே தைப்பன். என்ரை அம்மா தான் எனக்கு தையல் பழக்கி விட்டவ.

ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூட உடுப்புகளை தோய்ச்சுக் காயவைச்சு, அயர்ண் செய்து தான் போட்டுக் கொண்டு போவன். அப்ப நெருப்புக்கரி போட்டு அழுத்திற அயர்ண்தான் இருந்தது. எப்பவும் மடிப்புக் கலையாமல் அயர்ண் செய்து தான் எங்கட வீட்டிலை எல்லாரும் உடுப்புப் போடுவினம். ஐயாவும் அப்பிடித்தான்.

நான் வட இந்து பள்ளிக்கூடத்திலை படிச்சுக் கொண்டிருந்த காலத்திலை எங்கட சொந்தக் காரர் கனபேரும் அங்கை படிச்சுக் கொண் டிருந்தவை. என்ரை அண்ணி ராஜேஸ்வரி, நான் மூன்றாம் வகுப்பு படிக்கிற பொழுது அவ இரண்டாம் வகுப்பு படிக்கத் தொடங்கியிருந்தா. அதை விட தேவி மாமி (அவ என்ரை பெத்தப்பா பரியாரி வேலுப்பிள்ளையின்ரை தங்கச்சியின்ரை மகள்- புறொக்டர் உருத்திரா வின்ரை மாமியார்...) அதை விட மங்களம்.. இன்னும் கனபேர் சொந்தக்காரர், ஊராக்கள் எல்லாரும் படிச்சுக் கொண்டிருந்தவை.

நான் எஸ்.எஸ்.சி படிச்சுக்கொண்டிருக்கிற போது எட்டு ஒன்பது பாடங்கள் இருந்தன. அப்ப மற்ஸ் படிப்பிச்சது மிஸ்ஸிஸ் நல்லையா. தமிழும் அவ தான் படிப்பிச்சவ. அதைவிட ஆர்ட், ஹிஸ்றி, ஜோக்கிரபி, சயன்ஸ், மியூசிக், ஹைஜின் என்று நிறையப் பாடங்கள் இருந்தன. எனக்கு எப்பவும் ஹிஸ்றியும் ஆர்ட் உம் விருப்பமான பாடங்கள். ஹிஸ்றி படிப்பிச்சதும் மிஸிஸ். நல்லையா தான். ஆர்ட் படிப்பிச்சது மிஸ். சிவபாக்கியதேவி. அவ முருகேசம்பிள்ளை மாஸ்ரரின்ரை மகள்.

அப்ப பத்தாம் வகுப்பு இரண்டு வருசப் படிப்பு. நான் இரண்டு வருசங்கள் நல்லாப் படிச்சும்

எக்ஸாம் எடுக்க முடியாமல் போயிட்டுது. அதுக்கு என்ரை ஐயாதான் காரணம். வீட்டுப் பொறுப்பு கள் காரணமாக என்னாலை திடீரென்று பள்ளிக்கூடத்திற்குப் போகேலாமல் போயிட்டுது. அது எனக்குச் சரியான கவலையாக இருந்தது. அதுக்காகவே நான் தங்கச்சியின்ரை படிப்பும் என்னைப் போலை மேல்வகுப்பிலை குழம்பி விடக் கூடாதென்று நினைச்சு அவளின்ரை படிப்பைத் தொடருவதற்காக பின்னாளில் ஐயாவோடை போராடியிருக்கிறன்.

ஐயா சரியான பிடிவாதமான ஆள். அவர் நினைச்சதை நாங்கள் மறுக்காமல் செய்ய வேணு மெண்டு எதிர் பார்ப்பார். அவற்றை கட்டுப் பாடுகள், விதிமுறைகளாலை அதிகமாக அடி வாங்கிறது தம்பி-குமாரசாமி தான். அவன்ரை விளையாட்டுத் தனங்களாலை ஐயாவிட்டை யிருந்து நிறைய அடி வாங்குவான். எனக்குச் சரியான பாவமாக இருக்கும்.

எங்கட ஐயாவை 'அப்பாவளவு ஆறுமுகம்' என் றால் எல்லாருக்கும் தெரியும். அவற்றை பூர்வீகம் தம்பசிட்டி பருத்தித்துறை. ஐயா குடும்பம் வாழ்ந்த வளவுக்குப் பெயர் அப்பா வளவு. அதுதான் அந்தப் பெயர் வந்தது. அவருக்கும் சின்ன வயசிலேயே தாய்தகப்பன் மோசம் போயிட்டினம். அவரை வளர்த்தது அவற்றை பெரியம்மாதானாம்.அவருக்கு ஒரே யொரு தம்பி கிருஷ்ணபிள்ளை. அவருக்கு ஒரு சகோதரியும் இருந்தவவாம். இளவயசிலேயே மோசம் போட்டாவாம். ஐயா நல்ல உயரமான வாட்டசாட்டமான வடிவான ஆள். சரியான நேர்மையானவர். ஆனால் படு கோவக்காரன். எவ்வளவு கோவக்காரனாக இருந்தாலும் என்னிலை நல்ல உயிர்.அவருக்குள்ளை யாருக்கும் தெரியாத ஒரு மென்மையான மனசும் இருக்குது. சரியான கடவுள் பக்தி அவருக்கு. தேவாரம், புராணங்களெல்லாம் நல்லபண்ணோடு பாடுவார். மாயக்கைப்பிள்ளையார் கோவில் தான் அவற்றை

*வழி வழிவந்த கோயில். எங்கட அம்மாவைக் கட்டின பிறகு ஆத்தியடிப் பிள்ளையாரோடையே அதிக நெருக்கமாக இருப்பார்.*

*எனக்கு ஆறு வயசாக இருக்கிற பொழுது என்ரை பெத்தப்பா (பரியாரி வேலுப்பிள்ளை-நாங்கள் அவரை அப்பா என்றுதான் கூப்பிடுவம்) மோசம் போயிட்டார். அது 1940ம் ஆண்டு நடந்தது. பெத்தப்பா மோசம் போன பிறகு, அந்த வருசம் தான் என்ரை ஐயாவும் வேலை நிமித்தமாக சிங்கப்பூர் போனவர்.*

*அவர் சிங்கப்பூரில் இருந்த காலத்திலைதான் இரண்டாம் உலகப்போரும் நடக்கத் தொடங்கி யிருந்தது. அந்தப் போருக்குள்ளை அகப்பட்டிருந்த ஐயா இறந்திட்டார் என்றும் நினைக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. ஆனால் அம்மாவோ அவர் வருவார் என்ற நம்பிக்கையோட தான் இருந்தா.*

*ஐயா இல்லாமல் ஐந்து வருசங்கள் ஓடின. அந்த ஐந்துவருசங்களும் அம்மா (விசாலாட்சி) தான் தனியாளாக எங்களுக்காகப்பாடுபட்டு உழைச்சா. என்ரை அம்மா சரியான பிரயாசை உள்ளவ. சுறுசுறுப்பு நிறைஞ்சவ.ஒரு நிமிசமும் சும்மாயிருக்க மாட்டா. ஏதாவது வேலை செய்து கொண்டே யிருப்பா.*

*எங்களுக்கு தம்பசிட்டியிலை தோட்டம் துரவுகள் இருந்தன. அவற்றிலை சிலவற்றை குத்தகைக்குக் கொடுத்திருந்தம். எங்கடை நிலங்களிலையிருந்து வாற நெல், எள்ளு ஆகியவற்றை ஆட்களைப் போட்டு, குற்றி, அரிசியாக்கி, மூட்டைகளாக மாட்டு வண்டிலில் எடுத்துச் சென்று வேறு ஊர்களில் விற்று வருவது அம்மாவின் முக்கிய தொழிலாக இருந்தது. நாங்களும் அவவோடு சேர்ந்து பாடுபடுவோம். ஆனால் பெரிய வேலை கள் செய்வதற்கு அம்மாவுக்கு கூலி ஆட்கள் எப்போதும் இருப்பார்கள்.*

அப்போது எங்கடை வீட்டில் பால்மாடுகளும் நின்றன. நாம்பன் மாடுகளும் நின்றன. இரண்டு மாட்டுவண்டில்களும் சொந்தமாக வைச்சிருந் தோம். பசுமாடுகள் தரும் பாலில் தயிர், நெய் எல்லாம் செய்வோம். பால், தயிர், நெய் எல்லாத்தையும் எங்கள் வீட்டுத் தேவை போக மிச்சத்தை விற்பனைக்கு அனுப்பி விடுவோம். அந்த வேலைகளையும் நாங்கள் தனியாகச் செய்வதில்லை. எங்களோடு சேர்ந்து கூலி ஆட்களும் அலுவல் பார்ப்பார்கள். அதனால் தொடர்ந்து அவற்றை பெரிய வியாபாரமாகவே செய்யக் கூடியதாக இருந்தது. கூலியாட்கள் எல்லாருக்கும் வீட்டில் தினமும் பெரியசமையல் நடக்கும். சமையலுக்கான மரக்கறிகள் ஒவ்வொரு நாளும் ஃபிரஷ் ஆக எங்கட தோட்டங்களில் இருந்து வரும். நான் எப்பவும் சமையலறைக்குள் நின்று மும்முரமாகச் சமைத்துக்கொண்டிருப்பேன்.

பிறகு வந்த காலங்களில் எங்கட ஐயாவுக்கு இருந்த தம்பசிட்டிக்காணிகளை விற்றுவிட்டோம். அந்த நேரம் அந்த இடம் நாகரீகம் குறைந்த இடம் என்று சொல்லி அவற்றை அப்போதே விற்று விட்டோம். இப்ப நினைக்க, கவலையாக இருக் கிறது. எங்கடை நிலம் எண்டிறது எப்பவும் பொன் தான். அதுக்கும் நாகரீகம் அநாகரீகம் என்றெல்லாம் பாக்கிறது எவ்வளவு மடத்தனம். பிறகொரு காலத்திலை இதைப் பற்றி யோசிச்சு நான் கவலைப்பட்டிருக்கிறன்.

ஐயா இல்லாத அந்த இரண்டாம் உலகப் போர்க் காலத்திலை வேற்று நாட்டு இராணுவத்தினர் எங்கடை ஊர்களிலை உலாவிக் கொண்டிருப் பார்கள். காப்புலி ஆமிக்காரர், யூரோப்பியன் ஆமிக்காரர் எனப் பலர் நிற்பார்கள். திடீரென்று எங்கடவீட்டுவேலிகளை குறடுகளாலை வெட்டிக் கொண்டு உள்ளை வந்திடுவார்கள். அந்த நேரம் விமானம் குண்டு போடும் என்று சொல்லி அடிக்கடி பங்கருக்குள்ளை போய் ஒளிச்சிருப்பம்.

*அது ஒரு காலம் என்றால், பிறகு எங்கட நாட்டு ஆமிக்காரராலையும் எங்கட வீடுகள் பங்கர் இல்லாமல் இருக்கேல்லைத் தானே? பங்கருக்கும் எங்களுக்கும் அப்பிடியொரு உறவு போலை இருக்கு? (அம்மாவிடமிருந்து துயரம் கலந்த சிரிப்பொன்று வருகிறது) மூன்று நாலு வருசங்கள் இப்பிடி இருந்தது.*

*சிங்கப்பூருக்குப் போயிருந்த ஐயா இரண்டாம் உலகப் போருக்குள்ளை அகப்பட்டு இறந்திருப்பார் என்றெண்ணி நாங்கள் கவலைப்பட்டுக் கொண் டிருந்த பொழுது திடீரென்று ஒரு நாள் அவர் திரும்பி வந்திருந்தார். ஐயா உயிரோடு வந்தது பலருக்கும் நம்பமுடியாமல் இருந்தது. ஐந்து வருசங்களிற்குப் பிறகு அவர் திரும்பி வரும் போது நான் பள்ளியில் ஆறாம் வகுப்புப் படிச்சுக் கொண்டிருக்கிறேன். நான் பெரிய பிள்ளை யானது ஐயா சிங்கப்பூரிலையிருந்து வந்த பிறகு தான். அதனால் என்ரை சாமத்தியச் சடங்கில் அம்மா, ஐயா எல்லாரும் நின்றிருந்தினம்.*

*நான் எஸ்.எஸ்.சி படிச்சுக் கொண்டிருக்கும் போது, தொடர்ந்து பள்ளிக்குப் போக முடியாமல் போனதும் இறுதிப் பரீட்சை எடுக்க முடியாமல் போனதும் எனக்குச் சரியான கவலை.பிறகென்ன வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டேன். வீட்டில் எனக்கென நிறையப் பொறுப்புகள் வந்து சேர்ந்தன. அதற்குப் பிறகு முழுப்பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு வீட்டை நிர்வாகிப்பது, எங்களது வழமையான வியாபாரக் கணக்கு வழக்குகளைக் கவனிப்பது, சமையல், சாப்பாட்டு விடயங்களைக் கவனிப்ப தென்று நான் படு பிஸியாகி விட்டேன்.*

*அப்போது காசு களஞ்சியங்கள் வைக்கிறதுக் கென்று ஒரு அழகான மூடுபெட்டி மூடல் இருக் கும். அது என்ரை பொறுப்பில் தான் எப்போதும் இருந்தது.*

நான் வீட்டின் முழுப்பொறுப்புகளையும் கவனிக் கிறதாலும் நான் தான் வீட்டில் மூத்தபிள்ளை என்பதாலும் எல்லா விடயங்களையும் என்னைக் கேட்டுத்தான் அநேகமாக எல்லாரும் செய்வார் கள். பெரியவர்கள் எல்லாரும் என்னை 'பிள்ளை' என்று தான் அன்பாக அழைப்பார்கள்.

அப்பொழுது சுந்தரி மாமி அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவா. அவவுக்கு என்னில் சரியான உயிர். 'பிள்ளை...பிள்ளை' என்று என்னிடம் உருகுவா. அவவின்ரை பிள்ளைகள் தான் மனோகரன், விமலா ஆகியோர். அவதான் நான் பிறந்த உடனை தன்ரை பெயரை எனக்கும் வைக்க வேணுமென்று சொல்லி எனக்குப் பெயர் வைத்ததாகச் சொல்லுவா.

எனக்கு இருபத்திரண்டு வயசிலை திருமணம் நடந்தது. 1956ம் ஆண்டு மார்கழி மாசம் 13ம் திகதி எங்கட ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலிலை தான் தாலிகட்டு நடந்தது. 03ம் திகதியே எழுத்து முடிஞ்சுது.

என்ரை கலியாண விசயங்களெல்லாம் சந்திரா, நீ உன்ரை 'வாசம்' என்ற சிறுகதையிலை நல்ல வடிவாய் எழுதியிருந்தாய். எனக்கே அது ஆச்சரியமாயிருந்திது. நான் அவ்வப்போது சொல்லுற கதைகளை வைச்சு ஞாபகமாக அதிலை எழுதியிருக்கிறாய்.

எனக்கு லக்கினத்திலை செவ்வாய் என்றதாலை இருபத்தைஞ்சு மாப்பிள்ளைகளின்ரை சாதகப் பொருத்தம் பார்த்தும் ஒன்றும் பொருந்தேல்லை யாம். கடைசியாகத்தான் உங்கட அப்பாவின்ரை சாதக ஓலை நல்ல பொருத்தமென்று சொல்லிச் செய்தவை.

அந்தக் கதையெல்லாம் நீ நல்ல வடி வாய் அந்தச் சிறுகதையிலை எழுதியிருக்கிறாய்"

**அ**ம்மா இன்னும் பல விடயங்கள் அன்றைக்கு என்னோடு தொலைபேசியில் பேசினா. ஆனால் அதுதான் அம்மா என்னுடன் உரையாடும் கடைசி நீண்ட உரையாடல் என்பது எனக்குத் தெரியாமலே போய் விட்டது! அதன் பின்னரும் அம்மாவுடன் நிறைய உரையாட வேண்டுமென பலவற்றை நினைத்து வைத்திருந்தேன். ஆனால் காலமும் நேரமும் அதற்குக் கைகொடுக்கவேண்டுமே? அதற்குள் அம்மா எங்கள் எல்லோரையும் விட்டு விட்டுப் பறந்து போய்விட்டா!

அம்மா மறைவதற்குச் சில தினங்களிற்கு முன்பிருந்தே என் உள்ளுணர்வு ஏதோ அமைதி யின்றித் தவிப்பதை நான் உணர்ந்து கொண்டே யிருந்தேன். அந்தத் தத்தளிப்பு ஏனென்று அப்போது எனக்குப் புரியாமலிருந்தது. அம்மா என்னுடன் நீண்ட நேரம் உரையாடிய பின்னர் வந்த ஓரிரு கிழமைக்குள் ஒரு நாள் திடீரென்று அக்கா (சந்திரவதனா) எனக்கு போன் செய்தா. அம்மா கொஞ்சம் இயலாமல் இருக்கிறாவென யோசனை யோடும் கவலையோடும் சொன்னா. ஆனால் நானதை அவ்வளவு பெரிதாக எடுக்கவில்லை. அப்படிக் கடுமையாக யோசிக்க வேண்டாமென்றும், அம்மா ரெண்டுநாளில் உசாராகிவிடுவா என்றும் நம்பிக்கை ஊட்டினேன். நானும் அதைத்தான் வெகு வாக நம்பினேன்.

ஆனால் அப்போதும் நான் அடிக்கடி அம்மா வுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு தானிருந்தேன். அவவால் அதற்குப் பின்னர் நீண்ட நேரம் உரையாட முடியவில்லையே யாயினும் சின்னச் சின்ன விசயங்களை என்னோடு பேசினா. பேசும் போது அம்மாவின் குரலில் எந்த விதத் தொய்வோ, களைப்போ தெரியவில்லை. அதே பழையகுரலில் கணீரென்றுதான் பேசிக் கொண் டிருந்தா. ஆனால் அடிக்கடி "உடல் களைப்பாக இருக்கிறது, படுக்கப் போகிறேன்" என்று மட்டும் அவ்வப்போது சொல்லி விட்டு விரைவில் உரை

*யாடலை முடித்து விடுவா. நானும் "நன்றாகத் தூங்குங்கள் அம்மா. பிறகு பேசுவோம்.." என்று சொல்லி அம்மாவை ஆறுதல்படுத்தி விடுவேன்.*

*அன்று 18-05-2022 செவ்வாய்க்கிழமை. அன்றைய நாள் ஈழத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இலட்சக்கணக்கான மக்களும், போராளிகளும் இலங்கை இராணுவத்தினரால் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்ட 13வது வருட துயரமான நினைவு நாள். அன்று அதிகாலை நான் படுக்கையிலிருக்கும் போதே யேர்மனியிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அத்தானின் (செல்வகுமாரன்) குரல் தொலைபேசியின் மறுமுனையிலிருந்து ஒலித்தது.*

*"அம்மா...விடியப்பறம் நான்கு மணிக்கு எங்களை விட்டுப் போய் விட்டா.." அதுதான் அவரிடமிருந்து வந்த செய்தி.*

*எனக்கு அழுகையோ பதற்றமோ எதுவும் அப்போது வரவில்லை. ஏதோவொரு கதை கேட்டது போலவே இருந்தது. அது ஏனென்று இப்போதும் எனக்குத் தெரியவில்லை. தொலைபேசி அழைப்பு மறுமுனையில் துண்டிக்கப்பட்டுவிட்டது.*

*நான் பொறுமையாக படுக்கையிலிருந்து எழுந்து, என் கைத்தொலைபேசியைத் திறந்தேன். எங்கள் குடும்பத்தினரின் வட்ஸ்அப் கூட்டுஉரையாடல்பகுதியில் அம்மாவின் துயரச்செய்தி யேர்மனியிலிருந்து அக்காவினால் அறிவிக்கப் பட்டிருநதது. அம்மாவின் இறுதி நேரப் புகைப்படங்கள் சிலவும் போடப்பட்டிருந்தன.*

*அவற்றைப் பார்த்த கணத்தில் தான் மண்டையில் யாரோ ஓங்கியடித்தது போல் துடித்து எழுந்து நின்றேன்! நிஜம் என்னுள் பாறாங்கல்லாய் உருளத் தொடங்கியது! உலகமே நடுங்குவது போல் இருந்தது. என்னுள் சகலமும் உறைந்து போயிருந்தன! வார்த்தைகள் தொலைந்து போய் ஒரு அநாதைக்*

*குழந்தையைப் போல் சில நிமிடங்கள் நின்றிருந் தேன்! அந்த நிமிடங்களைச் சரியாகச் சொல்வதற்கு இன்றுவரை என்னிடம் வார்த்தைகள் இல்லை!*

*அம்மா இல்லாத ஒரு உலகத்தை நான் என்றும் நினைத்துப் பார்த்ததில்லை! இனிமேலும் அப்படி நினைக்காமல் இருக்கவே விரும்புகிறேன். அந்த நினைவே என்னை அமைதியாக வாழ வைக்கும்! அம்மா எப்போதும் என்னோடு இருக்கிறா! அதை நான் மனதார நம்புகிறேன்!*

*அம்மா!*
*நீங்கள் என் தோழி!*
*நீங்கள் என் வாசகி!*
*நீங்கள் என் நேசகி!*
*நீங்கள் என் குரு!*
*நீங்கள் என் தாதி!*
*நீங்கள் என் அரசி!*
*நீங்கள் என் தெய்வம்!*

*நீங்கள் எல்லாமாகவும்*
*என்னுள் எப்போதும்!*

*அன்பு மகள்*
*சந்திரா*

*சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி இரவீந்திரகுமாரன்-1963), சிவகாமசுந்தரி அவர்களின் இரண்டாவது புதல்வி. இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# அன்பு அம்மா!

## சந்திரபிரபா கணேசமூர்த்தி

*பேசும் தெய்வமாய் நின்ற*
*என் அம்மா எங்கே?*

*என்னை விட்டு நீங்கள் வெளிநாடு செல்லும் செய்தி கேட்டு மகனை வயிற்றில் சுமந்த படி துடித்துப் போய் கதறி அழுதேன்.*

*ஆறுதல் சொல்லி என் மனதைத் தேற்றி பயணம் தொடர்ந்தீர்கள். மீண்டும் உங்களோடு வவுனியாவில் எட்டு மாதங்கள் இருந்து மகனைப் பெற்றெடுத்து வாழும் ஒரு சந்தர்ப்பம் சந்தோசம் கிடைத்தது.*

*ஆனாலும் நாட்டு நிலைமை தொடர்ந்து எம்மை வாழ விடவில்லை. ஓடி ஓடி எமது ஆத்தியடி மண்ணுக்கே வந்தேன்*

*நீங்களும் வவுனியாவில் அப்பாவை இழந்து யேர்மனி சென்றீர்கள். பணத்தையும் பாசத்தையும் தந்து பிள்ளைகளை வளர்த்தெடுக்க உறுதுணையாய் நின்றீர்கள்.*

*காணவில்லை அம்மா உங்களை!*
*கேட்கவில்லை அம்மா உங்கள் குரல்!*
*ஆறவில்லை அம்மா என் மனது!*
*ஆற்றிட ஓர் வார்த்தை சொல்லுங்கள்!*
*அம்மா..! அம்மா..! அம்மா..!*

*உங்கள் அன்பு மகள்*
*பிரபா*

*சந்திரபிரபா கணேசமூர்த்தி (1965), சிவகாமசுந்தரி அவர்களின் மூன்றாவது புதல்வி. ஈழத்தில் ஆத்தியடி, பருத்தித்துறையில் வாழ்ந்து வருகிறார்.*

# கனிவு கருணை தைரியம் மிக்க என் மாமி

இரவீந்திரகுமாரன்

**எ**ன் மாமியை முதன் முதலாக என் பதிவுத் திருமண வைபவத்தின் போது தான் நான் சந்தித் தேன். அவவின் இரண்டாவது மகள் சந்திராவை (சந்திரகுமாரி) நான் திருமணம் செய்து கொண்ட தால் எனக்குக் கிடைத்த ஒரு அருமையான உறவு தான் என் மாமி!

ஊரில் இருக்கும்போது நான் கண்ட மாமியை ஒரு போதும் என்னால் மறக்க முடியாது. எப்போதும் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு, செந்தளிப் பான பூரித்த முகம், கனிவான பேச்சு, எதையும் பொறுமையோடு அணுகும் விதம்... என எதையும் தவிர்த்து என்னால் அவவைப் பார்க்க முடிந்த தில்லை.!

வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களை மாமி உபசரிக்கும் விதமே தனி. எப்பொழுதும் அவர்களது வீட்டுக்கு முன்பின் அறிவித்தலின்றி யாராவது வந்து போய்க் கொண்டேயிருப்பார்கள். உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்களால் வீடு எப்போதும் கலகலப்பாகவும் பரபரப்பாகவும் இருக்கும். வருபவர் களை மகிழ்வோடு உபசரித்து, தேநீர், பலகாரங்கள், சாப்பாடு என்று ஏதாவது அருந்தக் கொடுத்துத்தான் எப்போதும் மாமி அவர்களை வழியனுப்பி வைப்பா.

அப்போது மாமா, மாமி, சந்திரா, பாமா நால்வரும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டிலிருக்கும் றெயில்வே குவாட்டர்ஸ்ஸில் தான் வசித்துக் கொண்

டிருந்தார்கள். அவர்களது சொந்தவீடு பருத்தித்துறையில் இருந்தது. எனது மாமனார் தியாகராஜா அவர்கள் யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் புகையிரத நிலைய அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். மனைவி சந்திரா யாழ்ப்பாணம் அரச செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். மாமியின் கடைசி இரண்டு மகன்மார் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கியமான பொறுப்புகளில் இருந்தார்கள். ஒருவர் பரதன்(கப்டன் மொறிஸ்). அவர் வடமராட்சி பருத்தித்துறையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் பொறுப்பாளராக இயங்கிக் கொண்டிருந்தார். மற்றவர் சபா(கப்டன் மயூரன்). சபா வன்னிக்குள் யாரும் இலகுவில் சந்திக்க முடியாத ஒரு முக்கியமான இடத்தில் நிற்கிறாரென்று மட்டும் கேள்விப் பட்டிருந்தேன். அவர் தலைவர் பிரபாகரன் அவர்களின் மெய்ப்பாதுகாவலனாக இருந்திருக்கிறார் என்ற விடயத்தை பல வருடங்களிற்குப் பின்னர் தான் நான் தெரிந்து கொண்டேன்.

பரதன், விடுதலைப்புலிகளின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்ததால், அங்கே அவர்களின் குடும்பம் இராணுவத்தினரின் தொல்லைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் ஆளாக வேண்டியநிலை இருந்தது. இலங்கை இராணுவத்தை விட இந்திய இராணுவத்தினரால் அவர்கள் பட்ட கஷ்டங்கள் துயரங்கள் பற்றி மாமியும் சந்திராவும் எனக்குக் கதைகதையாக நிறையச் சொல்லியிருக்கிறார்கள்.

மாமியின் இன்னுமொரு மகள் பிரபாவும் அவரின் கணவரும் கூட பருத்தித்துறையில் மாமியின் வீட்டுக்கருகில் தான் வசித்து வந்தார்கள். பிரபாவின் கணவரை இராணுவத்தினர் எப்போதும் பிடித்துச் செல்வதும் சித்திரவதை செய்வதும் பின்னர் விடுவதுமாக இருப்பார்களென்று கேள்விப்பட்டேன். இந்தத் தொல்லைகள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு தள்ளியிருப்பதற்காகவே மாமியும் பிள்ளைகளும் யாழ்ப்பாணத்திற்கு வந்து மாமாவுடன், மாமாவின் குவார்ட்டர்ஸ்ஸில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

*எனக்கும் சந்திராவுக்கும் பதிவுத் திருமணம் முடிந்ததும், நான் அபுதாபிக்குத் திரும்பி விட்டேன். சில மாதங்களிலேயே, பரதன்(கப்டன் மொறிஸ்) பருத்தித்துறையில் நிகழ்ந்த இந்திய இராணுவத் துடனான மோதலில் வீரமரணமடைந்து விட்டார் என்ற செய்தி என்னை வந்து சேர்ந்தது. அவரின் மரணம் என்னை மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தை மட்டுமல்ல, அந்த ஊரையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டிருந்தது! வடமராட்சிப்பகுதியெங்கும் கறுப்புக் கொடிகளும், கர்த்தாலுமாக ஒரு வாரம் கழிந்தது என்று அபுதாபியிலிருந்தபடியே செய்திகளில் வாசித் தேன். அங்கிருந்து யாருடனும் தொடர்பு கொண்டு பேசுமளவுக்கு அப்போது யாழ்ப்பாணத்தில் நிலைமை கள் இருக்கவில்லை. தொலைபேசி இணைப்புகள், போக்குவரத்துகள் யாவும் துண்டிக்கப்பட்டு ஒழுங் கற்ற நிலையிலேயே எல்லாம் இருந்தன.*

*அதன் பின்னர் எங்கள் திருமணவைபவத் திற்கே என்னால் ஊர் வரமுடிந்தது. ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தபடி எங்கள் திருமணம் கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் கோயிலில் நடைபெற்றது. அப்போது சபாவினால் அங்கு வரமுடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் பரதன் உயிருடன் இல்லையே என்ற கவலை தான் எங்கள் எல்லோரையும் தடுமாற வைத்துக் கொண்டிருந்தது. ஆனால் மாமியோ எங்கள் எல்லோரையும் விட மனதளவில் மிகவும் தைரியமாக இருந்தா. தன் துயரத்தையெல்லாம் உள்ளே பூட்டிவைத்துவிட்டு, தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தைரியமாகத் தன் நாளாந்தப் பணிகளை செய்யத் தொடங்கியிருந்தா. ´யாரும் அதற்காகக் கவலைப்படக் கூடாது` என்பது போல, எல்லோரையும் அவவே தேற்றி விட்டா.*

*"களத்தில் என் மகன் புறமுதுகிட்டு ஓடாமல், தன் நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் வீரத்துடன் போரிட்டு மாண்டான்" என்று கூறும் புறநானூற்று வீரத்தாய் போல என் மாமி அப்போது என் கண்களுக்குத் தோன்றினா! அவவின் அத்தகைய*

மனோதிடத்தையும் பொறுமையையும் செயற் திறனையும் என்னால் எப்போதும் வியந்து பார்க்காமல் இருக்க முடிவதில்லை!

எங்கள் திருமணம் நடந்து முடிந்த பின்னர், 1989ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நானும் அவர்க ளுடன் ஒன்றாக சில மாதங்கள் அதே ரெயில்வே குவாட்டர்ஸ் மனையில் வாழும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் திருமணமாகி அங்கு அவர்களோடு இருந்த காலங்களில் அவர்களின் உறவினர் குடும்ப மொன்றும் நண்பர்கள் குடும்பமொன்றும் அவர்க ளோடு அங்கு தங்கி நின்றிருந்தன. வடமராட்சிப் பகுதியில் இராணுவக் கெடுபிடிகள் அதிகமாகி, இளைஞர்களை இராணுவம் கண்மூடித் தனமாகக் கைது செய்வதும் சுட்டுக்கொல்வதுமாக இருப்பதால் உறவினர்கள் தத்தமது இளவயதுப் பிள்ளைகளை இவர்களது இந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். அதனால் அந்த ரெயில்வேகுவாட்டர்ஸ் வீடு எந்நேரமும் இளவயதுப் பிள்ளைகளால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும். மாமியும் அலுக்காமல் சலிக்காமல் புன்னகை பூத்த முகத்தோடு அவர்களை உபசரித்து, அனுசரித்து, பராமரித்து, பக்குவமாக மீண்டும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைப்பா.

அப்போது தமிழர் பகுதியெங்கும் அடிக்கடி ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட படியே இருக்கும். போக்குவரத்துச் சேவைகள் எதிர்பாராத நேரங்களிலெல்லாம் இராணுவத்தினரால் நிறுத்தப் பட்டு விடும். எதுவும் எப்பொழுதும் நிகழலாம் என்ற பயமும் பதற்றமும் எல்லோர் மத்தியிலும் இருந்து கொண்டேயிருக்கும்.

ஆனாலும் நான், மாமியையும் சந்திராவையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு அடிக்கடி போய் வருவேன். மாமி முன்னுக்கும் சந்திரா பின்னுக்கும் சைக்கிளில் அமர்ந் திருக்க நான் இருவரையும் சுமந்து கொண்டு சைக்கிளை உழக்கிச் செல்வேன். அவ்வளவு பயங்கர

*மான சூழ்நிலையிலும் அந்தப் பயணம் எங்களுக்கு ஒருவித மனஆறுதலையும் சந்தோசத்தையும் தரும். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை கிட்டத்தட்ட இருபத்தியொரு மைல் தூரமிருக்கும். போகிற வழி யெல்லாம் நிறையக் கதைகள் பேசிக் கொண்டே போய் வருவோம். வல்லைவெளியைக் கடந்து போகும் போது காற்றின் மிகுதியால் சைக்கிளை உழக்க முடியாமல் கஷ்டப் படுவேன். அப்போது சிலசமயம் இறங்கி நடந்து செல்வோம். வழியில் இராணுவம் வந்து விடும், ஹெலி வந்து விடும், பொம்மர் வந்து விடும் என்ற பயமும் இருந்து கொண்டேயிருக்கும். ஆனாலும் எல்லாவற்றையும் கடந்து, பருத்தித்துறை ஆத்தியடியில் இருக்கும் அவர் களது வீட்டுக்குப் போய், வீட்டையும் பார்த்து, ஊரவர்களையும் சந்தித்துத் திரும்புவோம். அது மாமிக்கு மிகப் பெரிய ஆறுதலைக் கொடுக்கும். அதைப் பார்க்கும் போது என் மனமும் ஏனோ ஆறுதல் கொள்ளும்.*

*மாமிக்கு எப்போதும் என்னில் ஒருவித மரியாதை இருக்கும். என்னோடு பேசும் போது மிகுந்த அன்போடும் கனிவோடும் பேசுவா. மாமி யுடன் பழகும் போதெல்லாம் என்னுடைய தாய் போலவே அவ எனக்குத் தோன்றுவதுண்டு!*

*இவை எல்லாவற்றிற்கும் பின்னர், அந்த சந்தோசமும் துயரமும் கலந்த நினைவுகளோடு, நான் மீண்டும் என் பணியைத் தொடர்வதற்காக அபுதாபிக் குப் பயணமாகி விட்டேன். என் மனைவியை, என் மனைவியின் குடும்பத்தை, என் குடும்பத்தை என எல்லோரையும் விட்டுப்பிரிந்து மீண்டும்பயணமாவது எனக்குள் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் என்ன செய்வது? போய்த் தான் ஆக வேண்டும். உழைத்துத் தான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம்.*

*நான் போய் சில மாதங்களிற்குள்ளேயே மேலும் பல சம்பவங்கள் நடந்து விட்டன. எல்லா*

*வற்றையும் சந்திரா எனக்கனுப்பும் கடிதங்கள் மூலம் தான் நான் அறிந்து கொள்வேன். அவர்களுடைய குவாட்டர்ஸ் வீடு பொம்மர் குண்டுவீச்சுத் தாக்குதலில் தரைமட்டமானது, சந்திராவும் தங்கையும் அவர்களின் அப்பாச்சியும் மயிரிழையில் உயிர் தப்பியது, மாமியும் மாமாவும் அச்சமயம் பருத்தித்துறையில் நின்றிருந்தது.. என ஏராளமான சம்பவங்கள்! சில வற்றை நினைத்தால் இப்போதும் திகைப்பாக இருக்கும்!*

*இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட பின்னர் என்னால் நிம்மதியாக இன்னுமொரு நாட்டில் வேலை செய்து கொண்டிருக்க முடியவில்லை. சந்திராவும் மனமுடைந்து போய், என்னைத் திரும்பி வந்துவிடும்படி ஒரு நண்பி மூலம் கொழும்பிலிருந்து தொலைபேசி வழியாக அறிவித்தல் அனுப்பியிருந்தா. அதற்குப் பின்னர் நான் அவசரமாக அபுதாபியில் இருந்து ஊருக்கு வந்து விட்டேன்.*

*ஊரில், கட்டைப்பிராயில் எனது அம்மாவின் வீட்டிற்கு அருகாக ஒரு வீடெடுத்து நானும் மனைவியுமாக அங்கு போய் குடியிருந்தோம். சந்திரா அங்கிருந்து யாழ்.கச்சேரிக்கு சைக்கிளில் வேலைக்குப் போய் வருவா. ஆனாலும் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் இப்படியே பயந்து பயந்து, சாவைக் கையில் சுமந்தபடி வாழ்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.*

*கடைசியாக இருவருமாக ஒரு முடிவெடுத்தோம். `முதலில் எங்காவது வேறு ஒரு நாட்டுக்குச் சென்று உயிரைப் பாதுகாப்போம். அதற்குப் பிறகு மற்றவற்றை யோசிப்போம்.´ அது தான் எங்கள் முடிவாக இருந்தது.*

*நான் சந்திராவையும் அழைத்துக் கொண்டு இலண்டனுக்குப் போய்விடலாமென்ற முடிவோடு அதற்குரிய அலுவல்களைப் பார்க்கத்தொடங்கினேன் அச்சமயம் மாமியும் மாமாவும் பருத்தித்துறையி*

*லிருந்து அடிக்கடி எங்களிடம் வந்து சந்திராவையும் என்னையும் சந்தித்து விட்டுப் போவார்கள். மாமி வரும்போது எப்போதும் அரிசிமா, உளுத்தம்மா, மிளகாய்த்தூள்..என்று எல்லாம் தன்கையால் செய்து கொண்டு வருவா. மாமியின் முகத்திலும் பேச்சிலும் புன்னகை தெரியும். ஆனாலும் ஏதோவொரு பெருந்துயரம் அவவின் ஆழ்மனதிற்குள் இருப்பதை அவவின் கண்கள் சொல்லும். அவவின் அமைதியான பேச்சும் ஆறுதலான வார்த்தைகளும் எங்களைச் சமாதானப்படுத்திவிடும்.*

*1991 முற்பகுதியிலேயே நாங்கள் நாட்டை விட்டு வெளிக்கிட்டு விட்டோம். நாங்கள் வெளிக் கிடும்போது சந்திராவின் மூத்தண்ணன் பிறேமராஜன் இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் தன் ஒரு காலை இழந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக் கப் பட்டிருந்தார். அந்தத் துயரமான நிலையில் தான் எங்கள் இலண்டன் பயணமும் தயார் நிலையில் இருந்தது. அந்தச் சூழலில் இருந்த மாமி, மாமாவின் இக்கட்டான நிலைமை பற்றியும் அவர்கள் எல்லோ ரினதும் துக்கமான மனநிலை பற்றியும் வார்த்தைக ளில் சொல்லி விட முடியாது! ஆனாலும் உலகம் இயங்கிக் கொண்டு தானே இருக்கிறது. பகலும் இரவும் வந்துகொண்டுதானே இருக்கின்றன. எதுவும் நின்று விடவில்லை!*

*நாங்கள் முத்திரைச்சந்தியில் கொழும்பு பஸ் ஸில் ஏறும்போது மாமியும் மாமாவும் அவ்விடத்துக்கு எம்மை வழியனுப்பி வைக்க வந்திருந்தார்கள். அப் போது மாமி கண்களில் கண்ணீர் வழிய பஸ்ஸிற்குள் ஓடிவந்து சந்திராவின் கைகளைப் பிடித்து அழுததும் விடைகொடுத்ததும் இன்னமும் என் கண்களிற்குள் அப்படியே நிற்கின்றன. அப்போது மாமியின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று இப்போதும் யோசித்துப் பார்க்கிறேன்!*

*நாங்கள் இலண்டன் வந்து சேர்ந்து சில வருடங்களின் பின்னர், 1997இல் மாமா காலமாகி*

*விட்டார். 1998ல் மாமி தனியாக யேர்மனிக்கு வந்து விட்டா. அங்கு தனது மற்றைய பிள்ளைகளோடு சேர்ந்து வாழும் நிலை அவவுக்குக் கிடைத்தது பெரிய ஆறுதலான விடயம்.*

*மாமி யேர்மனிக்கு வந்தபின்னர் இலண்டனில் இருந்து தொலைபேசி வழியாக அவவோடு நான் அடிக்கடி பேசிக் கொள்வேன். அவ எவ்வளவு கதை கள் என்னோடு கதைத்தாலும் அதில் போராளிகள், எங்கள் மண்விடுதலை, சுதந்திர தமிழீழம்... என்பது பற்றிய பேச்சுக்கள் தான் அதிகமாக இருக்கும். எமக்கென்றொரு தனிநாடு மலரவேண்டும் என்பதில் மாமி தீராத தாகம் கொண்டிருந்தா. தான் மரணிப் பதற்கிடையில் சுதந்திர நாடொன்று எங்கள் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பா.*

*அப்போது என் அம்மா கனடாவில் இருந்தா. மாமியும் அம்மாவும் தொலைபேசியூடாக எப்போதும் அன்பாகப் பேசிக் கொள்வார்கள். மாமி என்னோடு பேசும் போதெல்லாம் என் அம்மாவைப் பற்றி, என் சகோதரங்களைப் பற்றி யெல்லாம் விசாரிக்கத் தவறுவதேயில்லை. என் சகோதரங்களின் பிறந்த நாட்களைக் கூட தன் ஞாபகத்தில் வைத்திருந்து, அவர்களைத் தொலைபேசியூடாக வாழ்த்தவும் அவ மறப்பதில்லை*

*மாமி யேர்மனியில் மன்ஹைம் நகரில் வாழ்ந்த போதும் சரி, பின்னர் 'ஸ்வேபிஸ் ஹால்' என்ற நகரில் வாழ்ந்து கொண்டிருந்த போதும் சரி நானும் சந்திராவும் அடிக்கடி அங்கு சென்று மாமியோடு சில நாட்கள் தங்கி நின்று மாமியைச் சந்தோசப்படுத்தி வருவது வழமை. இல்லாவிட்டாலும் மாமி அடிக்கடி போன் செய்து "ரவி எப்ப என்னட்டை வருவீங்கள்? எப்ப சந்திராவை என்னட்டைக் கூட்டிக் கொண்டு வருவீங்கள்?" என்று கேட்ட வண்ணமே இருப்பா.*

*நாங்கள் யேர்மனிக்கு அவவிடம் போகும்*

போது நான் செய்து கொடுப்பதற்காகவென்றே சின்னச்சின்ன வேலைகள் சேர்த்துவைத்துக் காத்தி ருப்பா. எனக்கும் அவவுக்காக ஏதாவது செய்து கொடுப்பதில் பெரிய மனச்சந்தோசம் கிடைக்கும்.

அவவுக்கு மரங்கள் வளர்ப்பது மிகவும் பிடிக்கும். நாங்கள் அங்கு போகும் வேளைகளில் அவ குடியிருக்கும் வீட்டின் பல்கணியில், பூச்சாடிகளில் பூமரங்கள் வைத்துக் கொடுப்போம். நானும் சந்திரா வுமாக கடைகளிற்குச் சென்று புதிய றோஜாச் செடிகள் வாங்கி வந்து, சாடிகளில் மண்போட்டு மரங்கள் நட்டு விட்டு வருவோம். அவ கவனமாக தண்ணீர் ஊற்றி அவற்றை வளர்த்துக் கொண்டு இருப்பா. அடிக்கடி போன் பண்ணி, அந்த மரங்கள் துளிர் விடுவது பற்றியும் அவை பூக்கத் தொடங்கி விட்டமை பற்றியும் குதூகலத்தோடு சொல்லுவா. அவவின் சந்தோசம் அவவின் பேச்சிலேயே தெரியும்.

ஒருதடவை போன போது, தனது அறைக்குள் சாமிப்படங்கள் வைப்பதற்காக, சுவரில் ஒரு சாமித் தட்டு அடித்துத் தரவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டா. நான் அழகாக அதனைச் செய்து கொடுத்த பின்னர் அவவின் முகத்தில் தெரிந்த சந்தோசத்திற்கும் குதூகலத்திற்கும் அளவேயில்லை. அதனை இப்பவும் என்னால் மறக்க முடியாது.

மாமிக்கு என் மனைவி சந்திராவின் மேல் எப்போதும் ஒரு தனிப்பாசம். சந்திரா சமைக்கும் சாப்பாடுகளெல்லாம் அவவுக்கு எப்பவும் மிகவும் பிடிக்கும். "அவள் என்னைப் போல" என்று அடிக்கடி சொல்லிச்சந்தோசப்படுவா. நாங்கள் அங்கு போகும் சமயங்களில் மாமிக்குப் பிடித்தமான மரக்கறிகளான கத்தரிக்காய், பூசணிக்காய், முருங்கைக்காய், பப்பா சிப்பழம், மாம்பழம், நெல்லிக்காய்... என எல்லாம் இலண்டனிலிருந்து வாங்கிக் கொண்டு போவது வழமை. மாமிக்குப் பிடித்தமான மோதகம் அல்லது கொழுக்கட்டை செய்யாமல் சந்திரா ஒரு போதும் அவவிடம் செல்வதில்லை. மாமி அவற்றை ரசித்துச்

*சாப்பிடும் அழகே தனி. ஒரு சிறியகத்தி, ஒரு பிளேற், அருகில் ஒரு ரிசுப் பேப்பர், ஒரு கிளாஸில் சுடு தண்ணீர், அதற்கருகில் அவவின் அலை பேசி, கைக் கெட்டும் தூரத்தில் ஒரு பேனா, ஒரு கொப்பி, டயறி.. என இவ்வளவும் அவ அமர்ந்திருக்கும் கதிரை யின் முன்னாலிருக்கும் சிறிய தேநீர் மேசையில் ஒழுங்காக அடுக்கி, அழகாக, துப்பரவாக வைக்கப் பட்டிருக்கும். தோல் சீவிய மாம்பழங்களை ஒவ் வொரு துண்டாகஎடுத்து, நிதானமாக அவ சாப்பிடும் விதமே அலாதியாக இருக்கும். முழுநெல்லிக்காய் களை சிறிய கத்தியால் சிறு சிறு துண்டுகளாக அரிந்து, அதனை அவ ரசித்துச் சாப்பிடும் காட்சியை நானும் சந்திராவுமாக ரசிப்போம். அங்கு போய் நிற்கும் சமயங்களில், சந்திரா அவவுக்காக ஒடியற் கூழ், சோறு கறி.. எல்லாம் சமைத்துக் கொடுப்பா. அதனை அவ சாப்பிடுவதைவிட தனக்காக இவற்றை யெல்லாம் செய்கிறோமே! என்று குதூகலப் படுவது தான் அதிகமாக இருக்கும். அவ சாப்பிடுவது சொற்ப மாகத் தான் இருக்கும். நாங்கள் அங்கு நிற்கும் நாட்களில் தினமும் அவவை அழைத்துக் கொண்டு வெளியே சற்றுத்தூரம் வரை நடந்து சென்று விட்டு வருவோம். அது அவவை மிகவும் சந்தோசப் படுத்தும். போகிற வழி நெடுக நிறையக் கதைகள் எங்களோடு பரிமாறிக் கொண்டு வருவா.*

*2020இல் நாங்கள் மாமியிடம் சென்றிருந்த போது, அவ தனது தங்கச்சி உமையாம்பிகையைப் பார்க்க விருப்பப்படுகிறா என்று எங்களுக்கு விளங் கியது. ஆனால் தன்னால் நீண்ட தூரப் பிரயாணங் கள் செய்ய முடியாது என்றும் மாடிப் படிகளில் முன்பு போல் ஏறியிறங்க முடியாதென்றும் சொல்லி இலேசாக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தா. அவவின் துக்கத்தைப் போக்க வேண்டும் என்று நினைத்து நானும் மனைவியுமாக மாமியையயும் அழைத்துக் கொண்டு அவவின் தங்கச்சி இருக்கும் போட்ஸ் ஹைம் என்ற இடத்திற்கு காரில் புறப்பட்டோம். மாமியின் தங்கை அப்போது யேர்மனியில் தனது*

மகன் வீட்டிலிருந்தா. அவர்களது வீட்டிற்குள் நுழைவதற்கு இருபது படிகளாவது ஏற வேண்டும். படிகளில் ஏறியிறங்க முடியாத மாமியை நான் ஏதோவிதமாக ஒவ்வொரு படிகளாக ஏற்றிக் கூட்டிச் சென்று விட்டேன். அவவும் தங்கச்சியைப் பார்க்கப் போகிறேன் என்ற சந்தோசத்தில் மனஓர்மத்துடன் படிகளில் ஏறி அவர்களது வீட்டிற்குள் வந்துவிட்டா. அந்தப் பயணத்தின் மூலமாக, தனது தங்கச்சியைச் சந்திக்க முடிந்ததையையிட்டு, மாமி அடைந்த சந்தோசத்தை வார்த்தைகளில் சொல்ல முடியாது. பின்பும் அது பற்றி அடிக்கடி எங்களிடம் சொல்லி சந்தோசப்பட்டிருக்கிறா.

நாங்கள் அங்கு நிற்கும் நாட்களிலெல்லாம் நாங்கள் தன்னிடம் வந்திருப்பதையிட்டு, உற்சாக மாகவும் சந்தோசமாகவும் ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பா. நாங்கள் மீண்டும் இலண்டன் திரும்புவது அவவுக்கு எப்போதும் கவலையாக இருக்கும். சில மாதங்களிலேயே மீண்டும் "எப்போ வருவீர்கள்" எனக் கேட்கத் தொடங்கிவிடுவா. எனக்குச் சிரிப்பும் வருவதுண்டு.

மாமி யேர்மனிக்கு வந்த ஆரம்ப காலங்களில் சில தடவைகள் இலண்டனுக்கு வந்து எங்களுடன் சில நாட்கள் தங்கி நின்று போயிருக்கிறா. அந்த நாட்களில் என் பிள்ளைகள் சிறுபிள்ளைகளாக இருந்தார்கள். எங்கள் பிள்ளைகளில் அவவுக்கு ஒரு தனிப்பாசம். அவர்கள் நன்றாகத் தமிழ் கதைக்கிறார் கள், தன்னோடு மிகவும் அன்பாக நடந்து கொள்கி றார்கள் என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப் படுவா. அவர்களைப் பற்றி மற்றவர்களுக்கும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டேயிருப்பா.

மாமியின் கடைசிக் காலங்களில் தூரப் பயணங்கள் அவவுக்கு மிகவும் கஸ்டமாக இருந்தது. கொரோனாக் காலம் என்பதால் பயணத்தில் பல கெடுபிடிகள் இருந்தன. அதனால் நினைத்தவுடன் பயணம் செய்ய முடியாத ஒரு நிலையும் இருந்தது.

*ஆனாலும் மாமியுடன் நாங்கள் தொலைபேசியில் பேசிக்கொண்டு தானிருந்தோம். எப்பவும் போல் எங்களை தன்னிடம் வரும்படி கேட்டுக் கொண்டே யிருந்தா. பிள்ளைகள் போய் அவவிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு வந்திருந்தார்கள்.*

*நானும் சந்திராவும் கடைசியாக 2021, ஓகஸ்ட் இல் போய் மாமியைப் பார்த்துவிட்டு வந்தோம். அதன் பின்னர் 2022 ஜனவரியில் என்னுடைய அம்மா கனடாவில் காலமாகி விட்டா. எனது அம்மா காலமான பின்னர் மாமி எங்களோடு போனில் பேசினா. அதுதான் அவ கடைசியாக பொறுமையாக நீண்ட நேரம் பேசியது என்று ஞாபகம். அதன் பின்னர் அவ அதிகம் பேசாமல் இருப்பதைத்தான் விரும்பினா என்று நினைக்கிறேன்.*

*2022 மே மாதம் 18ம் திகதி என் மாமி அமைதியாக இறைவனிடம் போய்ச்சேர்ந்து விட்டா என்ற செய்தி வந்தது! அதன் பின்னர் நாங்கள் எல்லோரும் நேரில் சென்று மாமியின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு, மாமியை வழியனுப்பி வைத்தாலும், அவவின் இனிமையான, தெளிவான, கனிவான குரலை இனிக் கேட்க முடியாதே என்ற நினைவு வரும்போதெல்லாம் துக்கம் தாளமுடியவில்லை!*

*மனித வாழ்வு நிரந்தரமல்லாதது தான். ஆனால் வாழும் காலத்தில் அவர்கள் வாழ்ந்த விதமும் அவர்களின் பண்பும் நற்செயல்களும் எப்போதும் இந்த உலகத்தைவிட்டுப் போகாது என்பதற்கு என் மாமியின் வாழ்வும் அவ செய்த பணிகளும் மிகப் பெரிய உதாரணமாகும்!*

*என் அன்பு மாமியின் நினைவுகளோடு...*

*இளையதம்பி இரவீந்திரகுமாரன் (1959), சிவகாமசுந்தரி அவர்களின் இரண்டாவது மருமகன். இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# மாமியின் பண்பு அரியது

மஞ்சுளா பிறேமராஜன்

**மா**மிக்கு மூத்தமருமகள் நான். அவரது மூத்த மகனை காதலித்து திருமணம் செய்து கொண்டதால் ஏற்பட்ட புதியபந்தம் இது. 1982ம் ஆண்டு எனக்கு திருமணம் முடிந்து, முதன்முதலாக பருத்தித்துறை ஆத்தியடியிலிருக்கும் மாமியின் வீட்டிற்கு எனது கணவரோடு சென்றிருந்த போது "வலது காலை எடுத்து வைத்து உள்ளை வாருங்கோ" என்று சொல்லி, என்னை மலர்ந்த முகத்தோடு வரவேற்ற போது தான், நான் மாமியை முதல் முதலாக நேருக்கு நேர் அருகிருந்து கண்டேன்.

அந்த வீட்டிற்குள் அவரது மருமகளாக நான் உள்நுழைந்த கணத்திலிருந்து, தன் சொந்த மகளைப் போலவே என்னை ஆதரித்து, உபசாரம் செய்து, என்னைத் தன் குடும்பத்தில் ஒருவராக இணைத்துக் கொண்ட மாமியை என்னால் இன்றைக்கும் மறக்க முடியாது.

திருமணத்தின் பின், நானும் எனது கணவரும் வற்றாப்பளையில் இருக்கும் எனது வீட்டில் தான் வாழ்ந்து வந்தோமாயினும், பருத்தித்துறையிலிருக்கும் மாமியின் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவோம். பின்னர் நான் கர்ப்பவதியாகி, முதற்பிள்ளையை என் வயிற்றில் சுமந்தபடி அங்கு செல்லும் போதெல்லாம் என்னை அன்போடும் கரிசனையோடும் கவனித்து, எனக்குப் பிடித்தமான உணவுவகைகளெல்லாம் மாமி சமைத்துத் தருவா. அதிலும் மாமி தரும் எள்ளுப்பாகு, எள்ளுருண்டை, சீனியரியாரம், தோசை, அப்பம், இட்லி ஆகியவற்றின் சுவைகளை இன்றைக்கும் என்னால் மறக்கமுடியாது.

மாமி மிகவும் சுறுசுறுப்பான ஒரு பெண். வீட்டில் எப்பொழுதும் தலைக்கு மேல் வேலைகள் குவிந்திருக்கும். நாள் முழுவதும் அயராது வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பார். உடல் களைத்துப் போயிருக்கும். ஆனாலும் ஒருபோதும் சோர்ந்து போய் அவர் அமர்ந்திருந்ததையோ, இயலாதெனக் கூறி, எந்த வீட்டுப்பணிகளையும் செய்யத் தவறி யதையோ நான் பார்த்ததேயில்லை. அவர்களது வீட்டில் எந்நேரமும் உறவினர்களும் விருந்தினர்க ளும் நிறைந்து வழிந்த படியிருப்பார்கள். எல்லோரை யும் அன்பாக வரவேற்று, எல்லோருக்கும் உணவு உபசாரம் செய்து தான் அவர்களை மாமி வழி யனுப்பி வைப்பார்.

காலப்போக்கில் எனக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்து விட்டார்கள். நாங்கள் பெரிய குடும்பமாகி விட்டோம். எங்களுக்கும் பொறுப்புகள் கூடிக்கொண் டிருந்தன. 1990ம் ஆண்டு டிசெம்பர் மாதமளவில் எனது கணவர் முக்கிய அலுவலாக கொழும்பிற்குச் சென்றிருந்தார். அங்கு அவரின் வேலைகள் முடிந்த பின், ஊர் திரும்பும் போது கொழும்பிலிருந்து தாண்டிக்குளம் வழியாகச் செல்லும் பேரூந்தில் இருக்கையைப் பதிவு செய்து, அதில் பிரயாணம் செய்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது தான் வாழ்வில் நான் என்றைக்கும் நினைத்துப் பார்த்திராத அந்தக் கொடிய சம்பவம் நடந்தேறியது.

என் கணவர் பயணம் செய்து கொண்டிருந்த பேரூந்து தாண்டிக்குள இராணுவமுகாம் சோதனைச் சாவடியை அண்மித்தபோது அதிலிருந்த பயணிகள் யாவரும் இராணுவத்தினரால் சோதனைக்காக இறக் கப்பட்டார்கள். சோதனை முடிந்த பின்னர் சிறிது தூரம் நடந்து சென்று பேரூந்தில் ஏறுமாறு பணிக்கப் பட்டார்கள். அதன்படி பயணிகள் நடந்து செல்லும் போது திடீரென்று வெறிகொண்டவர்கள் போல் பயணிகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டார்கள். துப்பாக்கிச்சூடும், ஷெல்

அடிகளும் பயணிகள் மீது நடாத்தப்பட்டன. இதனை எதிர்பார்த்திராத பயணிகள் உயிர் தப்புவதற்காக சிதறி ஓடத் தொடங்கி விட்டார்கள். அந்தப் பேரூந்தில் பயணித்த ஆறு பயணிகள் தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். மிகுதி அனைவரும் மிகக்கொடூரமான காயங்களிற்கு ஆளானார்கள்.

எனது கணவர் அந்த இராணுவத் தாக்குதலில் தன் வலது காலை இழந்தார். அவரது கை என்புகள் முறிவுற்றன. விரல்கள் சிதைந்து போயின. உடலை அசைக்கவே முடியாத ஒருநிலையில் அவரை யாரோ ஒருவர் யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

நானும் பிள்ளைகளும் அச்சமயம் முல்லைத் தீவு, வற்றாப்பளையில் எங்கள் வீட்டில் இருந்தோம். எங்களுக்குச் செய்தி வந்து சேரமுதல் மாமியும் மாமாவும் இந்தக் கொடுஞ்செய்தி கேட்டு பருத்தித் துறையிலிருந்து யாழ் வைத்தியசாலைக்கு ஓடிவந்து விட்டார்கள். தங்கள் மூத்தமகனான என் கணவருக்கு அவர்கள் எப்போதும் உதவியாகவும் பக்க பலமாகவும் நின்றிருந்தார்கள். அதன் பின்னர் தான் நானும் செய்தி கேள்விப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தேன்.

நாங்கள் எல்லோரும் தங்கி நின்று, காயப் பட்டிருக்கும் என் கணவரை கவனிப்பதற்கு ஏதுவாக, என் கணவரின் இளையசகோதரனும், தலைவர் பிரபாகரனின் சிறப்பு மெய்ப்பாதுகாவலனுமாக இருந்த சபா(கப்டன் மயூரன்) அவர்கள் யாழ்ப் பாணம், அடைக்கலமாதா கோவில் தெருவில் ஒரு வீட்டினை எமக்காக அவசரமாக ஒழுங்கு பண்ணித் தந்திருந்தார். மாமியும் மாமாவும் உடனேயே அங்கு வந்து தங்கி நின்று, தினமும் வைத்தியசாலை சென்று தங்கள் மகனைக் கவனிக்கும் வேலைகளை பொறுப் பாகவும் அக்கறையாகவும் செய்து கொண்டிருந் தார்கள். என் கணவர் மனம் தளர்ந்து விடக் கூடாது

என்பதில் மாமி மிகவும் கவனமாக இருந்தார். அவர் தன் கவலைகளை வெளியில் காட்டாமல் எப்பொழு தும் தன் மகனை உற்சாகப்படுத்தி, எழுந்து நடமாட வைப்பதற்காக மிகுந்த பிரயத்தனப் பட்டார்.

நான் அவர்களுடன் அந்த வீட்டில் ஒன்றாகத் தங்கிநின்றுதான் வைத்தியசாலைக்குப் போய் என் கணவரைப் பார்த்து வந்து கொண்டிருந்தேன். அப்போது என் மூன்று பிள்ளைகளையும் மாமி கவனித்துப் பராமரித்துக்கொண்டிருப்பார். எனக்காக சாப்பாடுகள் சமைத்து, தயாராக வைத்திருப்பார். நான் அதிகாலை எழுந்து வைத்தியசாலைக்குப் போகும் போது மேசையில் சாப்பாடு தயாராக இருக்கும். அந்நேரம் இருந்த பொருளாதாரப் பிரச்சனைகள், இராணுவக்கெடுபிடிகள் மத்தியிலும் மாமி எவ்வளவு கஷ்டப்பட்டு அந்த இக்கட்டான, நெருக்கடியான நாட்களை கடந்திருப்பார் என்று இப்போதும் நான் யோசிப்பதுண்டு. எந்தத் தருணத் திலும் மாமி முகம் சுழித்ததை நான் கண்டதில்லை. நானோ பிள்ளைகளோ மனதளவில் துவண்டு போய்விடக்கூடாது என்பதற்காக பல அறிவுரைகள் சொல்லுவார்.

என் கணவர் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு வந்த பின்னரும், அவரின் மனநிலையும் உடல் நிலையும் சரியாவதற்கு ஓரிருவருடங்கள் தேவைப்பட்டன.துயர்நிறைந்த அந்தக் காலங்களைக் கடப்பதற்கு மாமி எந்தளவிற்கு எனக்கு உதவி யாகவும் உறுதுணையாகவும் இருந்தார் என்பதை இப்போதும் என்னால் மறந்து விட முடியாது. என் கணவர் மனஉறுதி பெற்று, ஒற்றைக்காலோடு வாழப்பழகுவதற்கு தன்னைத் தயார் செய்யவே நிறைய அவகாசம் தேவைப் பட்டது. அவர் மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்காக மாமி அவருக்குச் செய்த பணிவிடைகளும், வார்த்தைகளால் கொடுத்த உற்சாகமும் எண்ணுக்கணக்கற்றவை. அவர் மீண்டும் ஒரு புதுமனிதனாக எழுந்து நடக்கத் தொடங்கினார்

*என்றால் அதற்கு மாமியின் பங்கு முக்கியமானது!*

*1991ல் எனக்கு நான்காவது பெண்குழந்தை பிறந்தாள். அப்பொழுது நாட்டில் ஒரு ஊரிலிருந்து இன்னுமொரு ஊருக்குப் பயணம் செய்ய முடியாத கெடுபிடி நிலையிருந்தது. அந்த நிலையிலும் மாமி மிகுந்த சிரமப்பட்டு, வற்றாப்பளைக்கு வந்து, எங்களோடு தங்கி நின்று, என்னைத் தன் பெற்றமகள் போல் எண்ணிப் பராமரித்து, கால் இழந்திருக்கும் என் கணவருக்கும் தேவையானவற்றையெல்லாம் செய்து, என் மற்றைய மூன்று பிள்ளைகளையும் கவனித்து, சமையல், உடுப்புக் கழுவுதல், வீட்டைச் சுத்தம் செய்தல் என அவர் செய்த பேருதவிகளை என்னால் என்றைக்கும் மறந்துவிட முடியாது.*

*எனக்கு என் தாயார் இல்லாத அந்த நிலையில் தாய்க்குத் தாயாகவும், ஒரு தாதியைப் போலவும் என் மாமி இருந்தார் என்பதை நினைக்கும் போது அந்த அன்பையும் கரிசனையையும் விபரிக்க என்னிடம் வார்த்தைகளில்லை.*

*ஒவ்வொரு நாளும் அதிகாலை எழுந்து, என் கணவரின் கால், கைகள் ஆகியவற்றிற்கு எண்ணெய், தைலங்கள் பூசி உருவிவிட்டு, அவரின் உடல்வலிகள் போகவும், அவர் எழுந்து சுயமாக நடமாடவும் அதற்கான பயிற்சிகளை மனம் தளராமல் அவருக்குக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். அப்பொழுது மாமியின் உடல் நிலையே மிகவும் பலவீனமாகத்தான் இருந்தது. மாமி, தனது கைவலியையும், உடல் அசௌகரியங்களையும் கூடப் பொருட்படுத்தாமல், அவற்றைச் செய்யும் போது என் மனம் நெகிழ்ந்து போவதுண்டு. அதேவேளை எனக்கு வியப்பாகவும் இருப்பதுண்டு.*

*இந்தக் காலங்களெல்லாம் கடந்து, 1997இல் மாமாவை பறிகொடுத்தபின், 98ல் மாமி ஜேர்மனிக்கு தன் மற்றைய பிள்ளைகளிடம் போய்ச் சேர்ந்த பின்*

னும் எங்களோடு அடிக்கடி தொலைபேசியூடாகப் பேசிக் கொண்டுதானிருந்தார்.

மாமியின் இறுதிநாட்கள் எமக்குத் துயர் தருபவையாக இருந்தன. மாமியோடு எம்மால் தொலைபேசியில் உரையாட முடியாமலிருந்தது. அவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். ஆனால் வீடியோ அழைப்பில் தொடர்பு கொண்டு "மாமி.. " என்றும், என் பிள்ளைகள் "அப்பம்மா..." என்றும் அவரை அழைத்த போது கண்களை மூடிய படியே "ஙா...ம்ம்..." என்ற ஒலி மூலம் எமக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அது எங்களுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

மாமி எங்களை விட்டுப் போய்விட்டா என்று இன்னும் என்னால் நம்பமுடியவில்லை. ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும்.

*மாமி,*
*அமைதியாகவும் நிம்மதியாகவும்*
*போய் வாருங்கள்!*
*உங்கள் நினைவுகள்*
*என்னுள் நீடு வாழும்!*

*மஞ்சுளா பிறேமராஜன் (1959). சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த மருமகள். ஈழத்தில் வற்றாப்பளை, முள்ளியவளையில் வாழ்ந்து வருகிறார்.*

# *White chocolate, roses, lilies and hibiscus*

***Theepa***

*I have many beautiful moments with Ammamma so it is rather difficult to pick one out of all of them. But there are two separate memories of her which play around in my head every so often causing surges of happy emotions and some sad ones wishing I had more time with her.*

*I went to U.K. for my graduate studies and tried to come home every holiday I had. For the first few years Ammamma lived in Mannheim, nearly a two hour drive from my parents home. But the times I would come back on my holidays she would come over and stay with my parents or visit them too so she can spend time with me.*

*She will always have a bag full of various white chocolates for me and at least 20 Deutsche Mark and later 20 Euros ready for me.  White chocolate was my favourite as a little kid and Ammamma continued getting this for me till her final one year with us.*

*After few years passed Ammamma moved to Schwäbisch Hall, closer to my Amma where Amma was part of her daily life. Ammamma had a lovely flat to*

*herself in a beautiful setting at a retirement home. I would of course go and see her every time I visited home, here again she will have a bag full of white chocolates for me and another bag full of various other treats for my children. She never forgot to prepare treats for the few times I visited home.*

*Her flat was full of house plants and her balcony filled with more. She took great care of her plants and always proudly showed them to me. Explaining when each will be at their most beautiful stage and dress themselves with flowers and how she loves just watching these plants.*

*Following that, I started buying a plant and fresh flowers nearly every time I saw her. Even in the final stage living at the home where she received wonderful care, she kept plants and flowers as those filled her with joy. I can still not walk past some beautiful flowers or water my plants in my garden without her appearing in my thoughts and feeling warm, imagining how much joy she got out of flowers and plants.*

*Likewise, when I see white chocolate I will always remember the white chocolate bar she would have ready for my visit to her.*

*Bringing me back to the present, I was standing at the end of my Ammamma's feet where she lay there peacefully was strangely a calming feeling. I felt peaceful and content inside me, like she always made me feel in her presence. I stood there for few minutes,*

*looking at my Ammamma who looked like she was peacefully sleeping. But then my attention was drawn to the two men standing at the door who my Amma was talking to.*

*They asked if we would like to be left alone to dress my Ammamma and all of sudden, I remembered why I was there. All of sudden my chest started to tighten and silent tears rolled down my face. I quickly got a tissue out and pretended to blow my nose as I didn't want to get too emotional and make this even more harder for Amma who already looked lost and heartbroken. I quickly got into action mode and got Ammamma's saree ready so I could put it on her. One of her favourite saree, orange and purple. I still remember her wearing this saree on Sayani's function where she was full of smile and happiness. We even managed to capture a little glimpse of it on a photograph from that day which I like a lot. I was all of sudden even more saddened but got to work putting the saree on her. This was not an easy task as putting a saree on myself in itself is hard, so I struggled a lot putting it on Ammamma who lay there peacefully. With heavy heart I kept at my task in hand and managed to put it on her. Though I felt I didn't do a perfect job, she looked lovely in that saree. Amma was happy how Ammamma looked in it and praised me for being there and doing a great job. That's when I stopped and properly looked at Ammamma again.*

*I went towards her face and stroked her hair, her face, her arms and held her hands for a little while which were very soft but cold. I was overwhelmed with sadness.*

*I didn't want to say goodbye to her. I didn't sent her flowers like always do for her birthday this year, I arrived one day too late, .... I started thinking of everything I had missed with her. But then I remembered how she forgot our phone call on her actual birthday but then video called me the following day and we chatted for a while. she watched me do chores while we continued chatting, she spoke to my three children and my husband. Maybe that was her goodbye to me and my family. I am grateful for that video call where I got to see her and speak to her.*

*My eyes started to tear up again thinking that was our last conversation and that I will no longer have these conversation with her. But I quickly straightened myself up as I saw my Amma stroking Ammamma's face. Ammamma has been Amma's full concentration for many years, but especially for the last 10 months. Amma looked so lost and devastated. My heart broke even more seeing Amma like that. I wasn't sure what hurt more, my loss of my Ammamma or seeing Amma's heart broken because she lost her Amma.*

*தீபா (1979), சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த பேத்தி.*
*சந்திரவதனா செல்வகுமாரன் அவர்களின் புதல்வி.*
*பிரித்தானியாவில் வாழ்ந்து வருகிறார்.*

# அப்பம்மாவும் நானும்..

ஜனகன் பிறேமராஜன்

*புன்னகை ததும்பும் முகம், கணீரென்ற குரல், அன்பும் அரவணைப்பும் கலந்த பேச்சு, மனிதத்தை மதிக்கும் மனோபாவம், அதீத தன்னம்பிக்கை, சிறந்த ஆலோசனை வழங்கி – இது தான் அப்பம்மா!*

*அன்பாகப் பழகுபவர்களின் பிறந்தநாட்களை கேட்டு, எழுதி வைத்து, மறக்காமல் அந்தந்த நாட்க ளிலேயே அவர்களைத் தொடர்புகொண்டு, வாழ்த்து கூறி, அவர்களைச் சந்தோசப்படுத்தி, அதனை ரசித்து சந்தோசப்படுவது அவவின் சிறப்புகளில் ஒன்று!*

*வீரத்தின் விளைநிலமான பருத்தித்துறையில் பிறந்து, வீரப்புதல்வர்களை ஈன்றெடுத்து, இவ்வுல கம் சுற்றி வந்த என் அப்பம்மாவுக்கு இங்கு புதிதாய் ஒரு அறிமுகம் தேவையில்லை!*

*அப்பம்மாவின் இந்தப் பூவுலக வாழ்க்கைப் பயணம் ஒரு பெருவெள்ளம் என்றால் நான் அப்பம் மா வடன் வாழ்ந்த காலங்களும் நேரங்களும் சிறுசிறு தண்ணீர் துளிகளே! அவற்றில் சிலவற்றை இங்கு நான் பகிர்ந்து கொள்ளும் போது என் மனம் ஓரள வேனும் ஆறுதலடையுமென்று நினைக்கிறேன்.*

*எனக்கு நினைவு தெரிந்து நான் அப்பம்மாவை பார்த்ததும் பழகியதுமான முதல் ஞாபகம் 1989இல் பரதன் சித்தப்பா மாவீரனாக மரணித்த சில நாட்க ளுக்குப் பிறகே... அப்பொழுது எனக்கு ஐந்து வயது. இந்திய இராணுவத்தினது கண்களுக்குள் விரல்களை விட்டு ஆட்டிக் கொண்டிருந்த ஹீரோ மொறிஸ் அவர்களுடைய வீரச்சாவு அது!*

*என்னுடைய பரதன்சித்தப்பாவின் வீரமரணம் அது!*

*நாங்கள் அச்சமயம் வற்றாப்பளையில் இருந் தோம். மரணச்சடங்கிற்கு உடனே போக முடியா தளவு கெடுபிடிகள். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. போக்குவரத்துகள் நிறுத்தப் பட்டிருந்தன. ஓரிரு நாட்கள் கழித்துத்தான் அப்பாவுடன் சேர்ந்து நானும் பருத்தித்துறைக்கு பஸ்ஸில் போனேன். பஸ்ஸில், போகும் வழிகளில் நிறையப்பிரச்சனைகள். பஸ்ஸிற்குள் ஏறிய சிலர் "வெளிய வாடா.." என்று என் அப்பாவைப் பிடித்து இழுத்தார்கள். ஐந்து வயதான என்னைத் தன் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு "இது என் மகன்" என்று அப்பா சொல்ல, அவர்கள், அப்பாவை விட்டு விட மனமில்லாமல் விட்டுப் போனார்கள்.*

*ஊர் வந்து சேர்ந்தோம். பருத்தித்துறை ரவுண் பஸ் ஸ்ராண்ட். அப்பாவின் பல நண்பர்கள் எம்மைத் தேடி வந்தார்கள். மிகவும் மெதுவாகவும் அமைதி யாகவும் கதைத்தார்கள். எனக்கு அந்த நேரம் ஒன்றும் வடிவாக விளங்கவில்லை. ஆனாலும் அவர் கள் கதைப்பவைகளைக் காதுகூர்ந்து கேட்டேன்.*

*"ஓம்... பார்க்கலாம்... ஆனால் உங்கடை வீட்டுப்பக்கம் போகேலாது. திருநாவுக்கரசு மாஸ்ரர் வீட்டிலை தான் எல்லாரும் நிக்கினம். சத்தம் போடக் கூடாது. சத்தமாய் அழக்கூடாது. அங்கையும் கன நேரம் நிக்கிறது அவ்வளவு ஆரோக்கியமில்லை"*

*அப்பா கேட்டார்: "Body குடுத்தவங்களோ? ஆர் போய் எடுத்தது..?"*

*"அம்மா தான் போய் எடுத்தவ.."*

*அப்பா உடனேயே கத்தியழத் தொடங்கி விட்டார். "அம்மா... அம்மா Sorry அம்மா! நான் உங்களோடை நிக்கேல்லையே! எப்பிடி அம்மா*

*எல்லாத்தையும் சமாளிச்சிங்கள்....! நான் தூரமாய் போயிட்டனோ? சுயநலமாய் இருந்திட்டனோ? அம்மா..! அம்மா..!"*

*"ஊஸ்... மெதுவா! அழாதையுங்கோ..!"* அப்பா வின் நண்பர்கள் அப்பாவின் அழுகையைக் கட்டுப் படுத்தி, எங்களை ஊருக்குள் கூட்டிக் கொண்டு போனார்கள்.

எனக்கது முதல் அனுபவம், அவ்வளவு நெருக்கமான வீடுகளை ஒரேயடியாகப் பார்ப்பது. இருபுறமும் வீடுகள், நடுவில் ஒரு சிறு ஒழுங்கை. சூரியன் மறையும் நேரம் அது. இரவும் பகலும் கலந்த ஒருவித மம்மல் பொழுது. எல்லோரும் மௌனமாக நடந்து போய், ஒரு சிறிய இரும்புக் கேற்றைத் திறந்து உள்ளே போனோம். யாரோ தூரத்தில் உள்ளிருந்து ரோர்ச் அடித்து, *"யாரது..?"* என்று கேட்டார்கள்.

*"நான் ராஜன். உள்ளை வரலாமோ..?"* என்று அப்பா குரல் கொடுத்தார். அடுத்தகணமே அப்பம்மா அழுதபடி அப்பாவிடம் ஓடி வந்தா. அவ தான் என் அப்பம்மாவாக இருக்குமென்று எனக்கு உடனேயே விளங்கி விட்டது. அப்பா சொல்லுகிற மாதிரி என் னுடைய அப்பம்மாவுக்கு அறிமுகம் தேவையில்லை. அவவைப் பார்த்தாலே தெரியும். அப்படியொரு சாந்தமான குணவியல்பு!

அப்பம்மா கொஞ்ச நேரம் அப்பாவைத் தன் னுடைய நெஞ்சில் சாய்த்து வைத்து நிறையச் சொல்லிக் கொண்டிருந்தா. அவவின் இருகண்களும் கண்ணீரால் நிரம்பியிருந்தன.

*"நீ கவனம் ராஜன்! உன்ரை பிள்ளையள் கவனம்! நீயேன் இவ்வளவு தூரம் வந்தனி? அதுவும் உவனையும் கூட்டிக்கொண்டு?"*

நான் அவவைப் பார்த்துச் சிரித்தேன். அந்தக்

*கவலை நிறைந்த தருணத்திலும் அவ என்னைப் பார்த்துச் சிரித்தா. "என்னப்பு?" என்று என்னைக் கேட்டா. வார்த்தைக்கு வார்த்தை "அப்பு...அப்பு..." என்று என்னைப் பரிவோடு அழைத்தா. என்னை அள்ளி அணைத்துத் தூக்கினா. முத்தம் கொடுத்தா. "அட... உன்ரை அப்பன் அழுறான் எண்டு யோசிச்சதிலை உன்னை நான் யோசிக்கேல்லை..." என்றா. அவவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது.*

---ஓ---

*அதற்குப் பிறகு 1990 இல் நாட்டுப்பிரச்சனை வேறுவடிவத்தில் தீவிரமாகியிருந்தது.*

*அன்று, என் அப்பா, அவர் படிப்பிக்கும் பாட சாலையில் வேலைபார்க்கும் சக ஆசிரியர்களுக்கும் தனக்குமான சம்பளப்பணத்தை எடுத்துக் கொண்டு வருவதற்காக வன்னியிலிருந்து வவுனியாவுக்குச் சைக்கிளில் போய், அங்கிருந்து கொழும்பு பஸ்ஸில் கொழும்புக்குப் போயிருந்தார்.*

*கொழும்பில் தனது வேலைகளை முடித்துக் கொண்டு திரும்பி வரும் வழியில் தாண்டிக்குளம் பகுதியிலிருக்கும் இராணுவச் சோதனைச்சாவடியில் இராணுவத்தினரின் கட்டளைப்படி பயணிகளோடு சேர்ந்து பஸ்ஸிலிருந்து கீழே இறங்கியிருக்கிறார். பஸ் பயணிகள் அனைவரும் இராணுவத்தினரால் சோதனை செய்யப்பட்ட பின்னர், அவர்களை போகச் சொல்லிவிட்டு பின்னாலிருந்து இராணுவம் துப்பாக்கி, ஷெல் தாக்குதல்கள் செய்ததில் அப்பாவும் படுகாயமடைந்து விட்டார்.யார் மூலமாகவோ அப்பா யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர்தான் எங்கள் வீட்டுக்கு அப்பா காயப் பட்ட செய்தி வந்து சேர்ந்தது.*

*அதனைக் கேள்விப் பட்டவுடனேயே நானும் அம்மாவும் உடனடியாகப் புறப்பட்டு யாழ் வைத்திய*

*சாலைக்குப் போனோம். எனக்கு அப்போது ஆறு(6) வயது.*

*எனக்கு றோல் மொடலாக இருந்த, ஒரு பெரிய ஹீரோவாக இருந்த என் அப்பா, அங்கே மருத்துவமனைக் கட்டிலில், தனது ஒருகாலை தொடைவரைக்கும் இழந்து, மற்றைய காலில் பெரு விரலை இழந்து, வலது கையில் எலும்பும் உடைந்த நிலையில் துவண்டு கிடந்தார். கனவில் கூட நினைத் துப் பார்க்க முடியாத அப்பாவின் அந்த நிலையை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாமலிருந்தது. என் அப்பா தனக்கான எல்லாவற்றையும் இழந்து, ஒரு நிராயுத பாணியாக நிற்பது போல இருந்தது. எனக்குள் நான் வெலவெலத்துப் போனேன். என் மனம் யாருக்கும் தெரியாமல் உள்ளுக்குள் உடைந்து நொருங்கிக் கொண்டிருந்தது!*

*என்னைப் பார்த்து அப்பா கேட்டார்: "என்ன முடிவு எடுத்திருக்கிறாய்?"*

*"நான் உங்களோடையே இருப்பன் அப்பா" என்றேன்.*

*அப்பா அழுதிட்டார்.*

*"நான் இனி ஒண்டுமில்லை... என்ரை கதை முடிஞ்சுது. என்னட்டை இப்ப ஒண்டுமேயில்லை..." அப்பா அடிக்கடி சொல்லிச் சொல்லி வெம்பி யழுவார். எனக்குப் பதில் சொல்ல வார்த்தைகள் வராது. ஆனால் உள்ளுக்குள் என் மனம் வெதும்பிப் புரளும்.*

*அந்தச்சமயம் சபாச்சித்தப்பா(கப்டன்-மயூரன்) அங்கு வந்து, வைத்திய வசதிகளுக்காக வைத்திய சாலைக்கு அண்மையாக யாழ்ப்பாணத்தில் ஒரு வீடு எடுத்துத் தந்து, அப்பா தங்கி நிற்பதற்குரிய எல்லா ஒழுங்குகளையும் செய்து தந்து விட்டுப் போயிருந் தார். அதுவரை வைத்தியசாலைக்கு பருத்தித்துறையி*

*லிருந்து வந்து போய்க் கொண்டிருந்த அப்பம்மா, அதன் பின் அங்கேயே இருந்து அப்பாவைப் பராமரிக்கத் தொடங்கினா.*

*"அம்மா, நான் என்ன பாவம் செய்தனோ தெரியேல்லை. நான் இப்ப நடைப்பிணமாகீட்டன்.." என்று சொல்லி அப்பா அழும்போதெல்லாம் "அப்பு ராஜன், நீ என்ரை பிள்ளையடா! சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ?!" என்று சொல்லி அப்பம்மா அவரைத் தேற்றுவா.*

*நானும் அப்பாவும் பல வருடங்கள் அப்பம்மாவுடன் சேர்ந்து அந்த யாழ்ப்பாண வீட்டில் வாழ்ந்தோம். அப்பம்மா அப்போது அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்திருப்பா என்று நினைக்கிறேன். அந்த வயதிலும் அவ எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டேயிருப்பா.காயப்பட்டு உடலாலும் மனதாலும் பாதிக்கப்பட்டிருந்த என் அப்பாவையும் கவனித்து, அவரின் மனது சோர்ந்து விடாமலிருக்க அதற்கும் பல கதைகள், ஆறுதல்கள் சொல்லி, அதே வேளை என்னுடைய அலுவல்களையும் பார்த்து, தனியாளாய் நின்று மதியச் சாப்பாட்டு வேலைகள், வீட்டு வேலைகளெல்லாம் செய்து கச்சிதமாகச் செயற்பட்டுக் கொண்டேயிருப்பா. "பிள்ளைகள் (போராளிகள்) வருவார்கள்" என்று சொல்லி எப்பவும் கொஞ்சம் அதிகமாகவே சாப்பாடுகள் சமைப்பா.*

*அப்பா, வீட்டிலிருந்து எந்த நேரமும் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பதைப் பார்த்த அப்பம்மா ஒரு நாள் "அப்பு.. ராஜன் உனக்கு ஒரு குறையும் இல்லை. உன்ரை இரண்டு தம்பிமார் தாய்நாட்டின்ரை விடிவுக்காகவும் மக்களின்ரை விடுதலைக்காகவும் ஆயுதத்தைத் தூக்கிச்சினம். நீ இப்பத் தூக்க வேண்டிய ஆயுதம் பேனா! உனக்கு அதுதான் பொருத்தமானது. யோசிச்சு யோசிச்சுக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்காமல் அதைக் கையிலை எடு" என்று சொன்னா. அப்பம்மாவின் அந்த வார்த்தைகள் அப்பாவை உசுப்பியிருக்க வேணும்.*

அப்பா ஒருவித புதிய உற்சாகத்தோடு பேனாவை மீண்டும் தன் கையில் எடுத்தார்.

கவிதைகள், கட்டுரைகள்... என்று எழுதிக் கொண்டிருந்த அப்பாவின் பேனா வேறொரு முக்கிய பணிக்காக இயங்கத் தொடங்கியது. ஆங்கிலத்தில் வெளியாகியிருந்த போர் உத்திகள், போர்த் தந்திரங் கள், இராணுவக் கட்டமைப்புகள், வான் தாக்குதல் கள், வான்படை எதிர்தாக்குதல்கள்.. போன்றதான மிகவும் அரியபுத்தகங்களை, தமிழில் மொழிபெயர்த்து எழுதத் தொடங்கினார். அப்பா தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மிகுந்த புலமை பெற்றவர் என்பதால் அவரின் மொழி பெயர்ப்புகள் அரிய மொழிபெயர்ப்புகளாகிக் கொண்டிருந்தன.

அப்பம்மாவின் ஆலோசனையால் அப்பாவின் வாழ்க்கை மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. வீட்டில் சும்மாயிருந்து, மனம் நொந்து வருத்தப் படுவதற்கெல்லாம் அவருக்கு நேரமில்லாமல்போனது. ஒரே பிஸி! பிக்அப், ஜீப், கார்... என்று போராளி களினதும், தளபதிகளினதும் வாகனங்கள் மாறி மாறி அப்பாவிடம் வந்து போகத் தொடங்கின. அவர்கள் அப்பாவைக் கூட்டிக் கொண்டு போய் தமக்குத் தேவையான பல ஆலோசனைகளைக் கேட்டார்கள். விடுதலைப்புலிகளின் தளபதிகளினது முக்கியமான வெற்றிகரமான பல செயற்பாடுகளுக்கு அப்பாவின் எழுத்துக்களும் ஆலோசனைகளும் பலவிதங்களில் பெரிதும் உதவின. அப்பாவின் பணிகள் மிகமிக இரகசியமானவை என்பதனால் சம்பந்தப்பட்ட மிகச் சிலருக்கும் குறிப்பிட்ட தளபதிகளிற்கும் மட்டுமே அவை பற்றி முழுமையாகத் தெரிந்திருந்தன.

அப்பா மிகவும் பிஸியாகி, உன்னதமானதொரு எழுத்துப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டு கவலைப்படாமல் இருக்கிறாரென்பதே அப்பம்மாவை ஓரளவு ஆற்றுப்படுத்தி, ஒரு வித மன ஆறுதலையும் வெற்றிக்களிப்பையும் அவவுக்குக் கொடுத்தது.

அப்பா தன் மொழிபெயர்ப்பு எழுத்துப் பணியில் மிக மும்முரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்ததால் ஒரு கட்டத்தில் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கே போய்விட்டார்.

நான், அப்பம்மா, அப்பப்பா, அப்பாச்சி (அப்பப்பாவின் அம்மா) எல்லோரும் பருத்தித்துறை, ஆத்தியடியில் இருந்த ´சுந்தரிவாசா‘ இல்லத்தில் (அப்பம்மாவின் வீடு) சில ஆண்டுகள் இருந்தோம். அச் சமயங்களில் சபாச்சித்தப்பா(கப்டன்-மயூரன்) அவ்வப்போது "லீவிலை நிக்கிறன்" என்று சொல்லி அங்கு வருவார்.

"என்னப்பு நடக்குது?" என்று அப்பம்மா அவரைக் கேட்பா.

"அண்ணரோடை (தேசியத்தலைவர்) தானே இருக்கிறன். அதுதான் லீவு கிடைச்சிருக்கு" என்று சொல்லி, பல புகைப்படங்களைக் காட்டுவார்.

"சண்டைக்குப் போக விடுங்கோ எண்டு கேக்கிறன். அண்ணை விடுறாரில்லை. ஒவ்வொருக்காலும் ´சண்டைக்குப் போக விடுங்கோ` எண்டு கேட்டால், ´போய் அம்மாவைப் பார்த்திட்டுவா` எண்டு சொல்லி என்னை இங்கை அனுப்பி விடுறார். அம்மாவைப் பார்த்தால் நான் மனம் மாறீடுவன் எண்டு நினைக்கிறார் போலை" சபாச்சித்தப்பா ´ஹா.. ஹா.. ஹா..‘ என்று சிரித்தபடி சொல்லுவார்.

எனக்கு ஒரே குஷியாகவும் ஜொலியாகவும் இருக்கும். நிறையப்பேர் சபாச்சித்தப்பாவைப் பார்க்க வருவார்கள். அவர்களுக்காக அப்பம்மாவின் தடல் புடலான ஸ்பெஷல் சமையல், சாப்பாடுகள் என்று வீடு ஒரே அமர்க்களமும் ஆரவாரமுமாக இருக்கும்.

சபாச்சித்தப்பா, அவருடைய நண்பர்கள் புடை சூழ அமர்ந்திருந்து கதைக்கும் போது நான் நடுவிலிருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டும்

*அவர்களின் கதைகளைக் கேட்டுக் கொண்டும் இருப்பேன்.*

*சபாச்சித்தப்பா கடைசித்தரம் வந்த போது "அப்பாடா.. இப்பதான் அண்ணர்(தேசியத்தலைவர்) ஓமெண்டு ஒத்து வந்திருக்கிறார். ஒரு ரீம் எனக்குத் தாறதுக்கு 'ஓகே' சொல்லியிருக்கிறார். நானும் என்ரை ரீமும் தான் முதல் வரிசையிலை உள்ளை இறங்கிறம். நான் உங்களைப்பார்க்கிறது ஒருவேளை இதுதான் கடைசித்தரமாய் இருக்குமெண்டு நினைக் கிறன்.." என்று தனது நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது சபாச்சித்தப்பாவின் முகத்தில் சந்தோசமும் உற்சாகமும் நிறைந்து கிடந்தன.*

*நான் ஓடிப் போய், "சித்தப்பா இப்படிச் சொல்கிறார்" என்று அப்பம்மாவிடம் சொன்னேன். அவரின் நண்பர்களெல்லாம் போனபிறகு அப்பம்மா சித்தப்பாவிடம் "என்னப்பு, என்ன நடக்குது?" என்று கேட்டா. சித்தப்பா உடனே 'ஹா..ஹா..ஹா..' என்று சிரித்தார்.*

*"நான் துண்டு குடுக்கப் போறனம்மா (இயக்கத்தை விட்டு விலகுவதற்காக). எனக்கு போர் அடிக்குது. எனக்கொரு கலியாணம் பேசுங்கோம்மா" என்றார், சிரித்தவாறே.*

*அப்பம்மாவின் முகம் சடாரென்று சுருங்கி, மெதுவாக இருண்டு போனது போலிருந்தது. கண் களில் இலேசான ஒரு கோபம் தெரிந்தது. "என்ரை பிள்ளையள் ஒருத்தரும் கொண்ட கொள்கையிலை இருந்தோ எடுத்த சபதத்திலை இருந்தோ ஒருநாளும் பின்வாங்க மாட்டாங்கள் எண்டது எனக்கு நல்லாத் தெரியும். முன்னுக்கு வைச்ச காலை அவங்கள் பின்னுக்கு வைக்க மாட்டாங்கள் எண்டதும் எனக் குத் தெரியும்" அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு அப்பம்மா அறைக்குள் போய் விட்டா. சபாச் சித்தப்பா என்னைப் பார்த்துக் கண்ணடித்து விட்டு,*

சிரித்துக் கொண்டேயிருந்தார். அவர் பகிடிக்குச் சொல்கிறார் என்பது எனக்கு நன்றாக விளங்கியது

சில மாதங்கள் கழித்து. 1993 கார்த்திகை மாதம் 'பூநகரி நாகதேவன்துறை இராணுவக் கூட்டுப் படைத்தளம்' மீதான தவளைப்பாய்ச்சல் தாக்குதலில் சபாச்சித்தப்பா (கப்டன் மயூரன்) வீரச்சாவடைந்து விட்டார், என்ற செய்தி வந்து சேர்ந்தது. அவரின் வித்துடல் கிடைக்கவில்லை. அவரின் உடைகளின் பாகம், பெயர்ப் பட்டிகள்.. யாவும் எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் நினைவுத்தூபிக் கல்லறையில் விதைக்கப் பட்டிருக்கிறது என்ற அறிவித்தல் மட்டும் வந்தது.

அதற்குப் பிறகு குட்டிமாமியை (என் அப்பா வின் கடைசித்தங்கை (பாமா) யேர்மனிக்கு அனுப்பி வைத்து விட்டு, அப்பம்மாவும் அப்பப்பாவும் வெளி நாட்டிலிருக்கும் அவர்களது மற்றைய பிள்ளைகள் அவர்களை அங்கு வருமாறு அழைப்பதால் அங்கு செல்வதற்காக கொழும்புக்குப் பயணமானார்கள். வழியில் பலதடங்கல்கள், பிரச்சனைகள். தொடர்ந்து கொழும்பு வரை பயணிக்க முடியாதவாறு நாட்டில் பல இராணுவ, போர்க்கெடுபிடிகள் தலை தூக்கி யிருந்தன. அதன் காரணமாக வவுனியாவில் தற்காலி கமாக ஒரு சிறிய வீடு வாடகைக்கு எடுத்து அங்கு தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது.

அச்சமயம் வடபகுதியெங்கும் ஊரடங்குச் சட் டம் அமுலில் இருந்தது. அப்பம்மாவும் அப்பப்பாவும் தங்கியிருந்த வீட்டைச்சுற்றி இராணுவ முகாம்களும் மாற்றியக்கங்களின் சோதனைச் சாவடிகளும் இருந் தன. அது அவர்களுக்கு மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய சூழலை உருவாக்கியிருந்த போதும் அவர்கள் வேறு வழியின்றி அங்கேயே இருந்தார்கள்.

நான், அம்மா, அப்பா எல்லோரும் வன்னியில் முல்லைத் தீவில் எங்கள் வீட்டிலிருந்தோம்.

*அப்பப்பா உடலாலும் மனதாலும் மிகவும் சிதைந்து, நோய்வாய்ப்படத் தொடங்கியிருந்தார். பரதன் சித்தப்பாவின் மறைவு, சபாச் சித்தப்பாவின் மறைவு, ஷெல்தாக்குதலால் பாதிக்கப்பட்டிருந்த என் அப்பாவின் உடல்நிலை யாவும் அப்பப்பாவை மிகவும் பாதித்திருந்தன. உடல்நலம் குன்றத் தொடங்கிய அப்பப்பாவை தனியாளாக நின்று பராமரிப்பதில் அப்பம்மா மிகவும் கஷ்டப்பட்டா என்பதைப் பின்னர் தான் நாங்கள் அறிந்தோம். ஊரடங்கு அமுலில் இருந்ததால் யாருடனும் எமக்குத் தொடர்பு இருக்க வில்லை. தொலைபேசிகள் எதுவும் இருக்கவில்லை. போக்குவரத்துக்கள் இருக்கவில்லை.*

*அப்பப்பாவின் இறப்புச் செய்தியைக் கூட அறிய முடியாதவர்களாக நாங்கள் இருந்தோம். அப்பப்பா இறந்து(1997) மூன்றுமாதங்களின் பின்னர் தான் அவரின் இறப்புச் செய்தி றெட்குறோஸ் மூல மாக எங்களுக்கு வந்து சேர்ந்தது. பக்கத்து ஊரில் இருந்தாலும், எதுவும் தெரியாமல் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலத்தான் அந்நேரம் எமது வாழ்க்கை இருந்தது! செய்திகேட்டு இடிந்துபோன அப்பா அழுதழுது ஒரு கவிதைக்கடிதம் அப்பம்மா வுக்கு எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தை அப்பம்மா பொக்கிஷம் போல வச்சிருந்தா அந்தக் கவிதை...*

*வெந்துயரால் வாடுகிறேன் அம்மா!*
*முந்தியெனைப் பெற்றெடுத்து*
*மூத்த திரு மகவென்று*
*தந்தி கண்டு வந்து பார்த்த அப்பா,*
*பிந்தி வந்த நாட்களிலே - எனைப்*
*பித்தனைப் போலாக்கி விட்டு - உங்கு*
*கண்ட துயரனைத்தும் நான் அறிவேன்,*
*என் செய்ய?!*
*கொள்ளிக்கும் கொடுப்பனவு*
*இல்லாமற் போய் விட்ட*
*´ஷெல்´ லின் பாற்பட்ட*
*வெறும் ஊனனாகி விட்டேனே!*

*எண்ணிட முகம் விறைக்கும்*
*இம்சைக்குள்ளானேனே!*
*சொல்லிட முடியாத சோகமம்மா...*

*அதற்குப்பிறகு அப்பம்மா ஒருவாறு யேர்மனிக்கு வந்து சேர்ந்து விட்டா.*

*1999ம் ஆண்டு யேர்மனியில் நடந்த மாவீரர் தினத்தில் அப்பம்மா தான் கொடியேற்றினா. அந்தப் புகைப்படங்கள் தபால் மூலம் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தன. அவற்றைப் பார்த்து அப்பா எவ்வளவு சந்தோஷப்பட்டார். அவர் அடைந்த சந்தோஷத்தையும் பெருமையையும் வார்த்தைகளில் விளக்க முடியாது! ஒற்றைக்காலிலேயே துள்ளிக் குதித்தார். ஒரு குழந்தை போல் எல்லோரையும் கூப்பிட்டுக் காட்டிப் பெருமைப் பட்டார்.*

*அதன் பின்னர் நானும் வெளிநாடு புறப்பட்டு விட்டேன். 2000ம் ஆண்டு மே மாதம் என் அப்பாவும் இறந்து விட்டார். அப்பாவுக்குக் கொள்ளி வைக்கும் பாக்கியம் கூட எனக்குக் கிடைக்கவில்லை. யேர்மனியிலிருந்து தொலைபேசி மூலமாக அப்பம்மாவின் ஆறுதல் வார்த்தைகள் மட்டுமே எனக்கு வந்து சேர்ந்தன.*

*அப்பா மரணிக்கும் முன்னர் கடைசியாக எழுதிய கவிதையில்*

*இங்கு எனக்கு மலர் போட வேண்டாம்.*
*தமிழ் ஈழத்திற்கு கொஞ்சம் உரம் சேருங்கள்...*

*என்ற வரிகளுடன் முடித்திருப்பார். அப்பம்மா அடிக்கடி அந்த வரிகளைத் தனக்குள் உச்சரித்துக் கொண்டேயிருப்பா.*

**நா***ன் 2000ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் பிரான்ஸ் வந்து சேர்ந்து விட்டேன். உடனடியாக எனது மைத்துனன் திலீபனைக் கூட்டிக்கொண்டு*

என்னைப் பார்ப்பதற்காக காரில் அப்பம்மா பிரான்சுக்கு வந்துவிட்டா. அவ யேர்மனிக்குத் திரும்பிப் போன பின்னரும் அடிக்கடி என்னோடு தொலை பேசியில் கதைத்துக் கொண்டேயிருப்பா. நானும் அடிக்கடி ஜேர்மனிக்குப் போய் அப்பம்மாவைப் பார்த்து வருவேன். அப்பொழுது அப்பம்மா இருந்த நகருக்குப் பெயர் 'மன்ஹைம்'. அந்த இடம் அப்பம்மா வுக்கு ஏதோ சொந்த ஊர் போலவே மாறியிருந்தது. அல்லது அவ தன் வாழ்வை அப்படி மாற்றியிருந்தா. அவவைச் சுற்றி எந்நேரமும் நிறைய நண்பர்கள், நிறைய வித்தியாசமான உறவுகள். அப்பம்மா அங்கே சுதந்திரமாகவும் சந்தோசமாகவும் இருந்தா. தனக்கு விருப்பமான சமூகப்பணிகள் நிறையச் செய்து கொண்டிருந்தா. தமிழாலயத்திற்குச் சென்று அங்கு இருக்கும் தமிழ்ப் பிள்ளைகளுக்குப் படிப்பித்துக் கொண்டிருந்தா. அப்பம்மா அங்கு யேர்மனியில் ஒரு சிறந்த ஆசிரியையாக இருந்தது மட்டுமல்லாமல் தாய்மண்ணிற்கான தனது கடமைகளை வெவ்வேறு பணிகள் மூலமும் செய்து கொண்டேயிருந்தா.

அப்பம்மா எனக்குத்தான் அப்பம்மா. மற்றவர் களுக்கு அம்மா, அன்ரி, ரீச்சர், அம்மம்மா... எனப் பல பாத்திரங்களை வகித்துக் கொண்டிருந்தா. அப்பம்மா மூலமாக எனக்கு நிறையப்பேர் அறிமுகமானார்கள். அவர்கள் எல்லோருமே என்னுடன் மிகவும் அன்பாக வும் உரிமையுடனும் பழகினார்கள்.

அப்பம்மா என்னில் எப்போதும் அன்பும் அக்கறையும் கொண்டவராகவே இருந்தா. அவ பிரான்சுக்கு வந்து, ஆறுமாதங்களுக்கு மேலாக என் னுடன் தங்கியிருந்த நாட்களை என்னால் என்றைக் குமே மறந்துவிட முடியாது. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற மாதிரி நிறையப் புத்திமதிகள், ஆலோசனைகள் சொல்லியபடி இருப்பா. அவை வாழ்வில் எனக்கு எப்போதும் மிக நல்ல வழிகாட்டுதல்களாகவே இருந் திருக்கின்றன.

என்னுடைய நண்பர்கள் எல்லோருக்குமே

அப்பம்மாவை மிகவும் பிடிக்கும். என்னைப் போலவே அவர்களும் அப்பம்மா மீது பாசம் காட்டுவார்கள். அவவின் அன்பான, அரவணைப்பான, இனிமையான பேச்சு எப்போதும் எல்லோரையும் கவர்ந்து விடும்.

காலையில் எழுந்ததும் தன் காலைக்கடன் களை முடித்துவிட்டு, ஒரு பெரிய 'கப்' இல் தேநீர் போட்டு எடுத்து வந்து, ஒரு இடத்தில் அமர்ந்து விடுவா. ரெலிபோனையும் டயறியையும் எடுத்து வைத்துக் கொண்டு, தேநீரைச் சுவைத்த படி ஒவ்வொருவராகப் போன் செய்து திருமணநாள், பிறந்தநாள் வாழ்த்துக்களை அவர்களுக்குச் சொல்லி, எல்லோரையும் சந்தோசப்படுத்தி, அதில் தானும் குதூகலிப்பா.

நான் சில வேளைகளில் யாருடனாவது கோபப்பட்டாலோ அல்லது கத்தினாலோ "அப்பு.. அப்பிடிக் கோபப்படக் கூடாது. சூத்தை மிளகும் கறிக்கு உதவும் எண்டதை மனசிலை வைச்சிருக் கோணும்" என்று என்னை ஆற்றுப்படுத்தி, எனக்குப் புத்திமதி சொல்லுவா. அது மட்டுமல்ல "உங்களை யாராவது கோபப்படுத்தினாலோ அல்லது அவை யளை எதிர்த்துப் பேச வேணுமெண்டு உங்களுக்குத் தோன்றினாலோ... உடனை உங்கடை அப்பா எழுதின 'பயம்' என்ற சின்னக் கவிதையொண்டு இருக்கு. அதை ஞாபகப் படுத்திப் பாருங்கோ. உங்கடை கோபம் ஆறி, மனசு தானாகவே குளிர்ந் திடும்" என்று சொல்லி அந்தக் கவிதை வரிகளையும் சொல்லிக் காட்டுவா.

நாங்கள் பேசுவதில்லை - அதனால்
நாங்கள் ஊமைகளென்பதல்ல
நாங்கள் பேசுவதில்லை - நீங்கள்
ஊமையாகிவிடுவீர்களென்பதால்!

**எ**ன்னை இப்படியே பிரான்ஸில் தனியே விடக் கூடாதென்று அப்பம்மா முடிவெடுத்தா. எனக்குக் கல்யாணம் பேசி, முற்றாக்கி, தொடர்ந்து

*கல்யாணம் செய்து வைப்பதற்கான எல்லா அலுவல் களையும் ஒழுங்குபடுத்தல்களையும் தானே முன் நின்று செய்தா. என் பதிவுத்திருமணம் சிங்கப்பூரில் ஒரு தமிழ் இந்துக் கோயிலில் நடக்கவிருந்தது. அதற்காக நானும் அப்பம்மாவும் 01.05.2008 அன்று சிங்கப்பூர் நோக்கி விமானப் பயணம் செய்தோம்.*

*சிங்கப்பூரில் பொலீஸ்காரர் பெரிய பிரச் சனை எடுத்தார்கள். நானும் அப்பம்மாவும் விமானம் ஏறியது பிரான்ஸில். யேர்மனியின் அகதி உரிமைச் சட்டத்திட்டங்களுக்கு அமைவான கடவுச்சீட்டை வைத்திருக்கும் அப்பம்மா, பிரான்ஸ் விமானநிலையத் தில் எப்படி பிளைற் எடுத்தா என்பது தான் அவர்க ளின் கேள்வி. அதுதான் பெரிய பிரச்சனையாகியது.*

*நான் ஆங்கிலத்தில் அவர்களுக்கு "இது என் னுடைய அப்பம்மா. அப்பம்மா யேர்மனியிலை தான் வாழ்ந்து கொண்டிருக்கிறா. இலங்கையிலை நான் என்ரை அப்பா, அம்மாவோடை வாழ்ந்த காலத்தை விட, அப்பம்மாவோடை வாழ்ந்த காலம் தான் அதிகம். இப்ப உங்கடை இந்தச் சிங்கப்பூர்நாட்டிலை சட்டப்படி எனக்கு பதிவுத்திருமணம் நடக்கப்போகுது. அதுக்குரிய ஆவணங்களையெல்லாம் உங்கடை சட்டதிட்டங்களிற்கு அமைய உரியவர்களிடம் கையளிச்சு. டிப்போசிற்றும்கட்டிவிட்டேன். நாற்பத்தி யஞ்சு நாட்களாக என்ரை எதிர்கால மனைவி என்னை எதிர்பார்த்து இங்கை காத்துக்கொண்டு நிற்கிறாள். இண்டைக்கு உங்கடை விமானநிலைய வாசலிலை உங்கடை விசாரணையள் காரணமாக நான் இவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டிருக் கிறன். என்னை வளர்த்த என்ரை அப்பம்மாவின்ரை ஆசீர்வாதத்தோடை உங்கடை நாட்டிலை இருக்கிற ஒரு இந்துக்கோவிலிலை என்ரை கல்யாணம் நடக் கோணும் எண்டு நான் ஆசைப்பட்டது பிழையோ?*

*என்ரை வசிப்பிடம் பிரான்ஸில் இருக்கிறது. நான் அங்கையிருந்து எட்டுமணித்தியாலங்கள் கார் ஓட்டிச் சென்று அப்பம்மாவை பிரான்ஸிலிருக்கும்*

என்ரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தனான். அதுக்காக எல்லாமாக பதினாறு மணித்தியாலங்கள் கார் ஓடியிருக்கிறன்" என்று கோபமாகவும் கவலை யாகவும் விளக்கம் சொன்னேன்.

நான் சொல்லி முடியும் வரை அவர்கள் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து மாறி மாறி அவர்களுக்குள் எதையோ பேசுவதும் போனில் யாரோ அதிகாரிக ளுடன் இவை பற்றிக் கதைப்பதுவும் தொடர்ந்து எதையெதையெல்லாமோ செக்கப் செய்வதுமாக இருந்தார்கள். எமது ஆவணங்களை ஸ்கான் பண்ணி, கோப்புகளாக்கி வைத்திருந்தார்கள்.

கடைசியாக என்னை நோக்கி வந்தார்கள். "நீங்கள் விமான நிலையத்தை விட்டு சிங்கப்பூர் நாட்டுக்குள் போகவிரும்பினால் போகலாம். ஆனால் உங்கள் அப்பம்மாவை இப்போதைக்கு விமான நிலையத்தை விட்டு நாட்டுக்குள் போக அனுமதிக்க முடியாது. சிலவேளை அவவைத் திருப்பி அனுப்பு வதற்குக்கூட வாய்ப்பிருக்கிறது" என்றார்கள்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு தமிழ் மொழி பெயர்ப்பாளராக ஒரு இந்தியத் தமிழ்ப்பெண் எங்க ளிடம் வந்தாள். அப்பெண் அப்பம்மாவிடம் தமிழில் கதைத்து, நிலமையை விளங்கப் படுத்தினாள். பிறகு என்னைப் பார்த்து "தம்பி உங்கட பைல் எல்லாம் செக் பண்ணியாச்சு. நீங்கள் வெளியிலைபோங்கோ. உங்கட கல்யாண அலுவலைப் போய்ப் பாருங்கோ. உங்கட அப்பம்மா வெளியிலை வரலாமோ அல்லது வரேலாதோ என்ற விபரங்களை நான் போன் பண்ணிச் சொல்லுறன்" என்றாள்.

எனக்குப் பதற்றமும் கோபமும் ஏற்பட்டது. "இது என்ரை அப்பம்மா. அவ நிறைய மருந்துகள் பாவிக்கிறவ. நான் தான் அவவுக்கு அந்தந்த நேரத்திற்கு அவற்றைக் கொடுக்கோணும். அவவுக்கு நிறைய வருத்தங்கள் இருக்குது. என்ரை கல்யாணத்

*திற்காகத்தான் நான் அவவை இங்கை கூட்டிக் கொண்டு வந்தனான். உங்கடை நாட்டிலை பிச்சை கேட்டு நாங்கள் இங்கை வரேல்லை" நான் வாயில் வந்ததெல்லாம் சொல்லிக் கத்தினேன்*

*அப்பம்மா ஒருவித முடிவைத் தனக்குள் எடுத்துக் கொண்டது போல் என்னைப் பார்த்தா. "கத்தாதை அப்பு. என்னை விட்டிட்டு நீ போய் உன்ரை கல்யாண அலுவலைப் பார். இவங்கடை பிரச்சனையை நான் பார்த்துக் கொள்ளுறன். நான் பார்க்காத பிரச்சனையளோ?" என்றா.*

*நான் "அப்பம்மா இல்லாமல் வெளியில் போக மாட்டேன்" என்று ஒற்றைக் காலில் நின்று அடம் பிடித்தேன். சில மணிநேரப் போராட்டங்களின் பின்னர் அவர்கள் என் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து அப்பம்மாவும் வெளியில் வருவதற்கு அனுமதி தந்தார்கள். சிங்கப்பூர் விமானநிலையத்தின் உயர்அதிகாரிகளில் ஒருவர் மேல்தளத்திலிருந்து கீழே இறங்கி வந்து எனக்கும் அப்பம்மாவுக்கும் வாழ்த்துக் கூறி, எங்களது விடாமுயற்சியையும் பாராட்டினார்.*

*"உங்கடை பேரனின் கையைப் பிடிச்சுக் கொண்டே நடந்து போங்கோ" என்று சொல்லி அப்பம்மாவின் கையைப் பிடித்து எனது கையில் தந்தார்.*

*அதற்குப் பிறகென்ன! 2008ம் ஆண்டு மே மாதத்தில், அப்பம்மா என்னோடு கூட இருந்து மாப்பிள்ளைக்கான சாட்சிக்கையெழுத்தும் தானே வைத்து, பதிவுத் திருமணத்தை சிறப்பாக நடாத்தி முடித்தா.*

*அமைதியாகவும் மன உற்சாகத்தோடும் கொள்கைப் பிடிப்போடும் வாழ்ந்து கொண்டிருந்த அப்பம்மாவை ஒரேயடியாகத் தலை கீழாய் மாற்றிப் போட்டது அந்தக் கொடுஞ்சம்பவம்! அது எங்கள் தாய்மண்ணில் முள்ளிவாய்க்கால் பகுதியில் 2009ல்*

நடந்து முடிந்த தமிழினப் பேரழிவு. அந்தக் கொடும் போரின் தாக்கங்களையும் அதனால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்புகளையும் அப்பம்மா தொலைக் காட்சிச் செய்திகளிலும் பத்திரிகைகளிலும் பார்த்துக் கொண்டேயிருந்தா. முள்ளிவாய்க்கால் பகுதியில் நடந்து கொண்டிருந்த அந்த இறுதிப்போரில் சர்வ தேசத்தினால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பாவித்தும் இரசாயனக் கொத்துக்குண்டுகளை வீசி யும் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களைக் கொன்று குவித்துக்கொண்டிருந்த சிங்கள அரசஇராணுவத்தின ரின் கொடூரச் செயல்களை கண்ணீர் மல்க, நெஞ்சு பதைபதைக்க தொலைக்காட்சிகளில் பார்த்துக் கொண்டிருந்த அப்பம்மாவால் அதன் தாக்கத்தில் இருந்து மீண்டு, சுயமாக எழுந்திருக்கவே முடிய வில்லை!

மலர்ந்த முகத்தோடு நம்பிக்கையும் தைரியமும் ஊட்டியூட்டி, எல்லோரையும் உற்சாகமாக இயங்க வைத்துக் கொண்டிருந்த அப்பம்மா அந்தப் பெருந் துயரிலிருந்து தன்னை மீட்டெடுக்க முடியாமல் தனக் குள்ளே உடைந்து போனா. எப்போதும் தைரியமும் மலர்ச்சியும் நிறைந்திருக்கும் அந்தச் செந்தளிப்பான முகத்தை அவவால் மீளப்பெறவேமுடியாமற்போனது.

நான் அப்பம்மாவின் மனதை அவற்றிலிருந்து வேறுதிசையில் திருப்புவதற்கு வெகுவாக முயற்சி செய்தேன்.வெவ்வேறு நகைச்சுவை ஒளிப்பதிவுகளை அப்பம்மாவிற்கு அனுப்பி, அவவின் மனதை மாற்ற முற்பட்டேன். ஆனால் அவைகளைதையும் பார்க்கும் மனநிலையில் அப்பம்மா இருக்கவில்லை.

அப்பம்மாவின் பிள்ளைகளும் மற்றைய பேரப் பிள்ளைகளும் கூட எத்தனையோ உத்திகளைக் கையாண்டு அப்பம்மாவை அந்தச் சோகத்திலிருந்து மீட்டெடுக்க முயற்சித்தார்கள். எதுவும் பயனளிக்க வில்லை.

"எத்தினை ஆயிரம் பிள்ளையள் எங்கடை

*மண்ணின்ரை விடுதலைக்காக தங்கடை உயிரை அர்ப்பணிச்சதுகள்! எல்லாம் கானல் நீராப் போச்சே! இந்தக்கடவுள் என்னசெய்யிறார்?" என்று சொல்லிச் சொல்லி புலம்பி மிகுந்த மனஉளைச்சலுக்காளானா.*

*அழகுப் பாட்டாவின் மகன், மணிவண்ணன் மாமா(பிரிகேடியர்-மணிவண்ணன்) ஈழவிடுதலைப் போரில் வீரமரணமடைந்த செய்தியை ஏதோவொரு தொலைக்காட்சிச் செய்தியில் பார்த்து விட்டா. கூடவே சர்வதேசத்தினால் தடைசெய்யப் பட்டிருந்த ஆயுதங்களைப்பாவித்து இலங்கை அரச இராணுவம் இன்னும் ஏராளம் விடுதலைப் புலித் தளபதிகளை கொன்று குவித்ததையும் அறிந்து மிகவும் கலங்கிச் சோர்ந்து விட்டா.*

*தொடர்ந்து என் தம்பி பரதனின் வீரச்சாவுச் செய்தியும் வந்தது. என் தம்பிக்கு 'பரதன்' என்று பெயர் சூட்டியது என் அப்பா தான். ஏனெனில் அவரின் தம்பியான பரதன் சித்தப்பாவின் (கப்டன் மொறிஸ்) ஞாபகமாக அந்தப் பெயரை அவனுக்கு வைத்தார். என் தம்பி, பரதன் வீரச்சாவடைந்த பின்னர் தான் அவனின் இயக்கப்பெயர் 'மயூரன்' என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். மயூரன் என்ற பெயர் எனது அப்பாவின் அடுத்த தம்பியான சபாச்சித்தப்பாவின்(கப்டன்-மயூரன்) இயக்கப்பெயர். அவனின் வீரச்சாவைக் கேள்விப்பட்டவுடனே அப் பம்மா மேலும் துடித்துப் பதைத்தா. "ஐயோ என்ரை பேரப்பிள்ளையையும் கொன்று போட்டாங்களோ?" என்று புலம்பினா.*

*இந்த இழப்புகளினால் ஏற்பட்ட பாதிப்பு மனநிலையிலிருந்து மீளமுடியாமல் அப்பம்மா வீழ்ந் திருந்த போது தான் சந்திராமாமி அப்பாவின் கவிதை களின் தொகுப்பான 'தீட்சண்யம்' நூலுக்கு இலண் டனில் ஒரு வெளியீட்டு விழா செய்தா. அது நடந்தது நவம்பர் மாதம் 22ந்திகதி (22.11.2009). அந்த விழாவைச் சாட்டி சந்திரா மாமி அப்பம்மாவை இலண்டனுக்கு அழைத்திருந்தா.*

அப்பா இல்லாத போதும் அப்பாவின் கவிதைகள் எல்லாம் தொகுக்கப் பட்டு நூலாகி, கற்றவர்களின் ஆய்வுரைகளோடு, அப்படியொரு அழகிய விழாவாக நடை பெறுவதை நேரில் பார்க்கக் கிடைத்த அந்த வாய்ப்பு அப்பம்மாவின் நொந்து நைந்து போயிருந்த மனசுக்கு பெரும் ஒத்தடமாக அமைந்தது.

---ஓ---

**அ**ப்பம்மா ஒழுங்கு செய்தபடி, அவவின் தலைமையில் யேர்மனியில் போட்ஸ்ஹைம் என்ற இடத்தில் இருக்கும் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் சைவ முறைப்படி எனக்குத் திருமணம் நடைபெற்றது. உலகின் எல்லாப்பாகங்களிலிருந்தும் சொந்தங்களும் பந்தங்களும் உறவினர்களும் எனது திருமணத்திற்கு வந்திருந்தார்கள். எவ்வளவு பெரியமண்டபம் அது! அது நிரம்பச் சொந்தங்கள். சித்தப்பாமார், பெரியப் பாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள் மார்... என்று நிறையப் பேரை அப்பம்மா என் திருமணத்திற்கு அழைத்திருந்தா.

அடுத்த வருடமே மகன் பிரியந்த் பிறந்து விட்டான். அவனுக்கு 'பரதன்' என்றுதான் பெயர் வைப்பதற்கு நான் ஆசைப்பட்டிருந்தேன். ஆனால் அப்பம்மாவுக்கோ அதில் உடன்பாடு இருக்கவில்லை.

"நான் பெத்த என்ரை மகன் பரதனும் என்னை விட்டுப் போயிட்டான். அவன்ரை நினை வாக பெயர் வைச்சு, எங்களோடை செல்லமாக இருக்க வேண்டிய உன்ரை தம்பி, என்ரை பேரன் பரதனும் எங்களை விட்டுப் போயிட்டான். என்னு டைய பூட்டனுக்கும் அந்தப் பெயரை வைக்க எனக்கு மனம் இடம் குடுக்கேல்லை. ஆனபடியால் வேறை ஒரு பெயரை வை" என்று அப்பம்மா ஆணித் தரமாகச் சொல்லிவிட்டா.

*"பிரியந்த் பிறந்து ஏழு மாதங்கள் ஆயிட்டுது. நான் இன்னும் அவனை நேரிலை பார்க்கேல்லை. போட்டோஸ் எல்லாம் கணக்கிலை எடுக்கேலாது. அவனை உடனடியாக என்னட்டைக் கொண்டு வா. அல்லது என்னை உடனடியாக அவனிட்டை கூட்டிக் கொண்டு போ." அப்பம்மா தொலைபேசியில் என்னோடு உரிமைப்போர் தொடுத்துக் கொண்டிருந்தா.*

*அதற்குப்பிறகு நானெப்படி பேசாமலிருப்பது? யேர்மனிக்குப் போய் அப்பம்மாவை பிரான்சுக்கு எனது வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன். வந்த முதல் நாளே அப்பம்மா, பிரியந்தை தனது கையில் தூக்கி வைத்துக்கொண்டு அவனோடு கதைக்கத் தொடங்கி விட்டா.*

*"அப்பு, திருப்பியும் எங்களைத் தேடிப்பிடிச்சு வந்திட்டியே? எனக்கு நல்லாத் தெரியும் நீ எங்களிட்டை திரும்பி வருவாய் எண்டு. நீ தாண்டா அப்பு எங்கட குலவாரிசு. மிருதடி முருகப்பர் தான் குடும்பத்திலை மூத்தமகன். அவரின்ரை மூத்தமகன் சபாபதிப்பிள்ளை. சபாபதிப்பிள்ளையின்ரை மூத்த மகன் தியாகராஜா. அவரின்ரை மூத்தமகன் பிறேம ராஜன். பிறேமராஜன்ரை மூத்தமகன் ஜனகன். ஜனகனின்ரை மூத்தமகன் பிரியந்த். எங்களின்ரை பரம்பரைப்பொறுப்பு, பரம்பரைஆளுமை, பரம்பரைக் கடமைகளையெல்லாம் நீ தான் எங்கட அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்போற ஹீரோ.." என்று நீண்ட நேரமாக அவவின் கையிலிருக்கும் சிறுகுழந்தை பிரியந்துடன் கதைத்துக் கொண்டேயிருந்தா. அவவின் குரல் இடையிடையே தழும்பிக் கொண்டிருந்தது. அவவின் கண்களிலிருந்து கண்ணீர் முட்டி வழிந்து கொண்டிருந்தது.*

*நாங்களேதும் கதைத்தால் எதுவித பிரதிபலிப்பும் காட்டாத பிரியந்தும் அப்பம்மா கதைத்தால் சிரித்துக் கொண்டு, ஒருவித துள்ளலோடு குரல் எழுப்பி ...ஓ ஓஓ ஓஓஓ... என்று ஏதோ சொல்லிக் கொண்டிருப்பான்.*

*பூட்டன்-பூட்டியின் கதையாடல் இப்படியே தொடர்ந்து கொண்டிருந்தது.*

*பிரியந்த்தின் முதலாவதுபிறந்தநாளும் வந்தது. யேர்மனியிலிருக்கும் தன்னுடைய பிள்ளைகளான பார்த்திபன்சித்தப்பா, குட்டிமாமி(பாமாமாமி), மற்றும் தனது பேரப்பிள்ளைகளென எல்லோரையும் கூட்டிக் கொண்டு அப்பம்மா பிரான்சுக்கு வந்து விட்டா. பிறந்தநாளை சிறப்பாகவும் நடாத்தி வைத்தா.*

*காலப்போக்கில் "இனி என்னாலை உங்கை அடிக்கடி வரேலாது. நீ அடிக்கடி என்னட்டை வந்தே ஆகோணும்" என்று ஆணையிட்டு விட்டா.*

*அதற்குப் பிறகு அப்பம்மாவை நோக்கிய பயணம் எங்கள் வீட்டில் அடிக்கடி நிகழும். என் குடும்பமும் மனைவி, மூன்று குழந்தைகள் என்று பெரியகுடும்பமாகியிருந்தது. சின்னவிடுமுறையேதும் கிடைத்தாலும் நானும் மனைவியும் பிள்ளைகளுமாக யேர்மனியில் இருக்கும் அப்பம்மாவிடம் புறப்பட்டு விடுவோம்.*

*ஒரு அறை, ஒரு குசினி, ஒரு ஹோல் இவ்வள வும் சேர்ந்தது தான் அப்பம்மாவின் வீடு. ஆனால் நிறைய நண்பர்கள். நிறையச் சொந்தக்காரர்கள். எல்லோரும் அப்பம்மாவைத் தேடி வருவார்கள். நிறையச் சந்திப்புகள், நிறைய மகிழ்ச்சிப் பரிமாற்றங் கள் என மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். அந்தக் குட்டி வீட்டிற்குள்சமைத்து, நிறையப்பேர் ஒன்றாகக் கூடிக் கதைத்து, சிரித்து, சாப்பிடுவதில் கிடைக்கும் சந்தோசம் வேறு எங்கேயும் கிடையாது!*

*அப்பம்மாவின் தொலைக்காட்சியைச் சுற்றி எல்லோருடைய புகைப்படங்களும் இருக்கும். ஒரு பக்கம் அப்பப்பா, அப்பா, பரதன் சித்தப்பா, சபாச் சித்தப்பா, தம்பி பரதன். இன்னொருபக்கம் பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் படங்கள் என்று ஒரு மியூசியம் மாதிரி அந்த இடத்தை வைத்திருப்பா.*

"சேகர் சித்தப்பாவின் மகள் வாராஹியின் சாமத்தியச்சடங்கிற்குக் கூட்டிக் கொண்டு போறன், வாறிங்களோ?" என்று அப்பம்மாவைக் கேட்டிருந் தேன். அதற்கு உற்சாகமாக "ஓம் வாறன்.." என்று சொல்லியிருந்தா. அங்கு போனால் பல சொந்தங் களை, உறவுகளை காணலாம், கதைக்கலாம், நிறைய விசயங்களைப் பரிமாறலாம் என்றெல்லாம் ஆர்வ மாகவும் சந்தோசமாகவும் அந்த நாளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தா.

ஆனாலும் "அப்பு, நான் கலந்து கொள்ளுற கடைசி நிகழ்வாகத்தான் இது இருக்குமெண்டு நினைக்கிறன்" என்று அப்பம்மா சொன்ன போது நான் அதனைப் பெரிதாக உள்வாங்கிக் கொள்ள வில்லை.

வாராஹியின் சாமத்தியச் சடங்கிற்கு இரு தினங்களிற்கு முன்னரே அப்பம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் வந்து விட்டது.

"அம்மாவை மருத்துவமனைக்குக் கூட்டிப் போய் இரண்டு நாட்கள் அங்கு வைத்தியம் பார்த்து விட்டு, மீண்டும் அவவை வீட்டில் கொண்டுவந்து விட்டாயிற்று" என்று வதனா மாமி சொன்னா.

நான் அப்போது வாராஹியின் சாமத்தியச் சடங்கிற்காக யேர்மனிக்கு வந்திருந்தேன். அப்பம்மா வின் உடல்நிலை பற்றி அறிந்ததும் ஒரே கவலை யாகப் போய் விட்டது. அப்பம்மாவுக்கு மாம்பழம் என்றால் உயிர். உடனே போட்ஸ்ஹைமில் இருக்கும் தமிழ்க்கடைக்கு ஓடிப் போய் மாம்பழங்களும் மாம்பழச்சாறும் வாங்கிக்கொண்டு அப்பம்மா இருக்கு மிடத்திற்குப் புறப்பட்டேன். என்னோடு என் மனைவியும் பிள்ளைகளும் வந்தார்கள். ஒன்று ஒன்றரை மணி நேரக் கார் ஓட்டம்.

நான் அப்பம்மாவிடம் போய்ச் சேர்ந்த போது அங்கு வதனா மாமியும் பாமா மாமியும் நின்றார்கள்.

வதனா மாமி என்ன செய்வதென்று தெரியாத அந்தரமான, குழப்பமான மனநிலையுடன் மருத்துவருக்கு, மருத்துவமனைக்கு... என்று போன் பண்ணிக் கொண்டிருந்தா. அப்பம்மா தனது கட்டிலில் படுத்திருந்தா. நான் அங்கு வந்ததோ அல்லது அவவைச் சுற்றி என்ன நடக்கிறது என்றோ எதுவும் அவவுக்கு விளங்கவில்லை. கண்கள் திறந்திருந்தன. ஆனால் அவவின் பார்வை எதை நோக்கியும் இல்லாமல் ஒருவித வெற்றுப் பார்வையாகவே இருந்தது.

நான் அவவின் அருகில் சென்று "அப்பம்மா... அப்பம்மா.." என்று பலதடவைகள் அழைத்தேன். என் மனைவி பரமேஸ், என் பிள்ளைகள் எல்லோரும் பல முறை அவவை அழைத்தார்கள். "ஹ்ம்ம்.." என்றொரு முனகல் மட்டும் வந்தது. ஆனால் எங்களை நோக்கி அவ திரும்பவேயில்லை.

நான் கொண்டு வந்திருந்த மாம்பழச்சாறை எடுத்து ஒரு 'கப்'பில் ஊற்றிப் பருக்கினேன். அதனை சிறிதளவு அருந்தினா. எனக்கது சரியான சந்தோசமாக இருந்தது. மாம்பழத்தைச் சீவி ஒரு துண்டை பிய்த்து மெதுவாகத் தீத்தினேன். அவவினால் அதனைச் சப்பிச் சாப்பிட முடியவில்லை.

சில நிமிடங்களிலேயே வதனா மாமி ஒழுங்கு படுத்தியதன் படி அப்பம்மாவை செக் பண்ணுவதற்காக, அவவைப் பராமரிக்கும் தாதிப்பெண் வந்து விட்டாள். அவள் தன்னை எங்களிடம் அறிமுகப் படுத்திக்கொண்டு அப்பம்மாவின் இரத்த அழுத்தத்தை ஒரு சிறிய மெஷின் பொருத்தி செக் பண்ணினாள். அவளின் முகம் மெதுவாகச் சுருங்கியது. அப்பம்மாவிடம் யேர்மனிய மொழியில் ஏதோ கதைத்தாள். ஆனால் அப்பம்மா எந்தவித ரியாக்சனும் இல்லாமல் அப்படியே கண்களை விழித்திருந்தா.

அந்தப் பெண் எங்களைத் திரும்பிப் பார்த்தாள். "அவவுடைய நிலமை சாதாரணமாக இல்லை. ஆனால் பாரதூரம் என்றும் சொல்ல முடியாது.

*ஆனாலும் இப்பவே உடனடியாக மருத்துவமனைக்கு அவவை அனுப்பி வைத்தாக வேண்டும்.." என்று சொல்லி, தனது தொலைபேசியை எடுத்து அப்பம்மா வின் குடும்பவைத்தியரை அழைத்து நிலைமையைச் சொன்னாள். குடும்பவைத்தியரும் உடனே வந்து அப்பம்மாவைச் செக் பண்ணிப் பார்த்து, வதனா மாமியுடனும் பாமா மாமியுடனும் கலந்தாலோசித்து, அம்புலன்ஸை அழைக்கும் படி தாதிப்பெண்ணிடம் சொன்னார். தாதிப்பெண் உடனே தனது தொலை பேசியை எடுத்து, அம்புலன்ஸ்ஸை வரவழைத்தாள். அவர்களும் உடனடியாக வந்து சில்லுக்கதிரையில் அப்பம்மாவை அமர்த்தி, பெல்ட் போட்டு அழைத்துச் சென்றார்கள். அவர்களது அம்புலன்ஸ் வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் இடம்வரைக்கும் நானும் கூடவே சென்றேன். உள்ளேயிருக்கும் கட்டிலில் அப்பம்மா வைப் படுக்க வைத்து, பெல்ட் போட்டு விட்டு, எங்களிடம் 'sorry' சொல்லி விட்டு கதவை இழுத்துப் பூட்டினார்கள். நான் அப்படியே 'ஆஃப் ஆயிட்டன். இவ்வளவு தானா? எல்லாம் முடிஞ்சுதா? இனி நான் அப்பம்மாவைப் பார்க்க முடியாதா? எப்படி வாழ்ந்தா என்ரை அப்பம்மா! எனக்கு எவ்வளவு புத்திமதிகள் சொல்லி என்னை வளர்த்தா! எவ்வளவு பேருக்கு அம்மாவாக, ஒரு அன்பான அன்ரியாக, பாட்டியாக, பூட்டியாக, ரீச்சராக.. இருந்த அப்பம்மா என்னைத் திரும்பிப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லக் கூட உடம்பில் வலுவில்லாமல் மருத்துவமனை நோக்கி பயணம் செய்கிறா!*

*மொத்தமாக ஒரு இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே அப்பம்மா வீட்டில் அப்பம்மாவுடன் நிற்க முடிந்தது. எனக்கும் பிள்ளைகளுக்கும் பெரிய ஏமாற் றம். நிறையப் பிளான்பண்ணி யேர்மனிக்கு வந்திருந் தோம். சமைக்கிறது, கேக் செய்கிறது, அப்பம்மா விடம் போய், அவவைக் கூட்டிக்கொண்டு வெளியில் நடக்கிறது, அவவோட சேர்ந்து படம் பார்க்கிறது, நான் கொண்டு வந்த எனது கணினியில் இருக்கும் பழைய புகைப்படங்களை அப்பம்மாவோடு சேர்ந்து*

*பார்க்கிறது, பிறகு அப்பம்மாவைக் கூட்டிக்கொண்டு 'போட்ஸ்ஹைறம்' போறது, சாமத்தியவீட்டில் எல்லாச் சொந்தக்காரரோடும் கதைக்கவைத்துச் சந்தோசப் படுறது, அங்கிருக்கும் நாகபூசணியம்மன் கோயிலுக் குக் அவவை கூட்டிக் கொண்டு போறது... என்று எல்லாமே தண்ணீரில் எழுதியது போல் கனவாகி விட்டதா..?*

---ஓ---

**அ***ப்பம்மாவின் நிலைமை மோசமாகி விட்ட தால் "இனி அவவை மருத்துவமனையில் வைத்திருப் பதில் பயனில்லை" என்று சொல்லி மருத்துவர்கள் கை விரித்து விட்டார்கள். அதன் பின், அப்பம்மா இனித் தனியாக இருக்க முடியாது, 24மணி நேரமும் தாதியரின் மேற்பார்வையில் தான் இருக்க வேண்டும் என்ற நிலையில், வதனா மாமி அப்பம்மாவை 23-07-2021 அன்று ஒரு நல்ல தனியார் மருத்துவ பராமரிப்பு இல்லத்தில் சேர்த்து, பராமரிக்கத் தொடங்கினா.*

*அங்கு, இனி எழுந்து நடமாடவே மாட்டா என மருத்துவர்களால் கைவிடப் பட்ட அப்பம்மா, மெதுமெதுவாக எழுந்து நடமாடத் தொடங்கினா. புத்தகங்கள் வாசித்தா. நெருங்கிய உறவுகளுடன் தொலை பேசினா. குறுஞ்செய்திகள் அனுப்பினா.*

*அதன் பின் நானும் பலதடவைகள் அப்பம்மா வோடு தொலைபேசியூடாக வீடியோ அழைப்பில் முகம்பார்த்து உரையாடியிருக்கிறேன். 2022ம் ஆண்டு பிறந்த பின்னரும் அவ்வப்போது சின்னச் சின்ன உரையாடல்கள், சிறு குறுஞ்செய்திகள் என்று அப்பம்மாவுடனான தொடர்பு தொடர்ந்து கொண் டிருந்தது. "God bless you Jana, இப்போ எனக்கு வரவர இயலாமை கூடிவிட்டது. ஆதலால் நினைத்த வுடன் என்னால் எதையும் செய்ய முடிவதில்லை. பிள்ளைகளின் பிறந்தநாட்களை அநேகமாக மறந்து விடுகிறேன். ஆனபடியால் நீங்கள் அதை எனக்கு நினைவுபடுத்திச் செயற்படுங்கள் ஜனா. எல்லோரும்*

சுகமா? God bless you.." இப்படி அப்பம்மாவிடமிருந்து அவ்வப்போது குறுஞ்செய்திகள் வரும்.

கடைசியாக மே மாதத்தின் தொடக்கத்தில் அப்பம்மாவிடமிருந்து எனக்கு வந்த செய்தி "ஜனா, எனக்குச் சரியான சுகவீனம் வந்து இப்போது ஓரளவு சுகம். ஆனால் இப்பவும் இயலாமல் தான் இருக்கிறேன். எப்போது என்னிடம் வருவீங்கள்?"

அதற்குப் பிறகு வதனா மாமி அலைபேசியில் வீடியோ கோல் எடுத்து அப்பம்மாவுடன் பேச வைத்தா. அப்போது "நான் சரியான சுகவீனமாக இருந்து, இப்ப கொஞ்சம் பெட்டர் ஆகிட்டன். என்னாலை கனநேரம் கதைக்க முடியேல்லை. பரமேஸ், பிள்ளைகள் எல்லாரும் சுகமா? எல்லாரும் சுகமாக இருங்கோ.." என்று சொல்லி விட்டு போனை வதனா மாமியிடம் கொடுத்து விட்டா.

திடீரென்று ஒருநாள் 'தியாகராஜா குடும்பம்' என்று அப்பப்பாவின் பெயரில் நாம் வைத்திருக்கும் 'வட்ஸ்அப் குறூப் சட்' இல் என் மைத்துனர் திலீபன் வீடியோ கோல் பண்ணி அப்பம்மாவைக் காட்டி, "நிலைமை அவ்வளவு நன்றாக இல்லை. எவ்வளவு கெதியாக வந்து அப்பம்மாவைப் பார்க்க முடியுமோ அவ்வளவு கெதியாக வந்து பாருங்கள்" என்று சொன்னார்.

அப்பம்மா ஜேர்மனியில் நாங்கள் பிரான்ஸில். நினைத்தவுடன் போகக்கூடிய தூரமும் இல்லை. நினைத்தவுடன் போகக்கூடிய நிலைமையும் இருக்க வில்லை. ஆனாலும் நானும் மனைவியும் பிள்ளை களும் விரைவில் சென்று அப்பம்மாவை பார்ப்பதற் கான ஒழுங்குகளை ஆரம்பித்தோம்.

அன்று 18-05-2022. புதன்கிழமை. உலகெலாம் வாழும் தமிழர்கள் எல்லோரும் முள்ளிவாய்க்கால் படு கொலையை நினைத்துத் துக்கம் அனுஷ்டிக்கும் நாள்! தமிழினப் படுகொலையின் நினைவேந்தல் நாள்!

நான் காலையில் வேலைக்குப் போவதற்காக எனது அலைபேசியில் வைத்த அலாரம் விடாமல் அலறி என்னை எழுப்பியது. அதனை அழுத்தி நிற்பாட்டினேன். அலைபேசி ஸ்கிறீனில் நிறையச் செய்திகள் விழுந்து கிடந்தன. எல்லாம் 'தியாகராஜா குடும்பம்' குறூப்பிலிருந்து. அன்று அதிகாலை 4.00 மணிக்கு அப்பம்மா எங்களையும் இந்தப் பூவுலக உறவுகளையும் விட்டுப் போன செய்தியை குறூப் வட்ஸ் அப்பில் வதனா மாமி எழுதியிருந்தா.

எனக்கு மனம் கனத்தது. வேலைத்தளத்தில் என் உயர் அதிகாரிக்கு நிலமையைக் கூறி நான் உடனடியாக விடுமுறை எடுத்துக்கொண்டு புறப்பட வேண்டும். வேலைத்தளத்திற்குச் சென்றேன். என் அப்பம்மாவின் இழப்புப் பற்றி அறிவித்தேன். அங்கு என்னோடு வேலைபார்ப்பவர்கள் பலருக்கும் என் அப்பம்மாவைப் பற்றி நன்றாகத் தெரியும். எனக்கும் அப்பம்மாவுக்குமிடையே இருக்கும் அன்பும் பாசமும் நெருக்கமும் அவர்களுக்கும் தெரியும். வேலையிடத்தில் நின்று கூட நான் எத்தனையோ தடவைகள் அப்பம்மாவுடன் வீடியோக் கோலில் கதைத்திருக்கிறேன். என் சக பணியாளர்களுடன் கூட அப்பம்மா பலதடவைகள் ஆங்கிலத்தில் உரையாடியிருக்கிறா. அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள் சொல்லியிருக்கிறா.

என்னோடு பணியாற்றும் நண்பர்கள் பலரும் என்னருகில் வந்து என்னை ஆற்றுப்படுத்தி "கவனமாகப் போயிட்டு வா" என்று சொல்லி என்னை வழியனுப்பி வைத்தார்கள்.

அந்த வார இறுதிநாள் வரை அப்பம்மாவின் உடலைப் பார்க்க முடியாது என்றார்கள். நாங்கள் வார இறுதிநாள் யேர்மனி போய்ச் சேர்ந்து விட்டோம். அப்பம்மாவின் இறுதித் தகனக்கிரியை நடைபெறும் நாளுக்கு முதல் நாள், நிகழ்வு நடைபெறும் அப்பம்மாவினது இடத்திற்கு நானும் மனைவியும் பிள்ளைகளும் நெருக்கமான எங்களது உறவினர்க

ளோடு சேர்ந்து போனோம். ஆனால் அப்போதும் அப்பம்மாவின் உடலைப் பார்ப்பதற்கு எனக்கு அனு மதி கிடைக்கவில்லை. தகனம் செய்யப் பட விருக்கும் இடத்தை மட்டும் போய்ப் பார்த்து விட்டு வந்தேன்.

இலண்டனிலிருந்து வந்திருந்த சந்திரா மாமி, ரவி மாமா, தரணியன், ரிஷியன், தர்ஷியா, ராம், மீரா, வர்ஷா ஆகியோரை அவர்கள் தங்கியிருந்த விடுதிக்குப் போய்ச் சந்தித்து, சிறிதுநேரம் அவர்க ளோடு இருந்து கதைத்துவிட்டு மறுநாள் சந்திக்கலா மென்று கூறி நான் தங்கியிருந்த நகருக்குச் சென்று விட்டேன்.

அப்பம்மாவுக்குப் பூக்கள் என்றால் கொள்ளை விருப்பம். அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால் கடைகளெல்லாம் பூட்டியிருந்தன. பூக்களுக்காக போட்ஸ்ஹைம் நகர் முழுவதும் அங்கிங்கென்று ஓடித் திரிந்து போட்ஸ்ஹைம் நாகபூசணி அம்மன் ஆலயத்தோடு தொடர்பு கொண்டு ஒருவாறு பூக்கள் வாங்கி, இரவிரவாக பூமாலை கட்டிக் கொண்டு மறுநாள் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தோடு அப்பம்மாவின் தகனக்கிரியை நடைபெறும் இடத் திற்கு வந்து சேர்ந்தேன்.

சேலை உடுத்தி, புன்முறுவல் பூத்தமுகத்தோடு நித்திரையாகியிருப்பது போலிருக்கும் அப்பம்மா ஒரு மரப்பெட்டிக்குள் கிடத்தப் பட்டிருந்தா. நான் கொண்டு வந்திருந்த பூமாலையை அப்பம்மாவுக்குப் போட்டு விட்டேன். கூடவே மற்றைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பூக்கள், மாலைகள்.. என்று கொணர்ந்து அப்பம்மாவை அலங்கரித்தார்கள். உறவினர்கள் நண்பர்களிடமிருந்தும் ஏராளமான பூக்களும் பல மலர்வளையங்களும் வந்து சேர்ந்தன. அப்பம்மாவின் மனம் போல அப்பம்மாவின் மேல் பூக்களும் பூமாலைகளும் குவிந்து கிடந்தன.

நேரம் அதிகம் இல்லாததால் ஐயர் இறுதிச் சடங்கிற்கான கிரியைகளை ஆரம்பித்து விட்டார்.

*என் மாமிமார், மாமாமார், சித்தப்பா அப்பம்மாவின் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மேலும் பல சொந்தக்காரர்கள், நண்பர்கள் சூழ இறுதிக்கிரியை நடைபெற்றுக் கொண்டிருந்தது.*

*பேரன் என்ற முறையில் அப்பம்மாவுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களை பார்த்திபன் சித்தப்பாவோடு சேர்ந்து செய்ததில் மனதிற்குள் ஒருவித திருப்தி!*

*அப்பம்மாவுக்கு இறுதிமரியாதை செய்வதற் காக மலர்வளையம், புலிக்கொடி ஆகியவற்றோடு 'தமிழீழ விடுதலைப்புலிகள்' அமைப்பின் யேர்மன் கிளை உறுப்பினர்கள் நேரத்தோடு வந்து வெளியே காத்திருந்தார்கள். அவர்களுக்குரிய நேரம் வழங்கப் பட்டபோது அணிவகுப்பு மரியாதையோடு வந்து அப்பம்மாவின் மீது புலிக்கொடி (தேசியக் கொடி) போர்த்தி (பெரிய)மலர்வளையம் சாத்தி அப்பம்மா வைக் கௌரவித்தார்கள். அப்பம்மா நாட்டுக்காகாகச் செய்த அளப்பரியசேவைகள், அர்ப்பணிப்புகள் பற்றி விவரித்து, உரையாற்றி அப்பம்மாவுக்கு வணக்கம் செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து அப்பம்மா வுக்கு 'நாட்டுப் பற்றாளர்' என்ற மதிப்பளித்து அதற்கான சான்றிதழை குடும்பத்தினர் சார்பில் வதனா மாமியிடம் கையளித்தார்கள்.*

*அதனைத் தொடர்ந்து அனைத்துலகத் தொடர் பகம் தமிழீழ விடுதலைப்புலிகள், றைன்லாண்ட் பாள்ஸ் மாநில தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, மாவீரர்பணிமனை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (TCC)-யேர்மனி, மன்ஹைம் தமிழாலய ஆசிரியர்கள் மாணவர்கள், மன்ஹைம் தமிழாலய நிர்வாகம், யேர்மனி தமிழ்க் கல்விக்கழகம், ஜேர்மனிய தமிழ்ப்பெண்கள் அமைப்பு, மன்ஹைம் வாழ் மக்கள், றஞ்சி அன்ரி, யோகேஸ் அங்கிள், சந்திராமாமியின் பிள்ளைகளான தரணியன், ரிஷியன், தர்ஷியா, மற்றும் அப்பம்மா பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த ஊரான ஆத்தியடியின்*

*சார்பாக நல்லநாதன் அங்கிள், சபாச் சித்தப்பாவின் நண்பன் தர்மு.. ஆகியோரின் இரங்கல் உரைகளும் இறுதி வணக்க நிகழ்வும் இடம் பெற்றன.*

*ஒவ்வொரு அமைப்பினரும் அஞ்சலிக் கவிதைகள் அச்சடித்துக் கொண்டு வந்து அங்கிருக்கும் எல்லோருக்கும் விநியோகித்துக்கொண்டிருந்தார்கள்.*

*சுண்ணம் இடித்து, மந்திரங்கள் சொல்லி, தேவாரங்கள், சிவபுராணம் பாடி அனைத்துக் கிரிகைகளும் முடிந்த பின்னர் பூக்களால் நிறைந்திருக்கும் அப்பம்மாவின் பெட்டி மூடப் பட்டது! பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளைகளுமாக அப்பம்மாவின் பெட்டியைத் தூக்கித் தோளில் சுமந்து சிறிது தூரம் சென்றதும், அப்பம்மாவின் பெட்டி நான்கு சிறிய சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஒரு வண்டிலின் மேல் வைக்கப் பட்டது. எல்லோரும் பெட்டியின் மேலே கைகளை வைத்துக் கொண்டு தகனம் செய்யப்படும் அறையை நோக்கி மெதுவாக நகர்ந்தோம்.*

*தகன அறை வாசலில் பெட்டி வைக்கப் பட்டது. சிலர் பெட்டியிலிருந்து கைகளை எடுக்க மனமில்லாது அப்படியே நின்றார்கள். தகன அறைக் கதவு தானாகத் திறந்து கொண்டது. உள்ளிருந்து கடும்வெப்பம் வெளியேவீசியது. எதிரில் செம்மஞ்சள் நிறத்தில் தணல் கட்டிகள் தகதகவென நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தன.*

*"எல்லோரும் பெட்டியிலிருந்து கைகளை எடுங்கள்" என அறிவித்தல் வந்தது.*

*அப்பம்மாவின் பெட்டி சக்கரங்கள் பொருத் தப் பட்ட பெல்ற் ஒன்றின் மேல் வைக்கப் பட்டதும் அது எங்களை விட்டு மெது மெதுவாக தகன அறை நோக்கி நகரத் தொடங்கியது!*

*என்னையறியாமலே நான் "அப்பம்மா.. அப்பம்மா..." என்று கத்தத் தொடங்கி விட்டேன்.*

எனக்குப் பக்கத்தில் ரவி மாமா நின்றிருந்தார். நான் அவருடைய கைகளை இறுக்கிப் பிடித்த படியே கத்திக் கொண்டிருந்தேன். என்னைச் சுற்றிப் பல விதமான அலறல் ஓசைகள்!

"அம்மா.. அம்மம்மா.. அப்பம்மா.. மாமி.. அன்ரி.. ஐயோ.." என்ற கூச்சல்களும் ஒப்பாரியும் என் காதுகளை அடைக்கத் தொடங்கின. அப்பம்மா கண்மூடி, சயனித்துக்கிடக்கும் பெட்டி மெது மெதுவா கப் போய் தகன அறைக்குள் நுழைந்து நெருப்புத் தணலுக்குள் புதைந்து அப்படியே காணாமல் போக, தகன அறைக் கதவுகள் மெல்ல மெல்லத் தானாக மூடிக் கொண்டன. எல்லாம் முடிந்து விட்டது!

ஒரு யுகம் அழிந்து விட்டது போன்ற பிரமை எனக்கு!

என்மேல் அன்பும், பாசமும், அக்கறையும் வைத்திருந்த என் அருமை அப்பம்மாவே, நிம்மதியாக வும், அமைதியாகவும் போய்வாருங்கள்!

எங்கிருந்தாலும் உங்கள் அன்பும் வாழ்த்தும் என்னை வந்து சேரும் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!

*ஜனகன் (1984), சிவகாமசுந்தரி அவர்களின் பேரன். சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த புதல்வன் எஸ்.ரி.பிறேமராஜன்(கவிஞர் தீட்சண்யன்) அவர்களின் மூத்த புதல்வன். பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வருகிறார்.*

# அன்பு அப்பம்மா

## கௌசிகன் பிறேமராஜன்

*ஆத்தியடியிலே வேரோடி விழுதுவிட்ட பெரு விருட்சமே அப்பம்மா, இன்று ஸ்வெபிஸ் ஹால் நகரிலே உங்கள் ஆத்மா மௌனித்துப் போன தேனோ.*

*பண்பின் உறைவிடம் அப்பம்மா, உங்களை உற்றார் உறவினர் நண்பர்கள் பலர் அம்மா என்று அழைப்பதை நான் சிறு வயது முதல் பார்த்ததுண்டு, "அம்மா" என்ற சொல் அடிமனதில் இருந்து வரும் அற்புத வார்த்தை. அதை, பலர் உச்சரிக்கும் அளவுக்கு அவரவர் மனங்களில் வேர்ஊன்றிய நேசகுணமுள்ள பாச அப்பம்மா நீங்கள்.*

*எங்கள் சிறுவயதுக் குழப்படிகளைக்கண்டால் கண்களை மூடிய படி ஏசி உங்கள் செல்லக் கோபத்தை வெளிப்படுத்துவீர்கள். அந்தக் கண்டிப்பி லும் ஒரு அரவணைப்பு இருக்கும்.*

*மின்சார மயானத்தில் உங்களுடல் சாம்ப லாகிப் போனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தில் இருந்து ஒரு போதும் மறையப் போவ தில்லை.*

*உங்கள் ஆத்மா இறைவனின் திருவடிகளில் சாந்தி பெற பிரார்த்திக்கிறேன்.*

*பி. கௌசிகன் (1985), சிவகாமசுந்தரி அவர்களின் பேரன். சிவகாமசுந்தரி அவர்களின் மூத்தபுதல்வன் எஸ்.ரி.பிறேமராஜன் (தீட்சண்யன்) அவர்களின் இரண்டாவது புதல்வன். ஈழத்தில் வற்றாப்பளை, முள்ளியவளையில் வாழ்ந்து வருகிறார்.*

# அப்பம்மா

### மொறிஸ் பார்த்திபராஜன்

*ஆத்தியடியின் ஆலமரமே அப்பம்மா!*
*விழுதுகள் பரப்பி ஜெர்மனியில் புலம்*
*நகர்ந்து மௌனித்து அமைதி கொண்டீர்.*

*நீங்கள் இருந்த வரை பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள் என அப்பப்போ*
*சொந்தங்கள் அருகில் கலகலப்பாக*
*இருந்தோம்.*

*நீங்கள் போனபின் சொந்தங்கள் தூரமாகி*
*விட்டன.*

*உங்கள் ஆத்மா அண்டத்தில் கரைந்து*
*அமைதி பெற இயற்கையைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி!*

*மொறிஸ் (1991), சிவகாமசுந்தரி அவர்களின் பேரன். சிவகாமசுந்தரி அவர்களின் இரண்டாவது புதல்வன் பார்த்திபராஜன் (பார்த்திபன்) அவர்களின் புதல்வன். யேர்மனியில் மன்கைம் நகரில் வாழ்ந்து வருகிறார்.*

# Dear Ammama...

***Tharanian Ravindrakumaran***

*You have always been there for us, even if we are countries apart you would phone at home and speak with me.*

*You always given me all the time in the world listened to me talk about my day. You've told me wonderful stories from the days you were in Eelam. You would tell me stories when I asked from your time spent with our Paada, Annan mama, Parathan mama and Saba mama - I've unfortunately never got to see. You've shared with me some of the best memorable photos of my family that I had never got to see. You had always given me the best advice, wisdom and shown a forgiving heart this makes you the incredible woman you are.*

*You made it also your mission to continue your peerless support with time and resources in assisting people in need in Eelam, educating the youth in your local Tamil school and contributing to numerous charities. Not to forgetting to mention of-course your incomparable sacrifices you had made through your time as a mother in Eelam.*

*I will miss you Ammama, you will be forever be in my heart. You have shown me how strong you are even*

*when you have lost the closest ones near to you, how loving you are when you take care of us when you come and see us, how respectful you are showing us important family values.*

*I love you ammama. Forver in my heart.*

*May you rest in peace.*

*தரணியன் (1992) சிவகாமசுந்தரி அவர்களின் பேரன். சிவகாமசுந்தரி அவர்களின் இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி) அவர்களின் மூத்த புதல்வன். இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# அப்பம்மா பற்றிய சில நினைவுகள்..

## தக்சாயினி மோகனதாஸ்

**அ**ப்பம்மா மீது அளவு கடந்த அன்பு கொண்டவள் நான். எனது அப்பாவிற்கும்(பிறேமராஜன்) தனது அம்மா என்றால் உயிர்.

அப்பம்மா பற்றிய பல விடயங்களை, சுவாரஸ்யமான பல சம்பவங்களை யெல்லாம் எங்கள் அப்பாவும் அம்மாவும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் அப்பம்மாவுடன் சேர்ந்து ஒன்றாக வாழ்வதற்கு எங்களது நாட்டு நிலமை எனக்கு இடம் தரவில்லை.

நான் பிறந்திருந்த போது (31-10-1992) அப்பம்மா தனது மூத்தமகனின் (பிறேமராஜன்) ஒரே மகளான தன் பேர்த்தியைப் பார்க்கவென்று பல இடர்களின் மத்தியிலும் பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு வற்றாப்பளையிலிருக்கும் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அம்மாவும் இது பற்றி பலமுறை எங்களுக்குக் கூறியிருக்கிறா. அப்பொழுது அப்பம்மாவுடன் சேர்ந்தெடுத்த பலபுகைப்படங்களும் என்னிடம் இருந்தன. ஆனால் துரதிஷ்டவசமாக அவை போர்க்காலத்தில் அழிந்துவிட்டன!

அப்பம்மாவுடன் சேர்ந்து வாழ இறைவன் எனக்குக் கொடுத்த நாட்கள் வெறும் நான்கு நாட்கள் மட்டுமே! அந்த அருமையான நாட்கள் எனக்கு இப்போதும் நன்றாக ஞாபகமிருக்கிறது. அப்பொழுது அப்பம்மாவும் பாட்டாவும் வெளி நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களது மற்றைய பிள்ளைகளது

அழைப்பின் பேரில் அங்கு செல்வதற்காக ஊரில் இருந்து புறப்பட்டு வந்து, இடையிலிருக்கும் ஊரான வவுனியாவில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தங்கி நின்றிருந்தார்கள். அது 1996, 1997 காலப்பகுதி. அந் நேரம் வன்னி மாவட்டத்திலிருந்து வேறு ஊர்களுக்கு எளிதாகச் சென்று விட முடியாது. இராணுவக் கெடு பிடிகள், ஊரடங்குச்சட்டங்கள் என பல இடைஞ் சல்கள் இருந்தன. பாரிய முயற்சியின் பின்னர் அங்கே செல்வதற்கு எங்களுக்கு அனுமதிகிடைத்தது.

அப்போது எனக்கு நான்கு வயது. எங்களைக் கண்டதும் அப்பம்மாவிற்கு நல்ல சந்தோசம். அங்கே பிரபா மாமி (அப்பாவின் மூன்றாவது தங்கை) யின் மகள் பகீயும் பருத்தித்துறையிலிருந்து வந்திருந்தாள். நானும் அவளும் ஒரே விளையாட்டுத்தான். அப்பம்மாவின் அரவணைப்பும் குடும்பமாக ஒன்று கூடியிருந்த அந்த சந்தோசமும் மறக்க முடியாதவை.

அங்கு நின்றிருந்த அந்த நான்கு நாட்களும் பத்துமணிக்கு பசுப்பால் காய்ச்சி குடிக்கத் தருவார். சாப்பாடு சமைத்து ஊட்டி விடுவார். சாப்பாடு வேண்டாமென்று அடம் பிடித்தால் "நன்றாகச் சாப்பிட்டால் தான் பெரியாளாக வளர்ந்து, படித்து, நல்லாக வரலாம்" என்று அப்பம்மா சொல்வார். அவையெல்லாம் இப்போதும் என் நினைவில் இருக் கின்றன.

அப்பம்மாவுடன் இருந்த அந்த நாட்களில் எப்போதும் கதைகள், பாட்டுகள், நல்ல புத்திமதிகள் சொல்லித் தருவார். அப்பம்மாவுடன் நான் இருந்த நாட்கள் குறைவு என்றாலும், அவர் மீது நான் வைத்திருக்கும் அன்பு குறைவில்லாதது. அவருக்கும் என்மேல் மிகுந்த அன்பும் பாசமும் அக்கறையும் இருந்ததை நான் அறிவேன்.

அப்பம்மா யேர்மனிக்குச் சென்ற பின்னர் கடிதங்கள் எழுதி எங்கள் அப்பாவிற்கு அனுப்பிக்

*கொண்டிருப்பார். அந்தக் கடிதங்களில் எனக்காகவும் ஒரு பந்தி எப்போதும் ஒதுக்கப் பட்டிருக்கும். அதில் எனது படிப்பு, என் உடல்நலம் பற்றியெல்லாம் விசாரித்திருப்பார். "இப்படிக்கு தக்ஷியின் பதிலை எதிர்பார்த்திருக்கும் அப்பம்மா" என்று கடிதத்தை முடித்திருப்பார். அப்பா அந்தக் கடிதங்களை வாசித் துக் காட்டிவிட்டு தனது பதிலை எழுத ஆரம்பிப்பார். நானும் ஒரு கடதாசியை எடுத்து, வடிவாக எழுதத் தெரியாததால் பல வட்டங்களைப் போட்டு, 'இப்படிக்கு தக்ஷி' என எழுதி அதனை அப்பம்மாவுக்கு அனுப்பும் படி அப்பாவிடம் கொடுத்து விடுவேன். அப்பாவும் தனது பதிலோடு எனது கடிதத்தையும் இணைத்து அனுப்பி விடுவார். அப்பம்மா அடுத்த கடிதத்தில் 'தக்ஷியின் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி' என்று எழுதியிருப்பார்.*

*போராட்ட காலத்தில் கடிதப் போக்குவரத்து, தொலைபேசித் தொடர்புகளெதுவும் இருக்கவில்லை. அதன் பிற்பாடு வற்றாப்பளையிலிருந்து தொலை பேசியூடாக அப்பம்மாவுடன் கதைத்துக்கொள்வோம்.*

*அப்பம்மாவின்*
*அன்பானபேச்சு, அரவணைப்பு*
*எதையும் என்னால் மறக்க முடியாது.*
*அப்பம்மாவின் ஆத்மசாந்திக்காக*
*நான் எப்பொழுதும்*
*இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!*

*தக்சாயினி மோகனதாஸ் (1992), சிவகாமசுந்தரி அவர்களின் பேத்தி. சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த புதல்வன் எஸ்.ரி.பிறேமராஜன்(கவிஞர் தீட்சண்யன்) அவர்களின் புதல்வி. ஈழத்தில் வற்றாப்பளை முள்ளியவளையில் வாழ்ந்து வருகிறார்*

# எங்களுக்காகவே வாழ்ந்த எங்கள் அம்மம்மா!

*பகீந்துஷா, பாலமயூரன், சிவகாமி*

*நினைவறியாப் பருவத்தில் எங்கள் குழப்படிகளையும் தாங்கி, அதேவேளை பாட்டாவையும் கவனித்து, அன்போடும் அரவணைப்போடும் எங்களைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தீர்களே அம்மம்மா! இதுபற்றி எங்கள் அம்மா எப்போதும் எங்களிடம் சொல்லக் கேட்டு அளவிலா மகிழ்ச்சியடைவேன் அம்மம்மா!*

*1998ல் எங்களைப் பிரிந்து நீங்கள் வெளிநாடு சென்று விட்ட போதும், எங்கள் நினைவுகளையே உங்கள் மனதில் பெரிதும் சுமந்து எங்களுக்காகவே வாழ்ந்தவரல்லவா நீங்கள்!*

*ஏனைய பேரப்பிள்ளைகள் பலரும் உங்கள் அருகில் இருந்தும், தினம் தினம் கடிதங்கள் எழுதியும் தொலைபேசியில் உரை யாடியும் எங்களுடனேயே உங்கள் பொழுதுகளை அதிகமாகக் கழித்தீர்கள் நீங்கள்!*

*எங்களை ஆளுமை மிக்கவர்களாகவும் சிறந்த பண்பாளர்களாகவும் உருவாக்குவதற்காக மிகுந்த கண்டிப்போடு எம்மை வழிநடத்தி, அதில் வெற்றி கண்டு விட்டதாகவும் கூறி எத்தனை பெருமைப் படுவீர்கள்!*

*இறுதிக் காலங்களில் பேரப்பிள்ளைகள் நாம், உங்கள் மனதிலும் நினைவிலும் வாழ்ந்து கொண்டிருந்தோமே தவிர, உங்களோடு சேர்ந்து வாழ்வதற்கு எங்களுக்கு அதிட்டம் கிடைக்கவில்லையே என்று*

*எப்போதும் நினைத்துக் கொள்வேன்.*

*"ஆச்சி.. அப்பு.." என அன்புடன் விளித்து ஆரம்பிக்கும் உங்கள் பேச்சுக்கள் இன்னமும் என் காதுகளில் ஒலிக்கின்றன!*

*உங்கள் கடிதங்கள் இப்போதும் நீங்கள் எங்களுடன் இருப்பதாகவே உணர்த்துகின்றன!*

*நீங்கள் என்றும் எங்களை விட்டுப் பிரிய மாட்டீர்கள் அம்மம்மா!*

*உங்கள் உடல் மட்டுமே இப்போது எம்மை விட்டுச் செல்கிறது!*

*எங்களுக்காகவே வாழ்ந்தீர்கள் அம்மம்மா!*
*எங்களுடனேயே வாழ்வீர்கள் அம்மம்மா!*
*என்றும் உங்கள் அரவணைப்பில்*
*திளைத்திருக்கும் பேரப்பிள்ளைகள்.*

*பகீந்துஷா (1993), பாலமயூரன் (1995), சிவகாமி (1997) ஆகிய மூவரும் சிவகாமசுந்தரி அவர்களின் பேரப்பிள்ளைகள். சிவகாமசுந்தரி அவர்களின் மூன்றாவது புதல்வியான சந்திரபிரபாவின் பிள்ளைகள். ஈழத்தில் பருத்தித்துறை ஆத்தியடியில் வாழ்ந்து வருகிறார்கள்.*

# *Dear Ammama...*

***Rishiyan Ravindrakumaran***

*As I remember your life, I am struck by the incredible impact you had on so many people. Your spirit, courage, and kindness touched everyone who crossed your path, and your memory will continue to inspire us all.*

*Despite the many hardships you faced in your life - including the loss of your husband, three sons, and grandson - you always remained positive and full of hope. Your unwavering faith in God and your unbreakable spirit sustained you during times of adversity, and you taught us all the importance of perseverance and resilience.*

*Your sons were brave soldiers, fighting for our nation, and you raised them to be men of great honor and respect. Your contribution to our community extends far beyond your immediate family, and your support and service to our people during the war are a testament to your dedication to our nation.*

*You were always a source of comfort, strength, and light for anyone who needed it. You welcomed anyone into your home as part of your family, treating them with the same care and love as you did to every member of our immediate family.*

*Your love for your family was immense and never-ending. You took care of us with unwavering love and affection, and your wisdom and guidance have helped to shape us into the people we are today.*

*You had an unquenchable thirst for knowledge and so much love for your motherland. Your stories about your life during the war helped me, as someone who was not born in the country, to better understand the struggles and sacrifices made by my ancestors for the nation we call our own.*

*Your kindness, generosity, and love knew no bounds. You touched the lives of countless people in the community, offering kind words and acts of service to anyone who needed it. Your influence on our lives cannot be measured.*

*Rest in peace, dear Ammama. Your life was a true gift, and we are all blessed to have known and loved you. You will always be remembered as a beacon of hope, strength, and light, and your spirit will continue to guide us all in the years to come.*

*With deep gratitude and endless love*

*ரிஷியன் (1994) சிவகாமசுந்தரி அவர்களின் பேரன்.*
*சிவகாமசுந்தரி அவர்களின் இளையபுதல்வி*
*சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி) அவர்களின் புதல்வன்.*
*இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# *Ammama I miss you so much…*

***தர்ஷியா***

*Ammama, you have left us with so many memories, so many stories and so much love. I will never forget the times you cut up fruits for me as a child and fed me with your hands,  I will never forget the times we sat together and shared stories about my friends, I will never forget the times you video called me and would hold the camera upside down, I will never forget our walks around Germany, the times I slept on your lap, the times you would tell me stories about Amma, the times you would hold onto my arms and rest your head on me.. these are only a few of the best times I have had with you. My heart is bleeding and I miss you so much.*

*You are a fighter, a strong woman, a hero. You have taught us all to face death with strength. You have taught us all to be warriors, not worriers. We will promise to carry this through and make you proud. Please continue to bless us from above and show us the love that you always carry with you.*

*I wish I saw you one last time. I miss you so dearly and I wish for you to rest in peace.*

உங்கட நினைவுகள் என்றுமே
என்னை விட்டுப் போகாது அம்மம்மா.

*தர்ஷியா (1995), சிவகாமசுந்தரி அவர்களின் பேத்தி. சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி) அவர்களின் புதல்வி. இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# அன்புள்ள அம்மம்மா...

**ராம்கிஷ்**

*I hope you are resting in peace right now.*

*Thank you for your kindness that you have shown me when I came to see you for the first time. Getting your blessing has meant a lot to me.*

*I know we haven't met many times but your memories are very close to my heart. I never had a relationship with my grandparents and I was looking forward to meeting you more often and getting to know the wonderful woman that you are. I admired the simplicity in you and your approach towards problems. I admired how you smiled through each and every battle you faced.*

*With deep regrets, I know I would not get the opportunity to meet you again but, I will forever hold your smile and voice in my heart.*

*May your wonderful soul rest now and watch over us as we live our lives and make you proud.*

*அன்புடன்*
*ராம்*

*ராம்கிஷ் (1991), சிவகாமசுந்தரி அவர்களின் பேத்தி தர்ஷியாவின் துணைவர். இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# அன்பின் சிகரம்
# எங்கள் மூத்தக்கா...

**செல்வி. வடிவழகாம்பிகை ஆறுமுகம்**
*இளைப்பாறிய ஆசிரியை*
*ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை, இலங்கை*

***மூ****த்தக்கா பிறந்தது 1934ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 23ம் நாள். அப்போது ஆத்தியடி என்ற ஊர், புலோலி மேற்கு என்ற கிராமசபைப் பிரிவிற்குள் அமைந்திருந்தது. ஆத்தியடியில் திரு.குமாரசாமி ஆறுமுகம் மற்றும் விசாலாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வியாகப் பிறந்தவர் தான் எங்கள் மூத்தக்கா.*

*எங்கள் தாய்வழிப் பேத்தி சேதுப்பிள்ளை, மற்றும் திரு.குமாரசாமி, திரு.சபாபதிப்பிள்ளை என இம் மூவரும் முருகப்பர் பொன்னம்மா தம்பதிகளின் பிள்ளைகள் ஆவர். இவர்களில் திரு.குமாரசாமி அவர் களின் மூத்தமகனான திரு.ஆறுமுகம் அவர்களின் மூத்தபுதல்வியே சிவகாமசுந்தரி அவர்கள். குடும்பங்க ளில் மூத்தவர்களின், மூத்த வாரிசாக வந்த அவரை, நாங்கள் "மூத்தக்கா" என்று அழைப்போம்.*

*வேரோடி விளாத்தி பல கிளை விட்டாலும் தாய்வழியே உற்றதுணை என்பர். அதுவே மனோ தைரியத்தை வளர்ப்பதுமாகும். உறவினர்கள், அயல் வீட்டுக்காரர், ஊரவர்கள் என்று பலர் மீது நாங்கள் அன்பு செலுத்துவோம். அவர்களில் தாய்வழியினருட னான பிணைப்பு அதிக கெட்டியானது. அது எங் களை சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழப்பழக்குவது!*

*வாழ்க்கை என்பது சோதனை மிக்கது! அது பாடசாலைப் பரீட்சைகள் போல சந்தோசத்தையும்*

துக்கத்தையும் மாற்றி மாற்றித் தருவது. ஆனால் சந்தோசமும் துக்கமும் நிலையானவை அல்ல. நல்ல நிகழ்வுகளை சந்தோசம் என்றும் விரும்பாத விளைவு களை துக்கம் என்றும் கூறுவோம். காலச்சக்கரத்தில் வாழ்வு உருண்டோடுகிறது. கல்லிலும், முள்ளிலும், மணலிலும் வண்டி ஓடுவது சிக்கலானது. ஆனால் சீரமைக்கப்பட்ட பாதைகளில் அது ஒழுங்காக ஓடு கிறது. வாழ்க்கையும் அது போலத்தான்!

முத்தக்காவின் இளைய சகோதரிகள் திருமதி. உமையாம்பிகை மற்றும் ஞானாம்பிகை. இளைய சகோதரர்கள் திரு.குமாரசாமி, திரு.வேல்முருகு ஆகி யோர். இவர்களில் அவரின் இளைய சகோதரியான ஞானம் மிகச் சிறுவயதில், ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே காலமாகி விட்டார். சிறுபிள்ளைகளாக, ஒன்றாக ஓடி விளை யாடும் பருவத்தில் நாய் கடித்ததைத் தொடர்ந்து 'ஈர்ப்பு வலி' எனும் நோய் தாக்கியதால் அவர் மரணித்தார். அது முத்தக்காவின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட முதல் இழப்பு என்று சொல்லலாம். அது பெற்றவர்களுக்கும் சகோதரர்களுக்கும் ஈடு செய்ய முடியாத கவலையாயிற்று! காலம் பதில் சொல்லும் என்பர். சந்தோசமோ, துக்கமோ காலத்துடன் கரைந்து கொள்வது போல யாவும் படிப் படியே குறைந்து செல்வதும் இயற்கை.

சில ஆண்டுகள் இப்படியே கழிந்து போயின. அதன் பின்னர் முத்தக்காவுக்கு திருமண அடுக்குகள் மெல்ல மெல்ல ஆரம்பமாயின. அவவுக்கு சீதனம் கொடுப்பதற்கான இல்லமும் பெற்றோரால் கட்டி முடிக்கப் பட்டது. ஒரு மாலைநேரம் அந்த இல்லத் திற்கான புதுமனை புகுவிழா அதிக ஆடம்பரமின்றி நடாத்தப் பட்டது. தெருவிளக்குகளோ, வீட்டு மின் விளக்குகளோ இல்லாத அந்தக்காலத்தில் பெற்றோல் மாக்ஸ், தீப்பந்தங்கள் பயன்படுத்தப் பட்டு வீட்டில் விசேட வைபவங்களை நடாத்துவது பொதுவான நடைமுறையாக இருந்தது. தற்காலத்தில் தெரு விளக்குகள், வீட்டு மின்விளக்குகள் என பல

ஒளிவிளக்குகள் மிளிர்ந்தாலும் திருடர்பயம், நாட்டின் அமைதியின்மை எனப்பல காரணங்களால் பகலில் சுபநேரங்களை தெரிவு செய்து கொண்டாட்டங் களை நடாத்துவது வழமையாகி விட்டது. அக் காலத்தில் இரவில் நடைபெறும் கொண்டாட்டங் களில் சிறுவர்கள் பங்குபற்றுவதை அநேகமாகத் தவிர்த்துக் கொள்வது வழமை. தூக்கம், படிப்பு, சுகாதாரம் போன்ற விடயங்கள் குழந்தைகளைப் பாதிக்கும் என்பது பெற்றோரின் கணிப்பீடு.

நான் சிறுமி என்பதால் அந்தப் புதுமனை புகுவிழாவிற்கு என்னைச் செல்லவிடாமல், வீட்டில் நிற்குமாறு என் பெற்றோரும் சகோதரர்களும் கட்டுப் படுத்தினார்கள். ஆனாலும் நான் தாயாருடன் போயிருந்தேன். நானோ படிப்பில் அதிக நாட்டம் இல்லாதவள். அப்போது வயதிலும் சிறியவள். பொழுது வளர வளர, என் கண்களும் வளரத் தொடங்கி விட்டன. என் தாயாருக்கு அது ஒரு சுமையாகப் போயிற்று. அந்த விழாவின் சபையில் என்னை ஒரு நித்திரை தூங்கியாக வளர்த்துவது சரியில்லை என்பதால் என்னை அழைத்துக்கொண்டு தாயார் புறப்பட்டு விட்டார். வெளியில் அந்நேரம் 'கும்'மென்ற இருட்டு. நடக்கும் பாதையில் "கறுப்பாக இருக்குமிடங்களில் கால்களை வைக்காதே.." என்ற அச்சுறுத்தலோடு தூக்கக் கலக்கத்துடன் தள்ளாடித் தள்ளாடி நான் நடந்துகொண்டிருந்தேன். இரண்டுங் கெட்டான் மனநிலையோடு என் பயணம் வீடு நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. இதனால் எனக்கு பாலுமில்லை, பொங்கலுமில்லை, ஒழுங்கான சந்தோ சமுமில்லை. அறியாமை மக்களை எப்படி ஆட்டிப் படைக்கிறது என்று இப்போது உணர்கிறோம்.

நான் சிறுவயதினருக்கான பாடசாலை வகுப் பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது மூத்தக்கா வுக்கு திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண் டிருந்தன. அந்தக் காலத்தில், சொந்த வீடுகளில் திருமண வைபவங்கள் நடந்தாலன்றி, வேறு வீடு களில், வேறுயாரினதும் திருமண வைபவங்களுக்குப்

போவதற்கு பாடசாலைகளில் அனுமதி கிடையாது. 1961ல் பாடசாலைகள் அரசபாடசாலைகளாகமாறிய பின்னர் காலப்போக்கில் இன்று சட்டங்கள் அதிக கடினம் இல்லை. எனினும் என் தாயாரின் இளகிய மனதை பயன்படுத்தி, அன்று மூத்தக்காவின் திருமண வைபவத்திற்கு செல்ல அனுமதி பெற்றிருந்தேன்.

என் தந்தையார் படிப்பில் மட்டுமல்ல, பழக்க வழக்கங்களிலும் மிகவும் கண்டிப்பானவர். நான் ஆறாம்வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது என் தந்தையார் இறந்து விட்டார். படிப்பில் அக்கறை யில்லாமல், சக்கட்டையாக இருந்த எனக்கு கொண் டாட்டமான நிகழ்வுகளில் கலந்துகொள்வதென்பது மிகுந்த மகிழ்ச்சியை தரும் விடயமாகவே இருந்தது. எனினும் உண்மையான மகிழ்ச்சியை நான் புரிந்து கொண்டதில்லையென்று இப்போதுயோசிப்பதுண்டு.

அன்று மூத்தக்கா ஒரு மணப்பெண்ணாக, அக்கால மரபின் படி மிகப்பெரிய முகப்பூச்சுகள் பூசியவராகவோ, நகைகளை அள்ளியடுக்கி அணிந்து கொண்டவராகவோ இல்லாமல் ஓரளவு எளிமை யான அலங்காரங்களுடன் மணவறையில் அமைதி யாக அமர்ந்திருந்தார். அவரருகில் நான் அமர்ந்திருந் தேன். எனது தாயார், உறவினர்களது வீட்டுச் சடங்குகளில் எவ்வாறு பங்குகொள்ள வேண்டு மென்பதை உணர்ந்து, அடுக்களையின் அருகே செயற்பட்டுக் கொண்டிருந்தார். அக்காலத்தில் நடை பெறும் கொண்டாட்டங்களில் சமையல் யாவும் அந்தந்த வீடுகளிலேயே சமைத்து, விருந்தினர்களுக் குக் கொடுப்பார்கள். நானும் அங்கே எனக்கென்று ஒரு வேலையை தேடிக்கொண்டேன். மூத்தக்காவின் அருகில் அமர்ந்திருந்தபடி எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது வரும் போது "அங்கே அவர் வருகிறார்.. இவர் வருகிறார்.." என்று சுட்டிக்காட்டிக் கூறிய படியிருந்தேன். மணப்பெண்ணாக அமர்ந்திருக்கும் மூத்தக்காவுக்கு அமைதி தேவைப்பட்டது என்று நினைக்கிறேன். இயல்பிலேயே அமைதியானசுபாவம் கொண்ட அவருக்கு அன்றைய திருமணநாளில்

ஓடியாடித்திரியும் எண்ணம் இருக்காது தானே. மூத்தக்காவின் அமைதியை நான் குழப்பி விட்டேனென்று நினைக்கிறேன்.

"சும்மாயிரு வடிவம்.." என்று மெதுவாக என்னைக் கடிந்தார். நான் நடந்துகொள்ளும் விதம் அவருக்குப் பிடிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். எனது சிறுபிள்ளைத்தனத்தையும் தவறென்று உணர்ந்து கொண்டேன். அதன் பின்னர் பேசாமலிருக்கவும் கற்றுக் கொண்டேன். அது மட்டுமல்ல, பாடசாலை நாட்களில் மதியஉணவு இடைவேளை ஒருமணி நேரம் விடப்படுவது வழமை. எங்கள் உறவினரான திருமதி.சிவக்கொழுந்து கந்தையா ஆசிரியை அந்த நேரம் தான், திருமணவீட்டு நிகழ்வுக்கு அங்கே வந்திருந்தார். அவரின் இல்லமும் பாடசாலையும் திருமணம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூத்தக்காவின் வீடும் அதிக தூரத்திலில்லை. யாவும் அருகருகே தான் இருந்தன. பாடசாலையின் அந்தக் குறுகிய நேர மதிய இடைவேளையின் போது ஆசிரியர்கள், மாணவர்கள் என விரும்பியோர் தத்தம் வீடுகளுக்குச் சென்று உணவருந்திவிட்டு மீண்டும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பாடசாலைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்பது பாடசாலையின் நடைமுறை விதி. எனவே திருமண நிகழ்வில் என்னைக் கண்ட அந்த ஆசிரியை "ஏன் பாடசாலைக்கு வரவில்லை?" என்று ஒருவிதமான கண்டிப்போடு என்னைப் பார்த்துக் கேட்டார். இதற்கு என்னால் பதில் சொல்ல முடியாதுதானே! நான் எதுவும் சொல்லாமல் மண்டிக்கொண்டு இருந்தேன்.

திருமணத்தின் பின்னர், மூத்தக்கா தன் கணவருடன், அவர் வேலைபார்க்கும் பிற ஊர்களிலும், பின்னர் பிள்ளைப்பேற்றுக் காலங்களில் சொந்த ஊரிலும் தங்குவதென தன்னுடைய குடும்பப் பொறுப்புகளை கவனிக்கத் தொடங்கி விட்டார். கருமமே கண்ணாகவும், கடமை உணர்வும் கொண்ட மூத்தக்கா அதிகம் பேசுவதோ, அதட்டிப் பேசுவதோ கிடையாது. எப்பொழுதும் மெதுவாகப் பேசுவார்.

*கதைத்துச் சிரித்து, பொழுதுகளை வீணடிக்காமல் நேரச்சிக்கனத்தைப் பேணுபவர். ஆடம்பரம் ஏதும் இல்லாதவர். தன் குடும்பத்தின் பழைய உறுப்பினர் கள், புதிதாகப் பிறந்த புதிய உறுப்பினர்கள் என எல்லோருக்கும் தேவையான கடமைகளைச் செய்து, குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்தி, குடும்பங்களைப் பேணி நடந்துகொள்பவர்.*

*1983ம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்றுக் கொண்டிருந்த பயங்கரமான போர்ச்சூழ்நிலையில் மூத்தக்காவின் கணவர் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் புகையிரதநிலைய அதிபராகக் கடமை யாற்றிக் கொண்டிருந்தார். அச்சமயம் மூத்தக்காவும் பிள்ளைகளும் அங்கு சென்று, அவரது அரச இல்லத்தில்(குவார்ட்டர்ஸ்) தங்கி வாழத் தொடங்கி விட்டார்கள். மூத்தக்காவின் தாயார் விசாலாட்சி அம்மா அவர்கள் இறந்த பின்னர், மூத்தக்காவின் தந்தையான ஆறுமுகம் - மூத்தகுஞ்சி, வெறுமையாக இருந்த தனது இளையமகளின் வீட்டில் போய் குடியிருந்தார். அவருக்கு உதவியாக உறவினர்கள் சிலரை ஒழுங்குசெய்து, ஆத்தியடியில் இருக்கும் தன் தந்தையை மூத்தக்கா பராமரித்துக் கொண்டிருந்தார்.*

*பிறகும் எதிர்பாராத சோகங்கள் வந்து மூத்தக்காவின் குடும்பத்தினரை உலுக்கியது! அது வரை வடபகுதியில் குவிந்திருந்த இலங்கை இராணு வம் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு, இந்திய இராணுவம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வந்து குவிந்தது. அவர்களது கண்காணிப்பில் யாழ் குடா நாட்டில் பலமக்கள் காரணமின்றியும் போராளிகள் தேடுதல் என்ற பெயரிலும் கொல்லப்பட்டுக் கொண் டிருந்தனர். அதனால் நாங்கள் வாழ்ந்து கொண்டி ருந்த யாழ்.மாவட்டமெங்கும் மக்கள் அமைதியையும் நிம்மதியையும் இழந்திருந்தார்கள். அல்லும் பகலும் பலரை நாம் இழக்க நேரிட்டது. உலகெங்கும் இப்படி யான நிகழ்வுகள் நடந்து கொண்டுதானிருக்கிறது என்றாலும் அவ்வாறான அனுபவங்கள் எமக்கு நேரடியாக, கண்முன்னால் நடைபெறும் போது*

அதனை எம்மால் தாங்கிக்கொள்ள முடியாமலிருந் தது. பலரும் இந்தத் துயரத்தைத் தாங்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் தான் மூத்தக்கா தனது ஆறாவது பிள்ளையான பரதராஜன் (இயக்கப்பெயர் மொறிஸ்) என்ற மகனை இழக்கும் சம்பவம் நிகழ்ந்தது. பரதன் அப்போது விடுதலைப் போராளிகளின் பருத்தித்துறைப் பொறுப்பாளராக இயங்கிக் கொண்டிருந்தார்.

அந்தச் சம்பவம் நடந்த அன்றைக்கு எங்களது பகுதியில் பதற்றம் நிலவியிருந்தது. இராணுவத் தினருக்கும் போராளிகளுக்குமிடையே நடைபெறும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் வெடிக்கும் ஓசைகளும் மிக அருகாகக் கேட்டுக்கொண்டிருந்தன. அசாதாரண வெளிச்சங்கள் அருகில் தெரிந்தன. பருத்தித்துறை ஊர் மக்களிடையே ஒரே பதற்றம். எங்காவது ஓடவேண்டுமா? அல்லது ஒளிக்க வேண் டுமா? எங்கு ஓடுவது? அது இயலுமானதா? எதுவும் யாருக்கும் புரியவில்லை. ஏறத்தாள 40 நிமிடங்கள் தொடர்ந்து கேட்ட துப்பாக்கிச் சத்தங்கள் அதன் பின்னர் மெதுவாக ஓய்ந்தன. சத்தங்கள் யாவும் நின்று விட்ட பின்னர் மக்கள் மெதுமெதுவாக வெளியே வரத் தொடங்கினார்கள். என்ன நடந்த தென்று யாருக்கும் புரியவில்லை. நாங்கள் அண்மை யிலுள்ள கடைக்கு சாமான்கள் வாங்குவதற்காக அவசரமாகச் சென்றோம். அங்கே பலரும் சற்று முன்னர் நடந்த துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள் பற்றி பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சண்டையில் யாரோ இருவரது உடல்கள் இந்திய இராணுவச்சிப்பாய்களால் எடுத்துச் செல்லப் பட்ட தாகவும், அவற்றில் ஒன்று 'மொறிஸ்ஸினுடையது..' என்றும் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மொறிஸ் தான் மூத்தக்காவின் மகன் பரதன்.

அங்கு பயங்கரமான சூழல் நிலவியிருந்த போதும் கடமை முக்கியம் என்பதை நான் உணர்ந் தேன். அதனால் இந்த விடயத்தை மூத்தக்காவுக்கு உடனடியாக அறிவிக்க எண்ணி, அவர்களின் இன்னு

மொரு உறவினரான திருமதி சிவனேசம் முருகேசு அவர்களை (காலம் சென்ற விவாகப் பதிவாளர்) என்னுடன் துணைக்கு அழைத்துக் கொண்டு மூத்தக்காவின் யாழ்ப்பாண வதிவிடத்திற்குச் சென்றேன். குடும்பத்தாருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டியது முக்கியம். அவர்கள் மட்டுமே உடலை பொறுப்பெடுக்கவோ, பார்வையிடவோ முடியும். நான் அங்கு சென்று விபரங்களை சொன்ன மறுநிமிடமே அவர்கள் புறப்பட்டு என்னுடன் பருத்தித்துறைக்கு வந்தார்கள்.

பரதனின் உடலைப் பார்ப்பதற்கு அனுமதி பெறமுடியாத சூழ்நிலையில் நான் எனது வீட்டிற்குத் திரும்பி விட்டேன். அந்நேரம் எதையும் நேரில் சென்றுதான் அறியலாம். தொலைத்தொடர்பு வசதிகள் எதுவும் இல்லாத காலமது! எனவே அடுத்தநாள் காலை சற்றுத் தாமதமாகத்தான் எனக்கு செய்திகள் வந்து சேர்ந்தன. ஐயனார் கலட்டிச் சந்தியில் வைத்துத்தான் இறுதிக்கிரியைகளும் வணக்கநிகழ்வும் நடைபெறப்போகிறது என்று கேள்விப் பட்டேன். எனவே நானும் என் உறவினர்களும் ஐயனார் கலட்டிப் பகுதிக்குப் போனோம்.

ஆனால் அதற்குள் பரதனின் உடல் மூத்தக்காவின் ஆத்தியடி வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்றும் அங்கு ஆயிரக்கணக்கான மக்களின் அஞ்சலிகளுடன் மரியாதை செய்யப்பட்டது என்றும், இனிமேல்தான் அவரின் உடல் ஐயனார் கலட்டிச்சந்திக்கு வரப் போகிறது என்றும் அறிந்தேன். பரதனதும், அவனது தோழர்களினதும் மரணம் அந்த ஊரை மயான அமைதியாக்கிவிட்டடிருந்தது. எங்கும் கடையடைப்பு. கர்த்தால். கறுப்புக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன. அதேவேளை இராணுவம் ஊரைச் சுற்றிவளைத்து வைத்திருந்தது. எமக்கு அந்த நிகழ்வில் கலந்துகொள்ளாமல் நிம்மதியாக இருக்க முடியாது என்பதனால் நான் காத்திருந்தேன். அது தவிர்க்க முடியாத ஒரு துயரச்சம்பவம். வீரமரணமடைந்த உடல்களுக்கான இறுதிமரியாதை நிகழ்வு

நடந்து முடியும் வரை அங்கேயே நின்றிருந்தேன். என்னைப் போலவே ஏராளம் மக்கள் பயத்தையும் பொருட்படுத்தாமல் அங்கு வந்து குவிந்திருந்தனர்.

முத்தக்காவின் ஆத்தியடி வீட்டை நோக்கி இராணுவத்தினரால் ஷெல்கள் வீசப்பட்டன. நிலமை பயங்கரமாகவே இருந்தது. எல்லோருக்குள்ளும் பீதி இருந்தாலும் எவரும் இறுதிமரியாதை நடக்கும் இடத் தையோ அல்லது அந்தப் பூமேடையையோ விட்டு நகரவில்லை. அதற்குள் மேலும் வெடிச்சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. போராளிகள் இந்த மரணத் திற்குப் பதிலடியாக இராணுவத்திற்கெதிரான தாக்கு தல் நிகழ்த்தியிருப்பதாக கதைகள் அடிபட்டன.

நாம் அஞ்சலிநிகழ்வுகள் முடிவடைந்து, தகனக் கிரிகையும் முடிந்த பின்னர் புறப்படத் தயாரானோம். திடீரென்று இந்திய இராணுச்சிப்பாய்கள் அவ்விடத் தில் வந்து நிறைந்தனர். தகனக்கிரியைகள் முடித்து, நாம் ஐயனார்கலட்டி வீதி வழியாக நடந்து வந்து கொண்டிருந்தோம். முன்வரிசையில் நானும் மூத்தக் காவும் வந்துகொண்டிருந்தோம். எமக்குப் பின்னால் வேறு சிலர். அவர்களுக்குப் பின்னால் மேலும் வேறு சிலர் என நடந்து வந்து கொண்டிருந்தார்கள். பல மக்கள் தகனக்கிரியை முடிந்ததும் நேராக, வேறு வீதிகள் வழியாக தத்தமது வீடுகளுக்குப் புறப்பட்டு விட்டார்கள். ஆனால் நாங்கள் இந்தச் சந்தியைக் கடந்து தான் திரும்பி வரவேண்டும். இராணுவச் சிப்பாய்களில் ஒருவன் எங்களை நோக்கித் துப்பாக் கியை நீட்டிக் குறி பார்த்தான். பக்கத்தில் நின்றிருந்த சிப்பாய் அவனைத் தடுத்து, எம்மை ஓடும்படி கையால் சைகை காட்டினான். எல்லோரும் பயத்தில் பின்னால் சில அடிகள் வைத்தோம். பின்னர் ஒவ்வொருவரும் அருகே இருக்கும் வீடுகளிற்குள் அவசரமாக ஓடி நுழைந்துகொண்டோம். சிப்பாய்கள் அந்த வீடுகளிற்குள்ளும் நுழைவார்களென்ற பயப் பீதியுடன் மௌனமாக வாசலைப் பார்த்தபடி நின்றிருந்தோம். திடீரென்று வெளியில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள்கேட்டன. ஏதோ விபரீதம் நடந்து

*விட்டதென்று எனக்கு விளங்கியது. சில மணி நேரங்களின் பின்னர் அவை உண்மையென்ற செய்திகள் வந்தன.*

*ஆளரவம் வீதியில் கேட்கத்தொடங்கியதும் எட்டிப் பார்த்தோம். இராணுவம் அங்கிருந்து போய் விட்டது. பொதுமக்கள் மெதுவாக வீதியில் நட மாடத் தொடங்கியிருந்தார்கள். மூத்தக்கா அங்கிருக் கும் குடும்பநண்பர்களின் வீடொன்றுக்குள் போய் விட்டா. நான் எனது வீடு நோக்கிப் புறப்பட்டு விட்டேன். பயங்கரமானதும், துயரமானதுமான ஒரு சூழலிலிருந்து திரும்பிய மனக்களை என்னைவிட்டுப் போகாமலிருந்தது! எங்கள் உறவுகளுக்கு நாமென்ன தான் செய்யலாம்? முப்பது வருடங்களிற்கு மேலாக இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகளால் எமது மண்ணும், மக்களும் இழந்தவற்றை, துறந்த வற்றை, துடித்துக் கலங்கியதை என்னால் மறக்க முடியவில்லை.*

*இந்தச் சோகச் சம்பவங்கள் மூத்தக்காவின் குடும்பத்தினரை மனதளவில் மிகவும் பாதித்திருந்தது. ஆனாலும் அவவின் இரண்டாவது மகள் சந்திராவின் திருமணம் நிச்சயிக்கப்பட்டதை மாற்றமுடியாத சூழ் நிலை. மணமகன் வேறுநாட்டிலிருந்து விடுமுறையில் வந்துவிட்டார். நாட்டின் சூழலோ எப்பவும் எதுவும் நடக்கலாமென்ற நிலை. மணமகன் தனது விடுமுறை முடித்து, உடனே திரும்பிச் செல்ல வேண்டிய அவசியம் இருந்தது. காலத்தைப் பிற்போடமுடியாது. பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றுவது எக்காலத் திற்கும் பொருந்தாது. அதிலும் போர்க்காலம் அதற்கு ஒத்து வராதது. அமைதியாக, ஆழமாகச் சிந்திப்பதும் எதையும் தாங்கும் இதயம் கொண்டிருப்பதும் மூத்தக்காவின் இயல்பு! மணமகனின் வீட்டாருடன் கலந்து பேசி, அவர்களது ஊரான கோப்பாயில் ஒரு வீடெடுத்து நின்று, ஆடம்பரமேதுமின்றி அந்தத் திருமணம் நடைபெற்றது. அந்த வைபவத்திற்கு நானும் சென்று கலந்து கொண்டேன். என்னோடு வாழ்ந்து கொண்டிருந்த எனது சகோதரரின் சிறு*

பிள்ளைகளை, முதுமையும், கையில் இயலாமையும் கொண்டிருந்த என் தாயார் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டு, தன் உறவினருக்காக என்னை அந்தத் திருமணத்திற்குப் போய்வரும்படி அனுப்பி வைத்திருந்தார்.

மூன்று நாட்கள் நான் மூத்தக்காவுடன் உதவி யாக நின்றிருந்தேன். மூன்றாம் நாள், என்னை நம்பி, மூத்தக்கா தன் தந்தையை என்னுடன் பருத்தித்துறை ஆத்தியடிக்கு அனுப்பிவைத்தார். ஆத்தியடியில் தனது இளையமகளது வீட்டில் தான் அவர் தங்கியிருந்தார். உறவினர்களது கண்காணிப்பில் அவர் இருப்பதற் கான ஒழுங்குகளை மூத்தக்கா செய்திருந்தா. மூத்தக் காவின் தாயார் ஏற்கனவே மாங்குளத்தில் அவர் களின் இளையமகளோடு இருக்கும் போது காலமாகி விட்டதால், அவர் தனியாக வாழத் தொடங்கினார். வாழ்க்கை என்பது துக்கமும், பிரிவும் நிறைந்தது. இவையில்லாமல் வாழமுடியாது என்ற நிலையை எங்கும் காண்கிறோம்!

மூத்தக்கா யாழ்ப்பாணத்தில் தனது கணவரு டன் வசித்து வந்த போது இலங்கை ஜனாதிபதி பிறேமதாச இந்திய இராணுவத்தினரை திடீரென்று வெளியேற்றியதால் தொடர்ந்து வந்த நிலமையை ஓரளவு சமாளிக்கக்கூடியதாக இருந்தது. அதனால் ஊரில் குடியிருப்பது உறவினர்களின் அனுசரணை யோடு ஓரளவு இயலுமானதாகியிருந்தது. ஆனால் மூத்தக்கா தனது கணவரின் உறவினர்களில், முதிய வர்கள்,நோயாளிகள் என அனைவரையும் அணை த்து, பரிகாரவசதிகளுடன் அவர்களை கவனித்துப் பராமரித்துக் கொண்டிருந்தா. அப்படிப் பராமரித்துக் கொண்டிருந்த சமயத்தில் தான், கணவரின் சிறிய தாயான திருமதி.சிவகாமிப்பிள்ளை கனகசபை அவர் களும் ஆத்தியடியில் காலமானார். மூத்தக்காவின் தந்தையும் முதுமையிலும், நாட்டுச் சூழ்நிலைகளால் ஏற்பட்டிருந்த மனநிலையிலும் பலவீனப் பட்டு காலமாகி விட்டார். அந்நேரத்தில் தான் மூத்தக் காவின் மூத்தமகன் பிறேமராஜன்(ஆங்கில ஆசிரியர்)

இராணுவ ´ஷெல்‘ தாக்குதலில் தனது ஒரு காலை இழந்தார். அவரையும் மூத்தக்கா தான் தன்னோடு வைத்திருந்து பராமரித்து, குணப்படுத்தி இயல்பு

வாழ்க்கைக்கு மீண்டும் தயார்ப் படுத்தி விட்டார்.

இத்தனை இழப்புகளின் மத்தியிலும் மூத்தக்கா, தன்னிடம் ஆதரவு தேடிவந்த உறவினர்கள், நண்பர் கள், இளைஞர்கள்.. என எல்லோரையும் வரவேற்று, அரவணைத்து, அன்புடன் பாதுகாத்தார்.

மூத்தக்காவின் கணவரும் பின்னர் வவுனியா புதையிரதநிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் போது ஓய்வுபெறும் காலத்தை அடைந்து விட்டார். அதனால் ஓய்வுபெற்றுக் கொண்டு ஊருக்கு வந்து விட்டார். அவருடைய ஓய்வுக் கொடுப்பனவுகளை வவுனியா அலுவலகத்திலிருந்து பெற்று வந்தார். அச்சமயம் அவர்களின் மூன்றாவது மகள் பிரபாவுக்கு முதல் குழந்தை பிறந்திருந்தது. மூத்தக்கா அவர்க ளுடன் போய் நின்று குழந்தையைப் பராமரித்து, வீட்டையும் புனிதமாகப் பாதுகாத்து, தன் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தார். என்னதான் தன் துயரங்களையெல்லாம் மூடிவைத்துக் கொண்டு, கடமைகளை ஒவ்வொருவருக்கும் செய்து கொண் டிருந்தாலும், யேர்மனியிலும், லண்டனிலும் வாழ்ந்து கொண்டிருந்த அவவின் மற்றைய பிள்ளைகளையும் போய் சந்தித்து ஆறுதலடைய வேண்டுமென்று மிகவும் பரிதவித்துக் கொண்டிருந்தா. அதற்கான ஆயத்தங்களையும் மூத்தக்காவும் கணவருமாகச் செய்யத் தொடங்கினார்கள்.

அச்சமயம் பிள்ளைகளின் இழப்புகளினால் ஏற்பட்டிருந்த துயரமனநிலையும் முதுமைநிலையும் சேர்ந்து மூத்தக்காவின் கணவரை, தடாலெனப் படுக்கையில் தள்ளிவிட்டது. சிறிது காலத்தில் (1997) அவரும் காலமாகி விட்டார். தொடர்ந்து வந்த இத்தனை பிரிவுகளும் மூத்தக்காவின் மனதை எவ்வளவு வாட்டிவதக்கியிருக்கும்!

*இனிமேல் தாயார் தனியாக இருந்து தவிக்கக் கூடாது என்ற முடிவில், அவவின் பிள்ளைகள் மூத்தக்காவை விரைவாக யேர்மனிக்கு அழைத்துக் கொண்டார்கள்.*

*மூத்தக்கா யேர்மனிக்குச் சென்ற பின்னரும் இழப்புகள் அவவை விட்டுவைக்கவில்லை. ஊரில் வற்றாப்பளையில், ஒரு காலை இழந்து, தன் குடும்பத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த அவவின் மூத்தமகன் பிறேமராஜன் 2000ம் ஆண்டு ஊரில் காலமாகி விட்டார். யேர்மனியிலிருந்து கொண்டு மூத்தக்கா எவ்வளவு மனம் துடித்திருப்பாரென்று என்னால் உணரமுடிகிறது.*

*அதன் பின்னர் யேர்மனியிலிருக்கும் பிள்ளை களுடனும் இலண்டனிலிருக்கும் மகளுடனும் தன் கடைசிக்காலங்களைக்கழித்தார். வயோதிபகாலத்தில் மிகவும் தேவைப்படுவது மனஆறுதல் தான். அதனைத் தானே எல்லோரும் தேடுகிறோம்.*

*அங்கிருந்து கொண்டும் உறவுகளைத் தேடித் தொடர்பு கொண்டு அன்பாகப் பேசிப்பழகுவதை மூத்தக்கா நிறுத்தியதேயில்லை. எப்பொழுதும் ஒரு நெருங்கிய உறவாக என்னுடன் பேசிப் பழகிக் கொண்டேயிருந்தார். அது இனிமேல் கிடைக்காது. மூத்தக்காவின் பிரிவுதரும்துயரம் இலகுவில்ஆறாதது!*

*அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்!*

*செல்வி. வடிவழகாம்பிகை ஆறுமுகம் (1946), "வடிவம்" என்று சிவகாமசுந்தரி அவர்கள் அன்பாக அழைக்கும், சிவகாமசுந்தரி அவர்களின் ஒன்றுவிட்ட தங்கை. ஈழத்தில் பருத்தித்துறையில் வாழ்ந்து வருகிறார்.*

# எனது அன்பு மைத்துனி சிவகாமசுந்தரி

சகுந்தலா வேல்முருகு

*எனது அன்பு மைத்துனி சிவகாமசுந்தரி என்றும் எனது மனதில் நிறைந்தவர்.*

*மைத்துனி அவர்கள் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர்.*

*வாழ்வில் ஏற்பட்ட பல துன்பங்களையும் தைரியமாக எதிர்கொண்டு அமைதியாக வாழ்ந்தவர். மற்றவர் மனம் நோகும் படியாக அவர் எதையும் பேசி நான் கண்டதில்லை.*

*அவர் எனக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தவர். ஒரு பெண்மணி, அதையும் தாண்டி ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அவர் வாழ்ந்தார். எவ்வாறு இவர் மனம் தளராமல் எல்லாவற்றையும் தாங்கி வாழ்கின்றார் என்று நான் வியந்ததுண்டு.*

*தம்பி மனைவி பிள்ளைகள் என்று நம்மோடு மிகவும் அன்பாகவும் எம்மிலே மிகவும் அக்கறையாகவும் இருந்தவர். அவரை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.*

*அவரைப் பற்றி நிறைய விடயங்கள் எழுதலாம். ஆனால் அவ்வளவையும் எழுதுவதற்கு எனக்கு திறமை இல்லை. எனது மைத்துனியின் குடும்பம் முழுவதுமே எழுத்தாளர்கள், மைத்துனி உட்பட.*

*அந்த மகராசியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆத்தியடிப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டு எனது இந்தச் சிறு மடலை முடிக்கிறேன்.*

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!*

-மைத்துனி சகுந்தலா வேல்முருகு

*திருமதி சகுந்தலா வேல்முருகு அவர்கள் (1948),*
*சிவகாமசுந்தரி அவர்களின் மைத்துனி.*
*சிவகாமசுந்தரி அவர்களின் இரண்டாவது தம்பி அமரர் திரு. வேல்முருகு(நில அளவையாளர்) அவர்களது மனைவி. மாலதி, மாதவன், முகுந்தன்(மாவீரன் மேஜர் நம்பி/லூதன்), வாசுகி ஆகியோரின் தாயார். கனடாவில் வாழ்ந்து வருகிறார்.*

# எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் மூத்தமாமி

**வளர்மதி ஜெகன்**

*மூத்தமாமி எனது அப்பா குமாரசாமியின் பாசமான அக்கா. காலஞ்சென்ற எனது அம்மா யோகேஸ்வரியின் காலஞ்சென்ற அண்ணனின் அன்பான இல்லத்தரசி.*

*எனது சிறுபிராயத்திலிருந்தே எனக்கு மூத்த மாமியுடன் நெருங்கிய உறவு உள்ளது. நான் பள்ளி செல்லும் வயதில் அப்பா வெளியூர்களில் வேலை செய்து வந்ததால் படிப்பதற்காக என்னை மூத்தமாமி வீட்டில் சிலகாலம் விட்டிருந்தார். இந்தக் காலத்தில் மூத்தமாமி என்னை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டா. தன் பிள்ளை போலவே உணவுகள் தந்து, எனது வயது வதனாமச்சாளுக்குத் தைக்கும் சட்டைகள் போலவே எனக்கும் தைத்துப் போட்டு அழகு பண்ணிப் பார்த்தா. நானும் மச்சாளும் ஒரு மாத இடைவெளியில் பிறந்திருந்தோம். அணியும் உடைகள் ஒரே மாதிரியும் இருப்பதைப் பார்த்து எம்மை இரட்டைப் பிள்ளைகளா என்று கேட்டனர். மாமியின் அரவணைப்பில் ஒரு குறையும் இல்லாமல் மச்சாள், அத்தான், மாமியின் மற்றைய குழந்தைகளு டன் வாழ்ந்த அந்தச் சிறுபிராயம் நெஞ்சில் இன்னும் பசுமையாக இருக்கின்றது.*

*மூத்தமாமி எம்முடன் மட்டுமல்ல எல்லாப் பிள்ளைகளிடமும் எல்லோரிடமும் அன்பாகவும் பாச மாகவும் பழகுவா. மூத்தமாமிக்கு கோபம் வந்து நான் பார்த்ததேயில்லை.*

*மூத்தமாமி எனது அம்மா, எனது தம்பிமார், எனது தங்கை எல்லோரையும் அரவணைத்து எப்போதும் பாசமாக இருந்தா. தம்பிமார் பள்ளி சென்று வரும் வழியில் அல்லது விளையாட்டு முடிந்து வரும் வழியில் மாமி வீட்டிற்கு போய் வருவது வழக்கம். அப்போதெல்லாம் வயிறார சுவையான உணவை உண்ணப் பண்ணி அனுப்புவா.*

*எங்கள் அம்மாவின் உடல் நிலை பாதிக்கப் பட்டு அம்மா மிகவும் சுகவீனமுற்று இருந்த காலத்தில் மூத்தமாமி எனக்கு எப்போதும் மனதிற்கு தைரியம் அளித்து ஆதரவு அளித்தா.*

*மூத்தமாமி எப்போதும் மற்றவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் தன்னுடைய வேலைகளைத் தானே செய்வதையே விரும்புவா. யேர்மனிக்குப் போவதற்காக என்று கொழும்புக்கு வந்து எங்கள் வீட்டில் சிலகாலம் தங்கியிருந்த போது தானே எல்லா வேலைகளையும் செய்வா. அம்மாவையோ எங்களையோ கஷ்டப்படுத்த கூடாது என்பதில் குறியாக இருப்பா.*

*எனது அப்பா, ஜெகனை எனக்கு கணவராக தேர்ந்தெடுத்து நிட்சயம் செய்த போது மூத்தமாமி அப்பாவிற்கு உறுதுணையாக இருந்து எனது திருமண வாழ்க்கைக்கு அடி அமைத்துக் கொடுத்தா.*

*மூத்தமாமி, மூத்தமாமாவை இழந்த பின் ஜேர்மனிக்கு குடியேறினா. தொடர்ந்தும் எம்முடன் தொடர்பில் இருந்தா.அப்பாவுக்கும் எமக்கும் தேவைப் படும் நேரத்தில் எல்லாம் நல்ல ஆலோசனைகள் தருவா. எங்கள் மனவருத்தம் எல்லாம் மூத்தமாமியின் ஆறுதலான வார்த்தைகளில் பறந்து விடும்.*

*2014இல் நானும் எனது கணவர் ஜெகனும் யேர்மனிக்கு மூத்தமாமியிடம் சென்றோம். அப்போது மூத்தமாமியை நேரில் பார்த்து, சில நாட்கள் கூடவே*

அவவுடன் தங்கியிருந்து பலவற்றையும் பேசி, ஒன்றாக உண்டு களிக்க வாய்ப்புக் கிடைத்தது. அந்த இனிமையான நாட்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும்.

மூத்தமாமி கருணை அன்பு பாசம் மட்டுமல்ல கூடவே மிகவும் மனஉறுதியும் மனதிடமும் கொண்டவ மாவீரர்களின் தாயானதால் இலங்கை இராணுவமும் இந்திய இராணுவமும் மூத்தமாமி குடும்பத்துக்கு பலவிதமான நெருக்கடிகளைக் கொடுத்தார்கள். அந்தக் காலங்களில் மூத்தமாமி சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தா. அவவின் மனபலம் அவ வுக்கு அந்நெருக்கடிகளை எதிர்நோக்கும் சக்தியைக் கொடுத்திருந்தது. அந் நெருக்கடிகளில் இருந்து குடுமபத்தைக் காப்பாற்றி பருத்தித்துறையில் இருந்து யாழ்பாணத்திற்கு குடும்பத்தைக் கொண்டு சென்று வெளிநாடுகளுக்கு பிள்ளைகள் செல்வதற்கு உரிய ஒழுங்குகளை செய்து மிகவும் திறமையாகச் செயற் பட்டா.

வடமராட்சி இராணுவநடவடிக்கையின் பின் யாழ்ப்பாணத்தில் மூத்தமாமி அவர்கள் இரயில்வே குவார்ட்டர்ஸில் வசித்தபோது என்னுடைய அம்மா, தங்கை, தம்பி எல்லோரும் அங்கு மூத்தமாமியுடன் தங்கியிருந்தே கொழும்புக்கு இடம் பெயர்ந்தனர்.

மூத்தமாமி எங்கள் கண்களில் இருந்து மறைந் தாலும் எங்கள் நினைவிலும் இதயத்திலும் இருந்து என்றும் மறையப் போவதில்லை.

எல்லையில்லா அன்பைப் பொழிந்து எம்மை அரவணைத்து வழி நடத்திய மூத்தமாமியின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனுடன் ஐக்கியம் அடைய பிரார்த்திக்கிறேன்.

*வளர்மதி ஜெகன் (1959), சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த தம்பி ஆறுமுகம் குமாரசாமி அவர்களின் மூத்த புதல்வி. மணிமாறன், விசாகுலன், மணிபாரதி(அமரர்), அருள்மதி, இளமாறன் ஆகியோரின் சகோதரி. அவுஸ்திரேலியாவில் பிறிஸ்பேர்ண் நகரில் வாழ்ந்துவருகிறார்.*

# நானறிந்த பருவம் முதல்.. எங்கள் அன்புப் பெரியம்மா!

**ரோகினி பவானிசங்கர்**

*முதியோர் சிறியோர் என்றேதுமின்றியவர் இயலாநிலை கண்டு தன் உழைப்பை பகிர்ந்தளிக்கும் சீமாட்டி! விருந்தோம்பல் அவவின் சீரியகலைகளில் ஒன்று!*

*சுவையாக ஆக்குவதும் பாசமாகப் பரிமாறு வதும் அழகுக்கு மேல் அழகு! இசைவாக இதமாகப் பேசி ஆறுதல் கூறுவதும் இணைவாக இறுக்கமாக இடத்திற்கேற்ப நடப்பதுவும் இயல்பாக ஊறிவரும் அவர் மனதின் உணர்வோசை!*

*ஒரு செயலை செய்து முடிப்பதில் அவவிற் கிருக்கும் மனஉறுதி, தன் மக்களை மற்றும் பிள்ளை களைக் கட்டிக் காக்கும் திறன், அறநூல்களை ஆராய்ந்து பெற்ற தெளிந்த அறிவு, ஊக்கம், செயலாற்றும் திறன், விடாமுயற்சி இவையனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவர் அவர் என்பதை பெருமையுடன் நினைத்துப் பார்க்கிறேன்!*

*நவரசபாவங்களையும் தன்னுள் இருத்தி இடத் திற்கும் இதயத்திற்கும் ஏற்ப ஒளிவீசும் ஒளிச்சுடர்!*

*படரும் கொடிகளுக்கு விரித்த மாடம் போல் தமிழுக்கும் தனயர்க்கும் தன்னைக் கொடுத்த அரண் அவ என்று சொல்லலாம். தாய்மண்ணை விட்டு புலம் பெயர்ந்து வந்தாலும், தமிழுக்குப் பெருமை*

*சேர்க்க, சலிக்காமல் ஐரோப்பாவை வலம்வந்த அரிய தமிழன்னை!*

*எத்தகைய எதிரிகளையும் வார்த்தைகளேது மின்றி, தன் முகபாவங்களாலேயே துரத்தி, உயர் நிலை ஆற்றிய பெருமாட்டி!*

*தான் பெற்ற செல்வங்களுக்கு என்னென்ன வேண்டுமோவென உரசிப் பார்த்து, உரமூட்டிய விருட்சம்! கிளைகள் பல திரண்டு ஒன்றாகப் பலம் பெற உழைத்த உழைப்பாளி!*

*என்னோடு தங்கிநின்ற சில நாட்கள் ஒவ் வொன்றும் என் மறக்க முடியாத ஞாபகங்கள்!*

*என் பிள்ளைகளோ அப்போது சிறுபராயம். கதைகள் கூறுவதும் பாடம் சொல்லிக் கொடுப் பதும்... சந்தோசமாக இருக்கும். படங்கள் பார்ப்பதும் நாடகங்கள் பார்ப்பதும் சுவாரஸ்யமான விடயம். எல்லா வேலைகளும் நடப்பது போலவே அதுவும் வழமை போல் நடக்கும். எதையும் சோர்வென்று விட்டு வைப்பதில்லை. நான் வேலையால் வந்ததும் "சாப்பிடு மேனை" என்பா.*

*பிள்ளைகளும் அவவுமாய் சேர்ந்து அன்று முழுவதும் நடந்த புதினங்களை ஒன்றுவிடாமல் கூறு வதும், படமோ நாடகமோ அதுபற்றி விமர்சிப்பதுவும் அலாதியான ஒன்று. பிள்ளைகளோடு பிள்ளைக ளாய் நானும் சேர்ந்து அவைபற்றியெல்லாம் அலசு வதும் பேசுவதும் அவ்வளவு இனிமை!*

*அவையெல்லாம் இனியெனக்குத் திரும்பி வரா நாட்களென ஆகிப்போயினவே!*

*அவவின் புன்னகையோ அவ அணிந்த ஆரம் போல்! அதுவும் இனியென் கண்முன்னே வராது என்றாயிற்று!*

*எத்துனை இடர்வரினும் அத்தனையும் களைந் தெறிந்து அடுத்த கணமே இயல்பாய் நடந்து கொள் ளும் வல்லமை கொண்டவர்! உறவுகளை காத்திடும் உத்தமி அவர்! உடன்பிறப்புகளிடம் வற்றாத அன்பு! தங்கையிடத்தில் ஓர் தனி அரவணைப்பு!*

*அத்தனையும் தன்னோடு நிறைத்து வைத்திருக் கும் பொன்னகைச்சிற்பி எங்கள் அன்புப் பெரியம்மா!*

*"பெரியம்மா...பெரியம்மா..." என்று வாய் நிறைய நானழைக்க நீங்களிங்கு இன்றில்லை! இம் மண்ணுலகை விட்டு நீங்கள் விண்ணுலகு சென்றா லும் உங்கள் நினைவுகள் எம்மோடு எப்போதும் வாழ்ந்துகொண்டேயிருக்கும்!*

*அன்புப் பெறாமகள்*
*ரோகினி*

*ரோகினி பவானிசங்கர் (1963), சிவகாமசுந்தரி அவர்களின் உடன் பிறந்த தங்கை அமரர் திருமதி உமையாம்பிகை புவனேந்திரன் அவர்களின் மூத்த புதல்வி. யேர்மனியில் போட்ஸ்ஹைறம் நகரில் வாழ்ந்து வருகிறார். இவரும் இவரின் குடும்பத்தினர் அனைவரும் அம்மாவுடன் மிகவும் அன்பாகவும் அந்நியோன்யமாகவும் பழகி, உறவைப் பேணிவந்தவர்கள்.*

# முத்தமாமியின் நினைவுகள்

அருள்மதி ரஞ்சன்

*முத்தமாமி என்றாலே மென்மை தான் என் நினைவுக்கு வரும். அவர் குரலை உயர்த்தி அல்லது முரட்டுத்தனமாகப் பேசி, நான் பார்த்தது மிகவும் அரிது.*

*முத்தமாமி எங்கள் அப்பாவின் ஒரே அக்கா. எங்கள் அப்பாவிற்கு முத்தமாமி மீதும், முத்தமாமிக்கு எங்கள் அப்பாவின் மீதும் ஒரு தனிப்பாசம் எப் போதும் இருந்ததை நாங்கள் அறிவோம்.*

*எங்கள் அப்பா "அக்கா...அக்கா.." என்று முத்தமாமியை அன்பொழுக அழைப்பதும், முத்தமாமி அப்பாவை "தம்பி...தம்பி.." என்று அன்பொழுக அழைப்பதும் நான் பார்த்து ரசித்த விடயங்களில் ஒன்று. எங்கள் அப்பா பலமுறை பொறுப்பற்று நடந்ததுண்டு. எமது பார்வைக்குப் பிழையென்று தோன்றும் பலவிடயங்களைச் செய்ததுண்டு. அப் பொழுதெல்லாம் முத்தமாமி அவரை மென்மையாகக் கண்டித்துவிட்டு தொடர்ந்தும் அன்பாகப் பேசுவா. முத்தமாமியின் கணவர், எங்கள் அம்மாவின் ஒரே அண்ணா. இவர்களும் பாசத்தில் இளைத்தவர்கள் அல்ல.*

*ஆனால் அவர்களின் துர்ப்பாக்கியமோ அல் லது எங்களின் துர்ப்பாக்கியமோ தெரியவில்லை, ஒரு காலப்பகுதியில் இரண்டு குடும்பங்களிற்குமிடை யில் கருத்துவேறுபாடுகள் காரணமாக தொடர்பு*

*அற்றுப் போயிருந்தது. இந்த நிலமை நான் பிறந்த காலப்பகுதியிலிருந்து, பின்னர் எங்கள் குடும்பம் கொழும்பிற்குப் போய் எட்டு, ஒன்பது வருடங்கள் அங்கு வாழ்ந்து விட்டு, மீண்டும் 1977ம் ஆண்டுக் கலவரம் காரணமாக யாழ்ப்பாணம் வந்து மீண்டும் ஊரில் இருந்த சிலகாலம் வரை நீடித்தது.*

*விடுமுறை காலங்களில் நாங்கள் குடும்பமாக ஊர் வரும்போதெல்லாம் மூத்தமாமியின் பிள்ளைகள் எங்களோடு பழகிய போதும் மூத்தமாமியை மட்டும் என்னால் சந்திக்க முடிவதில்லை. பள்ளிவிடுமுறைக் காலங்களில் கொழும்பிலிருந்து ஊர் வரும் போது அப்பாச்சி-பாட்டா அவர்களது வீட்டில் மூத்தமாமி யின் பிள்ளைகளான மச்சாள்மாரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதுண்டு. ஆனால் மூத்தமாமியை ஒருபோதும் காண முடிவதில்லை. மூத்தமாமி எட்டுப் பிள்ளைகளின் தாயாக இருப்பதாலோ என்னவோ, வீட்டுவேலைகள் பொறுப்புகள் காரணமாக அவ வீட்டை விட்டு அதிகம் வெளியில் போவதில்லை. அதனால் நாங்கள் நிற்கும்பக்கம் அவவும் வரமாட்டா. நாங்களும் அவர்களின் வீட்டுக்குப் போகமாட்டோம்.*

*எனக்கு மூத்தமாமியை காணவேண்டுமென்று ஆர்வமாக இருக்கும். சிறுபிள்ளையாக இருக்கும் காலத்தில் அவர்களது வீட்டு வழியாகப் போகும் போதெல்லாம் அவர்களது வேலிக்குக் கீழே குனிந்து மூத்தமாமி நிற்கிறாவா என்று நான் பார்ப்பதுண்டு.*

*மூத்தமாமியின் மூத்தமகளான வதனா மச்சாள் திருமணம் செய்த பின்பு அவர்களது வீட்டின் ஒரு பகுதியில் புறம்பாகக் குடியிருந்தார்கள். அப்பொழுது தான் நான் முதன் முதலாக அப்பாவுடன் அந்த வீட்டிற்குள் பிரவேசித்ததாக ஞாபகம். நான் மச்சாள் வீட்டுப் பக்கமாகவிருந்து மூத்தமாமியுடன் கதைப் பேன். மூத்தமாமி அவ வீட்டில் செய்த சிற்றுண்டி வகைகளை எனக்குத் தருவா. மிகவும் அன்பாகக் கதைப்பா.*

*அதற்குப் பின்னர் தான் அடிக்கடி அவர்களது வீட்டுக்குப் போய் மூத்தமாமியுடன் பழகவும் அவவை நன்றாகப் புரிந்து கொள்ளவும் எனக்கு வாய்ப்புக்கிடைத்தது. மூத்தமாமி எப்போதும் பிள்ளைகளின் நலனைப்பற்றியே நினைப்பா பிள்ளைகளுக்கு நிறையச் சுதந்திரம் கொடுத்திருந்தா. யாரும் உதவி என்று கேட்டு வந்தால் எப்படியாவது அந்த உதவியைச் செய்துவிடுவா. பசியோடு யாரையும் வீட்டிலிருந்து அனுப்ப மாட்டா.*

*மூத்தமாமி ருசியாக உணவு சமைப்பதில் கெட்டிக்காரி. எங்கள் அப்பாவும் அது பற்றி எப்போதும் வீட்டில் எங்களுக்கும் அம்மாவுக்கும் சொல்லிக் கொண்டேயிருப்பார். இதனால் அம்மாவுக்கு அவ்வப்போது எரிச்சல் வந்து, சில சமயங்களில் வீட்டில் சிறுசிறு சண்டைகளும் வருவதுண்டு. ஆனால் அப்பா அவவின் சமையலைப் பற்றிச் சொல்வதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை நான் பின்னர் தான் அனுபவத்தில் கண்டு கொண்டேன்.*

*மூத்தமாமி எனக்குச் சுடச்சுட ருசியான தோசையும் சம்பலும் சாப்பிடத்தந்தது இன்று போல் என் ஞாபகத்திலிருக்கிறது. கத்தரிக்காய்க் குழம்பு எப்படிச் சமைப்பது என்பதை மூத்தமாமியிடம் தான் கற்றுக்கொள்ளவேண்டும். அது அத்தனை சுவையாக இருக்கும்.*

*மூத்தமாமி தன் இரண்டு மகன்களை ஈழப் போராட்டத்திற்கு மனமுவந்து கொடுத்த வீரத்தாய்! அதுமட்டுமன்றி பலவிதத்தில் தன் பங்களிப்பை அயராமல் அளித்து வந்தவர். போராட்டத்தில் ஒருவர் பின் ஒருவராய் இரண்டு மகன்களும் வீரமரணம் அடைந்த போதும் சரி, அவவின் மூத்த மகனான ராஜன் அத்தான் உயிர்நீத்த போதும் சரி, மனம் தளராமல் தன்குடும்பத்திற்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் துணிச்சலுடன் தன் தோள் கொடுத்து நின்றவர்.*

*நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் மூத்த மாமி யாரையும் மனம்நோகும் படி பேச மாட்டார். தன்னுடைய சோகங்களை தனக்குள் வைத்துக் கொண்டு எப்போதும் மற்றவர்களுக்கு ஆறுதலாக இருப்பார். அதனை நான் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன்.*

*மூத்தமாமியின் இழப்பு அவரின் குடும்பத்திற்கு மட்டுமல்ல, எங்கள் எல்லோருக்கும் தமிழ்ச் சமூகத் திற்கும் தமிழீழப் போராட்டத்திற்கும் பெரிய இழப் பாகும். அவ எங்கிருந்தாலும் இந்த உலகம் அவவின் புகழை என்றென்றும் மறக்காது!*

*அவரின் ஆன்ம அமைதிக்காகப் பிரார்த்திக்கும்*

*மருமகள் அருள்மதி*

*அருள்மதி ரஞ்சன் (1967), சிவகாமசுந்தரி அவர்களின் மருமகள். சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த தம்பி ஆறுமுகம் குமாரசாமி அவர்களின் இரண்டாவது புதல்வி. நோர்வேயில் வாழ்ந்து வருகிறார்.*

# ஆத்தியடி மாமி

**சுந்தரராஜா கேதீஸ்வரன்**

**நா**ங்கள் அவவை 'ஆத்தியடி மாமி' என்று தான் அழைப்போம். வடமராட்சி பருத்தித்துறையில், ஆத்தியடி என்ற ஊரில் தான் அவவின் வீடு இருக்கிறது. அங்கு தான் முதன் முதலில் ஆத்தியடி மாமியை நான் சிறுவனாகச் சந்தித்தேன்.

எங்கட அப்பம்மாவுக்கு ஆத்தியடி மாமியின் தகப்பனாரான ஆறுமுகம் பாட்டா, மற்றும் அவரின் தம்பி கிருஷ்ணபிள்ளைப் பாட்டா, மேலும் முத்துமாமி (ஞானாம்பிகை), மற்றும் அவவின்தம்பி சோமசுந்தரம் என இவர்கள் தான் மிக நெருங்கிய ஒன்றுவிட்ட உறவுகள். தம்பசிட்டி முருகப்பரின் பேரப்பிள்ளைகள் இவர்கள் என்றால் எல்லோருக்கும் அநேகமாகத் தெரியும். அது மட்டுமல்ல, இவர்கள் எல்லோரும் ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் நடந்து செல்லும் தூரத்தில் தான் வாழ்ந்து வந்தவர்கள். இவர்களுட னும் இவர்களது பிள்ளைகளோடும் எந்த வேறுபாடு மின்றி ஒரே குடும்பம் போலவே எங்கள் அப்பம்மா நெருங்கிப் பழகுவா.

தம்பசிட்டி முருகப்பருக்கு மூன்று பிள்ளைகள் என்று எனது அப்பம்மா சொல்லுவா. மூத்தமகள் சேதுப்பிள்ளை. அடுத்தது ஒரு மகன். அவர் குமாரசாமி. கடைசி மகன் சபாபதிப்பிள்ளை. அவரது மூத்தமகள் சேதுப்பிள்ளையின் மகள் தான் எங்கட அப்பம்மாவான பொன்னம்மா.அவவும் அவவின் தாய்

*தகப்பனும் தம்பசிட்டி 'மல்லிகைக் கலட்டி' வீட்டில் வளர்ந்து வந்தார்கள்.*

*தம்பசிட்டி முருகப்பரின் இரண்டாவது மகன் குமாரசாமியின் பிள்ளைகள் தான் ஆறுமுகம் பாட்டாவும் கிருஷ்ணபிள்ளைப்பாட்டாவும். அவர்கள் தம்பசிட்டி, அப்பாவளவிலிருந்து வளர்ந்து வந்தார் கள். அதனால் ஆறுமுகம் பாட்டாவுக்கு 'அப்பாவளவு ஆறுமுகம்' என்ற அடைமொழிப்பெயரும் வழக்கத்தில் இருந்தது எனக்குத் தெரியும். ஆறுமுகம் பாட்டாவுக்கு இன்னுமொரு தம்பி இருந்தாராம். அவர் இளைஞு னாக இருக்கும் போதே மோசம் போய்விட்டாராம். அவருக்கு ஒரு தங்கையும் இருந்தாவாம். அவவும் இளவயதில் மோசம் போய்விட்டாவாம். அப்பம்மா ஆத்தியடி மாமியின் குடும்பம் பற்றி இவ்வாறு நிறையக் கதைகள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறா.*

*தம்பசிட்டி முருகப்பரின் கடைசி மகனான சபாபதிப்பிள்ளைப் பாட்டாவின் பிள்ளைகள் முத்து மாமி மற்றும் சோமசுந்தரம். இவர்கள் தம்பசிட்டியில் 'கோட்டாவளவில்' வாழ்ந்து வந்தார்கள்.*

*எங்கட அப்பம்மாவுக்கு ஆத்தியடி மாமி (சிவகாமசுந்தரி), ஆறுமுகம் அத்தானின் மகள் என்ற வழியில் உறவு முறை. அதாவது அவவுக்குப் பெறா மகள் உறவு. ஆத்தியடி மாமி, ஆறுமுகம் பாட்டாவின் மூத்தமகள். அவவின் பெயர் சிவகாமசுந்தரி. எங்கட அப்பம்மா அவவை 'பிள்ளை' என்று தான் உரிமை யோடு அழைப்பா. எங்கள் அப்பம்மாவை ஆத்தியடி மாமி 'மல்லிகைக் கலட்டிச் சீனியம்மா' என்று அழைப்பா.*

*அவ ஆத்தியடிவீட்டில் வாழ்ந்து கொண்டிருந் ததால் நாங்கள் அவவை 'ஆத்தியடி மாமி' என்று அழைப்போம். ஆத்தியடி மாமியின் பிள்ளைகள் எங் கட அப்பம்மாவை 'மல்லிகைக்கலட்டிப்பாட்டி' என்று அழைப்பார்கள். எனது அப்பாவின்(சுந்தரராஜன்)*

சகோதரங்களான வடிவம்மாமியும் குமரன்சித்தப்பா வும் ஆத்தியடிமாமியின் தம்பி, குமாரசாமி பெரியப் பாவை 'மூத்தண்ணா' என்றும் ஆத்தியடி மாமியை 'மூத்தக்கா' என்றும்அவவின் தங்கை உமையாம்பிகை மாமியை 'இளையக்கா' என்றும் அவவின் தம்பி வேல்முருகுச் சித்தப்பாவை 'இளையண்ணா' என்றும் அழைப்பார்கள்.

ஒரு முறை வேல்முருகுச் சித்தப்பா எங்கள் மல்லிகைக்கலட்டி வீட்டுக்கு வந்திருந்த போது நாங் கள் படித்துக் கொண்டிருந்த மேசையைக் காட்டி, தாங்களும் இதே மேசையில் இருந்து எனது அப்பா, சகோதரங்களுடன் ஒன்றாகப் படித்தது பற்றிச் சொன்னது நல்ல ஞாபகமிருக்கிறது.

நானறிந்த வரை வதனா அக்கா(ஆத்தியடி மாமியின் மூத்தமகள்) யேர்மனிக்குப் போகும் வரை அந்த வீடு பலவற்றினால் நிறைந்து கிடந்தது. உட்பக்கத்து ஹோலில் திலீபனின் விளையாட்டுக் குதிரை, சைக்கிள், விளையாட்டுச்சாமான்கள், பிறகு திலீபனின் இளையசகோதரங்களின் தொட்டில் என பல சாமான்கள் அங்கே இருக்கும்.

அவர்கள் போன பின்னர் வீடு கொஞ்சம் அமைதியாக இருந்தது. அப்பம்மாவுடன் சேர்ந்து போகும் போது நாங்கள் நேராக உட்பக்கத்து ஹோலிற்குப் போவோம். அங்கே வெற்றிலைத்தட்டு மட்டும் இருக்கும். மாமி தேநீர் போட்டுக்கொண்டு வந்திருந்து கதைப்பா. அவர்களின் அப்பாச்சியும் பலசமயங்களில் அங்கு தான் நிற்பா.

உள் முற்றத்தில் வெள்ளை, பச்சை நிறம் கலந்த குரோட்டன் செடிகள் நீளத்திற்கு வளர்ந்து நிற்கும். அவற்றிற்கு இடையில் வெள்ளை பச்சை நிறம் கலந்த கள்ளிச்செடிகளும் வளர்ந்து நிற்கும். அப்படிக் கனகாலம் இருந்த படியால், அப்படித்தான் எனக்கு ஆத்தியடி மாமியின் வீடு ஞாபகத்தில் வரும்.

ஆத்தியடி மாமி தனது குடும்ப உறுப்பினர்களுடனும் உறவினர்களுடனும் சுற்றத்தாருடனும் மிகவும் அன்பாகப் பழகுவார். ஒருவரும் அவவுடன் பழகுவதற்குத் தயங்க மாட்டார்கள். விருப்பத்துடன் பழகுவார்கள். எப்பவும் மற்றவர்களுக்கு உதவி செய்வதும் அன்பு காட்டுவதும் அவவின் இயல்பு. அவ நிறையப் புத்தகங்கள் வாசிப்பதால் நல்ல அறிவுள்ளவராக இருந்தார். எவருடனும் எந்தத்துறை பற்றியும் கதைக்கும் வல்லமையுள்ளவர். அவவின் தமிழ்ப்பற்றையும் இலக்கிய அறிவையும் அவரது பிள்ளைகளிடத்திலும் பேரப்பிள்ளைகளிடத்திலும் கூடத் தொடர்ச்சியாகக் காணலாம்.

ஆத்தியடி என்ற ஊரும், தம்பசிட்டி என்ற ஊரும் அருகருகே இருக்கும் ஊர்கள். ஆத்தியடியை சின்னத்தம்பசிட்டி என்றும் அழைத்த காலம் இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இரண்டு ஊர்களும் புலோலி என்று அழைக்கப்படும் பெரிய ஊருக்குள் இருப்பவை. புலோலி என்றால் புலவர்களின் ஒலி எனப் பொருள்படும். புலவர்கள் அதிகமாக வாழும் ஊர் என்பதனால் தான் அதற்கு புலோலி என்ற பெயர் வந்ததாகச் சொல்லப் படுகிறது. இவற்றிற்கு ஏற்றாற் போல் ஆத்தியடி மாமியின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தமிழ்மொழியிலும் பிறமொழி களிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

ஆத்தியடி மாமியின் இரக்ககுணம் என்பது வீடு. உறவினர், சுற்றத்தார் மீது மட்டும் தானென்று இருக்கவில்லை. வேறு ஊர்களில் இருக்கும் கஷ்டப் பட்ட குடும்பத்தவர்களுக்குக் கூட உதவி செய்யும் மனப்பான்மை உள்ள பேருதவியாளர் அவர். வல்வெட்டித்துறைப் பகுதி எப்பொழுதும் இராணுவத் தாக்குதலால் அதிகமாகப் பாதிக்கப்படும் ஊர்களில் ஒன்றாகும். பல உயிர்களைக் காவுகொண்டிருந்த இடம் அது. 1986, 87 ம் ஆண்டுக் காலப் பகுதியிலிருந்து, அந்த ஊர்மக்கள் தினமும் அகதிகளாக எல்லா ஊர்களிலும் தஞ்சம் அடைந்து கொண்டிருந்

*தார்கள். உயிர்காப்பதற்காக பல மக்கள் கால்நடையாகவே நடந்து எங்கெங்கோ போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலருக்கு, ஆத்தியடி மாமி தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்திருந்தா. அந்தச் சமயங்களில் அவர்களின் வீட்டுக்குப் போனால் அங்கே அரசியல் கதைகளும் பேச்சுகளும் என அவவின் வீடு ஒரே பரபரப்பாக இருப்பதைப் பலமுறை கண்டிருக்கிறேன்.*

*ஆத்தியடி மாமியின் இரக்ககுணம் அவவின் பிள்ளைகளிடத்திலும் இருந்தது. பரதன் அண்ணாவும் சபா அண்ணாவும் சிறுவயதிலேயே நாட்டுப் பிரச்சனைகளையும் தமிழ்மக்களின் துயரங்களையும் கண்டு வளர்ந்தவர்கள் என்பதனால் அவற்றிற்குத் தீர்வு காணவேண்டி, நாட்டிற்காக வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள். அதன் பின்னர் நாட்டிற்காகப் புறப்பட்ட தன் பிள்ளைகளையும் அவர்களின் தோழர்களையும் கவனித்து அவர்களுக்குரிய உதவிகளைச் செய்வதை ஆத்தியடி மாமி தன் தலையாய பணியாகக் கொண்டிருந்தா. பல போராளிகள், தளபதிகள் அவரின் வீட்டுக்கு எப்போதும் வந்து போய்க் கொண்டேயிருப்பார்கள். அவர்களை அன்போடு வரவேற்று, அவர்களுக்கு உணவளித்து அனுப்புவதில் அவர் எப்பொழுதும் உற்சாகமாக செயற்பட்டுக் கொண்டேயிருப்பா.*

*பரதன் அண்ணா (இயக்கப்பெயர் மொறிஸ்) அவரின் சிறுவயதிலேயே இயக்கத்தின் விடுதலை செயற்பாடுகளில் திறமைசாலியாக இருந்தார். மிக இளவயதிலேயே அவர் பருத்தித்துறைப் பிரதேசத்தின் பொறுப்பாளராகப் பதவியேற்று பணிகள் செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் இராணுவத்தினரால் (1987, 88, 89 காலப்பகுதிகளில்) ஆத்தியடி மாமியும் அவவின் குடும்பத்தினரும் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டேயிருந்தனர். அதனால் திடீரென்று அவர்கள் சொந்தவீட்டைவிட்டு, சொந்த ஊரைவிட்டு, யாழ்நகர்ப்பகுதிக்கு இடம்மாறிப் போய்*

*விட்டார்கள். அதன் பின்னர் ஆத்தியடி மாமியை அடிக்கடி காணும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்காது போய் விட்டது.*

## *1989ம் ஆண்டு மே மாதம்*

*அன்றைக்கு பனையிலிருந்து இறங்கிய சீவல் தொழிலாளி கிளியன் எங்கள் வீட்டைத் தாண்டிச் செல்லும் போது சொன்னான். "எல்லாப் பக்கத் தாலையும் ஆர்மிக்காரர் சாரிசாரியாக வந்து கொண் டிருக்கிறாங்கள். என்னவோ நடக்கப்போகுது மாதிரி யிருக்கு. பயமாயிருக்கு. அதனாலை நான் பாதியி லேயே பனையாலை இறங்கி வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறன்.." என்று*

*கிளியன் சொன்ன விதமும், அவனின் அவசர மான நடையும் பார்க்கப் பயமாக இருந்தது.*

*இது நடந்து சிலநிமிடங்களிலேயே எங்களின் மல்லிகைக்கலட்டி வீட்டைத்தாண்டி ஒரு நீண்ட இராணுவப்படை நகர்ந்து கொண்டிருப்பது தெரிந் தது. அந்தக் குழுவின் கடைசி இராணுவம் மறைகிற தறுவாயில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள், பசூக்கா ஷெல் வெடிக்கும் சத்தங்கள் என மாறி மாறிக் கேட்கத் தொடங்கின. இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையே நடக்கும் உக்கிரமான சண்டை போல அந்தச் சத்தங்கள் எமக்கு எண்ணத் தோன்றின.*

*அந்நேரம் அந்த வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த எனது நண்பன் தங்கேஸ்வரன் தன்னைத்தான் இராணுவம் சுடுகிறதென நினைத்து, சடாரென்று குதித்து, எங்கள் வீட்டுக்குள் புகுந்து கொண்டான். வெளியே என்ன நடக்கிறதென்று எங்களுக்கு எதுவும் புரியவில்லை. நாங்கள் இராணு வத்திற்குப் பயந்து வீட்டுக்குள் ஒளிந்து கிடந்தோம்.*

*அன்று காலை எனது தங்கை சயந்தனி (சூட்டி) பருத்தித்துறை சயன்ஸ் சென்ரர் ரியூட்டரிக் குப் போய்விட்டு அப்போது தான் திரும்பி வந்து கொண்டிருந்தாள். அவள் வரும் போது வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்திருந்தன. அவள் வழமையாக தம்பசெட்டி பிரதான வீதி வழியாகத்தான் வீட்டுக்கு வருவாள். ஆனால் அன்றைக்கு துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டபடியால் பிரதான வீதியைத் தவிர்த்து, ஒழுங்கைகள் வழியாக வந்து கொண்டிருந் தாள். ஆனால் அவளுக்குத் தெரியாது சண்டை நடந்ததே அந்த ஒழுங்கைகளிற்குள் தான் என்பது.*

*அவள் வீடு வந்த பின்னர் சொன்னாள் "ஒழுங்கையெல்லாம் ஆர்மிக்காரர் குவிந்திருக்கிறாங் கள். அவங்களெல்லாம் கோபமாக நிக்கிற மாதிரி இருக்குது.." என்று.*

*அப்போது நடந்து முடிந்திருந்த அந்தச் சண்டைக்குள் அகப்பட்டிருந்த பொதுமக்கள் சொன்ன சில கதைகளிலிருந்து அந்தச் சண்டையில் பரதண்ணா இராணுவத்தினருடன் யுத்தம் புரிந்து, வீரமரணமடைந்து விட்டதாகத் தெரிய வந்தது. எங்கள் வடிவம் மாமி உடனேயே இந்தத் தகவலை யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆத்தியடி மாமிக்கு தெரிவிப் பதற்காக, ரெஜிஸ்ரார் மாமியையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.*

*அதன் பின்னர் பரதன் அண்ணாவின் உடலைப் பார்த்த வடிவம் மாமி சொன்னா "அவனின் உடல் இப்பவும் நெஞ்சு நிமிர்த்தித்தான் இருக்கிறது. அவன் வீரன். இரண்டு கைகளிலும் ஷெல் வெடித்த காயங்கள்.." என்று.*

*பரதன் அண்ணாவின் வீரமரணம் ஆத்தியடி மாமியை எவ்வளவு பாதித்திருக்கும் என்று என்னால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாமலிருந்தது. மிகுந்த பொறுமையும் எல்லோரிடத்திலும் அன்பும்*

*கரிசனையும் கொண்டு பழகும் ஆத்தியடி மாமியை தேற்றுவதற்கெல்லாம் அப்போது எங்களிடம் வார்த்தைகள் இருக்கவில்லை. அந்தச் சம்பவத்தின் பின்னர் மாமியை நான் அதிகம் சந்திக்க வாய்ப்புக் கிடைத்ததுமில்லை.*

*பரதன் அண்ணாவின் வீரமரணத்திற்குப் பின்னர் ஆத்தியடி மாமியின் மூத்தமகனான பிறேமராஜன் அண்ணா, தாண்டிக்குளம் இராணுவத் தாக்குதலில் தனது ஒரு காலை இழந்து படுகாய மடைந்திருந்தார். அதன் பின்னர் சபா அண்ணா (இயக்கப்பெயர் மயூரன்) பூநகரி தவளைப்பாய்ச்சல் தாக்குதலில் வீரமரணமடைந்தார். இத்தனை இழப்பு களையும் தாங்கி, ஒரேயொரு விடயத்தை மட்டும் மனதில் கொண்டு அந்த நம்பிக்கையோடு ஆத்தியடி மாமி வாழ்ந்து கொண்டிருந்திருக்கிறா. அவர்கள் எதற்காக தமது உயிர்களை அர்ப்பணித் தார்களோ அதற்காகவே ஆத்தியடி மாமியும் இறுதி வரை தன்னால் இயன்ற பணிகளை செய்து கொண்டிருந்திருக்கிறா.*

*ஆத்தியடி மாமியின் விடுதலைக் கனவுகளை இந்த மரணங்களெல்லாம் படுகாயப்படுத்தியிருந் தாலும் அவவின் விடுதலை தொடர்பான பணிகள் மட்டும் தொடர்ந்து கொண்டேயிருந்தன.*

*அவர் 1997இல், ஜேர்மனிக்கு வருவதற்குள் அவரின் கணவரான தியாகராசா மாமாவையும் இழந்து விட்டா. யேர்மனிக்கு வந்தபின்னர் அவவின் மகன் பிறேமராஜன் அண்ணாவையும் இழந்து விட்டார். எல்லா இழப்புகளையும் தாங்கிக்கொண்டு அவர் வாழ்ந்தது ஒன்றேயொன்றுக்காகத்தானென்று நம்புகிறேன். அது எங்கள் மண்ணின் விடுதலைக் காகத் தான்!*

*ஆத்தியடி மாமி யேர்மனியில் இருக்கும் போது நான் இலண்டனில் வாழ்ந்து கொண்டிருந்தேன்.*

*அடிக்கடி எங்களுடன் அவ தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு கதைப்பா. எங்கள் குடும்பத்தி லுள்ள எல்லோரைப் பற்றியும் விசாரிப்பா. எங்கள் பிறந்தநாட்களை நாங்கள் மறந்தாலும் அவ மறக்காமல் எங்களை வாழ்த்துவார். எங்கள் வீட்டில் எனக்கு மட்டுமல்ல, என் மனைவி துஷ்யந்தி, என் மகன் யோதியின் பிறந்தநாட்களைக் கூட நினைவில் வைத்திருந்து வாழ்த்துக்களை தெரிவிப்பார்.*

*எங்களுக்கும் ஆத்தியடி மாமியுடன் தொலை பேசியில் உரையாடுவது மிகவும் விருப்பமான விடயம். நாங்கள் அவவுடன் மனம் விட்டு நிறையக் கதைப்போம். அவவுடன் கதைத்தால் மனதிற்கு ஒருவித நிம்மதி கிடைக்கும். என்ன பிரச்சனைகளாக இருந்தாலும் அவவுடன் கலந்தாலோசிக்கலாம். நல்ல கரிசனையோடு அவற்றைக் கேட்டு, சரியான முறை யில் சிந்திக்க வைத்து ஆறுதல் கூறுவா.*

*ஆத்தியடி மாமிக்கு இப்பவும் 'போன்' செய்ய வேணும் போலவும் அவவின் முகநூல் பதிவுகளை பார்க்க வேணும் போலவும் மனம் அவாக் கொள் கிறது. ஆத்தியடி மாமி இப்போது இந்த மண்ணில் இல்லை என்று நினைக்க முடியவில்லை! அவர் வாழும் காலம் வரை எவ்வளவோ நினைவுகளை எங்களுக்குள் பதித்துவிட்டா!*

*என்றைக்கும் உங்களை*
*மறக்க முடியாது மாமி!*
*ஓம் சாந்தி!*

*சுந்தரராஜா கேதீஸ்வரன் (1975), சிவகாமசுந்தரி அவர்களின் ஒன்றுவிட்ட அண்ணன் சுந்தரராஜா அவர்களின் புதல்வன். இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.*

# எனக்கும் அவ அம்மா..!

**தர்மு**

**எ**னக்கு அம்மாவைப் பற்றி நிறையச் சொல்ல வேண்டும். ஆனால் எப்படிச் சொல்வது என்றுதான் தெரியவில்லை.

1986ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நாளும் நான் அந்த வீட்டில் இருந்து வாழ்ந்தேன். அது அங்குள்ள எல்லோருக்குமே தெரியும். சபாவோடு முதலாம் வகுப்பில் படிக்கத் தொடங்கியதிலிருந்து கடந்த டிசம்பர் வரை நான் அம்மாவுடன் தொடர்பில் இருந்தேன்.

நான் அந்த வீட்டுக்குள் போகும் பொழுது களில், ஒரு போதுமே நான் வேறொரு வீட்டுப் பிள்ளை என்பதை உணர்ந்ததில்லை. சபாவுக்கும் எனக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசத்தையும் ஒருபோதும் அம்மா காட்டியதேயில்லை. என்னை அவ ஒரு சொந்தத் தாய் போலத்தான் எப்போதும் பார்த்தா.எனது பிள்ளைகளுக்கு அவதான் அப்பம்மா. அம்மாவின் பெயர் கூட எனக்கு இன்றுதான் தெரியும். எனக்கு அவ அம்மா!

*தர்மு, சபாவின்(கப்டன்-மயூரன்) உற்ற நண்பன். வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். சிறுவயதிலிருந்தே சிவகாமசுந்தரி அவர்களின் இன்னொரு பிள்ளை போல அந்த வீட்டிலேயே அல்லும் பகலுமாய் வாழந்தவர். அம்மாவில் நிறைந்த பாசமும் நேசமும் கொண்டவர். புலம்பெயர்ந்த பின் கூட சுவிசிலிருந்து வருடத்தில் ஒரு தடவையாவது குடும்பத்தோடு யேர்மனி வரை வந்து, அம்மாவைச் சந்தித்து அம்மாவுடன் இரண்டு நாட்களாவது தங்கி நின்று செல்பவர். கொரோனா காலத்தில் யாரும் வர அனுமதியில்லாத பொழுதிலும் மிகுந்த பிரயத்தனம் செய்து குடும்பத்தோடு வந்து அம்மாவுடன் ஒரு பகல் பொழுதைக் கழித்துச் சென்றவர்.*

# உறவின் வடிவான எம் அம்மாவுடன் பழகிய நாட்கள்...

*கலையரசி யோகேஸ்வரன்*

*கருவில் சுமக்காத, காலமெல்லாம்*
*இதயத்தில் சுமந்த எம் அம்மா..!*

***அ***ம்மாவின் நினைவுகள் எனக்கும் எனது கணவர் பிள்ளைகள் எல்லோருக்குமே மிகவும் சிறப்பானவை. எம்மைப் பெற்ற அன்னை இல்லை என ஆறுதல் இன்றி இருந்த எமக்கு அன்பு அன்னையாகக் கிடைத்தார் அம்மா. முதலில் நாம் மன்கைம் அம்மா என்றே அழைத்தோம். நாட்கள் செல்லச் செல்ல அம்மாவின் நெருக்கம் கூடியது. ரெலிபோன் உரையாடல், புத்தக வாசிப்பு, அறிவான கதைகள் என அது இருந்தது.

அம்மாவின் கணவரும் எனது தந்தையும் தாயகத்தில், ஒன்றாக ரெயில்வேயில் கடமை ஆற்றியவர்கள். எனது தந்தை தாயகத்திலிருந்து இங்கு வந்து என்னோடு நான்கு வருடங்கள் இருந்தார். அவ்வேளை அம்மாவும் எனது தந்தையும் கணவரின் நினைவுகள் பற்றிக் கதைத்துக் கொண்டு இருப்பார்கள். பின் எனது தந்தை தாயகம் சென்று 2016இல் இறந்து விட்டார். அப்போது எனக்கு அம்மாதான் ஆறுதலாக இருந்தார். எமக்கு இன்பமும் துன்பமும் அம்மாவுடன் இணைந்து கொண்டே இருந்தன.

அம்மா எனது வீட்டுக்கு வந்து என்னோடு தங்கி நின்று செல்வார். அந்தப் பொழுதுகளில் எனது பிள்ளைகளுடன் அன்பாகப் பேசுவார். அவர்களும் அம்மம்மா என்று அம்மாவோடு மிகவும் அன்பாக

இருப்பார்கள். அம்மாவின் அறிவுரைகளைக் கேட்டு மதித்து நடப்பார்கள்.

அம்மா தனது பிள்ளைகள், கணவர் பற்றி அடிக்கடி கதைப்பார். அதிலும் தனது மூன்று மாவீரர்கள்(மகன்மார்) பற்றி அடிக்கடி கூறுவார். அவர்களுடைய பெருமைகளைக் கூறி அவர்களைப் பிரிந்த துன்பம் பற்றியும் கூறி மனம் ஆறுவார். அத்துடன் தாயகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மகள், பேரப் பிள்ளைகள், மருமகன் புலம்பெயர் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பற்றியெல்லாம் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பார். அதனால் எமக்கு, நாமும் அம்மா வின் ஒரு குடும்ப உறுப்பினர் போலவே தோன்றும்.

அம்மா என்னைப் போல என் உறவுகளின் அன்பான ஒரு தெய்வம். நாங்கள், எங்கள் எல்லோருடைய பிறந்த தினத்திற்கும் அம்மாவின் அழைப்பையே எதிர்பார்த்துக் காத்திருப்போம். அதே போல் அம்மாவும் முதலாவதாக வாழ்த்துக் கூற மறக்க மாட்டார். அது மட்டுமன்றி மன்கைம் பாடசாலை யில் அம்மா கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் காலத்தில் "றஞ்சி நான் ஓய்வுக்கு வரமுதல் நீங்கள் இங்கு தமிழ் கற்பிக்க வேண்டும். நடனம் பழக்க வேண்டும்" எனக் கூறி தனது ஆசிரியருக்குரிய பாடசாலைச் சீருடையையும் என்னிடம் தந்து, தனது மகளாகக் கல்வியைக் கற்பிக்கும் படி கூறினார். அதன் படி நான் தமிழாலயத்தில் தமிழ்மொழிக் கல்வியைக் கற்பிக்க ஆரம்பித்தேன்.

அம்மா எமது வீட்டில் வந்து நிற்கும் பொழுதுகளில் பெற்ற தாய் போல அம்மாவின் மடியிலே தலை வைத்து, கதைகள் கூறி, நாடியைத் தடவிக் கொண்டு இருப்பேன். அம்மாவின் காலை என்மடியில் வைத்து நகம் வெட்டி, கதை பேசுவேன். அப்போது அம்மா "முன் ஜென்மபந்தம். இருவரும் உண்மையில் தாய் பிள்ளைதான்" எனக் கூறுவார்.

''நான் பெறாத எனது பிள்ளைகள் சுகி, வாசுகி, றஞ்சி'' எனக் கூறி ''நான் கொடுத்து வைத்த ஜீவன் தான் உங்கள் மூவரது அன்பும் கிடைத்திருக்கிறது'' என்பார்.

அம்மாவிற்கு மிகவும் சுவையான உணவுகள் பிடிக்கும். எனவே சுவையாகச் சமைத்துச் சாப்பிடு வது வழக்கம். சுவை தவறினால் அம்மா ''என்ன இன்று பிழைத்து விட்டது'' என்று கூறி தனது சமையல் அனுபவம், சமைக்கும் முறை எல்லாம் எனக்கும் சொல்லித் தருவார். பிள்ளைகளை எப்படி வளர்ப்பது, பொறுமை, வாசிப்பு என்பவற்றின் முக்கியத்துவம் எனப் பலவும் சொல்வார். இரவு நேரத்தில் எனது பொழுதுபோக்கு கதை கவிதை நாடகம் எழுதுவது. அவற்றை முதலில் அம்மாவுக்கு வாசித்துக் காட்டி பிழைதிருத்தம் செய்வேன்.

எனது கணவருக்கும் அம்மா என்றால் மிகவும் பிடிக்கும். யோகேஸ் என்றும் றஞ்சி என்றும் என் அம்மா கூப்பிடும் அழகே தனி அழகு. சில வேளை களில் நாம் மூவரும் சிவாஜி கணேசன் படங்கள் பார்த்து கருத்துக்கள் கதைப்போம். நாட்டு நிலைமை கள் பற்றியும் உரையாடுவோம்.

அம்மா தனது பிள்ளைகளின் சிறப்புக்கள் வதனா, சந்திராவின் எழுத்துத் திறமைகள் பற்றி யெல்லாம் சொல்லி அவர்களின் புத்தகங்களையும் எனக்குத் தருவார். நானும் அவற்றை வாசிப்பேன்.

அம்மாவுடனான எமது வாழ்க்கைப் பயணம் மிகச் சிறப்பானது. தற்போது ஒரு வருட காலமாக அம்மாவுடன் கதைக்க முடியாத நிலையேற்பட்டு அம்மாவின் தொடர்பு குறைந்து போனது, எனக்குப் பேரிழப்பு. எனினும் அம்மாவோடு வாழ்ந்த கால நினைவுகளை சுகியுடன் கதைப்பேன். நான் ''அம்மா'' என்றும் சுகி ''மாமி'' என்றும் அன்போடு அழைத்து, அம்மாவை நாங்கள் பார்த்த நினைவுகள் எல்லாம்

*அம்மாவுக்கும் இருக்குமென்று எங்களுக்குள் நாங்கள் நாங்கள் பேசிக் கொள்வோம்.*

*அம்மா இருக்கும்போது எம்முறவு சிறப்பாகவும் அம்மா எங்களுக்கு ஒரு சிறந்த தாயாகவும் இருந்த நினைவுகளை நினைத்து மனநிறைவடைகிறோம். எனினும் இறுதியில் அம்மாவுடன் உரையாடவில்லை என இதயத்தில் தாக்கமாகவே இருக்கிறது.*

*இரவுகளில் எம் அம்மா எங்கள் கனவுகளில் வந்து எம்மைத் தடவிச் செல்வார். அவரின் படங்களை அடிக்கடி எடுத்துப் பார்ப்பேன். எமது தெய்வத்தின் பயணம் எம்முடன் பல வருடங்களாகத் தொடர்ந்து இருந்தது. எமது தெய்வத்தின் தொடர்பு எனக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் கடவுள் தந்த வரம். மறு ஜென்மம் இருந்தால் அம்மாவின் மடியிலே பிறக்க வேண்டும்.*

*எமக்கு மட்டுமல்ல. பலருக்கும் அம்மாவின் நட்பு உன்னதமானது. நாட்டில் பற்றும் உடைய அம்மா எல்லோருக்கும் எம் நாட்டிற்கும் உரிய சிறந்த அன்னை என்று நாம் பெருமையாகக் கூற முடியும்.*

*மதிப்புடைய மாணிக்கம் போல சிறந்த*
*அம்மாவே! என்றும் எம் தெய்வமே..!*

*இவ்வாறு தங்கள் உயிரில் கலந்த*
*றஞ்சி யோகேஸ்*

*கலையரசி யோகேஸ்வரன் (றஞ்சி - 1975), சிவகாமசுந்தரி அவர்களுடன் தாயும் மகளும் போன்ற மிக மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தவர். யேர்மனியில் Heppenheim நகரில் வாழ்ந்து வருகிறார்.*

# என்னைப் பெறாத என் அன்னை!

**தமிழ்ச்செல்வி**

**நா**ன் ஜி.சி.ஈ ஓலெவல் படிக்கும் போது தான் அம்மாவின்(சிவகாமசுந்தரி அம்மா) மூன்றாவது மகளான சந்திரபிரபா எனக்கு அறிமுகமாகி, எனக்குப் பிடித்த நண்பிகளில் ஒருத்தியுமானாள். அவளுடனான நட்புத் தான் நான் அந்த வீட்டிற்குள் நுழைவதற்கும் முக்கிய காரணமாக அமைந்தது.

அம்மாவையும் அவவின் எட்டுப்பிள்ளைகளையும் நான் முதன் முதலாகக் கண்டதும் அவர்களது அந்த வீட்டில் தான். நானங்கு முதன்முதலாகப் போன போது அவர்கள் எல்லோரும் என்னோடு பழகிய விதமும் என் மீது காட்டிய அன்பும் அரவணைப்பும் எனக்கு மிகவும் வித்தியாசமாக இருந்தன. அது ஒரு சந்தோசமான அனுபவமாக இருந்தது.

அம்மா என்னிடம் காட்டிய பரிவை என்றைக்கும் என்னால் மறக்க முடியாது. என்னை ஏதோ பல வருடங்கள் தெரிந்தது போல் "வாரும்.. வந்து முதல்ல சாப்பிடும்.." இதுதான் அம்மாவின் முதல் வார்த்தையாக இருந்தது. அம்மாவினது அத்தகைய உபசாரமும் அணுகு முறையும் எனக்குப் புதிதாகவும் என்னை அப்படியே தன்னோடு சேர்த்து அணைப்பது போலவும் இருந்தன.

நான் அவரோடு பழகிய காலம் முழுவதும் தான் பெற்ற பிள்ளைகளில் ஒருவர் போலவே என்னை எப்போதும் நடத்துவார். காலம் போகப் போக அம்மா

*எனக்கொரு உற்ற தோழியாகவே ஆகி விட்டார். எனக்குள் இருந்த கவலைகளையெல்லாம் அம்மாவிடம் மனம் விட்டுச் சொல்லி எத்தனையோ தடவைகள் அழுதிருக்கிறேன். அச்சமயங்களில் எல்லாம் அவர் என்னை ஆறுதல் படுத்துவார். தனது வாழ்க்கையில், தான் வாழும் வீட்டுச் சூழலில், தான் எப்படி வாழ்க்கை யைக் கொண்டு நடத்துகிறேனென உதாரணக்கதைகள் கூறி, என்னைச் சமாதானப்படுத்தி, புத்திமதிகள்கூறுவார். அம்மாவின் ஒவ்வொரு புத்திமதிகளைக் கேட்டும் அவர் தனது வீட்டில் எல்லோருடனும் நடந்து கொள்ளும் விதங்களைப் பார்த்தும் காலப்போக்கில் நானும் பொறுமையை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வெகுவாகக் கற்றுக்கொண்டு விட்டேன்.*

*நான் எத்தனையோ தடவைகள் பணக் கஷ்டத்தில் தவித்திருக்கிறேன். அச்சமயங்களில் அம்மா யாருக்கும் தெரியாமல் என் கஷ்டங்களைப் போக்கி யிருக்கிறார். எனக்குப் பணம் தந்து உதவும் போது "செல்வியிடம் நான் கடன் வாங்கியிருக்கிறேன். அது தான்.. திரும்பக்கொடுக்கிறேன்.." என்பது போல் தன் கணவரிடமும் பிள்ளைகளிடமும் சொல்லிச் சமாளித்து, என்னைக் காப்பாற்றியிருக்கிறார். இந்தப் பெருந் தன்மை யெல்லாம் யாருக்கு வந்துவிடும்? இது தான் எங்கள் அம்மா! இவர் தான் மாவீரன் மொறிஸ் ஸின் அம்மா! இவர் தான் மாவீரன் மயூரனின் அம்மா!*

*அம்மாவுடன் நான் பழகிய காலங்களை நினைத் தால் இப்போதும் என் உடல் புல்லரிக்கிறது. மனம் கசிகிறது! அவருடன் பழகிய ஒவ்வொரு நாட்களிலும், ஒவ்வொரு நிமிடங்களிலும் நான் கற்றுக் கொண்டவை ஏராளம். நான் எந்தச் சூழ்நிலையிலும் அம்மாவிடம் மட்டும் எதையும் மறைத்ததில்லை. எனக்குள்ளிருக்கும் எல்லாவற்றையும் நான் பகிர்ந்து கொள்வதென்றால் அது அம்மாவிடம் மட்டும் தான்.*

*நான் விரும்பியவரை மணம்முடிப்பதற்கு (87-88) இடையூறாக எத்தனையோ பிரச்சனைகள் வந்தன. அச் சமயம் பெற்ற தாயைப்போல் அம்மாதான் முன்னின்று*

எனது குடும்பத்துடனும் அவரின் குடும்பத்துடனும் பேசி, எங்கள் திருமணம்நடப்பதற்கு உறுதுணையாகஇருந்தார்.

திருமணம் முடிந்தபின்னர் எனது குடும்பத்திற்குள் எத்தனையோ பிரச்சனைகள் வந்து போயின. எவ்வா றான பிரச்சனையென்றாலும் எங்களுக்குத் தக்க புத்தி மதிகள் கூறி, குடும்பம் பிரிந்துவிடாமல் அம்மா பார்த்துக் கொண்டார்.

அவருடன் வாழ்ந்த காலங்கள் எமக்கெல்லாம் ஒரு அர்த்தமுள்ள பகவத்கீதை!

அவர் எனக்கொரு தாயாக மட்டுமல்ல, எல்லாமா கவுமிருந்து என்னைப் புடம்போட்டவர்! வழிகாட்டியவர்! நான் எங்காவது வெளியூருக்குப் போகப் போகிறேன் என்றால் எனக்கு என்னென்ன உடுப்புகள் தேவை யென்று அறிந்து அவற்றையெல்லாம் எனக்குத் தைத் துத் தருவார்.

இடம் பொருள் அறிந்து உதவி செய்பவர் அம்மா. நான் எனது முதற் குழந்தையைப் பெறுவதற்காக பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் அதிகாலை மூன்று மணிக்கே அனுமதிக்கப்பட்டு விட்டேன். ஆனால் பிறக்கப்போகும் குழந்தைக்கு அணிவதற்கான உடைக ளெதுவும் என்னிடம் கைவசமிருக்கவில்லை. இதை யறிந்த அம்மா அதிகாலையிலேயே அவசரமவசரமாக மூன்று மஞ்சள் நிறச்சட்டைகள் தன் கையினாலேயே தைத்து, காலை ஏழு மணிக்கே என் கணவரிடம் கொடுத்து அனுப்பியிருந்தா. இராணுவக்கெடுபிடிகள், போர், மரணம் என எங்கள் மண் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் அம்மா செய்த இத்தகைய உதவிகள் எனக்கு மிகப்பெரிய உதவிகளாக இருந்தன. இது ஒரு உதாரணம் மட்டுந்தான். இன்னும் எவ்வளவோ விடயங்கள் அம்மாவைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

என் வாழ்க்கையில் அம்மா எனக்காகச் செய்த உதவிகள் ஏராளம். எல்லாவற்றையும் செய்துவிட்டு,

*எதுவுமே செய்யாதது போல் தன் குடும்பத்தினருக்குக் காட்டிக்கொள்வார் அம்மா.*

*நான் முற்பிறவியில் செய்த ஏதோவொரு புண்ணியம் தான், இப்பிறவியில் சில காலங்களேனும் நான் அம்மாவுடன் சேர்ந்து பழகவும், கூடிச் சிலகாலம் வாழவும் பாக்கியமாய் அமைந்திருக்கிறது!*

*அம்மா ஒரு பூரணை நிலவு! ஓர் நிறைகுடம் எம்மை விட்டுப் பிரிந்து விட்டது! மனிதநேயத்தையும், மனிதாபமானத்தையும் கூட்டிக் கற்றுத் தந்தவர் அம்மா!*

*பிறருக்குச் செய்யும் எந்த உதவியையும், உள்ளங்கை குடிப்பதை பிறங்கைக்குத் தெரியவிடாமல் காப்பது போல் வாழ்ந்து காட்டியவர் தான் 'அம்மா' என நான் அழைக்கும் இந்த மனிததெய்வம்!*

*உலகில் சாதிகள் பல இருந்தும், சாதி மத பேத மின்றி, ஆண்சாதி, பெண்சாதி என்பது தான் உண்மை யென வாழ்ந்து காட்டியவர் இந்தப் புனிதத் தாய்!*

*தன்னோடு பழகியவர்களுக்கு அன்பை அள்ளிக் கொடுத்து, அவர்களையும் அன்பானவர்களாகவும் பண்பானவர்களாகவும் மாற்றியவர் அம்மா! அவரோடு பழகியவர்கள் அனைவரும் அவருக்குப் பிள்ளைகளே!*

*அன்பையும் ஆறுதலையும் கொடுத்து*<br>
*அறிவையும் பண்பையும் போதித்து*<br>
*உண்மையாய் இந்த உலகில் அனைவரும்*<br>
*தலை நிமிர்ந்து வாழ, உங்களாலான*<br>
*அனைத்தும் செய்த மேன்மை மிகு அன்னையே!*<br>
*உங்களுக்கு என் தலை தாழ்ந்த வணக்கங்கள்!*

*தமிழ்ச்செல்வி, சிவகாமசுந்தரி அவர்களின் மூன்றாவது மகளான சந்திரபிரபாவின் நண்பி. இலண்டனில் வாழ்ந்து வருகிறார். ஊரில், பருத்தித்துறையில் இருந்த காலத்திலேயே அம்மாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தவர்.*



# இரங்கற் செய்திகள்



# இதய வணக்கம்

மலர்வு
23
04
1934



உதிர்வு
18
05
2022

**நாட்டுப்பற்றாளர். திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா**

**பிறப்பிடம்: ஆத்தியடி பருத்தித்துறை, தமிழீழம்.**
**வதிவிடம்: ஸ்வெபிஸ் ஹால் (Schwäbisch Hall-Germany)**

மாந்தரின் வாழ்வியலில் மேன்மையாகக் கருதப்படுவது வாழ்வாங்கு வாழ்தலாகும். அதன் உண்மைநிலை யாதெனில் புவியில் பிறந்த ஒவ்வொருவரும் தமது வாழ்வை மண்ணின் உயர்விற்காகவும், பிறரின் மேன்மைக்காகவும் வாழ்தலேயாகும். அதிலும் பிறந்த மண்ணிற்காக தம்முயிரை ஈய்வது வானுறையும் தெய்வத்தின் நிலையாகும்.அத்தகைய பேறுடைய மக்களை பெற்று தாயகத்திற்காக ஈய்ந்த தியாகத்தாயை இழந்து நிற்கின்றோம்.

**நாட்டுப்பற்றாளர்.திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா** அவர்கள், பிள்ளைகள் மாவீரர் கப்டன் மொறிஸ்,மாவீரர் கப்டன் மயூரன், மாவீரர் பிரேமராஜன் மாஸ்டர், பேரனான மாவீரர் லெப்டினன். பரதன் பிரேமராஜன், ஆகியோரின் தாயாராகவும், பேத்தியாராகவும் வாழ்ந்து, தேசவிடியலுக்காக தம்மை அர்ப்பணித்த பெருமாட்டியாவார். அத்தோடு தேசத்தில் வாழ்ந்த காலத்தில் வவுனியாவில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், இராணுவ நெருக்கடியின் மத்தியிலும், தேசவிரோத அணியினரின் முகாமிற்கு முன் வீட்டில் இருந்து கொண்டு, தமிழீழ புலனாய்வு போராளிகளை உபசரித்து இராணுவ முற்றுகைக்குள்ளும் உணவூட்டி பாதுகாத்த வீரத்தாயாவார்.

அத்துடன் தனது போர்க்கால அனுபவங்களின் நினைவுப்பதிவாக "பெருநினைவின் சிறுதுளிகள்"என்ற புத்தகத்தை எழுதி தனது எழுத்தாற்றல் மூலம் தேசப்பதிவை பதித்துள்ளார் . புலம்பெயர்ந்து ஜேர்மனிய நாட்டில் தஞ்சம் புகுந்த வேளையில் நம் சிறார்களுக்கு தாய்மொழிக் கல்வி அவசியம் என்பதை உணர்ந்து மன்கைம் தமிழாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றியதோடு,மன்கைம் நகரத்தில் பிரதிநிதியாவும் செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தேசப்பற்று நிறைந்த உன்னதத் தாயை இழந்து வாடும் பிள்ளைகள்,உற்றார்,உறவினர்கள் அனைவருக்கும்,எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு உடல்,பொருள்,ஆவி அனைத்தையும் மண்ணிற்காய் ஆகுதியாக்கி விடைபெறும் எமது தாயவளின் ஆன்மா தேசவிடியலின் கதிர்களோடு சேர தமிழன்னையை வேண்டுகின்றோம்.

**தேசவிடுதலையின் வேரில் ஆழ்ந்தோர் தேசவிடியலின் கதிரில் சேர்வர்**

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – யேர்மனி**
Tamils Coordinating Committee - Germany

# இதய வணக்கம்

# நாட்டுப்பற்றாளர்

## திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா

***பிறப்பிடம்: ஆத்தியடி பருத்தித்துறை தமிழீழம்***
***வதிவிடம்: ஸ்வெபிஸ் ஹால் (Schwäbisch Hall Germany)***

*மாந்தரின் வாழ்வியலில் மேன்மையாகக் கருதப்படுவது வாழ்வாங்கு வாழ்தலாகும். அதன் உண்மைநிலை யாதெனில் புவியில் பிறந்த ஒவ்வொருவரும் தமது வாழ்வை மண்ணின் உயர்விற் காகவும் பிறரின் மேன்மைக்காகவும் வாழ்தலேயாகும். அதிலும் பிறந்த மண்ணிற்காக தம்முயிரை ஈய்வது வானுறையும் தெய்வத்தின் நிலையாகும். அத்தகைய பேறுடைய மக்களைப் பெற்று தாயகத்திற்காக ஈய்ந்த தியாகத்தாயை இழந்து நிற்கின்றோம்.*

*நாட்டுப்பற்றாளர். திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்கள், மாவீரர் கப்டன் மொறிஸ், மாவீரர் கப்டன் மயூரன், மாவீரர் பிரேமராஜன் மாஸ்டர் ஆகியோரின் தாயாராகவும் மாவீரர் லெப்டினன். பரதன் பிரேமராஜனின் பேத்தியா ராகவும் வாழ்ந்து தேசவிடியலுக்காக தம்மை அர்ப்பணித்த பெருமாட்டியாவார். அத்தோடு தேசத் தில் வாழ்ந்த காலத்தில் வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவ நெருக்கடி யின் மத்தியிலும் தேசவிரோத அணியினரின் முகாமிற்கு முன் வீட்டில் இருந்து கொண்டு, தமிழீழ புலனாய்வுப் போராளிகளை உபசரித்து இராணுவ முற்றுகைக்குள்ளும் உணவூட்டி பாதுகாத்த வீரத் தாயாவார்.*

*அத்துடன் தனது போர்க்காலஅனுபவங்களின் நினைவுப்பதிவாக 'பெருநினைவின் சிறு துளிகள்' என்ற புத்தகத்தை எழுதி தனது எழுத்தாற்றல் மூலம் தேசப்பதிவை பதித்துள்ளார்.*

*புலம்பெயர்ந்து ஜேர்மனிய நாட்டில் தஞ்சம் புகுந்த வேளையில் நம் சிறார்களுக்கு தாய்மொழிக் கல்வி அவசியம் என்பதை உணர்ந்து மன்கைம் தமிழாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றியதோடு மன்கைம் நகரத்தில் பிரதிநிதியாவும் செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தேசப் பற்று நிறைந்த உன்னதத் தாயை இழந்து வாடும் பிள்ளைகள் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு உடல், பொருள், ஆவி அனைத்தையும் மண்ணிற்காய் ஆகுதி யாக்கி விடைபெறும் எமது தாயவளின் ஆன்மா தேசவிடியலின் கதிர்களோடு சேர தமிழன்னையை வேண்டுகின்றோம்.*

***தேசவிடுதலையின் வேரில் ஆழ்ந்தோர்***
***தேசவிடியலின் கதிரில் சேர்வர்***

*தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்*

***தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - யேர்மனி***
*Tamil Coordination Committee - Germany*

# இறுதி வணக்கம்

மலர்வு
23
.
04
.
1934





உதிர்வு
18
.
05
.
2022



## அமரர்

# திருமதி.சிவகாமசுந்தரி தியாகராஜா

**ஆத்தியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், தமிழீழம் – சுவேபிஸ் கால் (Schwäbisch Hall) யேர்மனி**

தமிழீழத் தாய்த்திரு நாட்டின் எழில்மிகு வளங்களோடும், தாய்மண்ணின் விடுதலை உணர்வோடும் இரண்டறக் கலந்து கிடக்கும் வடமராட்சியின் பருத்தித்துறையில் அவதரித்து, அந்த மகத்தான மண்ணுக்கே உரித்தான கல்வியால், கலையால், வீரத்தால், விடுதலை உணர்வால் மேலோங்கித் திகழ்ந்த ஓர் அற்புதமான அன்னையை இயற்கை இன்று தன்னோடு அணைத்துக்கொண்டுள்ளது. இயற்கையின் நியதியையும் தாண்டிய பெரு வலியோடு பிரிவுத் துயர் சுமந்து நிற்கும் அனைவரோடும் நாமும் துயரினைப் பகிர்ந்து கொள்வதோடு, தாயாரின் ஆன்மா அமைதி பெறவும் இயற்கையை வேண்டுகின்றோம்.

"ஒரு சிறந்த தாய் ஒரு சிறந்த ஆசிரியை" எனப்படும் தத்துவார்த்த வாக்கியத்திற்கு முழுமையான உதாரணமாகவும், அதன் வழியே வாழ்வின் தடங்களை பொதுவாழ்வின் வரலாறாக்கியும், தமிழ்த்தேசிய இனத்தின் மதிப்புமிகு அடையாளமாக அணியமாக்கப்படுபவர்களில் முதன்மை நிரலில் வாழ்ந்தவருமாக எப்போதும் மதிப்பளிக்கப்படுவார்.

தாய்த்தேசத்தின் விடுதலை என்ற உயரிய இலட்சியத்திற்காக ஒரு இனமானத் தாயாக எத்தகைய அர்ப்பணிப்புக்களை, தியாகங்களை, ஆதரவுகளை நல்க வேண்டுமோ அவற்றிற்கான தாராள மனம் கொண்டு நல்கியது மட்டுமல்லாது, அறம் நெறி தவறாத அந்த விடுதலைப் போரும் சத்திய வேள்வியும் அள்ளிச் சொரிந்த கனதிகளையும், வலிகளையும் சுகமான சுமையாக தாங்கிச் சுமந்த தேச நலன் மிக்க பெருமைமிகு தாயாக பூசிக்கப்படுவார் என்பது திண்ணம்.

தமிழ் மக்களுக்கான ஏக பிரதிநிதிகளாகவும், தமிழீழ தேசத்தின் மீட்பர்களாகவும், காவலர்களாகவும், அரண்களாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளே இருக்க வேண்டும் என்பதிலும், இருப்பார்கள் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டவராக, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்களின் தலைமையினை ஆத்மார்த்தமாக நேசித்து, இயக்கத்தினுடைய ஆரம்ப காலங்கள் தொட்டே தீவிர ஆதரவாளராக செயற்பட்டார் என்பதைக் காலம் மறந்து விடாது.

தானும் தனது துணைவரும் மட்டுமல்லாது, தாம் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கும் தேசக்காதலையும், அதற்கான தேவைகளையும், தேவைகளுக்கான உழைப்பின் தன்மைகளையும் உணரச் செய்தார். அவற்றிற்கான உதாரணமாக தன்னையே உருவகித்தார். இதன் உச்சமான அடையாளங்களாக, தனது இரண்டு பிள்ளைகளை மாவீரர்களாகவும், ஒரு மகனை நாட்டுப்பற்றாளராகவும், பேரனை மாவீரனாகவும் மண்ணுக்காக ஈர்ந்து நெஞ்சப் பசுமையிலே தாக்கிச் சுமந்தார்.

அமைதிப்படையென்ற அழகிய முகமூடியணிந்து உணவுப் பொதிகளோடு எங்கள் தாய்த்தேச மடிமீது காலூன்றிய இந்திய வல்லாதிக்க அரசு, பின்னாட்களில் தனது கோர முகத்தை வெளிப்படுத்தி, தமிழர் தாயகமெங்கிலும் நிகழ்த்திய வரலாற்றுப் படுகொலைகளுக்கும், துரோகங்களுக்கும் எதிராக தமிழீழ தேசமே அணியமாகிப் போர் செய்த வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளராகத் திகழ்ந்த கப்டன்: மொறிஸ் ( பரதராஜன் தியாகராஜா) என்ற தனது மகன் 01.05.1989ல் இந்தியப் படையினருடனான மோதலின்போது வீரச்சாவடைந்ததும், தனது மகனின் வித்துடலைப் பெறுவதற்காக ஒரு தாயாக மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழீழப் பெண்களின் குறியீடாக இந்தத் தாயார் சந்தித்த சவால்களும், சாதனைகளும் " பெருநினைவின் சிறுதுளிகள் " என்ற இவரது படைப்பான வரலாற்று ஆவணத்தில் பதிவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் "ஒப்பறேசன் தவளை " எனப் பெயர் சூட்டப்பட்டு கடலிலும் தரையிலுமாக நிகழ்த்திய பூநகரி இராணுவ முகாம் தகர்ப்புச் சமரிலே இம்ரான் பாண்டியன் படையணியின் போராளியாக களமாடி, 11.11.1993ல் வீரச்சாவை அணைத்துக்கொண்ட கப்டன்: மயூரன் ( பாலசபாபதி தியாகராஜா) என்ற தனது அடுத்த மகனை மாவீரனாகத் தாங்கிக் கொண்டார்.

தீட்சண்யன் என்ற புனைபெயரைத் தாங்கிய இவரது மற்றுமோர் மகன் பிறேமராஜன் தியாகராஜா அவர்கள் மும்மொழித் தேர்ச்சிகொண்ட கல்விப்புல மேன்மைகொண்ட ஆசிரியராக திகழ்ந்ததுடன், 1990ம் ஆண்டு வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ஏற்பட்ட தாக்குதலொன்றிலே தனது அவயங்களை இழந்த போதிலும், உறுதியான மன வலிமையோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையின் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றி, சுகயீனம் காரணமாக 13.05.2000 அன்று சாவைத் தழுவிக்கொண்டார். இவரது அர்ப்பணிப்பு மிக்க செயலாற்றல்களாலும், கலை இலக்கியப் படைப்பாற்றல்களாலும் "நாட்டுப்பற்றாளர்" என்ற மதிப்போடு எல்லோர் நெஞ்சங்களிலும் வாழ்கின்றார்.

தீட்சண்யன் அவர்களது மகனும், சிவகாமசுந்தரி அம்மாவின் பேரனுமான கப்டன்: மயூரன் ( பரதன் பிறேமராஜன்) 05.02.2009ல் சிறீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தியாகங்களால் உரமேறிப்போன இந்தத் தாயின் இரண்டு மகள்களும் கலை இலக்கியப் படைப்பாற்றல்கள் ஊடாக, தேச விடுதலை பற்றியும், சமூக விழுமியங்கள் பற்றியும், தேசவளங்கள் பற்றியும் இன்றுவரை கவிதைகளாக, கட்டுரைகளாக வெளிப்படுத்தி வருவதும், அதனை இளந்தலைமுறையினரும், ஆர்வலர்களும் நுகர்ந்து பயன் பெறுவதும் பெரும் பணியாகவே மதிக்கப்படுகின்றது.

தனது இறுதி மூச்சை நிறுத்தி, மீளாத்துயில் கொள்ளும் இந்தத் தாயின் வரலாற்றுப் பக்கங்கள் மிக நீண்டவையும், முக்கியமானவையுமாகும். யேர்மனிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உப அமைப்புகளாகத் திகழும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமூடாக, தாயக தேசத்தின் உறவுகளுக்கான ஜீவனோபாய ஆதாரச் செயற்பாடுகளில் தீவிரமாக தொண்டாற்றியவர். தமிழ்க் கல்விக் கழகமூடாக தமிழாலயத்தில் எமது பிள்ளைகளுக்கான தாய்மொழி விருத்தியின் சிறந்த ஆசானாக தன்னை அர்ப்பணித்தவர். தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் மன்கைம் நகரச் செயற்பாட்டாளராகவும் உணர்வோடு சேவையாற்றியவர்.

மதிப்புக்குரிய இந்தத் தாயாரின் தனிப்பட்ட அர்ப்பணிப்புக்களும், குடும்பத்தின் முழுமையான தியாகங்களும் தமிழ்த்தேசிய இனத்திற்கான வரலாற்றுப் பக்கங்களில் என்றும் உயிர்வாழும் என்பதில் ஐயமில்லை. இவருக்காக எமது தலைகளைச் சாய்த்து இறுதி வணக்கம் செலுத்தும் அதேவேளையில் எமது இனவிடுதலைக்கான பணிகளை இடைவிடாது தொடர்வோமென உறுதி கொள்வோமாக.

நன்றி.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

மாவீரர் பணிமனை,
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு,
யேர்மனி.

# இறுதி வணக்கம்

# அமரர்

# திருமதி.சிவகாமசுந்தரி தியாகராஜா

*ஆத்தியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், தமிழீழம்*
*ஸ்வெபிஸ் ஹால் (Schwäbisch Hall)) யேர்மனி*

*தமிழீழத் தாய்த்திரு நாட்டின் எழில்மிகு வளங்களோடும், தாய்மண்ணின் விடுதலை உணர்வோடும் இரண்டறக் கலந்து கிடக்கும் வடமராட்சியின் பருத்தித்துறையில் அவதரித்து, அந்த மகத்தான மண்ணுக்கே உரித்தான கல்வியால், கலையால், வீரத்தால், விடுதலை உணர்வால் மேலோங்கித் திகழ்ந்த ஓர் அற்புதமான அன்னையை இயற்கை இன்று தன்னோடு அணைத்துக் கொண்டுள்ளது. இயற்கையின் நியதியையும் தாண்டிய பெரு வலியோடு பிரிவுத் துயர் சுமந்து நிற்கும் அனைவரோடும் நாமும் துயரினைப் பகிர்ந்து கொள்வதோடு, தாயாரின் ஆன்மா அமைதி பெறவும் இயற்கையை வேண்டுகின்றோம்.*

*"ஒரு சிறந்த தாய் ஒரு சிறந்த ஆசிரியை" எனப்படும் தத்துவார்த்த வாக்கியத்திற்கு முழுமையான உதாரணமாகவும், அதன் வழியே வாழ்வின் தடங்களை பொதுவாழ்வின் வரலாறாக்கியும், தமிழ்த் தேசிய இனத்தின் மதிப்புமிகு அடையாளமாக அணியமாக்கப்படுபவர்களில் முதன்மை நிரலில் வாழ்ந்தவருமாக எப்போதும் மதிப்பளிக்கப்படுவார்.*

*தாய்த்தேசத்தின் விடுதலை என்ற உயரிய இலட்சியத்திற்காக ஒரு இனமானத் தாயாக எத்தகைய அர்ப்பணிப்புக்களை, தியாகங்களை, ஆதரவுகளை நல்க வேண்டுமோ அவற்றிற்கான தாராள மனம் கொண்டு நல்கியது மட்டுமல்லாது, அறம் நெறி தவறாத அந்த விடுதலைப் போரும் சத்திய*

வேள்வியும் அள்ளிச் சொரிந்த கனதிகளையும், வலி களையும் சுகமான சுமையாக தாங்கிச் சுமந்த தேச நலன் மிக்க பெருமைமிகு தாயாக பூசிக்கப்படுவார் என்பது திண்ணம்.

தமிழ் மக்களுக்கான ஏக பிரதிநிதிகளாகவும், தமிழீழ தேசத்தின் மீட்பர்களாகவும், காவலர்களா கவும், அரண்களாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளே இருக்க வேண்டும் என்பதிலும், இருப்பார்கள் என்ப திலும் அசையாத நம்பிக்கைகொண்டவராக, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களின் தலைமையினை ஆத்மார்த்தமாக நேசித்து, இயக்கத் தினுடைய ஆரம்ப காலங்கள் தொட்டே தீவிர ஆதர வாளராக செயற்பட்டார் என்பதைக் காலம் மறந்து விடாது.

தானும் தனது துணைவரும் மட்டுமல்லாது, தாம் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கும் தேசக்காதலை யும், அதற்கான தேவைகளையும், தேவைகளுக்கான உழைப்பின் தன்மைகளையும் உணரச் செய்தார். அவற்றிற்கான உதாரணமாக தன்னையே உருவகித் தார். இதன் உச்சமான அடையாளங்களாக, தனது இரண்டு பிள்ளைகளை மாவீரர்களாகவும், ஒரு மகனை நாட்டுப்பற்றாளராகவும், பேரனை மாவீர னாகவும் மண்ணுக்காக ஈர்ந்து நெஞ்சப் பசுமையிலே தூக்கிச் சுமந்தார்.

அமைதிப்படையென்ற அழகிய முகமூடியணி ந்து உணவுப் பொதிகளோடு எங்கள் தாய்த்தேச மடிமீது காலூன்றிய இந்திய வல்லாதிக்க அரசு, பின்னாட்களில் தனது கோர முகத்தை வெளிப் படுத்தி, தமிழர் தாயகமெங்கிலும் நிகழ்த்திய வரலாற் றுப் படுகொலைகளுக்கும், துரோகங்களுக்கும் எதி ராக தமிழீழ தேசமே அணியமாகிப் போர் செய்த வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பருத்தித் துறைப் பிரதேசப் பொறுப்பாளராகத் திகழ்ந்த கப்டன்:மொறிஸ் (பரதராஜன் தியாகராஜா) என்ற தனது மகன் 01.05.1989இல் இந்தியப் படையின ருடனான மோதலின்போது வீரச்சாவடைந்ததும்,

தனது மகனின் வித்துடலைப் பெறுவதற்காக ஒரு தாயாக மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழீழப் பெண்களின் குறியீடாக இந்தத் தாயார் சந்தித்த சவால்களும், சாதனைகளும் "பெருநினைவின் சிறுதுளிகள்" என்ற இவரது படைப்பான வரலாற்று ஆவணத்தில் பதிவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் 'ஒப்பறேசன் தவளை' எனப் பெயர் சூட்டப்பட்டு கடலிலும் தரையிலுமாக நிகழ்த்திய பூநகரி இராணுவ முகாம் தகர்ப்புச் சமரிலே இம்ரான் பாண்டியன் படையணியின் போராளியாக களமாடி, 11.11.1993ல் வீரச்சாவை அணைத்துக்கொண்ட கப்டன்: மயூரன் ( பாலசபாபதி தியாகராஜா) என்ற தனது அடுத்த மகனை மாவீரனாகத் தாங்கிக் கொண்டார்.

தீட்சண்யன் என்ற புனைபெயரைத் தாங்கிய இவரது மற்றுமோர்மகன் பிறேமராஜன் தியாகராஜா அவர்கள் மும்மொழித் தேர்ச்சி கொண்ட கல்விப்புல மேன்மை கொண்ட ஆசிரியராக திகழ்ந்ததுடன், 1990ம் ஆண்டு வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ஏற்பட்ட தாக்குதலொன்றிலே தனது அவயங்களை இழந்த போதிலும், உறுதியான மன வலிமையோடு, தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறையின் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி, சுகயீனம் காரணமாக 13.05.2000 அன்று சாவைத் தழுவிக் கொண்டார். இவரது அர்ப்பணிப்பு மிக்க செயலாற்றல்களாலும், கலை இலக்கியப் படைப்பாற்றல்களாலும் "நாட்டுப்பற்றாளர்" என்ற மதிப்போடு எல்லோர் நெஞ்சங்களிலும் வாழ்கின்றார்.

தீட்சண்யன் அவர்களது மகனும், சிவகாம சுந்தரி அம்மாவின் பேரனுமான லெப்டினன்: மயூரன் (பரதன் பிறேமராஜன்) 05.02.2009ல் சிறீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தியாகங்களால் உரமேறிப்போன இந்தத் தாயின் இரண்டு மகள்களும் கலை இலக்கியப் படைப்பாற்றல்கள் ஊடாக, தேச விடுதலை பற்றி

யும், சமூக விழுமியங்கள் பற்றியும், தேசவளங்கள் பற்றியும் இன்றுவரை கவிதைகளாக, கட்டுரைகளாக வெளிப்படுத்தி வருவதும், அதனை இளந்தலைமுறை யினரும், ஆர்வலர்களும் நுகர்ந்து பயன் பெறுவதும் பெரும் பணியாகவே மதிக்கப்படுகின்றது.

தனது இறுதி மூச்சை நிறுத்தி, மீளாத்துயில் கொள்ளும் இந்தத் தாயின் வரலாற்றுப் பக்கங்கள் மிக நீண்டவையும் முக்கியமானவையு மாகும். யேர்மனிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உப அமைப்புகளாகத் திகழும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமூடாக, தாயக தேசத்தின் உறவுகளுக்கான ஜீவனோபாய ஆதாரச் செயற்பாடுகளில் தீவிரமாக தொண்டாற்றியவர். தமிழ்க் கல்விக் கழகமூடாக தமிழாலயத்தில் எமது பிள்ளைகளுக்கான தாய் மொழி விருத்தியின் சிறந்த ஆசானாக தன்னை அர்ப்பணித்தவர். தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் மன்கைம் நகரச் செயற்பாட்டாளராகவும் உணர் வோடு சேவையாற்றியவர்.

மதிப்புக்குரிய இந்தத் தாயாரின் தனிப்பட்ட அர்ப்பணிப்புக்களும், குடும்பத்தின் முழுமையான தியாகங்களும் தமிழ்த்தேசிய இனத்திற்கான வரலாற் றுப் பக்கங்களில் என்றும் உயிர்வாழும் என்பதில் ஐயமில்லை. இவருக்காக எமது தலைகளைச்சாய்த்து இறுதி வணக்கம் செலுத்தும் அதேவேளையில் எமது இனவிடுதலைக்கான பணிகளை இடைவிடாது தொடர்வோமென உறுதி கொள்வோமாக.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

**மாவீரர் பணிமனை**
**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
**யேர்மனி**

## கண்ணீர் காணிக்கை

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 23 - 04 - 1934 |  | 18 - 05 - 2022 |

### திருமதி. சிவகாமசுந்தரி தியாகராஜா

ஆண்டவனின் அழைப்புடனே
அத்தியடி பருத்தித்துறையில்
மலர்ந்த தாயே
காலக் கணிப்பீட்டின் அழைப்புடன்
பனி சிந்தும் தேசத்தில்
உதிர்ந்தீர் நீவீர்!
வானத்து தேவர்கள் உமை
வாழ்த்தி வரவேற்க
மண்ணுலக வாழ்வு போதுமென்று
நிறைவுடனே
விண்ணுலகம் சென்றனையோ
பொன் விரும்பும் தேசத்தில்
எம் மண்மானம் காத்த
மறத்தமிழ் மாவீரகள் தந்த
மறத்தாய் நீ அம்மா!
உலகாழும் இலக்கியங்கள்
உம் உதிரத்தில் உதிர்த்தவர்களால்
விளைவு கண்ட பெரும்தாய் நீ அம்மா!
முதுமையிலும் முனைப்புடனே
தமிழோடு வாழவேண்டும்
புகலிடத்துப் புதுப்பயிர்கள்
தமிழால் தழைத்தோங்க வேண்டும்
தமிழ் செய்தாய் மன்கைம்
தமிழ் ஆலயத்தில் நீ அம்மா!
விளைவும் கண்டீர் அறுவடையில்
வாழ்தலும் இறத்தலும்
இயற்கையின் நியதிகளாயினும்
வாழ்வியலில் வரலாறு படைத்தாய் தாயே!
வண்ணத் தமிழ் மண் பிறப்பெடுக்க
விழைவாய் உழைத்தாய் தாயே!
விளைவுவரும் உம் எண்ணம் நிறைவேறும்
காலம் கருத்தரிக்கும் கனவுகள் நனவாகும்
விண்ணகம் நீர் சென்றாலும்
விதைத்த புது நாற்றுகள்
விட்ட தமிழ் தொடரும்
மண்ணகத்தில் இருந்து
வாழ்த்தி வணங்கி விடைதந்து வணங்குகின்றோம்.
நீள் துயில் கொண்ட எம் பெருந்தாயே!

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
தமிழாலய நிர்வாகம் மன்கைம்

# இரங்கற் பகிர்விதழ்



23.04.1934
மண்ணுலகில்

18.05.2022
விண்ணுலகில்

## திருமதி சிவகாமசுந்தரி தியாகராசா

தமிழீழ தாயகத்தின் பருத்தித்துறை மண் பிறந்தே
தாயக விடுதலைக்கு தனயன்களை உவந்தளித்தே
வீரத் தாயாக வீறுடனே நடந்த எம் அன்னையவள்
விழிமூடித்துயில் கொண்டு இயற்கையுள் இணைந்தே
விடுதலையின் செயலாகத் துணையாக வாழ்வாரே!

தெள்ளெனத் தமிழேந்தித் துள்ளிடும் சோலையிலே
பேரன் பேத்திகளாய்க் கண்டே தாய்மொழி யறிவதனை
அள்ளியே ஊட்டிநின்ற அரும்பணி கொண்டே நின்று
பண்புடன் அன்பும் கொண்டே ஆற்றிய சேவையாலே
மன்கைம் நகரிலென்றும் மறையாது வாழ்வாய் தாயே!

வையகம் மீதிலே எம் தமிழீழ தேசத்தை ஏற்றிடவே
பார் போற்றும் போர்முனையில் களமாடி நின்றவர்க்கு
கைகொடுத்து நின்ற அன்னை கண்துயிலச் சென்றாரே
அண்ணன் வழிதொடர்ந்து தாய் மண்ணை மீட்டெடுக்க
வானிருந்து வாழ்த்தும் எங்கள் அன்னையை மறவோமே!

மான மறவர்களை மண் விடியலுக்காய் ஈந்தவரே
தமிழ் ஈழ நிலம்பிரிந்து வாழும் வேளையிலும்
தமிழ்த் தேசம் விடிவதற்கு வாழும் தேசத்திலும்
வாளாதிருக்காது தேசப் பணியாற்றிய அன்னையே
விழிநீர் சொரிந்தே நாம் விடைதருகின்றோம் தாயே!

அன்னையின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களோடும் ஆழ்ந்த இரங்கலைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

ஆழ்ந்த இரங்கலுடன்
மாநில மற்றும் கோட்டப் பொறுப்பாளர்கள்
றைன்லாண்ட்பாள்ஸ் மாநிலம் - தமிழர் ஒருங்கிணைப்புக்குழு

# இறுதி இரங்கல் வணக்கம்

தமிழீழம் ஆத்தியடி பருத்தித்துறை நகரைப் பிறப்பிடமாகவும் யேர்மனி எஸ்வெபிஸ் ஹால் நகரை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து அமரராகிவிட்ட திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு எமது இறுதி இரங்கல் வணக்கம்

தோற்றம் 23.04.1934



மறைவு 18.05.2022

நீரோட்டம் இல்லாத நதிக்கு பெருமையில்லை
போராட்டமில்லாத இனத்திற்கு விடுதலையில்லை.
என்ற எங்கள் தேசியத்தலைவரின் தன்மான
வரிகளுக்கு நீரூற்றி வளர்த்த இலச்சியத்தாய் அமரர்
திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களை நாம்
இழந்துவிட்டோம்.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் யேர்மன்
நாட்டில் மன்கைம் நகரத்தில் தன்னையும் ஒரு
தேசியச் செயற்பாட்டளாராக இணைத்துக்கொண்டு
விடுதலைக்காய் தொடர்ந்து பயணித்த அன்னையை
நாம் இழந்துவிட்டோம்.

தாய்மண் விடுதலைக்கான போராட்டத்தின்போது
சிறிலங்கா இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கும்
அச்சுறுத்தலுக்கும் மத்தியிலும் ஒரு தாயாக நின்று
போராளிகளுக்கு உணவு தங்குமிடவசதிகளை
ஏற்படுத்திக்கொடுத்தவர் பெண்ணாக விடுதலைக்காய்
பலம் சேர்த்தவர்,

தேசவிடுதலைக்காய் தன்னையும் தன்சந்ததியையும்
அர்ப்பணித்த ஓர் உன்னதமான ஊக்கசக்தியாக
ஒளிர்ந்த வீரத்தாயாவார். இத்தகைய தேசப்பற்று
நிறைந்த உன்னததாயை இழந்து வாடும்
குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்க்கும்
எமது இரங்கலை தெரிவிற்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

அன்னாரின் பூவுலக மறைவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இரங்கலுடன்
தமிழ்ப் பெண்கள் அமைப்பு - யேர்மனி

# இறுதி இரங்கல் வணக்கம்

தமிழீழம் ஆத்தியடி பருத்தித்துறை நகரைப் பிறப்பிடமாகவும் யேர்மனி ஸ்வெபிஸ் ஹால் நகரை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து அமரராகிவிட்ட திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு எமது இறுதி இரங்கல் வணக்கம்



தோற்றம்
23.04.1934

மறைவு
18.05.2022

தமிழீழ மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்த உறவொன்று பேச்சு
மூச்சின்றி விழிமூடித் துயில்கின்றது.
உறவுகளைத் தவிக்கவிட்டு வானுலகில் இணைந்துள்ளது.

ஆழ்கடல் தாண்டி வந்தே அலையலையாய் அலைந்தே
வாழ்வினை அமைத்து நல்லதோர் வசதிகள் கண்டபோதும்
முகவரி தமிழே எங்கள் மூச்சதுவென்றே உந்தன் மகவுகள்
தந்து நின்றே உயிர்த்தனைத் தமிழால் அன்றே
களப் பணி செய்ய எம்முன் தகவுடை மகவுகள் தந்தே
புலத் தமிழ் வாழ்தல் கண்டும் நீள்துயில் தகுமோ தாயே!

அன்னையே உன் மறைவு கேட்டு அணியணியாகி வந்து
ஆற்றுப் படுத்தலின்றி உறவுகள் கலங்குகின்றார்.
அம்மா என அழைத்தே அன்பு செய் மகவுகள் விழிநீரில் மூழ்கி
மூச்சிழந்து வாடுகிறார்.
பற்றுடை வாழ்வதனில் பேரன், பேத்திகளாய் இணைந்ததோர்
பித்துடையாய் இன்னும் புலம்புதல் அறியாயோ..

பிறந்தது இறக்குமென்பார் தோன்றிடில் மறையுமென்பார்
நியமது வாழ்வு என்றே நிற்காமல் ஓடிடுவார்
கனவது என்றே உன்னில் காலனே காட்டினானோ
விதிவழிப் பயணம் தானே மீட்டிடல் முடியாதன்றோ

சத்திய வாழ்வு தன்னில் இறையுடன் இணைந்தீர் தாயே
நித்திய வாழ்வில் ஆத்மா கொள்கவே சாந்தி.. சாந்தி..

அன்னாரின் பூவுலக மறைவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இரங்கலுடன்

**தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி**

தமிழாலயங்களின் ஒருங்கிணைப்பு நடுவம்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
23
.
04
.
1934



மறைவு
18
.
05
.
2022

## திருமதி. சிவகாமசுந்தரி தியாகராஜா

வீரத்தின் விளைநிலமாய் பருத்தித்துறை
அத்தியடியை பிறப்பிடமாக்கிய சுந்தரியே
தூரத்தில் எமைவிட்டு நின் வீரப் புதல்வரிடம் சென்றீரோ!

வாழ்க்கை எனும் ஓடத்தில் உயிர் உதிர்வு, பிரிவு
தவிர்க்க முடியாத ஒன்று என்றாலும்,
அறிவையும் ஆளுமையையும் ஆண்ட தாயாகியே
தேச விடுதலைக்காய் தேய்ந்த புதல்வர்களை ஈன்ற தாய்மையே!
தேம்பித் தேம்பி நிற்கின்றனர் நின் தேவிகள்

பன்முக ஆற்றலும் நின்முகம் சொன்னதே – தமிழாலயமதில்
பற்று வைத்துக் கற்றுத் தந்தவளும் நீதானே
உறவுகளின் உள்ளத்தில் உறைந்து
உணவளித்த கரங்கள் ஏனோ இன்று உறங்கலாயிற்று!

வேரோடி விழுதுகள் பரப்பிய விருட்சம் ஒன்று
பாரோடு பாதியில் போனதேனோ!
வானத்து நிலா போல் உலாவந்து, தாய் நிலத்திலும்
புலத்திலும் சேவைப்பதம் பதித்த கால்கள் தளர்ந்ததேனோ!

கண்முன்னே வாழ்ந்த காலக் கணக்கதனை முடிக்க
காலன்தான் கயிற்றதனை வீசியதேனோ!
நல்லவர்கள் பெயர் விளங்கும் அவனியிலே
உள்ளவர்கள் உன் பெயர் உரைக்குமே!

மண்ணோடு நின் பூதவுடல் மறைந்தாலும்
நின் புதல்வர்கள் ஈழ வரலாற்றில் படைத்த
வீரத்தினை வரலாறு மறக்காது! உங்கள் ஆத்மா இறைவன்
பாதங்களில் சாந்தி அடைவதாக.

கண்ணீர் அஞ்சலியுடன்
மன்கைம் வாழ் மக்கள்.


## கண்ணீர் அஞ்சலி-அமரர் திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா



அம்மா என்று அழைத்தோமே
அத்தனை அன்புடன் இருந்தோமே
கருவிலே எமை சுமக்காத அன்னையே
இதயத்தில் எமை சுமந்த தெய்வமே
அனாதையாக இருந்த எமக்கு
அன்புத் தாயாகவும்
மாமியாகவும் அம்மம்மாவாகவும்
எத்தனை உறவுகளின் வடிவங்களாய்
எல்லோரும் விரும்பும் நல்ல உள்ளம்
படைத்த எம் அம்மாவே
பெற்ற தாயைப் போல் பல கதைபேசி..
உங்களுக்கு பிடித்த மாதிரி இருந்தோமே அம்மா
அன்பினால் நீங்களும் ஆறுதல் அடைந்தீர்களே இப்போ
ஆறுதல் கூற யாருமின்றி தவிக்கிறோமே
உங்கள் உடல் இன்று அழிந்து போகும்
உங்கள் நினைவுகள் காலத்தால் அழியாத காவியமாகவும்
கண்களில் சிறந்த ஓவியமாகவும்
என்றும் எங்கள் இதயங்களில் சிறந்த அன்னையாகவும் வாழ்வீர்கள் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிராத்தனை செய்வோம்...
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

உங்கள் நினைவுகள் சுமந்த யோகேஷ் றஞ்சி பேரப் பிள்ளைகள்






## தியாகத்தாய்!..சிவகாமசுந்தரி மறைந்தார்!..

## மூன்று பிள்ளைகளை ஈழவிடுதலைப் போராட்டத்தில் பறிகொடுத்தவர்

## மண் சஞ்சிகையால் சர்வதேச பெண்கள் தினத்தில் கௌரவிக்கப்பட்ட பெண்மணி. (2021 பங்குனி இதழ் இலக்கம் 206)

## பிறப்பு 23.04.1934 இறப்பு 18.05.2022

தாயக விடுதலைப் போரில் மூன்று பிள்ளைகளை ஈந்த வீரத்தாய் இவர். தனது 8 பிள்ளைகளில் 3 பிள்ளைகளை ஈழவிடுதலைப் போரில் பறிகொடுத்துவிட்டு, கணவன் நோய்வாய்ப்பட்டு இறக்க, தன்னந்தனியாக நின்று அவரது இறுதிக்கிரிகைகளையும் செய்து முடித்துவிட்டுத்தான் 1998ம் ஆண்டில் யேர்மனிக்கு வந்து சேர்ந்தார்.
பருத்தித்துறை- புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட இவரின் பெயர் சிவகாமசுந்தரி தியாகராசா. இவரை எல்லோரும் அன்பாக சிவா, சுந்தரி, மொறிஸம்மா என அழைத்தனர். 1998ம் ஆண்டு யேர்மனிக்கு வந்து சேர்ந்த இவர் இங்கும் தமிழாலயம் என்னும் பாடசாலையில் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.
எத்தனையோ கொடுமைகள், வேதனைகள், துயரங்கள், உயிரிழப்புக்களைச் சந்தித்தும் மனம் துவழாமல் மன உறுதியுடன் இவ்வளவு காலமும் பயணித்திருக்கிறார் என்னும்போது இவரின வீர தீர மன உறுதியையும் கடின உழைப்பையும் சிந்தித்துப்பாருங்கள். தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் தமிழ் மண் மீதும் கொண்டுள்ள பற்றே காரணமாகும்.
இவர் தான் கடந்துவந்த கடினமான பாதைகளை எழுத்துருவில் பதிவாக்குவதற்காக "பெருநினைவின் சிறு துளிகள்" என்னும் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகத்தை வேண்டிப் படிப்பதன்மூலம் இந்த

வீரத்தாயின் சரித்திரப் பதிவுகளைப் படித்தறியலாம்.
இப்படியான வீரத்தாய் தனது பிள்ளைகளையும் கவிஞர்களாகவும் ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், சமூக சேவையாளர்களாகவும் சமூகப் பற்றாளர்களாகவும் ஆக்கியிருப்பது போற்றத்தக்க விடையமாகும். இப்படிச் சிறப்புமிக்க தாயை சர்வதேச மகளீர் தினத்தில் மண் சஞ்சிகையினரும் வாழ்த்திப் பாராட்டி, (மண் இதழ் -2016 பங்குனி-2021) கௌரவித்துச் சிறப்பித்திருக்கிறார்கள்.

யேர்மனியின் பிரபல எழுத்தாளர் திருமதி சந்திரவதனா செல்வக்குமாரனனின் தாயாரான இவர் பெருவிருட்சமாக போற்றப்படும் ஒப்பற்ற தாயாவர். இத்தாய் எம்மைவிட்டுப் பரிந்தமை தமிழுலகத்திற்குப் பேரிழப்பாகவே நோக்கப்படுகின்றார். மண் சஞ்சிகையின் வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவர்களை வணங்குகின்றோம்!

ஓம் சாந்தி!...ஓம் சாந்தி!..

ஆசிரியர் - மண் சஞ்சிகை - யேர்மனி - 19.05.2022

***வைரமுத்து சிவராசா***
*´மண்` சஞ்சிகை ஆசிரியர்*

# பூக்களோடும்,புத்தகங்களோடும் பேசியவர் பெரும் பூகம்பங்களைக் கடந்தவர்! அமரர் திருமதி.சிவா.தியாகராஜா!

*நாம் ஒவ்வொருவரும் பிற்காலத்தில் வாழ்வில் பல இடங்களைப் பார்க்கவில்லை, பல செல்வங் களைச் சேர்க்கவில்லை என மனம் ஏங்குபவர்களா கவே இருக்கின்றோம். இவற்றில் முக்கியமாக ஒன்று நாம் விரும்பும் பலரை வாழ்வில் சந்திக்காமலே கடந்து விடுகின்றோம். அப்படி நான் கடந்து விட்ட ஒருவருவரே அன்னை சிவகாமசுந்தரி.*

*வெற்றிமணி மகளிர் தின சிறப்பிதழில் (01.03.2021) "பெருநினைவின் சிறு துளிகள்" எனும் அவரது நூலின் விமர்சனம் (பக்கம்-225 எழுதி யிருந்தேன். அதில் பி.குறிப்பு என இந்நூலாசிரியர் வெற்றிமணியின் நீண்டநாள் வாசகி. அவர் இந்தச் செய்தியையும், தன் கரத்தில் தாங்கி வாசிக்கும் வேளை, 'தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி' என்ற வெற்றிமணி வாசகம் அவர் உள்ளத்திலும் ஒலிக்கும் பேறு பெறும் என்று குறிப்பிட்டு முடித்திருந்தேன்.*

*ஒரு பிள்ளைக்கு தாய், தான் செய்ய வேண்டியவற்றை எப்படி எல்லாம் செய்வாள் என்பது ஒவ்வொரு பிள்ளைக்கும் தெரியும். ஆனால் பிள்ளைக்கு தாயின் மறைவிற்குப் பிறகு எவ்வளவு தாய்க்கு செய்திருந்தாலும், அட நான் அம்மாவிற்கு இதனைச் செய்து இருக்கலாமே, இன்னும் கூடுதலாக அவருடன் என் பொழுதுகளைக் கழித்திருக்கலாமே என இன்னும் இன்னும் என பல எண்ணங்கள் வந்து மனதோடு பேசும்.*

*ஒரு கட்டுரையை எழுதிய பின் பலதடவை வாசிப்போம். அப்போது இது தேவையில்லை என*

*நினைப்பவற்றை வெட்டுவதும் அட இதனைச் சேர்க்க மறந்து விட்டேன் என சிலவற்றை சேர்ப்பதுவும் போல, வாழ்வும் அமைந்துவிட்டால், அம்மாவுடன் எத்தனையை இன்னும் பேசியிருக் கலாம், எத்தனையை பேசாமல் விட்டு இருக்கலாம் என்று எண்ணத் தோன்றும்.*

*அன்று வெற்றிமணியில் நான் எழுதியதை அவர்கள் வாசித்தார்கள். அட இன்னும் கொஞ்சம் எழுதியிருக்கலாமே, வாழ்வில் ஒரு முறை சந்தித்து இருக்கலாமே என்ற ஏக்கம் எனக்குள்ளும் எழுகின்றது.*

*ஒருவரின் மறைவு அவரை நினைப்பவர்கள், மறையும் வரை மறையாது. அவர்கள் வாசித்த புத்தகங்கள், அவர்கள் வளர்த்த மரங்கள், இவற் றுடன் தினம் நாம் பேசிக்கொண்டும் இருக்கலாம்.*

*ஒரு காதலன், காதலி, அவர்கள் எழுதிய காதல் கடிதங்களை திரும்பத் திரும்ப அவளாகியும், அவனாகியும், வாசித்து அணு அணுவாய் உயிரில் கலப்பது போல் நானும் அவர் பற்றி அன்று நான் எழுதிய கட்டுரையை நானே! மீண்டும் மீண்டும் வாசித்து இரசித்தேன். பிரியமானவர்களது இழப்பு இப்படி பித்துப்பிடித்தவர்கள் போல் பல செயல் களைச் செய்ய வைக்கும். எனக்கும் இந்தப்பித்து உண்டு எனக் கூறுவதில் எந்தத்தயக்கமும் இல்லை.*

*வீரத்தாயின் நினைவு மலரில் வெற்றிமணியும் ஒரு இதழ் விரிக்க இடமளித்த அவர் குடும்பத் தினர்க்கு நன்றி.*

*நீங்காத நினைவுடன்,*
***மு.க.சு.சிவகுமாரன்***
*(பிரதம ஆசிரியர் வெற்றிமணி பத்திரிகை யேர்மனி) 09.02.2023*

# இரங்கற் செய்தி

எமது வடலண்டன் தமிழ்ப்பாடசாலை முன்னாள் நிர்வாக அங்கத்தினரும். முன்னாள் தலைவரும், தற்போதைய எமது OPTA நிறுவன செயலாளருமான சந்திரா அவர்களின் தாயார் திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின் மரணச் செய்தி அறிந்து வருந்துகின்றோம்.

தன் மூன்று மகன்மாரை நாட்டிற்காக மாவீரர் களாகக் கொடுத்த இந்தத் தாய் இறந்த தினமும், எம் தமிழ் மக்களால் மறக்க முடியாத நினைவுநாள் ஒன்றாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாக உள்ளது

கடந்தவருடம் இத்தாய், எம்நாட்டு போராட்ட வரலாற்றோடு ஒட்டி, தன் மூன்று மாவீர மகன் மாரினதும் அவர்களின் நண்பர்களினதும் நினைவு களை, ஒரு நூலாக எழுதி வெளி விட்டிருந்தார். அதை வாசித்ததும் உடனடியாக அது பற்றி ஒரு பதிவை, சந்திராவுடன் பகிர்ந்திருந்தேன். தனது தாயார் அதைப் படித்தும் கேட்டும் மகிழ்ந்ததாகக் கூறி, சந்திரா தனது முகப் புத்தகத்திலும் பகிர்ந்திருந் தார். நாமெல்லோரும் வாசிக்க வேண்டிய, ஓர் வீரத் தாயின் அனுபவ வரலாறு அது.

அந்த வீரத்தாயின் மரணம் எம்மெல்லோரிற் கும், எம் தமிழ்ஈழ விடுதலையே வேண்டி நின்ற எம் ஈழத்தமிழ் மக்கள் அனைவரிற்கும் ஓர் பேரிழப்பாகும்.

ஒன்றல்ல- இரண்டல்ல- தன் மூன்று வீரப் புதல்வர்களை, எம் தாய் நாட்டின் விடுதலைக்காக மாவீரர்களாகக் கொடுத்த இந்த வீரத் தாய்க்கு தனிப்பட்ட முறையிலும், என் குடும்பம் சார்பாகவும், எமது OPTA தாபனம் சார்பாகவும், எம் வீரவணக்கத் தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இந்த வீரத்தாயை இழந்து நிற்கின்ற மகள் மார், மகன், மற்றும் எம் நாட்டின் விடுதலைக்காய் உழைத்திட்ட முன்னாள் விடுதலைப் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடிகளில் அமைதி கண்டிட பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி - ஓம் சாந்தி - ஓம் சாந்தி.*

**வேந்தனார் இளஞ்சேய்**
*தலைவர் - OPTA*
*18.05.2022*

*வீரத்தாயவள் மறைவு கேட்டு*
*வேதனை அடைந்தோம் நாம்*
*ஈழத்தாயவள் விடுதலை வேண்டி*
*ஈன்றபுதல்வர் மூவரை மாவீரராக்கி*
*இத்தாயவள் செய்திட்ட தியாகம்*
*ஈடில்லா இழப்புகள்பல தாங்கினாள்*
*தூயவள் ஆன்மா அமைதிகண்டிடும்*
*தீரர்கள் தியாகம் வென்றிடுமோர்நாள்.*

***-OPTA***
*London*



இதய அஞ்சலி
பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை
வதிவிடமாகவும் கொண்ட
அமரர்.சிவகாமசுந்தரி தியாகராசா
தோற்றம் :- 23.04.1934 மறைவு :- 18.05.2022
அவர்கள் 18.05.2022 அன்று காலமானார்
எமை விட்டுப்பிரிந்த எங்கள் அம்மாவிற்கு
இதயம் உருகும் கண்ணீர் அஞ்சலிகள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
கண்ணீருடன்...
பிள்ளைகள் , மருமக்கள் , பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்




"உண்மை, நேர்மை, ஒழுக்கம்"
உதவும் இதயங்கள் நிறுவனம் ஜெர்மனி
Helping Hearts Foundation Germany
கண்ணீர் காணிக்கை
பிறப்பு
23-04-1934
இறப்பு
18.05.2022
நாட்டுப்பற்றாளர் சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின்
31 வது நாள் நினைவு தினம்
பருத்தித்துறை, ஆத்தியடி.பிற்கால வதிவிடம்- ஜேர்மனி.
Re No : GA 3484 Sri Lanka) | Re.No : VR.460552 Helping Hearts e.V Germany,Swiss,UK
Website : helpingtamil.com / E-Mail : helpinghearts2013@gmail.com / Tp : 00491772061431

*நான் என் வாழ்வில் சந்தித்த பொறுமைசாலியான வரும், இன்னொருவரை வார்த்தையால் கூட காயப் படுத்தாதவரும் இவரே.*

*நல்லவர்கள் இவ்வுலகை விட்டுப் போனாலும் எல்லோருடைய மனதிலும் வாழ்வார்கள்.*

***-சயந்தனி பாஸ்கரன்***

*அம்மாவை உயிரோடு சந்தித்து அளவளாவி அவரது வீர வாழ்க்கை பற்றியும் போராட்ட வாழ்வு பற்றியும் நேரில் அறியும் பாக்கியம் பெற்ற பேற்றை எண்ணும் போது அவர் மறைவின் துன்பத்தையும் மீறி மனதில் ஒரு உத்வேகம் எழத்தான் செய்கிறது.*

*மறைவு துன்பத்தைத் தந்தாலும் மறைந்த தினம் ஏதோ ஒன்றை உணர்த்தி நிற்கிறது. தமழீழம் வளர உரமாக்கப்பட்ட மக்களோடு என் ஆத்மாவும் இணைய வேண்டும் என்று இந்த நாளைத் தேர்ந் தெடுத்து இணைந்தவர் போல் தெரிகிறார்.*

*பிள்ளைகளைப் பெற்று அவர்களைத் தமிழின விடுதலைக்காக மாவீரர்களாக்கிய அந்த அன்னை யின் ஆன்மா சாந்திபெற வேண்டுகிறேன்.*

*அன்னையைப் பற்றி அறியாதவர்கள் அறிவதற்கு மனஓசை வெளியீடான, சிவா தியாகராசா அவர்களின் "பெருநினைவின் சிறு துளிகள்" நூலில் இருந்து படித்து அறியலாம்.*

***-மகேந்திரராசா பஞ்சலிங்கம்***

*வதனா அக்கா, உங்க அம்மாவின் நற் பண்புகளை அறிந்தவர்களில் நானும் ஒருத்தி என்கிறபடியால் உங்க அம்மாவின் இழப்பை என்னால் உணர முடிகிறது. அம்மா என்கிற ஒற்றை தெய்வத்துக்கு ஈடு இணை இல்லை. என்றும் உங்கள் மனங்களில் மட்டுமே வாழும் தெய்வமாகி விட்டா. அம்மாவின் ஆத்மா நிம்மதியாக உறங்கட்டும்.*

***-இராஜேஸ்வரி சிவராஜா***

*அம்மா, நம் மண்ணின் வீரத்தாய் மட்டும் அல்ல...*
*அவர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஒரு சகாப்தம்*
*அல்லவா. May her good soul rest in peace.*

***-Lazarus Einstien***

*She's a wonderful woman who loves her cultural values of her native wadamarachchi soil. Once I'm fortunate enough to have a conversation with her in messenger and she asked me 'appa nee yaru.. Unakku ennai theriuma', I got excited about this and said, Amma everyone who loves Thamileelam well known as you are a beloved mother of our great warriors and patriots in our soil. She laughed so hard and told me 'aiya Naan en mannai niraiyewe thavari vitten. It was son, I missed my soil so much. I love to go there once again. I was so saddened. Yes, Amma, you will be with us in our homeland.*

***-Lazarus Einstien***

*அம்மாவுடன் இரண்டு தடவைகள் தொலைபேசியில் கதைத்திருக்கிறேன் அக்கா. அந்தக் குரல் என்றும் மறக்காது.*

***-ஆதிலட்சுமி சிவகுமார்***

*ஆழ்ந்த இரங்கல்கள். அண்மையில் தான் அம்மாவின் படம் பார்த்தேன். நாங்கள் சிறிய வயதில் கண்ட உங்கள் அம்மாவின் நினைவு இன்னமும் இருக்கிறது. ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் உங்களுக்கு என் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.*

***-அமுதாஞ்சலி ஆனந்தகுமார்***

*மனம் மிகவும் வேதனையாக உள்ளது. மூத்தமாமி அன்பு கருணை பாசம் தாய்மை எல்லாம் ஒருங்கே நிறைந்த ஒரு உயர்ந்த உன்னத பெண்மணி. அவவிற்கு இணை இவ்வுலகில் யாருமில்லை. மூத்த மாமியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.*

***–விசாகுலன் குமாரசாமி***

*அம்மா ஓர் பேராற்றல்,*
*அம்மா ஓர் முழுமை...* ***–மதீஸ் மகிபாலன்***

*அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் எனக்கும் அன்னையோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. உறுதி மிக்கவர். தன்னுடைய பிள்ளைகள் சிலரை விடுதலைத்தீயில் ஆகுதியாக்கி விட்டுத் துவண்டுவிடாத துணிவுமிக்கவராகவே நான் அவரைக் காண்கின்றேன். இயற்கையுள் யாக்கை கலந்துவிடப் புகழுடலாய் வாழும் அன்னையின் கனவு நனவாகட்டும். அகமேந்திய இரங்கல் உரித் தாகுக.*

***–நொச்சி***

*அம்மாவையும் குடும்பத்தினரையும் ஓரளவுஅறிவேன். பக்கத்து ஊர், மற்றும் எனது சகோதரனும் அம்மா வின் மகன்மாரில் ஒருவரும் நெருங்கிய நண்பர்கள். ஒன்றாக பலகாலம் கடமை புரிந்தவர்கள்.*

*அம்மா உங்களினதும் உங்கள் குடும்பத்தினரதும் பங்களிப்புகளுக்கு சிரம் சாய்த்து நன்றி சொல்லிக் கொள்கின்றோம். படைப்பில் இருந்தவை எதுவுமே நிரந்தரமாக மறைவதில்லை என்பதில் நம்பிக்கை உள்ளவன் நான். ஏதோ ஒரு நேரத்தில் ஏதோ ஒரு வடிவில் உங்கள் நினைவுகளின் நிஜங்களை காண்பீர்கள் அம்மா. அதுவரை எங்கிருந்தாலும் நலமாகவும் சந்தோஷமாகவும் இருங்கள் அம்மா...*

***–சாமானியன்***

*மூன்று பிள்ளைகளயும், நாட்டுக்காகக் கொடுத்து விட்டு... அந்த அம்மா ஜேர்மனியில்... ஒரு நகரத்துக் கும் பொறுப்பாளராக இருந்துள்ளார் எனும் போது, அவர் தாய்நாட்டை எவ்வளவு தூரம் நேசித்துள்ளார் என்று அறியலாம். அவர் இயற்கை எய்திய திகதி கூட... மே 18 என்பது, ஆச்சரியமான விடயம்.*

***-தமிழ் சிறி***

*அறிந்ததும் நெஞ்சம் ஒரு கணம் விறைத்தது. ஆயிரம் ஆயிரம் அம்மாக்களிடம் தனியாக ஒளி வீசியவர். அந்த ஒளி பூமியில் இருந்து அகன்றாலும் நினைவு கள் எண்ணங்கள் மறையாது. அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன். உங்கள் துயரில் நானும் ஒருவனாக..*

***-தம்பி நந்தன்***

*செய்தி அறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். அம்மா எண்ணற்ற துன்பங்களைத் தாங்கிய சுமைதாங்கி யாக எத்தனை காலம் தான் வாழுவா. அமைதியாக உறங்கட்டும். அவவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை நாம் அனைவரும் வேண்டுகிறோம். அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித் துக் கொள்கிறோம்.*

***-மாலினி சிவஞானசுந்தரம்***



வெற்றிமணியின் இதய அஞ்சலி!

தியாகத்தாய்!

திருமதி.சிவா தியாகராஜா (சிவகாமசுந்தரி)

அவர்களின் மறைவிற்கு வெற்றிமணியின் அஞ்சலி!


பிறப்பு 23.04.1934 (புலோலி –பருத்தித்துறை) – இறப்பு 18.05.2022 – (யேர்மனி)

பல இடிதாங்கிய மடி ஒன்று நாம் கடந்துவந்த காலத்தை படிப்பதற்கும்.அவற்றை எதிர்கால சந்ததியினர் அறிவதற் குமான ஒரு சிறந்த படைப்பான பெருநினைவின் சிறு துளிகள் எனும் நூலைத்தந்த, திருமதி.சிவா தியாகராஜா. (சிவகாமசுந்தரி) மறைந்தார்!. மூன்று பிள்ளைகளை ஈழவிடுதலைப் போராட்டத்தில் பறிகொடுத்தவர், பிரபல எழுத்தாளர் திருமதி சந்திரவதனா செல்வகுமாரனின் தாயாரும், வெற்றிமணியின் நீண்டகால வாசகியுமான அன்னாரின் மறைவிற்கு, வெற்றிமணி பத்திரிகையின் வாசகர்கள், எழுத்தாளர்கள்,சார்பில் அன்னாருக்கு அஞ்சலி செய்கின்றோம்.

வெற்றிமணி அன்னாருக்கு இதய அஞ்சலி செய்கிறது.

*சில அம்மாக்கள் எல்லோருக்கும் அம்மாவாகும் சிறப்பைப் பெறுகிறார்கள். அம்மா நீங்களும் அந்த வரிசையில்.*

***-மு.க.சு.சிவகுமாரன்***



*தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளர்*
*திரு. சிறீ ரவீந்திரநாதன் (திரு. சிறீரவி) அவர்கள்*
*நாட்டுப்பற்றாளர் திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின்*
*திருவுருவப்படத்தை சிவகாமசுந்தரி அவர்களின் மகள் சந்திரவதனா*
*அவர்களிடம் கையளித்த போது*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 23.05.2022)*



*தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்துலகத் தொடர்பகத்தால்*
*நாட்டுப்பற்றாளர் மதிப்பளிப்பு வாசிக்கப்பட்டு, தமிழீழத் தேசியக்கொடி*
*சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின் மகள்*
*சந்திரவதனா அவர்களிடம் கையளிக்கப்பட்ட போது*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 23.05.2022)*

# வீரவணக்கம்



## நாட்டுப்பற்றாளர்
## சிவகாமசுந்தரி தியாகராஜா
**(பருத்தித்துறை, யாழ்ப்பாணம்)**
**23.04.1934 – 18.05.2022**

தமிழீழத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் போராளிகளுக்கான காப்பரணாகவிருந்து உணவு, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விடுதலைப் போராட்டத்திற்குப் பலம் சேர்த்தது மட்டுமல்லாது புலம்பெயர்ந்து ஜேர்மன் நாட்டில் மன்கைம் நகரத்தில், தன்னையும் ஒரு தேசியச் செயற்பாட்டாளராய் இணைத்துக்கொண்டு விடுதலைக்காகத் தொடர்ந்து பயணித்த சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின் தேசப்பற்றுமிக்கச் செயற்பாட்டிற்காக "**நாட்டுப்பற்றாளர்**" என மதிப்பளிப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள்.**



*தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்துலகத் தொடர்பகத்தால் நாட்டுப்பற்றாளர் மதிப்பளிப்பு வாசிக்கப்பட்டு, நாட்டுப்பற்றாளர் திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின் மகள் சந்திரவதனா அவர்களிடம் கையளிக்கப்பட்ட போது (ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 23.05.2022)*



அனைத்துலகத் தொடர்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

20.05.2022

**சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு**
**''நாட்டுப்பற்றாளர்'' மதிப்பளிப்பு.**

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஜேர்மன் நாட்டில் மன்கைம் நகரத்தில், தன்னையும் ஒரு தேசியச் செயற்பாட்டாளராய் இணைத்துக்கொண்டு விடுதலைக்காகத் தொடர்ந்து பயணித்த சிவகாமசுந்தரி ஆசிரியர் என்று பலராலும் அறியப்பட்டவரை 18.05.2022 அன்று நாம் இழந்துவிட்டோம்.

தமிழீழ தேசம் விடுதலைக்காகப் போராடுகின்றபோது, பல அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் ஒரு தாயாக எமது விடுதலைப்போராட்டத்திற்கு எத்தகைய பங்களிப்பை வழங்கவேண்டும் என்பதை நன்குணர்ந்து செயற்பட்டவராவார்.

நெருக்கடியான இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் போராளிகளுக்கான காப்பரணாகவிருந்து உணவு, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விடுதலைப்போராட்டத்திற்குப் பலம் சேர்த்தவராவார்.

தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்தபோதும், எமது மக்களின் விடுதலைக்காகவும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காகவும் தொடர்ந்தும் செயற்படவேண்டும் என்பதற்காக தேசிய செயற்பாட்டாளராகத் தன்னை இணைத்துக்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது மட்டுமல்லாது, எமது மாணவர்களின் தாய்மொழிக் கல்வி வளர்ச்சிக்காகக் கல்விக்கழகத்தின் ஊடாகத் தமிழாலயத்தில் இணைந்து நீண்டகாலம் செயலாற்றிய நல்லாசானாவார்.

மாவீரர்களின் தியாகங்களையும், தாயகமக்களின் விடுதலை அவாவையும் தன்னுள்தாங்கித் தொடர்ந்தும் அர்ப்பணிப்போடு தேசியப்பணியாற்றிய இவரை நாம் இழந்துவிட்டோம். அன்னாரின் இழப்பு தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கும் இவரிடம் கல்விகற்ற மாணவர்களுக்கும் குடும்பத்தினரிற்கும் பேரிழப்பாகும். இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்வதுடன் சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின் தேசப்பற்றுமிக்கச் செயற்பாட்டிற்காக **"நாட்டுப்பற்றாளர்''** என மதிப்பளிப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

**''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''**

அனைத்துலகத் தொடர்பகம்.
தமிழீழ விடுதலைப் புலிகள்.







## *நாட்டுப்பற்றாளர்*
## *சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களுக்கு தேசியக்கொடி போர்த்தி மதிப்பளிப்பு*

*நாட்டுப்பற்றாளர். திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்கள், பிள்ளைகள் மாவீரர் கப்டன் மொறிஸ், மாவீரர் கப்டன் மயூரன், மாவீரர் பிறேமராஜன் மாஸ்டர், பேரனான மாவீரர் லெப்டினன் பரதன் பிறேமராஜன், ஆகியோரின் தாயாராகவும், பேத்தியாராகவும் வாழ்ந்து, தேச விடியலுக்காக தம்மை அர்ப்பணித்த பெருமாட்டி யாவார். அத்தோடு தேசத்தில் வாழ்ந்த காலத்தில் வவுனியாவில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத் தில், இராணுவ நெருக்கடியின் மத்தியிலும், தேச விரோத அணியினரின் முகாமிற்கு முன் வீட்டில் இருந்துகொண்டு, தமிழீழ புலனாய்வு போராளிகளை உபசரித்து இராணுவ முற்றுகைக்குள்ளும் உணவூட்டி பாதுகாத்த வீரத்தாயாவார்.*

*அத்துடன் தனது போர்க்காலஅனுபவங்களின் நினைவுப்பதிவாக 'பெருநினைவின் சிறுதுளிகள்' என்ற புத்தகத்தை எழுதி தனது எழுத்தாற்றல் மூலம் தேசப்பதிவை பதித்துள்ளார். புலம் பெயர்ந்து ஜேர்மனிய நாட்டில் தஞ்சம் புகுந்த வேளையில் நம் சிறார்களுக்கு தாய்மொழிக்கல்வி அவசியம் என்பதை உணர்ந்து மன்கைம் தமிழாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றியதோடு, மன்கைம் நகரத்தில் பிரதிநிதி யாகவும் செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். இத்தகைய தேசப்பற்று நிறைந்த உன்னதத் தாய்க்கு தமிழீழத் தேசியக்கொடி போர்த்தி மதிப்பளிக்கப் பட்டது.*

***அனைத்துலகத் தொடர்பகம்***
***தமிழீழ விடுதலைப் புலிகள்***



ஓவியம்: சிந்து




*சிவா தியாகராஜா அவர்களது*
*சுய அனுபவ நினைவுகள் தொகுக்கப்பட்டு*
*'பெருநினைவின் சிறுதுளிகள்' என்ற நூலாக*
*2020ம் ஆண்டு மார்கழி மாதம் அவர் வாழ்ந்து*
*கொண்டிருந்த யேர்மனி நாட்டில் வெளியாகியிருந்தது.*

*அந்நூல் தொடர்பான*
*சிலரது வாசிப்பனுபவங்களும்*
*அவர்களது கருத்துக்களும்...*

## Memories Linger On

-C S Lakshmi

*Peru Ninaivin Siru Thulikal*
(Some Drops from a Vast Memory)
Author: Siva Thiyagarajan
Publisher: Manaosai Verlag, Germany
Year: December 2020
No. of Pages: 84
Price: Not priced

*Comrade Amma: Makalin Paarvaiyil Maithili Sivaraman*
(Comrade Mother: Maithili Sivaraman
Through the Eyes of Her Daughter)
Author: Kalpana Karunakaran
Publisher: Bharathi Puthakalayam, Chennai
Year: 2018
No. of Pages: 64
Price: Rs.50

*Mecchiyunai: Thi. Janakiramanaip Patri Avar Magal*
(When You Are Appreciated:
Thi. Janakiraman's Daughter on Him)
Author: Uma Shankari
Publisher: Uma Shankari, Hyderabad
No: of Pages: 80
Price: Rs.150



**Sivagamasundari or Siva as she was called,** is the mother whose two sons became martyrs in the cause of Tamil Eelam. Her eldest son was a teacher and a poet who got caught in an army attack and lost his left leg and left hand and had to be hospitalised. His passionate poems on freedom for the Tamils were aired on the LTTE radio broadcasts and were recited in many poetry meetings. While his mother and father were in Vavunia the son was in Vattappalai. And a huge war was going on in the area between the two cities. Meanwhile, the father passed away.There could be no communication and it was the LTTE cadres who became the bridge of communication between the parents and the son. The mother was persuaded to come to Germany by her other children and her son died without seeing her. The mother Siva, whose full name is Sivagamasundari, was called Siva, Sundari and as Morrisamma by many who were friends of her son "Morris" (real name Bharathan) who died fighting the Indian army in 1989. Her second son was called Saba in the LTTE and his real name was Mayuran. And many called her Mayuranamma. Saba (Mayuran) also died while fighting, in 1993. This book is about the memories of others of Siva and her own memories of being in Sri Lanka while two of her sons had joined the LTTE and one of them was writing poems of resistance. Her memories of what it felt to lose Morris are very movingly written. Recalling his last visit to Paruthithurai when she had gone there from Jaffna, where she had shifted due to the harassment of the Indian army, she describes the visit in great detail and also how she walked alone to the army camp to ask for his body.

"…The next day my daughter and I along with Master

SNL 41 SUPPLEMENT BOOK REVIEWS

1. Memories Linger On: C S Lakshmi reviews three different kinds of memoirs. Peru Ninaivin Siru Thulikal (Some Drops from a Vast Memory) by Siva Thiyagarajan, Comrade Amma: Makalin Paarvaiyil Maithili Sivaraman (Comrade Mother: Maithili SivaramanThrough the Eyes of Her Daughter) by Kalpana Karunakaran and Mecchiyunai: Thi. Janakiramanaip Patri Avar Magal (When You Are Appreciated: Thi. Janakiraman's Daughter on Him) by Uma Shankari.

**Sivagamasundari or Siva as she was called,** is the mother whose two sons became martyrs in the cause of Tamil Eelam. Her eldest son was a teacher and a poet who got caught in an army attack and lost his left leg and left hand and had to be hospitalised. His passionate poems on freedom for the Tamils were aired on the LTTE radio broadcasts and were recited in many poetry meetings. While his mother and father were in Vavunia the son was in Vattappalai. And a huge war was going on in the area between the two cities. Meanwhile, the father passed away.There could be no communication and it was the LTTE cadres who became the bridge of communication between the parents and the son. The mother was persuaded to come to Germany by her other children and her son died without seeing her. The mother Siva, whose full name is Sivagamasundari, was called Siva, Sundari and as Morrisamma by many who were friends of her son "Morris" (real name Bharathan) who died fighting the Indian army in 1989. Her second son was called Saba in the LTTE and his real name was Mayuran. And many called her Mayuranamma. Saba (Mayuran) also died while fighting, in 1993. This book is about the memories of others of Siva and her own memories of being in Sri Lanka while two of her sons had joined the LTTE and one of them was writing poems of resistance. Her memories of what it felt to lose Morris are very movingly written. Recalling his last visit to Paruthithurai when she had gone there from Jaffna, where she had shifted due to the harassment of the Indian army, she describes the visit in great detail and also how she walked alone to the army camp to ask for his body.

"...The next day my daughter and I along with Master

Thirunavukkarasu went to take the body of Morris from the Mandigai hospital. Post master Mahendar also joined us.

The army had issued strict orders to the hospital that without its permission his body cannot be taken by anyone.

I must have my son's dead body.

I got ready to go the Mandigai army camp to get permission to receive my son's body. My daughter Chandra was very anxious about my going there by myself. Everyone was scared that the army may harm me. They were hesitant to send me alone. I calmed down everyone and began to walk towards the army camp.

I could clearly see the guns at the army Sentry Points being pointed towards me. I understood well that in the next few minutes anything could happen. But some force that was activating me had taken hold of me. I was walking towards the camp ready to face anything. Even before I had walked half the distance I saw army commanders awaiting me at the entrance.

When I reached the entrance I told them, "I am the mother of Morris."

That was it. An army commander hurriedly came towards me and held me by the hand and took me in and made me sit on a chair. They prepared tea and served me hot tea. Three of them who looked like they held high positions in the army came and bowed before me. Then they told me, "Amma… your son is a great person of valour. Seeing his capabilities, all these days we had assumed that he was an elderly person. We could not believe it when we came to know that he was such a young person. He was a good man. We understand that people love him because he is such a good man. You must be proud to have given birth to such a valorous and courageous boy. It is our duty to pay our respects to you. You are a valorous mother. We salute you…." They spoke in English and folded their hands before me with respect.

I could not believe that moment.

I began to shiver. All my frozen emotions came up in waves. Tears blinded my eyes! The courage that I had held on for so long got scattered like clouds.

I stood up. I could not see the road through my tears. I did not wipe those tears. I started walking with them towards my son's dead body." (p.26)

Through such notes and vignettes the book is able to bring the image of Siva, the mother of three martyrs, before our eyes.

*எழுத்தாளர் அம்பை (C.S.Lakshmi)*

# இது தமிழர்தேசத்தின் வரலாற்றின் பதிவு

*என்னை மெய்சிலிர்க்கவும், மேனி நடுங்கவும் வைத்திருக்கும் எழுத்து. ஒரு வீரத்தாயின் நெஞ்சுக் குள் அடித்துப் புரளும் பெருங்கடலின் சிறு துளி இது. இத்துளிக்கே இத்தனை செறிவு எனில், நினைவுகளின் கடல் பெருக்கெடுத்தால்....... இந்த உலகம் ஒரு பிரளயமாகிவிடக் கூடும்.*

*ராஜன்..... மொறிஸ்..... சபா...... ஒவ்வொரு வரியிலும் இழையோடும் பற்றும் பாசமும் உயிரின் துடிப்பும்... ஏக்கமும்..... கடந்து வந்தவர்க்கே புரியும்.*

*இது வெறுமனே ஒரு தாயினதும் தனயர்களதும் கதையல்ல. பெற்றவயிற்றிலிருந்து பெருக்கெடுக்கும் துயரம். எந்தக்காலத்தாலும் ஆற்ற முடியாத புண்.*

*இது தமிழர்தேசத்தின் வரலாற்றின் பதிவு. ஈழத்தாய்மார் எத்தனையோ பேரின் கதைகளின் துளி.*

*பதினெண்தலைப்புகளின் ஒவ்வோர் வரிகளும் மனதை வலிக்கச் செய்கின்றன. உறக்கத்திலும் விடாமற் துரத்துகின்றன.*

*பிள்ளைகளை தாய்நாட்டிற்காக ஒப்புவித்து விட்டு, இன்னமும் அதே தேசத்தின் கனவையும் தாங்கிக்கொண்டு, பிள்ளைகளின் நினைவுகளையும் சுமந்துகொண்டு வாழுகின்ற தாய். தன்னை வருத்தும் வலிகளையும் மீறி, அவற்றைப் பதிவாக்கியிருக் கிறார். இத்தனை காலமும் சேர்த்து உருட்டித்திரட்டி வைத்திருந்த மனச்சுமையை எழுத்தாக்கியிருக்கிறார்.*

*இந்திய அமைதிப்படையினரின் காலத்தில் நாங்கள் பட்டுக் கலங்கிய வாழ்வின் சாட்சியாகவும் இவர் இருக்கிறார்.*

*ஒரு தாய் தன்பிள்ளைக்கு மட்டும் தாயாக இல்லாமல், தன்பிள்ளையோடிருக்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும் தாயாக இருந்தார், இருக்கிறார் என்பது போற்றக்கூடியது.*

*விடுதலை வரலாற்றின் வழிநெடுகிலும் இப்படியான தாய்மாரின் வீரமும், விடுதலை உணர்வும், பற்றுக்கோடுகளும் பரவிக்கிடக்கின்றன.*

*இந்தத் தாய் சிவா தியாகராஜா அவர்கள் என் அன்புக்குரிய சந்திரவதனா அக்காவினதும், சந்திராவினதும் தாயாரும் கூட.*

*இந்தப் புத்தகம் எல்லோரையும் சென்றடைய வேண்டும். திருமதி. சிவா தியாகராஜா அம்மா உடல், உள நலத்தோடு நீண்டகாலம் வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.*

***-ஆதிலட்சுமி சிவகுமார்***

*அம்மாவின் புத்தகத்தைப் படித்தேன். மிகவும் மனத்தை உருக்கும்படி எழுதப்பட்டுள்ளது. அவர் எழுதிய ஆண்டுகளும் நபர்களும் கண் முன் வரும்படி எழுதியிருக்கிறார். சில இடங்களில் கண்களில் கண்ணீர் நிரம்பியது....*

***-அம்பை (C.S.Lakshmi)***

# பல இடிதாங்கிய மடி ஒன்று


06 வெற்றிமணி | Vettimani | பங்குனி [ March ] 2021

சிவப்பிரியன் ( யேர்மனி )

# பெருநினைவின் சிறு துளிகள்

## திருமதி சிவா தியாகராஜா

பல இடிதாங்கிய மடி ஒன்று நாம் கடந்துவந்த காலத்தை படிப்பதற்கும் அவற்றை எதிர்கால சந்ததியினர் அறிவதற்குமான ஒரு சிறந்த படைப்பே பெருநினைவின் சிறு துளிகள் எனும் இந்நூல்.

இந்த நூலை ஆக்கியவர், திருமதி.சிவா தியாகராஜா [23.04.1934] ஈழத்தில் பருத்தித்துறை, புலோலி மேற்கு, அத்தியடியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இவரது முழுப்பெயர் சிவகாமசுந்தரி. இவரை சிவா,சுந்தரி,மொறிஸ் அம்மா என்றெல்லாம் அழைப்பார்கள். 1998 இலிருந்து யேர்மனியில் வாழ்ந்துவரும் இவர் 1999 இலிருந்து தமிழாலய ஆசிரியராகப் பணியாற்றி புலத்திலும் தமிழ் வளர அருந்தொண்டு புரிந்தவர். தேசப்பற்று மிகுந்த இவர் தனது எட்டுப்பிள்ளைகளில் மூவரை [பிறேமராஜன் [தீட்சண்யன்] பரதராஜன் [மொறிஸ்] பாலசபாபதி [மயூரன்] ஈழவிடுதலைப்போருக்கு ஈந்தவர்.

விடுதலைப் போர்மூண்ட காலத்தில் தன் பிள்ளைகளை மட்டுமன்றி களத்தில் நின்ற பிள்ளைகளையும் தனது பிள்ளைகளாகக் கண்டவர். இந்நூலை வாசிக்கும் போது அன்றைய போர்க்கால சூழல் நம் கண்முன்னே விரியும்.

இதில் அவரது எழுத்தும் நடந்த கதைகளைச் சொல்லும் விதமும் யுத்தகாலத்தை நேரில் அனுபவித்தவர்கள் மட்டுமன்றி அறியாதவர்களும் நேரில் காண்பது போன்று விபரித்துள்ளார்.

தனது மகன் மாவீரனானபோது இராணுவ முகாமுக்கு அவன் வித்துடலை பெறச் சென்ற காட்சியின் சிறுதுளியை இங்கு பகிருகின்றேன்.

'எனக்கு என் பிள்ளையின் வித்துடல் வேண்டும்' நான் மந்திகை இராணுவ முகாம் நோக்கிச் செல்வதற்குத் தயாரானேன். இராணுவம் நிச்சயம் என்னை ஏதாவது செய்து விடும் என்று எல்லோரும் அச்சப்பட்டார்கள். நான் எல்லோரையும் அமைதிப்படுத்திவிட்டு இராணுவ முகாம் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

இராணுவ சென்றிப் பொயின்ருகளிலிருந்து துப்பாக்கி முனைகள் என் பக்கம் திரும்புவது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அடுத்து வரும் நிமிடங்களில் எதுவும் நடக்கலாமென்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ஆனாலும் என்னைத் தைரியமாக இயங்க வைக்கும் ஏதோ ஒரு சக்தி அப்போது என்னை ஆட்கொண்டிருந்தது. எதற்கும் முகம் கொடுக்கத் தயாராகவே நான் முகாம் நோக்கி நடந்து கொண்டிருந்தேன். அரைவாசித் தூரம் நடந்து கொண்டிருக்கும் போதே இராணுவக் கொமாண்டர்கள் முகாம் வாசலுக்கு வந்து என் வருகையைப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டேன். வாசலை அண்மித்ததும் 'நான் மொறிஸின் அம்மா' என்றேன்.

நாம் வாழும் காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு வீரத்தாயின் வரலாறு. அதுமட்டுமின்றி பிள்ளைகளின் விடுதலை வேட்கையை காட்ட ஒரு குறிப்பு இதோ.

'நான் போர் முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன். மீண்டும் நிச்சயமாகத் திரும்பி வருவேன். ஆனால் உங்கள் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டுமே' – கப்டன் மொறிஸ் [பரதன்] இது அவன் சொன்ன வரிகள். அந்த வரிகளை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன் அவை வெறும் வரிகள் அல்ல. அது அவனது மனதினுள் இருந்த உண்மையான எதிர்வு கூறல், அவன் அதனைக் கூறும்போது சிரித்த முகத்துடனே தான் கூறுவான்.அதனால் அதன் கனத்தை அப்போது என்னால் உணர முடியவில்லை. இப்போது எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கிறேன். என்கிறார் இந்நூல் ஆசிரியர்.

இந்நூலில் ஒவ்வோரு சம்பவம் விரியும் போதும் ரோஜாப்பூச்சம்பலும் இடியப்பமும், மூலவருத்தத்திற்கு கத்தாழைச் சாறு இப்படி நம் மண்ணின் பாரம்பரிய மருத்துவம் மற்றும் உணவு வகைகள் என்று பல பயனுள்ள தகவல்களும் கிடைக்கின்றன. இப்படியான தகவல்களை அவரது பெத்தப்பாவும் பெத்தம்மாவும் என்ற அத்தியாயத்தில் அறியலாம்.

வயது போய்விட்டது இனி நமக்கு என்ன, என்று இருந்துவிட்டுபோவோம், என எண்ணும் சராசரி மனிதரை விட எங்கள் அன்னை உச்சத்தில் இருப்பது கண்டு அவரை வெற்றி மணி வாழ்த்தி மகிழ்கின்றது. இப்படி ஒரு அரிய நூலை வெளியிட்ட மனஓசை நிறுவனத்திற்கும், அன்னையின் படத்தை அட்டைப்படத்தில் அற்புதமாக வரைந்த ஓவியர் மூனா அவர்களுக்கும், வெற்றி மணியின் வாழ்த்துகள்.

**பி.குறிப்பு:** இந்நூலாசிரியர் வெற்றிமணியின் நீண்டநாள் வாசகி. அவர் இச்செய்தியையும், தன்கரத்தில் தாங்கி வாசிக்கும் வேளை தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி. என்ற வாசகம் அவர் உள்ளத்திலும் ஒலிக்கும் பேறு பெறும்.

*நாம் கடந்துவந்த காலத்தை படிப்பதற்கும் அவற்றை எதிர்கால சந்ததியினர் அறிவதற்குமான ஒரு சிறந்த படைப்பே பெருநினைவின் சிறு துளிகள் எனும் இந்நூல்.*

*இந்த நூலை ஆக்கியவர் திருமதி.சிவா தியாகராஜா (23.04.1934) ஈழத்தில் பருத்தித்துறை, புலோலி மேற்கு, ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது முழுப்பெயர் சிவகாமசுந்தரி. இவரை சிவா, சுந்தரி, மொறிஸ்அம்மா என்றெல்லாம் அழைப்பார்கள். 1998இல் இருந்து யேர்மனியில் வாழ்ந்து வரும் இவர் 1999 இல் இருந்து தமிழாலய ஆசிரியராகப் பணியாற்றி புலத்திலும் தமிழ் வளர*

அருந்தொண்டு புரிந்தவர். தேசப்பற்று மிகுந்த இவர் தனது எட்டுப்பிள்ளைகளில் மூவரை (பிறேமராஜன் (தீட்சண்யன்) பரதராஜன் (மொறிஸ்) பாலசபாபதி (மயூரன்) ஈழவிடுதலைப்போருக்கு ஈந்தவர்.

விடுதலைப் போர்மூண்ட காலத்தில் தன் பிள்ளைகளை மட்டுமன்றி களத்தில் நின்ற பிள்ளை களையும் தனது பிள்ளைகளாகக் கண்டவர். இந் நூலை வாசிக்கும் போது அன்றைய போர்க்காலச் சூழல் நம் கண்முன்னே விரியும்.

இதில் அவரது எழுத்தும் நடந்த கதைகளைச் சொல்லும் விதமும் யுத்தகாலத்தை நேரில் அனுபவித் தவர்கள் மட்டுமன்றி அறியாதவர்களும் நேரில் காண்பது போன்று விபரித்து உள்ளார்.

தனது மகன் மாவீரனான போது இராணுவ முகாமுக்கு அவன் வித்துடலை பெறச் சென்ற காட்சியின் சிறுதுளியை இங்கு பகிருகின்றேன்.

'எனக்கு என் பிள்ளையின் வித்துடல் வேண்டும்' நான் மந்திகை இராணுவ முகாம் நோக்கிச் செல்வதற்குத் தயாரானேன். இராணுவம் நிச்சயம் என்னை ஏதாவது செய்து விடும் என்று எல்லோரும் அச்சப்பட்டார்கள். நான் எல்லோரையும் அமைதிப்படுத்திவிட்டு இராணுவ முகாம் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

இராணுவ சென்றிப் பொயின்ருகளிலிருந்து துப்பாக்கி முனைகள் என் பக்கம் திரும்புவது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அடுத்து வரும் நிமிடங்களில் எதுவும் நடக்கலாமென்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ஆனாலும் என்னைத் தைரியமாக இயங்க வைக்கும் ஏதோ ஒரு சக்தி அப்போது என்னை ஆட்கொண்டிருந்தது. எதற்கும் முகம் கொடுக்கத் தயாராகவே நான் முகாம் நோக்கி நடந்து கொண்டிருந்தேன். அரைவாசித்தூரம் நடந்து கொண்டிருக்கும்போதே இராணுவக்கொமாண்டர்கள்

வாசலுக்கு வந்து என் வருகையைப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டேன். வாசலை அண்மித்ததும்

“நான் மொறிஸின் அம்மா” என்றேன்.

நாம் வாழும் காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு வீரத்தாயின் வரலாறு. அது மட்டு மின்றி பிள்ளைகளின் விடுதலை வேட்கையை காட்ட ஒரு குறிப்பு இதோ.

“நான் போர் முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன். மீண்டும் நிச்சயமாகத் திரும்பி வருவேன். ஆனால் உங்கள் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டுமே” - கப்டன் மொறிஸ் (பரதன்)

“இது அவன் சொன்ன வரிகள். அந்த வரிகளை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன் அவை வெறும் வரிகள் அல்ல. அது அவனது மனதினுள் இருந்த உண்மையான எதிர்வு கூறல், அவன் அதனைக் கூறும்போது சிரித்த முகத்துடனே தான் கூறுவான். அதனால் அதன்கனத்தை அப்போது என்னால் உணரமுடியவில்லை. இப்போது எல்லா வற்றையும் யோசித்துப் பாரக்கிறேன்“ என்கிறார் இந்நூல் ஆசிரியர்.

இந்நூலில் ஒவ்வொரு சம்பவம் விரியும் போதும் ரோஜாப்பூச்சம்பலும் இடியப்பமும் மூலவருத்தத்திற்கு கத்தாழைச் சாறு... இப்படி நம் மண்ணின் பாரம்பரிய மருத்துவம் மற்றும் உணவு வகைகள் என்று பல பயனுள்ளதகவல்களும் கிடைக் கின்றன. இப்படியான தகவல்களை அவரது பெத்தப்பாவும் பெத்தம்மாவும் என்ற அத்தியாயத்தில் அறியலாம்.

வயது போய்விட்டது. இனி நமக்கு என்ன, என்று இருந்துவிட்டுப் போவோம், என எண்ணும் சராசரி மனிதரை விட எங்கள் அன்னை உச்சத்தில்

*இருப்பது கண்டு அவரை வெற்றி மணி வாழ்த்தி மகிழ்கின்றது.*

*இப்படி ஒரு அரியநூலை வெளியிட்ட மன ஓசை நிறுவனத்திற்கு வெற்றிமணியின் வாழ்த்துகள்.*

*பி.குறிப்பு: இந்நூலாசிரியர் வெற்றிமணியின் நீண்டநாள் வாசகி. அவர் இச்செய்தியையும், தன் கரத்தில் தாங்கி வாசிக்கும் வேளை தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் ´வெற்றிமணி' என்ற வாசகம் அவர் உள்ளத்திலும் ஒலிக்கும் பேறு பெறும்.*

***- மு.க.சு.சிவகுமாரன்***
***பிரதம ஆசிரியர் வெற்றிமணி பத்திரிகை***
***யேர்மனி***
*வெற்றிமணி (மார்ச் 2021)*

Duisburg 20/3/2021

அன்புள்ள சிவா அம்மா!.. வணக்கம்!..
நலம் நலம் பெறுகிறேன். என் அம்மாவைப்-
-போல உங்களையும் முதற்கண் வாழ்த்தி வணங்குகிறேன் தாயே!..
மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக உங்-
களை இப்பொழுது அறிந்து கொண்டது பெருமகிழ்ச்சி. நீங்கள்
அனுப்பிய "பெண்ணியச் சிறு துளிகள்" புத்தகம் கிடைத்ததில் நன்றி..
மூன்று செல்வங்களை விடுதலைப் போரியல்
பறிகொடுத்து அன்புக்குரியவர்களையும் இழந்து, எத்தனையோ வேதனைகள்
சோதனைகள், துன்பங்கள், துயரங்கள் கடந்து தெய்வ ஆற்றல்
கடந்து வந்த அனுபவங்களை இந்த நூல் மூலம் எடுத்தியம்பியது
போதும் இனைத்தையும் பாராட்டுகள் அம்மா!.
உமது எழுத்தாற்றல் காலத்திலும் அத்தனை இழப்பு-
-களையும் தாங்கிக்கொண்டு பதிவு செய்தமை நீங்கள் ஒரு வீரத்தாய்,
மனவுறுதி படைத்த சிவாக்குத் தாய் தான் அம்மா.. மேலும் பிள்ளைகளை-
-யும் பறிகொடுத்த போது எத்தனையோ பாடுபட்டிருப்பீர்கள்
உங்கள் நினைத்துப் பார்க்கையில் இப்படி ஒரு வீரத்தாய் தாய்
மண்ணின் விடுதலைக்கு எத்தனை அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்-
-கிறார் என்பதை நான் நன்கு உணர்வேன். உங்கள் தியாக
உணர்வுகள், அர்ப்பணிப்புகளுக்கு அடிபணிந்து போற்றுகின்றேன்
வாழ்த்துகின்றேன்..
புலம் பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்தும் முதிர்ந்த
வயதில் தமிழ்ப்பணி, சமூகப்பணிகளை விடாமல் செய்து ஒரு
எடுத்துக்காட்டான தாயாக, பெண்மணியாக வலம்வந்து கொண்டு-
-இருப்பதைப் பார்த்து நீங்களின் மனஉறுதியை மெச்சுகிறேன்
உங்களைப் போல உங்கள் பிள்ளைகளையும் கவிஞர்களாக, எழுத்-
-தாளர்களாக ஆக்கி, தமிழுலகத்துக்குப் பெருமை சேர்த்திரு-
-க்கிறீர்கள் வாழ்த்துக்கள் அம்மா...
உங்களைப் பாராட்ட வார்த்தைகள் எனக்குப்
போதாது. இறையே போதும். முதுமையானாலும் உங்கள்
இளமை போல சிந்தனைத் தெளிவைத்தாங்கள். அம்மா!.. தொண்ணூறு-
-கள் கடந்து நோய் நொடி இல்லாமல் வாழ இறைவனை
ஒன்றும் உண்டு. மீண்டும் உங்களை வாழ்த்தி வணங்குகிறேன்!..
நன்றி அம்மா!.. அன்புடன்
V. சிவராசா - மண் சஞ்சிகை
20-3-2021

***வைரமுத்து சிவராசா***
***´மண்‘ சஞ்சிகை ஆசிரியர்***

# பெருநினைவின் சிறுதுளிகள் பற்றி என் மன உணர்வுகள்

*அன்புக்குரிய சந்திரா இரவீந்திரன்,*

*இன்று தாங்கள் அனுப்பி வைத்திருந்த தங்கள் தாயாரது 'பெருநினைவின் சிறுதுளிகள்' நூல் கிடைக்கப் பெற்றேன்.*

*அந்தப் புத்தகம் கிடைத்தவுடன் அதனை மேல் வாரியாக ஒரு தடவை பார்ப்போமென நினைத்து அதன் முதற்பக்கத்தைத் திறந்து வாசித்தேன். ஆனால் தொடர்ந்து வைக்க மனமில்லாமல் முழுமை யாக அந்த எண்பது பக்கங்களையும் கடந்த ஒன்றரை மணிநேரமாக இப்போது வாசித்து முடித்து விட்டேன்.*

*அதனை வாசித்து முடித்த போது அது பற்றி நான் ஏதாவது கூறவேண்டுமென்று எனக்குள் ஏற்பட்ட மன உந்துதல் தான் இதனை நான் தங்களுக்கு என் குரலில் ஒலிப்பதிவு செய்து அனுப்பி வைப்பதற்குக் காரணம்.*

*முதலாவது| நீங்கள் ஒரு சிறப்பான வேலை செய்துள்ளீர்கள். நீங்களும் உங்கள் தமக்கையாரும் சேர்ந்து உங்கள் அம்மாவின் நினைவுகளை ஒரு நூலாகத் தந்ததன் மூலம் பல விடயங்களை ஒரு காலத்தின் பதிவுகளாகப் பதிந்துள்ளீர்கள். அதற்காக முதலில் உங்களுக்கு மிகவும் நன்றி கூற வேண்டும்.*

*இவ்வாறே முன்பும் உங்கள் காலஞ்சென்ற தமையனார் கவிஞர் தீட்சண்யன் கவிதை நூலொன்றையும் உங்கள் குடும்ப நினைவாக வெளியிட்டிருந்தீர்கள்.*

*நான் சிறுவயதிலிருந்தே மிகுந்த விருப்பத் துடன் வாசிப்பில் ஈடுபடுபவன். இந்தப் புத்தகத்தை கையிலெடுத்து வாசித்து முடிக்கும் போது ஒரு நூற்றிமுப்பது (130) வருட வாழ்க்கையை எமது தமிழ் சமூகத்தின் வாழ்க்கைப் பின்னணியை வாசித் தது போலொரு உணர்வு எனக்கு ஏற்பட்டது.*

*உங்கள் அம்மாவின் பெத்தப்பா, பெத்தாச்சி அவர்களின் காலம் 1890 களில் இருக்கலாமென்று நம்புகிறேன்.அதிலிருந்து உங்கள் அம்மாவின் தங்கை உமையாம்பிகை அவர்கள் இறந்த இந்த 2020 வருட கால வாழ்க்கையை உங்கள் தாயார் மிகுந்த மன உணர்வோடு இதில் குறிப்பிட்டுள்ளார்.*

*எழுத்தோட்டம் மிக மிக அருமையாக உள் ளது. ஆனால் இங்கு நான் குறிப்பிட விரும்புவது அம்மாவின் அந்த மனஉறுதியை, 1989ற்கும் 2000ற்கும் இடைப்பட்ட அந்த பதினொரு வருட காலப் பகுதிக்குள் தனது மூன்று பிள்ளைகளையும், தன் கணவரையும் பறிகொடுத்து விட்ட அந்தச் சூழலிலும் அவர் துணிந்து நின்று, வெளிநாட்டிற்கு வந்து| அங்கும் தமிழ்பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு தன் தமிழறிவைப் பயன்படுத்தி, இளம் மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தலை செய்திருக்கிறார் என்பதை அறியும் போது அவரின் மனஉறுதியைத் தான் இதனூடாக முதலில் காண்கிறேன்.*

*மற்றும் உங்கள் சகோதரர்களில் மொறிஸ் என்பவர் - அவரின் இயற்பெயர் பரதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் 1969 செப்டெம்பர் 12ல் பிறந்திருக்கிறார். ஆனால் இறந்ததோ 1989 மே 1ம் திகதி. அதாவது இருபது வயது நிறைவடையும் முன்பே - தங்கள் தாயாரின் குறிப்புப்படி பதினாறு வயதிலேயே அவர் விடுதலைஇயக்கத்தில் இணைந்து விட்டார் என்பதை நினைக்கும் போது என் மனதினுள் எங்கோ ஒரு இடத்தில் வலி ஏற்படுகிறது.*

*எமது நாட்டின் நிலமையினால் இந்த மூன்று*

*இளைஞர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களை நாம் இழந்துவிட்டோமே, இழந்தும் எமக்கான ஒரு விடிவு கிடைக்கவில்லையே என்ற ஒரு ஆதங்கமும் அவலநிலையும் மனதினுள்எழுகிறது.*

*உங்கள் தாயாரின் பதிவின் மூலம் அவரின் மகனான மொறிஸ் என்பவரின் மனஉணர்வுகளை நான் மிகவும் உணரக்கூடியதாக இருந்தது.*

*அது மட்டுமல்ல, உங்களின் இன்னுமொரு சகோதரனான சபா என்ற இயற்பெயர் கொண்ட மயூரன் என்பவரின் போராட்டமும் அந்தக்காலச் சூழ்நிலையும், இருபத்தியிரண்டு வயதிற்கு முன்ன ரான அவரது மரணமும் பற்றி தங்களது தாயாரின் எழுத்துக்கள் மூலம் ஒரு தாயின் இதயத்திலிருந்து வந்திருந்த அந்த வார்த்தைகள் மூலம் அவரின் இதயம் வடிக்கின்ற இரத்தக்கண்ணீரை என்னால் உணர முடிகிறது.*

*அவ்வாறே தங்களின் மூத்தசகோதரன் (பிறேமராஜன்) கவிஞர் தீட்சண்யன் பற்றி அவரது கவிதைகள் மூலம் நான் ஏற்கெனவே ஓரளவு கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைப்பற்றியும் தங்கள் தாயார் பெருமையுடனும் வலியுடனும் எழுதியிருப் பதைப் பார்க்கிறேன். தீட்சண்யன் அவர்கள் 1958ம் ஆண்டில் பிறந்து தனது 32 வயதிற்குள்ளேயே போரினால் தனது ஒரு காலையும், கையையும் இழந்து ஒரு துர்ப்பாக்கிய நிலமைக்கு ஆளானமை மிகவும் வருத்தத்திற்குரியது. தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை கொண்டு தன் ஆசிரியப்பணியை ஒரு வீச்சோடு செய்து கொண்டிருந்த ஒரு இளைஞர் அவர்.*

*இத்தனை நிலமைகளையும் தாங்கிக்கொண்டு| அங்கங்களை இழந்திருக்கும் தன் மகனையும் பராமரித்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த தங்கள் அன்னையின் மனஉறுதியை சொல்வதற்கு வார்த்தைகளில்லை.*

*இத்தகைய போர்ச்சூழலினால் எமது தமிழ் சமுதாயம் எத்தனை பேரை இழந்து விட்டது என்பதை இதில் வரும் ஒவ்வொரு சம்பவங்களும் எம்மை நினைக்க வைத்து எம்மனதைக் கலங்கவும் செய்கிறது.*

*இது யாரோ சொல்கிற கதை என்றில்லாமல் மூன்று பிள்ளைகளை விடுதலைப்போரிலே பறி கொடுத்த ஒரு தாயின் எழுத்தாக இதனை வாசிக்கும் போது துயரம் மேலிட்டு மனதை அது நெருடச் செய்கிறது.*

*இவை வெறும் கதைகளல்ல. இதில் வரும் ஒவ்வொரு சம்பவங்களும் வரலாறாகப் பதியப்பட வேண்டியவை. அவற்றை நீங்கள் மிகுந்த பொறுப் போடு தங்கள் தாயாரின் எழுத்து மூலம் பதிந்துள் ளீர்கள். அதற்கு நாம் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்.*

*அத்துடன் மாவீரர்கள் பற்றிய பல நினைவுகளையும் இதில் எழுதியுள்ளார். அவற்றை வாசிக்கும் போது எத்தனை ஆயிரம் இளைஞர்கள் தங்கள் வாழ்வின் சுகங்களை இழந்து, நாட்டுக்காக தமது உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை இந்த நூல் மீண்டும் மீண்டும் எமக்கு வலியுறுத்திக் காட்டுகிறது.*

*ஏனோ எனக்கு இந்த நூலை வாசித்ததி லிருந்து மனம் மிக அமைதியின்றியிருக்கிறது. நான் சில வேலைகளை செய்துமுடிக்க எண்ணியிருந்த வேளையில் தான் இந்தப் புத்தகம் எனக்கு வந்து சேர்ந்தது. வந்தவுடன் புத்தகத்தை முதலில் கையில தூக்கினேன். மேலட்டையை முதலில் பார்ப்போம், பின்னர் வாசிப்போமென்று நினைத்துத்தான் அதனைப் புரட்டினேன். ஆனால் முதல் பக்கத்தை வாசிக்கத் தொடங்கியதும் அது இறுதிப்பக்கம் வரை என்னை இழுத்துச் செல்லுமென்று நான் முதலில் எதிர்பார்க்கவில்லை. அதனை இறுதிப்பக்கம் வரை*

*வாசித்தபின்னர் தான் இதனை தங்களுக்கு ஒலி வடிவில் அனுப்பி வைக்கிறேன்.*

*தங்கள் தாயாரின் பெத்தம்மா பெத்தப்பா அவர்களது கதையை அவர் எழுதியிருக்கும் பதிவில் ஒரு மகள் தனக்கு விருப்பமில்லாத ஒருவரைக் கல்யாணம் கட்டிவிட்டாள் என்பதற்காக அந்த மகளையே பார்க்க மறுக்கின்ற அந்த நாகப்பர் என்கின்ற தந்தையின் உணர்வுகளைக் காண்கின்ற போது - இது தான் எமது சமுதாயத்திற்குள்ளே யிருக்கும் பின்னடைவு,நாம் உட்பட எமது சமூகத்தில் பகைமைகளை மன்னித்து நடக்காததும், விட்டுக் கொடுக்காததும் இன்றுவரை தொடர்கிறது என்ற விடயத்தை தனது பெத்தம்மா, பெத்தப்பாவின் கதை மூலமாக இங்கு தர முனைந்திருக்கிறாரென்றே எண்ணத் தோன்றுகிறது.*

*தனது கணவனுக்காக, தனது தாய் தகப்பன், சகோதரங்கள், உறவினர்கள் அனைவரையும் இழந்து வந்த அந்தப் பெண்ணுள்ளத்தின் மன உணர்வுகளை தங்கள் அம்மா மிகவும் மனப்பூர்வமாக உணர்ந்து எழுதியிருக்கிறார்.*

*எண்பது பக்கங்களிற்குள் தன் கண்முன்னால் வாழ்வில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை தொகுத்துத் தந்திருக்கும் இந்தப் புத்தகம் எமது போராட்டத்தை, தமிழ் சமூகத்தின் வாழ்வியலை, ஒரு சாதாரண பெண்ணின் வாழ்வை, அவளின் மனக் கஷ்டங்களை... எனப் பல விடயங்களைப் பற்றி எம்மை ஆழமாகச், சிந்திக்கவும் மனம் பொருமவும் வைக்கிறது.*

*1940இல் தங்கள் தாயாரின் தந்தை சிங்கப்பூர் சென்று உலகப்போரினால் ஐந்து வருடங்கள் வரமுடியாமல் போயிருந்த அந்த வேளையில் அவர் "இனி வரமாட்டார்" என்றும் அதனால் அவரது மனைவியான தங்கள் தாயாரின் அம்மாவிடம் "பொட்டை அழி, பூவை அழி" என்று பலரும்*

*சொல்லும் போதும் அவரோ தன் மனஉறுதி தளராது வாழ்க்கையை கொண்டு செலுத்தியதுமென பல சம்பவங்கள் எங்கள் சமூகத்தின் நிலைப்பாடுகளை மீண்டுமொருமுறை ஆழமாக உணரவும் சிந்திக்கவும் வைத்தது.*

*ஒரு தாய் எத்தனை இழப்புகள் ஏற்பட்டும் தன் பிள்ளைகள் பற்றி,அவர்களது தோழர்கள் பற்றி, அவரின் தாய் தந்தை பற்றி, அவரின் பெத்தம்மா பெத்தப்பா பற்றி என தன் நினைவுகளை இவ்வளவு அழகாக, ஆணித்தரமாக இந்த நூலில் எழுதியிருக் கிறார் என வியக்கவும் போற்றவும் வைக்கிறது இந்த நூல்.*

*இது வெறும் கதை அல்ல. வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட வேண்டிய உண்மைச் சம்பவங் களைச் சொல்லும் ஒரு முக்கியமான நூலாகும்.*

***நன்றி***<br>
***அன்புடன்***<br>
**வேந்தனார் இளஞ்சேய்**<br>
*இலண்டன்.*<br>
*(மார்ச் 2020)*

*"நீ எந்த நேரத்திலும் உயிருடன் பிடிபடக் கூடாது. அந்நிலை வருமெனில் சயனைற் அருந்தி விடு" என்று ஓர் ஈழத்துத்தாய் தன் மைந்தனுக்குச் சொல்கிறார். அந்த ஒரு மைந்தர் மாத்திரமல்லர் மாவீரர். மூன்று மைந்தர், மாவீரர்! நினைத்தற்கரி யது. அவ்வாறான ஒரு தாயின் நினைவுக் குறிப்புகளே, 'பெருநினைவின் சிறு துளிகள்' எனும் இந்நூல்! அந்த வீரத்தாய்: சிவா தியாகராஜா; சிவகாமசுந்தரி தியாகராஜா! புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நமது மிகுந்த நட்புக்குரிய சந்திரவதனா (செல்வ குமாரன்), சந்திரா(ரவீந்திரன்) ஆகியோரின் தாயாரே இந்த ஈழத்தின் வீரத்தாய். அவரது நினைவின் மீட்டலே இங்கு நூலாகிறது. முழுமையாக மீட்டிட முடியா முதுமை! இயலுமானவரை நனவிடை தோய்ந்திருக்கிறார். இது மிக முக்கியமான ஆவண மாகவே எனக்குப் படுகிறது. அந்த வீரத்தாயின் ஆன்மாவை வீழ்ந்து வணங்கி, வாசிக்கத் தொடங்குகிறேன்...*

***–இரவி அருணாச்சலம்***

*இப் புத்தகம் ஒரு காலத்தின் முக்கிய ஆவணப் பதிவாக வெளிவரும் என்பதில் ஐயமில்லை. உங்கள் அம்மாவின் பங்கு விடுதலைப் போராட்டத்தில் பிள்ளைகளை மாவீரர்களாகக் கொடுத்ததுமில்லாமல் பல போராளிகளை பாதுகாத்த பெருமையும் உண்டு.*

*-**அழகரத்தினம் விமலன்***

*அம்மா, உங்கள் கால்களை முத்தமிட்டு வீரத் தாயின் கண்ணீர் கலந்த உண்மையான வரலாற்றை வாசித்தேன். கண்கள் கலங்கியது. எனினும் தாங்கிக் கொண்டேன்.* *–**சிவனேசன் இளையப்பு***

*முகவுரையின் இறுதி வரி மனதை நெகிழ வைக்கிறது. ஒரு தாயின் கதறலும் பெருமிதமும் சேர்ந்து ஒலிக்கிறது.* ***–ஜெயரஞ்சனி பரராஜசிங்கம்***

*மிகவும் அருமை. அந்தத் துயர்மிகு நாட்களை திரும்பவும் நினைக்கும் பொழுதே மனதில் பாரம் தாங்க முடியவில்லை. ஒரு தாயின் மன உணர்வு களை வார்த்தைகளில் வடித்திருக்கும் இதைப் படிக்கும் பொழுதே கண்களில் நீர் துளிர்க்கிறது. இப்படி எத்தனை துயர்களைத் தாண்டி வந்து விட்டோம். அவர்களின் கனவுகள் மட்டும் தொடு வானமாய் தூரத்திலேயே உள்ளன. அந்தத் தாய் உயிருடன் இருக்கும் பொழுதே அவரது உணர்வு களுக்குக் கிடைத்த அங்கீகாரம் அளப்பரியது. பாராட்டுக்கள் அந்தத் தாயை தலை தாழ்த்தி வணங்குகிறோம்.*

***–காவலூர் கண்மணி***

*மிகவும் பெருமையான ஒரு விடயத்தைச் செய்து இருக்கிறீர்கள். இருக்கும் போதே அவரை மகிழ்வித்து இருக்கிறீர்கள் .ஒவ்வொரு மாவீரனின் தாயும் மதிக்க படவேண்டியவர்கள். 1983ம் ஆண்டை இரைமீட்டிப் பார்த்தது போன்ற உணர்வு. ஒரு ஆசிரியை, வீரப்பெண்மணி எத்துணை துயர்களைக் கடந்து வந்துள்ளார். அவருக்கு என் தலை தாழ்ந்த வணக்கம்.*

***–நிலாமதி***

*நான் எழுந்து நின்றேன். பாதையைக் கண்ணீர் மறைத்தது. நான் அந்தக் கண்ணீரைத் துடைக்கவில்லை. அவர்களோடு சேர்ந்து என் மண்ணின் மைந்தனது வித்துடலை நோக்கி நடக்கத் தொடங்கினேன்!*

*இப்படி எத்தனை மாவீரர்களின் வீரம் நிறைந்த மண் அது. கண்ணீரைத் துடைத்த படியே வாசித்தேன்.*


***–பிரபா***

*"அம்மா... உங்கள் மகன் ஒரு பெரிய வீரன். அவனின் திறமையைக் கண்டு அவன் ஒரு வயதான பெரிய மனிதன் என்றுதான் இத்தனை நாளும் நாம் நினைத்திருந்தோம். ஆனால் அவன் வயதில் குறைந்த ஒரு இளைஞன் என்று அறியும் போது எங்களால் நம்பவே முடியவில்லை. அவன் மிகவும் நல்லவன். அதனால்தான் அவனை எல்லா மக்களும் நேசிக்கி றார்கள் என்பது எங்களுக்குப் புரிகிறது. இத்தனை வீரமும் துணிச்சலும் மிக்க ஒருவனைப் பிள்ளை யாகப் பெற்றதற்காக நீங்கள் பெருமைப் படுங்கள். உங்களுக்கு நாங்கள் மரியாதை செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். நீங்கள் ஒரு வீரத்தாய். உங்களை நாங்கள் வணங்குகிறோம்.." என்று ஆங்கிலத்தில் கூறிய படி இரு கைகளையும் குவித்து என்னை வணங்கினார்கள்.*

*கப்டன் மொறிஸின் வீரச்சாவு செய்தியை ஹாட்லியில் படித்துக் கொண்டிருக்கும் போது அறிந்தது, இப்போதும் பசுமையான நினைவாக உள்ளது. மிகவும் துணிச்சல் மிக்க மொறிஸின் கதைகளால் நிரம்பியிருந்தது அந்தக்காலம்.*

***–கிருபன்***

# சிவகாமசுந்தரி அவர்கள்
# தமிழாலய ஆசிரியையாக...






*சிவகாமசுந்தரி அவர்கள் அவரது ஆசிரியப்பணிக்காகக் கௌரவிக்கப்படும் போது (லாண்டவ், யேர்மனி - 2002)*




*சிவகாமசுந்தரி அவர்கள் ஒரு குழந்தைக்கு ஏடு தொடக்கும் போது (யேர்மனி)*




*சிவகாமசுந்தரி அவர்கள் மேடை நிகழ்வொன்றில்*
*தனது மாணவச் சிறார்களுக்குக் கதை சொல்லும் போது*
*(லாண்டவ், யேர்மனி - 2003)*





*சிவகாமசுந்தரி அவர்கள் மேடை நிகழ்வொன்றில்*
*(லாண்டவ், யேர்மனி - 2003)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(இருப்பவர்களில் இடமிருந்து வலமாக முதலாவது)*
*மன்கைம் தமிழாலய நிர்வாகி, ஆசிரியர்களுடன்*
*(மன்கைம், யேர்மனி)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(நிற்பவர்களில் இடமிருந்து வலமாக நான்காவது)*
*மன்கைம் தமிழாலய நிர்வாகி, ஆசிரியர்களுடன்*
*(மன்கைம், யேர்மனி - 2004)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(இடமிருந்து வலமாக, முன்வரிசையில் ஐந்தவாது)*
*மன்கைம் தமிழாலய மாணவர்களுடன்*
*(மன்கைம், யேர்மனி - 2004)*




**ஆண்டு விழாவின் போது தமிழாலய மன்கைம் ஆசிரியருக்கு கௌரவிப்பு**

*சிவகாமசுந்தரி அவர்கள் கௌரவிக்கப்படும் போது*
*(யேர்மனி - 2005)*

# உலகத்தமிழர் இயக்கம்
# யேர்மனி

## நடுவர்களுக்கான பயிற்சிப்பட்டறை 2004

# சான்றிதழ்

தமிழ்த்திறன்போட்டி நடுவர்களுக்கான பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டதைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

பெறுநர்:

திருமதி. சிவகாமசுந்தரி – தியாகராஜா.

தமிழாலயம்:

மன்னகம்

கல்விப்பணிப் பொறுப்பாளர்
உலகத்தமிழர் இயக்கம்
யேர்மனி

தமிழ்த்திறன் போட்டிப் பிரிவுப் பொறுப்பாளர்
உலகத்தமிழர் இயக்கம்
யேர்மனி

08.02.2004



தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்புநடுவம்.

Tamilische Bildungsvereinigung e.V.

*Bildung, Kultur und Sport*

# சிறப்புச் சான்றிதழ்

தமிழ்க் கல்விக் கழகத்தால் நடாத்தப்படும்
தமிழாலயங்களில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக
ஆசிரியராகச் செயலாற்றிப் புலம்பெயர்ந்த தமிழ்ச்
சிறார்கள் மத்தியில் தமிழ் மொழி அழிந்து விடாமற்
காப்பாற்றும் உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடித்துத்
தொடர்ந்தும் தொண்டாற்றும்


**திருமதி. சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்கள்**

2005 ஆம் வருடத்தின் சிறந்த ஆசிரியருள் ஒருவராக
கௌரவிக்கப்படுகின்றார்.

கல்வியும் கலையும் நம்மிரு கண்கள்
நல்தமிழ் மொழி எங்கள் உயிராகும்

இரா.நாகலிங்கம்
பொறுப்பாளர்

செ.லோகானந்தம்
பொதுச் செயலாளர்



# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

Tamilische Bildungsvereinigung e.V.

**நிர்வாகிகள், ஆசிரியர்களுக்கான வருடாந்தக் கருத்தரங்கு 2004**

தமிழ்க் கல்விக் கழகத்தினால் நடாத்தப்படும் 125 தமிழாலயங்களின் 950 க்கு மேற்பட்ட நிர்வாகிகள், ஆசிரியர்களுக்காக மாநிலரீதியில் நடாத்தப்படும் வருடாந்தக் கருத்தரங்கு 26.09.2004 ஞாயிற்றுக்கிழமை தெற்கு, தென்மேற்கு மாநிலங்களை இணைத்து கால்ஸ்றூஎ நகரில் 09.00 – 17.00 மணிவரை நடைபெற்றபோது அதிற்கலந்து கொண்டமைக்காக இப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பெறுபவர் திருமதி சிவா தியாகராஜா.............. தமிழாலயம் ...மன்ஹைம்...........

இரா.நாகலிங்கம்
பொறுப்பாளர்

26.09.2004

கல்விச் செயலகம்
Bessemerstrasse. 7.c
70435 Stuttgart



# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

Tamilische Bildungsvereinigung e.V.

**தேர்வு மேற்பார்வையாளர் பயிற்சிப்பட்டறை 2005**

தமிழ்க் கல்விக் கழகத்தால் தெற்கு, தென்மேற்கு மாநிலங்களை இணைத்து கிர்கைம் ரெக் நகரில் 27.02.2005 ஞாயிற்றுக்கிழமை 09.00 – 17.00 மணிவரை நடைபெற்ற தேர்வு மேற்பார்வையாளருக்கான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டமைக்காக இப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பெறுநர் .திருமதி...சிவா...தியாகராஜா..........................

தமிழாலயம் .....மன்ஹைம்....................................

இரா.நாகலிங்கம்
பொறுப்பாளர்

27.02.2005

கல்விச் செயலகம்
Bessemerstrasse. 7.c
70435 Stuttgart


உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணியின் பொங்கல் விழா 2002
தமிழால் உலகில் ஒன்றிடுவோம்
திருமதி.தி.சிவகாமசுந்தரி
தமிழாலயம்


ஆசிரியருக்கான பாராட்டுப் பட்டயம்
திருமதி சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்கள்
20.10.2007


தமிழால் உலகில் ஒன்றிணைவோம்
தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி
ஆசிரியர் பாராட்டுப் பட்டயம்
எம்மால் நடாத்தப்படும் தமிழாலயங்களில் ஐந்து வருடங்களுக்கும்
மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்து புலம் பெயர்ந்த தமிழ்ச்சிறார்கள்
மத்தியில் தமிழ் அழிந்து விடாமற் காப்பாற்றும் உயர்ந்த
இலட்சியத்தைக் கடைப்பிடித்துத் தொடர்ந்தும் தொண்டாற்றும்
திருமதி . சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்கள்
தமிழ்க் கல்விக் கழகத்தின் சிறந்த ஆசிரியர்கள்
ஒருவராக எமது 15 வது ஆண்டு நிறைவு விழாவில்
பாராட்டைப் பெறுகின்றார்.
தமிழ்க் கல்விக் கழகம்
யேர்மனி
18.06.2005

# சிவகாமசுந்தரி அவர்களின்



# டயறிக் குறிப்புகளிலிருந்து...



*சிவகாமசுந்தரி அவர்களின் கணவர்*
*அமரர் எம்.எஸ். தியாகராஜா (சபாபதிப்பிள்ளை தியாகராஜா)*
*1933 - 1997*

# கணவர் தியாகராஜா அவர்கள் பற்றி...

*இன்று எனது அன்புக் கணவரின் நினைவு நாள். எனக்கு யாவும் நெஞ்சில் அழியாத நினைவுக ளாகத் தோன்றித் தோன்றிப் புரட்டுகின்றன. அவரும் என்னுடன் கூட இருந்திருந்தால் எவ்வளவு சந்தோச மும் நிம்மதியுமாக இருப்பேன் என்று என் மனது ஏங்கும். என்ன செய்ய நாம் நினைத்தபடியா யாவும் நடக்கிறது?*

*...அவருக்கு வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு வீட்டில் சும்மாயிருப்பதில் விருப்பமே யிருக்கவில்லை. ஓய்வெடுக்க முன்பே தனது ஓய்வு காலத்தை எண்ணி அவர் மனதளவில் யோசிக்கத் தொடங்கியிருந்தார்.*

*ஆனால் அவர் ஓய்வு பெற்ற சில வாரங்க ளிலேயே அவரைத் தேடி, போராளிகள் சிலர் வந்திருந்தார்கள். அவர்களது யாழ்ப்பாண அலுவல கத்தில் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகள் பல இருப்பதாகவும் அவற்றைச் செய்து தருவீர்களா எனவும் தயவுடன் கேட்டுக் கொண்டார்கள். அலுவலகத்திற்கு ஒருதடவை வரும்படியும் வேண்டிக் கொண்டார்கள். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியை உண்டாக்கியிருக்க வேண்டும். உடனேயே ஒருவித மறுப்புமின்றி அவர்களுடன் செல்வதற்குச் சம்மதித்து விட்டார்.*

*அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலிருக்கும் பெடியளின் அலுவலகத்திற்கு தினமும் சைக்கிளில் போய் வரத் தொடங்கினார். சில சமயங்களில் அவர்கள் தமது வாகனங்களிலும் வந்து அவரை ஏற்றிப் போனார்கள். அவர்களுக்கு அவசியமான பல எழுத்துப் பணிகள், மற்றும் சிங்கள, ஆங்கில*

*மொழிபெயர்ப்புப் பணிகள் என அப்பா மிகவும் உற்சாகமாகச் செய்து கொண்டிருந்தார்.*

*அந்தப் பணிகள் செய்துகொண்டிருந்த போது அப்பா மிகுந்த உற்சாகத்துடனும், சந்தோசத்துடனும் இருப்பதை தினமும் நான் கவனித்தேன். எனக்கது மிகுந்த மகிழ்ச்சியாகவும் மனதிற்கு ஒருவித ஆறுத லாகவும் இருந்தது...*

*சிவா தியாகராஜா*
*01.12.2016*

*...அப்பா யாழ் ரெயில்வே ஸ்ரேசன் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த போது இயக்கத் தினருக்கும் என் இளையமகள் சந்திராவிற்கு மிடையே பல முக்கிய இரகசிய தகவல் பரிமாற்றங் கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அச்சமயம் எம்மைச் சுற்றியிருக்கும் இராணுவத்தினர் தொடர் பான பல தகவல்களை அவள் அப்பாவிடமிருந்தே கேட்டுப் பெற்றுக் கொண்டிருந்தாள். அப்பா இராணுவத்திற்குள்ளேயே இருந்து கொண்டு தன் ரெயில்வே அதிகாரிக்கான கடமைகளையும் செய்து கொண்டு, அதே வேளை முக்கிய இரகசிய இராணுவத்தகவல்களையும் சேகரித்துக் கொண்டு வீட்டுக்குள் வந்து சேரும்வரை சொல்ல முடியாத ஒருவித பதற்றம் எங்களெல்லோரையும் ஆட்கொண் டிருக்கும். அவற்றையெல்லாம் சந்திராவிடமிருந்து பெற்றுச் செல்வதற்காக ஒருவர் பருத்தித்துறை யிலிருந்து நாமிருக்கும் ரெயில்வே குவாட்டர்ஸ்க்கு வந்து போவார். எல்லாம் ஒரு உயிரிழையின் மேல் நடந்துசெல்லும் சேர்க்கஸ் வித்தை போலவே நடந்து கொண்டிருந்தன...*

*சிவா தியாகராஜா*
*01.12.2019*

# தங்கை உமையாம்பிகை பற்றி...



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*தங்கை உமையாம்பிகை புவனேந்திரன் அவர்களுடன்*

*'தங்கச்சி... இனி நான் எங்கே உன்னைக் காணப்போகிறேன்? உன் சொந்த மண்ணிலேயே நீ நிரந்தரத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாய். இனசனம் கூடி உனக்கு ஆகவேண்டிய இறுதிக் கடமைகளைச் செய்து, நீ நல்ல சுகமே போய்ச் சேர்ந்து விட்டாய். இத்தனை துயரத்திலும் அது எனக்கு மன ஆறுதலைத் தருகிறது...*

*–சிவா தியாகராஜா*



*சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த புதல்வன்
பிறேமராஜன் (கவிஞர் தீட்சண்யன் - வி.பு.அமைப்பின்
புலனாய்வு-மொழிபெயர்ப்புப் பிரிவு)
மடியில் மைந்தன் பரதன் (மாவீரன் லெப்டினன் மயூரன்)*

# மூத்த புதல்வன் பிறேமராஜன் பற்றி...

*...காலம் என்னை இப்படித்தான் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருக்கிறது! 2000ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி ´என் மகன் ராஜனும் இந்த உலகை விட்டுப் போய்விட்டான்‘ என்ற செய்தி என்னை வந்துசேர்ந்தது. அவன் இழக்கக் கூடாததையெல்லாம் இழந்தும் இயன்றவரை தன் மண்ணுக்காய் பெரும் பணி செய்து வாழ்ந்தான். போராட்டம் சம்பந்தமான பல நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்புச் செய்தான். விடுதலைப்போராட்ட வாழ்வில் தன்னை அர்ப்பணித்து தன்னாலியன்ற அனைத்தும் செய்து கடைசிவரை ஒரு கண்ணியமான தன்மானமுள்ள வீரத்தமிழ் மகனாக வாழ்ந்தான். அதுவே கடைசிமூச்சிருக்கும்வரை அவனுக்கு ஆறுதல் அளித்த ஒரேயொரு விடயமாகவும் இருந்திருக்கும்!*

*என் மகனின் அன்பு முகமும், மனதை வருடும் புன்னகையும், இனிய பேச்சும், கனிவான முகமும்.. என்றும் என்னுள் உயிர்ப்போடு வாழ்ந்து கொண்டேயிருக்கும்! அவையே என்னை வாழவைத்துக் கொண்டும் இருக்கும்’*

*–சிவா தியாகராஜா*



சிவகாமசுந்தரி அவர்களின் மைந்தன்
பாலசபாபதி - சபா (மாவீரன் கப்டன் மயூரன்)
தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின்
பிரத்தியேக நேரடி ஜாக்கெட் மெய்ப்பாதுகாவலர்

## *மகன் பாலசபாபதி (மாவீரன் மயூரன்) பற்றிய அவரின் கவிதைக் குறிப்பு...*

***என் செல்வமே மயூரா!***
*குறையேதும் விட்டறியேன்*
*குறையெதுவும் கண்டறியேன்*
*பொறையிலே பூமியைப் போல்*
*பிறந்த உன் பெருநோக்கில்*
*நிறைவாகப் பல நினைந்து*
*நாம் வாழ்ந்த நேரத்தில்*
*மறையாக நீ கண்ட*
*தமிழீழ மந்திரத்தில்...*
*சிறையாகி தமிழர்கள்*
*வாழ்ந்திடல் சீர் இல்லையென*
*உறைவாளும் சுடுபொறியும்*
*நின் தோளில் நீ ஏந்தி...*
*கொள்கையென நின்றிட்டாய்*

*குருவாக நம்தலைவன்*
*தடம் நோக்கி நடந்திட்டாய்*
*கொண்ட கொள்கை தவறாது*
*வாழ்ந்திட்ட அண்ணரை நீ*
*உந்தனுயிர் உள்ளவரை*
*உடனிருந்து காத்திட்டாய்!*

*93ல் பூநகரி தவளைப்பாய்ச்சலில்*
*பெரும்புயல் போல் புறப்பட்டு*
*கண்ணெதிரில் கரைந்திட்டாய்*
*காவியம் நீ படைத்திட்டாய்!*

*ஏதேதோ செய்திகள்*
*எனைத் தேடி வந்தபோதும்*
*நானதை ஒருபோதும்*
*நம்பி மனம் தளரவில்லை!*
*என்றோ ஒருநாள்*
*எனைத்தேடி நீ வருவாய்*

என்று தான் நம்பி நான்
கனவோடு காத்திருந்தேன்!

திருவே...என் செல்வமே!
நடந்ததை நான் நம்பித்தான்
ஆகவேண்டும்....
1970 நவம்பர் 1ம் நாள்
என் மடியில் நீ மலர்ந்தாய்!
1993 நவம்பர் 11ல்
இம் மண்ணில் நீ விதையானாய்!

என் புதல்வர் இருவரும்
எம் மண்ணுக்காய் மரணித்த
மாபெரும் வீரர்கள் தாம்!
இருந்தாலும் என் கண்கள்
எப்போதும் நனைகிறதே!
இருந்தாலும் என் கால்கள்
உமைத் தேடி அலைகிறதே!
இருந்தாலும் கைகளுமை
கட்டியணைக்கத் துடிக்கிறதே!
என் கருப்பை கொதிக்கிறதே!
கண்ணீர் தகிக்கிறதே!

என் மண்ணுக்கும் மனதிற்கும்
எப்போது தான் விடுதலை?
எப்போது தான் அமைதிநிலை?

–சிவா தியாகராஜா

# மாவீரன் மேஜர் ஜேம்ஸ் பற்றி...





*மேஜர் ஜேம்ஸ் (உருத்திராபதி சிறீதரன்) வி.பு அமைப்பின் ஆரம்பகால வடமராட்சிப் பிரதேசப் பொறுப்பாளர்.*
*கப்டன் வாசு (உருத்திராபதி சுதாகர்) வி.பு அமைப்பின் தொழில் நுட்பப்பிரிவுப் பொறுப்பாளர்.*
*கப்டன் சுந்தரி (உதயலஷ்மி உருத்திராபதி) வி.பு அமைப்பின் சுதந்திரப்பறவைகள் அமைப்பு.*

*"அம்மா ஜேம்ஸ் அண்ணா வந்திருக்கிறார்.." என்று என் மகன் பரதன், அதாவது மொறிஸ் மகிழ்ச்சியுடன் ஆரவாரப்படும் குரல் கேட்டது. அவனுக்கு ஜேம்ஸ் மீது ஒருவித மரியாதை. அதற்குக் காரணம் ஜேம்ஸின் தலைமைப் பண்பும், அவனின் வயதும் தான். அவன் 6.9.1962இல் பிறந்தவன். என் சின்னவன் சபாவும், சின்னவள் பாமாவும் ஜேம்ஸ் ஐக் கண்டால் ஒரே கும்மாளமடிப்பார்கள். அவனும்*

*அவர்களோடு சேர்ந்து ஒரு குழந்தையாக அப்போது மாறிவிடுவான். அவனுக்கு இனிப்புப் பண்டங்கள் என்றால் கொள்ளை பிரியம். தொதல், மஸ்கற், மில்க்ரொபி என்றால் வாய்கொள்ளாமல் அள்ளி யள்ளிச் சாப்பிடுவான்.*

*ஜேம்ஸ் இன் அரசியல் வேலைகளுக்கு என் மகன் மொறிஸ் மிகவும் உதவிகள் புரிவான்.*

*ஒருநாள் வீட்டுக்கு அவன் வந்தபோது 'அம்மா இண்டைக்கு என்ன கறி?' என்று கேட்டான். நான் 'முருங்கைக்காய் கறி' என்று சொன்னேன். ஏனோ தெரியாது என்னிடம் வரும் போராளிப்பெடியளுக்கு நான் சமைக்கும் முருங்கைக்காய் பிரட்டல் என்றால் நன்றாகப் பிடிக்கும். இறால் பொரியல், நெத்தலிச் சொதி என்றால் அடிபட்டுச் சாப்பிடுவார்கள். அன்று ஜேம்ஸ் மிகுந்த விருப்பத்தோடு மனமார சாப்பிட்டுச் சென்றான்.*

*இதுபோல் எத்தனையெத்தனை பிள்ளைகள் என்னிடம் வந்து சாப்பிட்டுப் போனார்கள்! 1987ம் ஆண்டு பெப்ரவரி மாதம், ஒரு நாள் ஜேம்ஸ் வந்த போது மில்க்ரொபி இருந்தும் அதையவன் சாப்பிட வில்லை. தொடவுமில்லை. என்மகன் மொறிஸோடு எதையோ இரகசியமாகப் பேசிவிட்டு அவசரமாகப் போய் விட்டான்.*

*மொறிஸ், கிட்டா, ரவிராஜ், வெங்கடேசன் எல்லோரும் தலையைப் பிய்த்துக் கொண்டு திரிகிறார்கள். என்னென்று எனக்கு விளங்க வில்லை. கேட்டாலும் சொல்லும் நிலையில் அவர்களில்லை.*

*அன்று, கைதடி இராணுமுகாமிற்கு தண்ணீர் கொண்டு செல்வது போல் தயாராகிக்கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் வெடிமருந்துகளால் நிரப்பப் பட்ட தண்ணீர் பௌசர் தவறுதலாக வெடித்துச் சிதறிவிட்டது என்ற செய்தியை பின்புதான் அறிந்து*

கொண்டேன். அந்த வெடிவிபத்தில் பொன்னம்மான் உட்பட 10 போராளிகள் என்று நினைக்கிறேன். வீரமரணமடைந்துவிட்டார்கள். அதில் ஒரு போராளி யான கப்டன் வாசு என்பவன் விடுதலைப்புலிகளின் இராணுவ தொழிநுட்பப் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்தவன். அவன் ஜேம்ஸின் சகோதரன்.

09-08-1990 அன்று ஜேம்ஸ், விடுதலைப் புலிகளின் பலாலி இராணுவமுகாம் காவலரணைப் பார்வையிட்டு, அங்கிருந்த போராளிகளுடன் உரையாடிவிட்டு திரும்பிவரும்போது அச்சுவேலியில் குண்டுவீச்சு விமானமொன்றின் தாக்குதலுக்கு இலக் காகி வீரமரணமடைந்து விட்டான்.

நானும் எனது கணவரும் (ஸ்ரேசன் மாஸ்ரர்) மாங்குளம் ரெயில்வே குவாட்டர்ஸ்ஸில் இருந்த சமயம், அங்கு நடந்த மாங்குள முகாம் தாக்குதல் சம்பவங்களிற்குள் அகப்பட்டு, யாவற்றையும் இழந்து, பல துயரங்களை அனுபவித்து கடினமான பிரயாணத்தின் மத்தியில் பருத்தித்துறைக்கு எமது வீட்டுக்கு வந்து சேர்ந்த போது ஜேம்ஸின் மரணச்செய்தி தான் முதலில் எமக்குக் கிடைத்தது.


அந்தச் செய்தியால் நான் மனமுடைந்து கலங்கினேன்.

ஜேம்ஸின் தங்கை கப்டன் சுந்தரி 'மக்கள் முன்னனி' செயற்பாடுகளின் உபசெயலாளராக இருந்தவர். அவர் 1990 நவம்பர் மாதம், கட்டுவனில் நடந்த சண்டையில் வீரமரணமடைந்தார்.

இப்படி எத்தனையெத்தனை இளம் பிள்ளை கள் எங்கள் மண்ணுக்காக தம்முயிரை அர்ப்பணித்து மாண்டார்கள்

இந்தத் துயரங்களின் முடிவு தான் என்ன?'

-சிவா தியாகராஜா



*மாவீரன் மேஜர் சிட்டு (சிற்றம்பலம் அன்னலிங்கம்)*
*வி.பு அமைப்பின் போராளிக் கலைஞர் - பாடகர்*

# *மாவீரன் மேஜர் சிட்டு பற்றி...*

*...சிட்டு என் மகன் சபாவின் (கப்டன் மயூரன்) உற்ற தோழர்களில் ஒருவன்.*

*சிட்டு மருதங்கேணி மண்ணைப் பிறப்பிட மாகக் கொண்டவன். மெல்லிசைப்பாடகர் கே.எஸ். பாலச்சந்திரனின் சகோதரன் என்பதெல்லாம் சபா (கப்டன் மயூரன்) ஒரு தடவை சொல்லித்தான் எனக்குத் தெரியும்.*

*சபா(கப்டன் மயூரன்) வன்னிக்காட்டிற்குள் தலைவர் பிரபாகரனின் அருகில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, சபா பங்கு பற்றி, வெற்றி பெற்ற தாக்குதல்கள் பற்றி சிட்டு என்னிடம் அழகாக வர்ணித்துக் கூறிப் பெருமைப் படுவான். குறிப்பாக 1991இல் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட 'மண்கிண்டி மணலாறு' வெற்றிச்சமர் பற்றியும் அதில் மயூரன் ஆற்றிய வீரப்பணிகள் பற்றியும் ஒருநாள் எம்மிடம் வந்தபோது விபரித்துப் புகழ்ந்தான். அது எனக்கு மிகுந்த சந்தோசத்தை ஏற்படுத்திய அதே வேளை காயம்பட்டு மரணித்த போராளிகளையிட்டு ஒருவித துயரத்தையும் மனதிற்குள் ஏற்படுத்தியது. ஆனால் நான் துயரத்தை ஒருபோதும் அவர்களுக்குக் காட்டியதில்லை. அது போராளிகளின் மனஉறுதியை குலையச் செய்து விடும்.*

*இந்த விடுதலைப்போர் விரைவில் முடிவுக்கு வந்து எங்கள் பிள்ளைகள் எல்லாம் எப்போது நிம்மதியாக சந்தோசமாக வாழப்போகிறார்கள் என்ற கேள்வியும் ஏக்கமும் என் நெஞ்சை எப்போதும் வருத்திக் கொண்டேயிருக்கும்!*

*ஒவ்வொரு இழப்புகளையும் சந்திக்கும் போது ஏற்படும் மனக்குமுறல் அடங்குவதற்கு முன்பே அடுத்த இழப்பு நேர்ந்து விடுகின்றது!*

*எல்லாத் தமிழ் இளைஞர்களும் எம்மை விட்டுப் போய்க் கொண்டேயிருக்கிறார்கள்!*

*அதனை நிறுத்த முடியவில்லையே!*

*அழகான, சிரித்தமுகத்தையுடைய சிட்டுவும் எம்மை விட்டு ஒருநாள் போய்விட்டான்! 1997ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 1ம் நாள், ஜெயசிக்குறு படைநடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் ஓமந்தையில் நிகழ்த்திய ஊடறுப்புத் தாக்குதல் நடவடிக்கையில் சிட்டு வீரமரணமடைந்துவிட்டான்.*

*அவன் எம்மை விட்டுப் போனாலும் அவனின் அழகியசிரிப்பும் பூநகரித்தவளைப் பாய்ச்சல் வெற்றிச் சமரில் வீரமரணமடைந்த போரரிளிகளுக்காக அவன் பாடிய 'வெற்றிபெற்றுத் தந்துவிட்டு நீர் உறங்கு கின்றீர்...' என்ற பாடலும் எப்போதும் என் நெஞ்சைவிட்டு அகலாதவை. இன்பத்தையும் துன்பத் தையும் ஒன்று சேர்த்து அவன் குரலில் ஒலிக்கும் அந்தப் பாடலுக்குள் என் மகன் கப்டன் மயூரன் நிறைந்து நிற்பது போல் எனக்கு எப்போதும் தோன்றும்! அந்தப் பாடலைக் கேட்கும் போது ஏற்படும் உணர்விற்கு என்னிடம் வார்த்தைகள் ஒருபோதும் இருப்பதில்லை!*

*சிட்டு! என் செல்லமகனின் அருந்தோழனே! நீ எங்கிருந்தாலும் ஒரு அழகிய ஒளிம்பிழம்பாய் பிரகாசிப்பாய்! அது எனக்குத் தெரியும்!....*

*–சிவா தியாகராஜா*
*05.11.2016*

# மாவீரன் லெப்டினன்ட் வெங்கடேஷ் பற்றி...



...வெங்கடேஷ் என் மகன் மொறிஸ் மீது வைத்திருந்த அன்பும் நட்பும் மரியாதையும் வார்த்தை களில் சொல்ல முடியாதவை. அவன் எங்கள் வீட்டுக்கு வராத நாட்கள் வலும் குறைவு. என்னிடம் சாப்பிட்டுப் போகாத நாட்களும் குறைவு தான்.

வரும்போதெல்லாம் "பசிக்குதணை. கெதியாச் சமையுங்கோணை" என்று உரிமையோடு என்னிடம் சொல்லுவான். சமைத்ததும் சாப்பிடுவான். நான் அவனுக்காகவும் அவன்போன்ற மற்றைய போராளிப் பிள்ளைகளுக்காகவும் கடலை, பருப்பு, முறுக்கு... என்று எல்லாம் சுட்டும்,பொரித்தும் வைத்திருப்பேன். அவன் அவைகளை மிகவும் விரும்பி ருசித்துச்

*சாப்பிடுவான். தன் வீடு போலவே என் வீட்டில் நடந்து கொள்வான். அவனின் குடும்பமே விடுதலை உணர்வு மிக்க ஒரு குடும்பம்.*

*அவனின் குறும்புப் பேச்சும் மனசுவிட்டுச் சிரிக்கும் சிரிப்பும் என் கண்ணுக்குள் எப்போதும் நிற்பவை. அவனுக்கு என் மகள் சந்திராவையும் என் கடைசிமகள் பாமாவையும் மிகவும் பிடிக்கும். சந்திராவை "இளையக்கா.... இளையக்கா..." என்று வளைய வருவான். அவளோடு தனக்குத் தெரிந்த அரசியல் பேசிக்கொண்டிருப்பான். நன்றாக நீச்சல் தெரிந்தவன்.*

*இந்திய இராணுவம் வந்து குவிந்திருந்த ஒரு துரதிர்ஷ்ட காலத்தில் எதிர்பாராத ஒரு சுற்றி வளைப்பில் வடமராட்சிப் பகுதியில் வெங்கடேஷ் வீரமரணமடைந்து விட்டான். அந்த நாளை என்னால் மறக்கவே முடியாது.*

*அன்றும், அதாவது 1988ம் ஆண்டு, மே மாதம், 10ந் திகதி எங்கள் வீட்டுக்கு அவன் வந்திருந்தான்.*

*"ஒரு நல்ல ரீ (தேநீர்) உங்கடை கையாலை தாங்கோ அம்மா" என்றான்.*

*"இரு அப்பு, உடனை கொண்டு வாறன்" சொல்லி விட்டு அடுக்களையை நோக்கி விரைந்தேன். அந்த நேரம் எனது மகன் மொறிஸ் அவசரமாய் வீட்டுக்குள் ஓடி வந்தான். வந்ததும் வராததுமாய் "வெங்கடேஷ், வெளிக்கிடு கெதியாய். கூட ரவாஸ் வருவான். அவனையும் கூட்டிக் கொண்டு போ" சொல்லிக் கொண்டு ஒரு பையில் ஏதோ பொருட்களைப் போட்டு வெங்கடேஷிடம் கொடுத்தான்.*

*"அம்மா ரீ(தேநீர்) கொண்டு வருவா. குடிச்சிட்டுப் போறன்" வெங்கடேஷ் சொல்வது என் காதில் விழுந்தது. நான் அவசரமாய் தேநீரைத்*

தயாரிக்கத் தொடங்கினேன். ரவாஸ் மிக்ஸரைக் கொறித்துக் கொண்டிருந்தான்.

"போதுமடா எழும்படா" மொறிஸின் அதட்டல் எனக்குக் கேட்டது.

நான் இருவருக்கும் அவசரமாய் கோப்பை களில் தேநீரை ஊற்றிக் கொண்டு ஓடி வந்தேன். அவர்கள் இருவரும் எனது வீட்டின் கிழக்குப் பக்கக் கதவால் வெளியில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

"அவங்கள் ரீ யைக் குடிச்சிட்டுப் போகட்டுமன்" என்றேன்.

"சும்மா இருங்கோ அம்மா. அவங்களுக்கு இப்ப நேரமில்லை. இரவு வருவாங்கள். உங்கடை ஆசைக்கு எல்லாம் குடுங்கோ" என்றான். நான் கலக்கத்தோடு வாயடைத்துப் போய் நின்றேன்.

அவர்கள் "அம்மா போட்டு வாறம்", "மொறிஸ் சரிதானே..." என்ற படி பின் கேற்றைத் திறந்து கொண்டு வெளியேறினார்கள்.

அவர்கள் போய்க் கொஞ்ச நேரம்தான் ஆகியிருக்கும். பயங்கரமான வேட்டுச் சத்தங்கள் கேட்டன. நாமெல்லோரும் கதி கலங்கி நின்றோம். மொறிஸின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அவன் எங்கோ வெளியில் ஓடினான். நாம் அதாவது நானும், எனது பெண் பிள்ளைகளில் மூவரும் செயல் இழந்து தவியாய்த் தவித்த படி துடித்துக் கொண்டு நின்றோம்.

இரவு எட்டுமணியளவில் தீராத சோகத்துடன் மொறிஸ் வீடு வந்து சேர்ந்தான். "என்னடா. என்ன நடந்தது?" நான்தான் கேட்டேன்.

அவன் குமுறிக் கொண்டு "வெங்கடேஷ் போயிட்டான் அம்மா" என்றான். தொடர்ந்து "அம்மா ரவாசும்தான் போயிட்டான்" சொல்லித்

*தேம்பினான். எனக்குச் சம்மட்டியால் எனது தலையில் யாரோ அடித்தது போல இருந்தது.*

*வெங்கடேஷ் கொண்டு சென்றது முக்கியமானவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய சில மிக முக்கியமான விடயங்கள் என்பதுவும் இந்தியன் ஆமியின் துரத்தலால் ரவாஸ் குண்டடி பட்டு வீழ்ந்ததும் வெங்கடேஷ் ஓடி ஓடி இயலாத நிலையில் ஒரு வீட்டில் புகுந்து தனக்குத் தானே காதுக்குள் வெடி வைத்து மரணித்த கொடிய உண்மையும் பின்புதான் எமக்குத் தெரிய வந்தன. அழுதோம். கதறினோம். அவர்கள் வித்துடல் கூட எமக்குக் கிடைக்க வில்லை.*

*"ஒரு நல்ல ரீ உங்கடை கையாலை தாங்கோ அம்மா" என்று கேட்டவன், அன்று எனது ரீ யைக் கூடக் குடிக்காமல் போய்விட்டான்.*

*படம் போல இன்னும் மனதுள் பதிந்து போயிருக்கும் காட்சிகளை நினைந்து நினைந்து கலங்குகிறேன்.*

*என்னைப் பெரிதும் பாதித்த பல இழப்புகளில் வெங்கடேஷின் இழப்பும் ஒன்று!*

*அவனின் சகோதரி தான் பின்னாளில் பெரும் போர்களில் வெற்றி பெற்று வீரமரணமடைந்த மேஜர் பாமா. அவளுக்கும் என் மகன் மொறிஸ்க்குமான சகோதர அன்பு பற்றியும் அவள் இயக்கத்திற்குப் போகப் புறப்பட்ட தருணங்கள் பற்றியும் மொறிஸ் பலகதைகள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எதைச் சொல்ல, எதை விட? எல்லோரும் எம்மை விட்டுப் போய்விட்டார்கள்.....-*

*-சிவா தியாகராஜா*
*23.10.2008*

# ரோகிணி, கேதீஸ். சூட்டி, பற்றி...



*சிவகாமசுந்தரி அவர்களை ரோகிணி, கேதீஸ். சூட்டி...*
*குடும்பமாக வந்து சந்தித்த போது*

*29-08-2018ம் நாளான இன்று எனக்கு மிகவும் இனிமையான நாளாக அமைந்தது. எனக்கு மிகவும் விருப்பமான உறவினர்களாகிய மல்லிகைக்கலட்டிச் சீனியம்மாவின் பேரக்குழந்தைகள் ரோகிணி, சூட்டி, கேதீஸ் ஆகியோரும், அவர்களது குழந்தைகளும் என்னிடம் வந்திருந்தார்கள். வரும்போது சுவையான உணவும் சமைத்துக் கொண்டு வந்து, என்னோடு சேர்ந்து உண்டு மகிழ்ந்து,என்னுடன் பல புதினங்கள் உரையாடிக் களித்த ஒரு இன்பமான நாள் இது...*

*-சிவா தியாகராஜா*

*மல்லிகைக்கலட்டிச் சீனியம்மா என்பவர் சிவகாமசுந்தரி அவர்களது தந்தையின் மைத்துனியாகிய பொன்னம்மா அவர்கள். இவர் வாழும் காலம்வரை சிவகாமசுந்தரி அவர்களுடன் மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் பழகியவர்.*



*திலீபன் செல்வகுமாரன்*
*சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த பேரன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2023)*

# பேரன் திலீபன் பற்றி

*திலீபன் எனக்கு ஒரு அன்பான பேரன். என்ரை எல்லாப் பேரப்பிள்ளைகளும் நல்ல அன்பான ஆதரவான பேரப்பிள்ளைகள் தான். ஆனால் எப்பவும் அன்பும் ஆதரவுமான பேரப்பிள்ளை திலீபன். திலீபனுக்குப் பக்கத்தில் நின்றால் எனக்கு நல்ல ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும். திலீபனின் வீடு ஒரு அன்பு இல்லம்...*

*சிவா தியாகராஜா*
*12.08.2014*

*திலீபன் அடிக்கடி என்னிடம் ஓடி வருவான்.இப்பவும் வந்திட்டுப் போறான். அவனுக்கு வேலையிடத்தில் மீற்றிங் அது இது என்று எவ்வளவோ வேலைகள் இருக்கும். நேரமே இருக்காது. இருந்தாலும் தனக்குக் கிடைக்கும் சின்ன இடைவெளியில் ஓடி வந்து என்னோடு இருந்து கதைத்திட்டுப் போவான். அன்பான ஆதரவான பிள்ளை...*

*சிவா தியாகராஜா*
*11.02.2022*

*திலீபன் (1977), சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த பேரன். யேர்மனியில் வாழ்ந்து வருகிறார். ஒன்பது வயது வரை தாயகத்தில் அம்மம்மாவின் (சிவகாமசுந்தரி அவர்களின்) அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்தவர். அதை அவர் ஒரு போதும் மறந்ததில்லை. அம்மம்மா (சிவகாமசுந்தரி அவர்கள்) யேர்மனிக்கு வந்த நாளிலிருந்து அம்மம்மாவின் இறுதி நாள் வரை, அம்மம்மா யேர்மனியில் வாழ்ந்த இருபத்தியைந்து வருடங்களும், எப்போதும் அம்மம்மாவுக்கு உறுதுணையாகவும் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் கூப்பிட்ட குரலுக்கு ஓடிச்சென்று அன்போடும் ஆதரவோடும் உதவுபவராகவும் இருந்தவர். (சிவகாமசுந்தரி அவர்களின் டயறிக் குறிப்புகளில் பேரன் திலீபனுக்கு தனியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது)*



சிவகாமசுந்தரி அவர்களின் மைந்தன்
பரதராஜன் - பரதன் (மாவீரன் கப்டன் மொறிஸ்)
வி.பு.அமைப்பின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்

# என் கனவுகளிலும் நினைவுகளிலும்...!

***"நான் போர் முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன். மீண்டும் நிச்சயமாகத் திரும்பி வருவேன். ஆனால் உங்கள் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டுமே"***
***– கப்டன் மொறிஸ்(பரதன்)***

*அது அவன் சொன்ன வரிகள். அந்த வரிகளை இப்போதும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அவை வெறும் வரிகள் அல்ல. அது அவனது மனதினுள் இருந்த உண்மையான எதிர்வு கூறல். அவன் அதனைக் கூறும் போது சிரித்த முகத்துடனே தான் கூறுவான். அதனால் அதன் கனத்தை அப் போது என்னால் உணர முடியவில்லை. இப்போது எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கிறேன்.*

*எத்தனை விடயங்களை வெகு சாதாரண மாகக் கடந்து வந்து விட்டேன்! ஆச்சரியமாக இருக்கிறது! ஒரு பெரும்போரை, பேரிழப்புகளை, துயரங்களை, பயங்கரங்களை, ஆபத்துக்களை, அழுகைகளை, சிரிப்புகளை.. என எல்லாவற்றையும் எப்படிக் கடந்து வந்திருக்கிறேன்! நினைத்துப் பார்க்கப் பிரமிப்பாக இருக்கிறது.*

*பரதன் எனக்கு ஆறாவது பிள்ளை. 1969ம் ஆண்டு செப்டெம்பர் 12ம்நாள் பிறந்தான். அவனை எல்லோரும் 'தகப்பனைப் போலவே தோற்றத்தில் இருக்கிறான்' என்று சொல்வார்கள். எப்போதும் சிரித்த முகம். கலகலப்பு நிறைந்த எங்கள் குடும்பத்தில் மேலும் கலகலப்பூட்டுபவனாக அவன் இருந்தான். நகைச்சுவை அவனின் உடல் முழுவதும் பரவிக் கிடக்கிறதோ என்று நான் யோசிப்பதுண்டு.*

*ஆனால் அந்தக் கலகலப்பு நீண்ட காலம்*

நிலைத்திருக்கவில்லை. எல்லாக் குடும்பங்களைப் போலவும், சந்தோசமும் கலகலப்பும் நிறைந்த எங்கள் குடும்பத்திலும் துயர்படியும் நாட்கள் மெல்ல மெல்ல ஆரம்பமாகின. 1983 யூலைக் கலவரம் எங்கள் சந்தோசங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதற்கு கட்டியம் கூறுவது போல் நாடெங்கும் தமிழ்மக்கள் மீது தாக்குதல்கள் ஆரம்பமாகியிருந்தன. அந்நேரம் எனது கணவரும் எனது மூத்த மகனும் சிங்களவர்கள் அதிகமாக வாழும் தென்னிலங்கையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் கலவரத்தில் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பி வந்தார்கள். ஆனால் எமக்குத் தெரிந்த நூற்றுக் கணக்கான உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் எனப் பலர் இக்கலவரத்தில் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப் பட்டிருந்தார்கள். இந்தக் கலவரத்தின் தாக்கம் எல்லோரையும் மிகவும் பாதித்திருந்தது. அது எங்கள் குடும்பத்தையும் விட்டு வைக்கவில்லை. இதுவே என் மகன் பரதனையும் விடுதலைப் போராட்ட உணர்வுக்குள் இழுத்துச் சென்றிருக்க வேண்டும்.

அவன் கதைகள் கேட்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவன். அப்பாவிடம் கதைகள் கேட்டுக் கேட்டே வளர்ந்தவர்கள் என் பிள்ளைகள். அப்பா சொல்லும் சமயக் கதைகள், சரித்திரக் கதைகள், அரசியல் கதைகள்... எல்லாம் நாளும் பொழுதும் பிள்ளைகளின் சிந்தையைத் தீட்டிக் கொண்டே இருந்திருக்கின்றன. இதுவே பரதனையும் அவனது இளவயதில் ஒரு திடமான நேர்மையான துணிச்சலான முடிவினை அவனுக்குள் எடுப்பதற்கு உந்துகோலாக அமைந்திருக்கிறது.

நான் அவனைத் தடுக்கவில்லை. காலம் அப்படி இருந்தது. அவன் எடுத்த முடிவு தேவையானது என்றும் அவசியமானது என்றும் எனக்குத் தோன்றியது. உறவினர்கள் என்னைப் பேசினார்கள். "அவனின் முடிவினைமாற்றி அவனைத் திருப்பி அழை" என்று என்னை வற்புறுத்தினார்கள்.

ஆனால் நான் அதனை ஏற்கவும் இல்லை. அதனைச் செய்யவும் இல்லை. அவன் மேலும் சில காலம் படித்து, அந்தப் படிப்பை பூரணமாக முடித்து விட்டுப் போயிருக்கலாம் என்று மட்டுமே மனசுக் குள் யோசித்தேன். அவ்வளவுதான்.

'எமக்கானதெல்லாம் கிடைத்து விட்டால்... எல்லோரும் சந்தோசமாகப் படிக்கலாம்' என்றுதான் நான் நினைத்தேன். ஆசைப்பட்டேன். அது நடக்கும் என்றும் மிகவும் நம்பினேன்.

அவன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டான். அவர்களது கட்டுப்பாடுகளுக்கமைய பயிற்சிகள்பெற்று பருத்தித் துறைப் பிரதேசப் பொறுப்பாளராகவும் பணிகளைச் செய்யத் தொடங்கினான்.

அவன் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப் பாளராக இயங்கிக் கொண்டிருக்கும் போது இந்திய இராணுவம் திடீரென்று இலங்கைக்கு வந்து சேர்ந் தது. ஆரம்பத்தில் இந்திய இராணுவத்தின் வரவை நாங்கள் மகிழ்ச்சியுடன்தான் ஏற்றுக் கொண்டோம். நாளடைவில் அவர்களின் இலக்கு என்ன என்பதை அறியத் தொடங்கியபோது எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட ஏமாற்றமும் துயரமும் சொல்லில் அடங் காதவை! அவர்கள் இலங்கையின் வடபகுதியையும் கிழக்குப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுதலைப் போராளிகளை தமது கைப்பாவைகளாக்க முயற்சித்துக் கொண்டிருந்தார் கள். அப்போதுதான் நிலைமையே தலைகீழாக மாறத் தொடங்கியது. இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகவும் தமது செயற்பாடுகளையும் தாக்குதல்களையும் ஆரம்பித்திருந்தது. இது நாம் வாழ்வில் ஒருபோதும் எதிர் பார்க்காதது.

அந்நேரம் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப் பாளராக இருந்த என் மகன் பரதனைத் (மொறிஸ்)

தேடி அவர்கள் வலை வீசிக் கொண்டிருந்தார்கள். அவனைத் தேடுவதாகச் சொல்லி பருத்தித்துறையில் இருக்கும் அப்பாவி இளைஞர்களைப் பிடித்து சித்திர வதை செய்வதும் சுட்டுக் கொல்வதுமாக நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருந்தது. அமைதிகாக்க வந்தபடை ஆக்கிரமிப்புப் படையாக மாறியிருந்தது. மொறிஸைத் தேடி அவர்கள் கொலைவெறி பிடித்த வர்கள்போல அலைந்து கொண்டிருந்தார்கள். புலிப் போராளிகள் பலரைச் சல்லடை போட்டுத் தேடிப் பிடித்து ஈவு, இரக்கம் இன்றிக் கொலை செய்து கொண்டிருந்தார்கள்.

பரதன்(மொறிஸ்) மிகவும் நேர்மையானவன். எல்லோரிடமும் அன்பும் அக்கறையும் கொண்டவன். மக்களின் கஷ்டங்களைப் புரிந்து நேரில் சென்று அவர்களுக்கான உதவிகளைச் செய்பவன். அதனால் அவனை நேசிக்காத மக்களே கிடையாது. எல்லோரும் என்னிடம் வந்து அவனின் நல்ல பண்புகளைக் கூறிப் பாராட்டுவார்கள். அவனின் பண்பை, வீரத்தை, துணிச்சலைக் கூறி வியந்து நிற்பார்கள். அது எனக்கு மிகுந்த பெருமையாக இருக்கும். ஆனால் அவற்றைக் கண்ணாரக் கண்டு, அந்த மக்களோடு மக்களாக வாழ்ந்து அனுபவிப்ப தற்குக் காலம் எனக்கு இடம் தரவில்லை.

இந்தச் சமயம் எனது அடுத்த மகன் சபாவும்(மொறிஸின் தம்பி மயூரன்) விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு விட்டான். தொடர்ந்த நாட்களில் அவன் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று தலைவரின் இருப்பிடப் பகுதிக்கு அழைத்துச் செல்லப் பட்டு விட்டானென எமக்கு இரகசியச் செய்திகள் வந்து சேர்ந்தன.

இந் நிலையில் இந்திய இராணுவமோ அல்லும் பகலும் எங்கள் வீட்டிற்கு வந்து "மொறிஸ் எங்கே? மொறிஸ் எங்கே?" என்று கேட்டு எம்மை சித்திரவதைப் படுத்தத் தொடங்கி விட்டது. அந்தச்

*சமயம் என் சின்ன மகள் பிரபாவின் கணவரான கணேஷை(டக்கி)யும் சிங்கள இராணுவம் கைது செய்து கொண்டு போய் பூசா கடற்படைத்தடுப்பு முகாமில் வைத்திருந்தது. அவரின் கைது அவருக்கும் எங்களுக்கும் மேலும் எத்தனை ஆபத்துக்களை ஏற்படுத்துமோ என்ற அச்சம் ஒருபுறம், துயரம் ஒரு புறம் என நாங்கள் பட்ட அவஸ்தைகள் சொல்லில் வடிக்க முடியாதவை!*

*தினமும் எங்கள் வீடு தேடி வரும் இந்திய இராணுவத்தினர் எங்களுக்குச் செய்யும் அட்டூழியங் கள் வர வர அதிகரித்துக் கொண்டேயிருந்தன. அவற்றைத் தாங்க முடியாமல் நானும் எனது இரண்டு மகள்மாருமாக எமது வீட்டை விட்டுப் புறப்பட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று விட்டோம். அப்போது எனது கணவர் யாழ்ப்பாணம் புகையிரத நிலைய அதிபராக அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தார். என் இளையமகள் சந்திராவும் யாழ்ப்பாணம் கச்சேரியில்தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அதனால் யாழ்ப்பாணத்தில் குடியிருப்பது எங்கள் எல்லோருக்கும் வசதியாகவும் கொஞ்சம் பாதுகாப்பானதாகவும் இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. அங்கே யாழ். புகையிரத நிலையத்தை அண்டியிருக்கும் என் கணவரது ரெயில்வே பங்களாவில் நாம் குடி கொண்டு விட்டோம். அங்கும் எமது பங்களாவைச் சுற்றி இந்திய இராணுவ முகாம்களும் சென்றிப் பொயின்றுகளும்தான். ஆனாலும் பருத்தித்துறையில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரிடமிருந்து கொஞ்சமாவது தொலைவிற்கு வந்து விட்டோம் என்ற ஒரு ஆறுதல். அவ்வளவுதான்.*

*நாங்கள் ஊரைவிட்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து விட்டாலும் பருத்தித்துறையில் என் மகன் எத்தனை சிரமப் படுகிறானோ என்று எனக்கு ஒரே யோசனையாகவே இருக்கும். இராணுவச் சுற்றி வளைப்புகளுக்கு மத்தியில் அவனும் பெடியளும் எங்கு சென்று சாப்பிடுவார்கள், எப்படித் தம்மைப்*

*பாதுகாத்துக் கொள்வார்கள் என்ற தவிப்பு எப்போதும் எனக்குள் இருந்து கொண்டேயிருக்கும்.*

*இந்திய இராணுவம் "மொறிஸைப் பிடித்தே தீருவோம்" என்று கங்கணம் கட்டிக் கொண்டு திரிகிறது என்ற செய்திகள் நாளும் பொழுதும் ஒவ்வொருவர் ஊடாகவும் எமக்கு வந்த வண்ணமே இருந்தன. ஒவ்வொரு நாட்களும் எங்களுக்குக் கலக்கமானதும் பதட்டமானதுமான நாட்களாகவே இருந்திருக்கின்றன. அவனைப் பார்த்து விட்டு வந்தால் மனம் ஆறும் என்ற நிலையில் நானும் என் மகள் சந்திராவுமாக ஒவ்வொருவாரமும் இராணுவக் கெடுபிடிகளினூடாகப் பஸ்ஸில் பயணம் செய்து போய் அவனைப் பார்த்து விட்டு வருவோம். சந்திராவை அவன் 'இளையக்கா..' என்று தான் அழைப்பான். அவனது தோழர்களும் அப்படித்தான் அழைப்பார்கள். அவள் தனது சம்பளம் வந்ததும் அவனுக்காக ஒரு தொகையை என்னிடம் தருவாள். எனது கணவரும் அவனுக்காக அவ்வப்போது பணம் தந்துவிடுவார். நான் அவற்றைச் சேர்த்துக்கொண்டு போய் அவனிடம் கொடுத்து "பசியோடிராமல் எல்லாருமாகச் சாப்பிடுங்கோ.." என்று சொல்லி அவர்களுடன் உரையாடி விட்டு வருவேன். அது அவனுக்கும் அவனோடு நிற்கும் அவனது நண்பர் களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் உற்காகத்தையும் கொடுக்கும். என் மனதிற்கும் மிகுந்த ஆறுதலாக இருக்கும்.*

*எங்கள் பருத்தித்துறை வீட்டில் அப்போது எனது கணவரின் தாயார்(என் பிள்ளைகளின் அப்பாச்சி) மட்டுமே தனியாக இருந்தா. அவ தன் சமையல், குளிப்பு, படுக்கை யாவற்றையும் தனியாகவே கவனித்துக் கொண்டிருந்தா. சில சமயங்களில் எங்களால் பருத்தித்துறைக்குப் போக முடியாமல் நிலைமை மோசமாகியிருக்கும். அந்தத் தருணங்களில் மொறிஸ் அங்கு வந்து "அம்மா வந்தவவோ? இளையக்கா வந்தவவோ?' என்று மிகுந்த ஏக்கத்துடன் அப்பாச்சியைக் கேட்டுவிட்டுப்*

போவானாம். பின்னர் எங்களைக் காணும் போது அப்பாச்சி சொல்லுவா. அதனைக் கேட்கும் போது துயரம் எங்களை வாட்டி எடுக்கும்.

1989 மார்ச்சில் ஒரு வெள்ளிக்கிழமை பின்னேரம் சந்திராவும் பாமாவும் அவனைப் பார்ப்ப தற்காக பருத்தித்துறை நோக்கி பஸ்ஸில் புறப்பட் டார்கள். சந்திரா தனது சம்பளத்தில் அவனின் செலவுக்குப் பணமும் கொடுத்து, இரண்டு நாட்கள் ஊரில் நின்று, பெடியளுக்கு விருப்பமான சாப்பாடு களும் ஏதும் செய்து கொடுத்து விட்டு வரப்போவ தாகக் கூறிவிட்டுத் தான் பாமாவையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டாள். அன்று யாழ்ப்பாணம் முழுவதுமே சற்றுப் பதற்றமாகத்தான் இருந்தது. இராணுவச் சோதனைச் சாவடிகளில் சோதனைகள் வலு உக்கிரமாக நடந்து கொண்டிருந்தன. இந்த நிலையில் அவர்கள் போவது எனக்கு யோசனை யாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர்கள் துணிச்ச லுடன் புறப்பட்டு விட்டார்கள்.

அங்கு போய்ச் சேர்ந்ததும், சந்திரா மொறிஸையும் தோழர்களையும் மறுநாள் சாப்பிட வரும்படி ஆளனுப்பிச் சொல்லி விட்டு, தோசைக்கு அரைத்துக் குழைத்து வைத்து விட்டு, மறுநாள் அதிகாலை எழுந்து அம்மியில் சம்பல் அரைத்துக் கொண்டிருந்திருக்கிறாள். அச்சமயம் பார்த்து மொறிஸைத் தேடி வீட்டுக்குள் புகுந்த இந்திய இராணுவத்தினர் தோசைமாப் பானையை இழுத்துக் கொட்டி, அம்மியில் சம்பல் அரைத்துக் கொண்டு இருந்த சந்திராவையும் வீடு சுத்தம் பண்ணிக் கொண்டிருந்த பாமாவையும் பிடித்து, சித்திரவதை கள் செய்து மந்திகை இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்று விட்டார்கள். முகாமில் அவர் களைப் போலவே வேறும் பல இளம் பெண்களைக் கொண்டு வந்து பணயக் கைதிகளைப் போல வைத்திருந்தார்கள். அங்கு நடந்த விசாரணைகளும் மரணப் பயமுறுத்தல்களும் தனியான ஒரு கதை. அந்தக் கொடுமைகளையெல்லாம்கடந்து அங்கிருந்து

*விடுபட்டு மறுநாள் இரவு அவர்கள் ஏதோ விதமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தமை ஒரு பெரிய கதை.*

*அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் நாங்கள் மொறிஸைப் பார்ப்பதற்காக எங்கள் சொந்த வீட்டின் பக்கமே போவதில்லை. இராணுவம் எப்போதும் எங்கள் வீட்டைக் குறிவைத்துப் பார்த்த படியே இருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்து கொண்டோம். அதனால் மொறிஸிலும் எங்கள் குடும்பத்திலும் பெரிதும் அன்பு கொண்ட ஐயனார் கலட்டி திருநாவுக்கரசு மாஸ்ரர் வீட்டுக்குத்தான் நேராகச் செல்வோம். அங்கு போனால் அவரின் மகன் ராசு, பெடியள் நிற்கும் இடம் தேடிப் போய் நாமங்கு வந்திருப்பது பற்றி அறிவித்து விட்டு வருவான். அதன் பின்னர் மொறிசும் அவனது நண்பர்களும் அங்கு வந்து எம்மைச் சந்தித்துக் கதைத்துப் போவார்கள்.*

*கடைசியாக நான் போய் மொறிஸைச் சந்தித்த நாளை என்னால் மறக்கவே முடியாது. அது 1989 ஏப்ரல் மாதம் 27ம் திகதி. அவனின் மூத்தக்கா வதனா ஜேர்மனியிலிருந்து அவனுக்காக 200மார்க்குகள்(200DM) அனுப்பி வைத்திருந்தாள். அவனையும் தோழர்களையும் சந்தித்து, அந்தப் பணத்தையும் அவனிடம் கொடுத்து வருவதற்காக அன்று நான் ஊருக்குப் போயிருந்தேன். அன்றும் மாஸ்ரர் வீட்டிற்குத்தான் நேராகப் போனேன். வழமை போல் அவரின் மகன் ராசு குறிப்பிட்ட இடத்திற்குப் போய் அறிவித்து விட்டு வந்தான்.*

*அன்று மொறிஸ் சற்றுத் தாமதமாகத்தான் வந்து சேர்ந்தான். அவன் வரும் போது நேரம் மதியம் ஒரு மணியிருக்கும். அன்றைக்கு அவனின் முகத்தில் யோசனை நிறைந்திருந்தது. திருநாவுக்கரசு மாஸ்ரரின் மனைவி தேவியும் அவவின் தங்கையு மாக சோறு கறி சமைத்து, எனக்கும் அவனுக்கும் அன்போடு மதியஉணவு பரிமாறினார்கள். அவனின் யோசனை நிறைந்த முகம் என் மனதை என்னவோ*

செய்தது. நிறையக் கதைக்க முடியாமல் எங்கள் இருவரது மனங்களும் சோர்வுடன் இருப்பது போல் தோன்றியது.

நாங்கள் இருவரும் சாப்பிட்டு முடிந்ததும் மாஸ்ரரின் மனைவி எங்களின் கைகளைக் கழுவு வதற்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டு வந்து மேசையில் வைத்தார். நான் கைகளைக் கழுவிவிட்டு வெளிவராந்தாவில் இருந்த வாங்கிலில் அமர்ந்து கொண்டேன். மொறிஸ் என்னருகில் வந்து அமர்ந்தான். அடுத்த கணமே தன் தலையை என் மடியின் மீது வைத்துச் சாய்ந்து படுத்தான். அவனின் கையிலிருந்த துப்பாக்கி அவனருகில் சுவரோடு சாய்ந்து கிடந்தது. ஒரு விடுதலைப் போராளிக்குரிய தடித்த அங்கியுடனும் இடுப்பில் சொருகியிருக்கும் கிரனைற்றுடனும் துப்பாக்கியுட னும் எப்படி இவர்களால் வசதியாகத் தூங்க முடியுமென நான் எப்போதும் யோசிப்பதுண்டு. அப்போதும், அவனைப் பார்த்த அந்தக் கணத்தில் என் மனதிற்குள் அந்த ஆதங்கம் தான் ஏற்பட்டது. 'இவற்றையெல்லாம் கழற்றியெறிந்து விட்டு நிம்மதி யாக, ஆறுதலாக எப்போதுதான் இவன் தூங்கப் போகிறானோ, எப்போதுதான் அதற்கான காலம் வரப்போகிறதோ?' என்ற கலக்கமான யோசனை யுடன் "ஏனப்பு சரியா யோசிக்கிறாய்? என்ன பிரச்சனை..?" என்று கேட்ட படியே அவனின் தலைமுடியை மெதுவாகக் கோதி விட்டேன்.

அன்று அவனின் முகத்தில் வழமையான அந்த மலர்ந்த சிரிப்பைக் காணவில்லை. "மூத்தக்கா காசு அனுப்பியிருக்கிறா" என்று சொல்லி அந்தப் பணத்தை அவனிடம் கொடுத்தேன். சட்டென்று ஒரு ஒளிக்கீற்று அவனின் முகத்தில் மின்னி மறைந்தது. உடனேயே அதனை அங்கு நின்றிருந்த தேவியக்காவிடம் கொடுத்து "அடுத்த சனிக்கிழமை பெடியள் எல்லாருக்கும் சாப்பாடு செய்யுங்கோ" என்று சொன்னான். அப்போது சாயந்தரம் மூன்று மணியிருக்கும்.

*சடாரென்று எழுந்து அமர்ந்தான். "அம்மா நீங்களும் இருள முதல் வீட்டை போங்கோ. மிக்க சந்தோசம் எண்டு மூத்தக்காட்டைச் சொல்லுங்கோ நான் அவசரமாப் போகோணும்" சொல்லியவாறே முற்றத்தில் இறங்கி, கேற்றை நோக்கி நடந்தான். கேற்றடியில் நின்று திரும்பிப் பார்த்து, கையை அசைத்து விட்டு வேகமாக மறைந்து விட்டான்.*

*'கடவுளே... எப்பதான் இந்தப் பிள்ளை ஆறுதலாகச் சரிந்து படுக்க நேரம் கிடைக்கப் போகுதோ..' மீண்டும் மனதிற்குள் அதே கலக்கமும் தவிப்பும். அது தான் என் மகன் மொறிஸை நான் சந்தித்துக் கொள்ளும் கடைசித் தருணம் என்பது அப்போது எனக்குத் தெரியாது!*

*ராசு என்னைச் சைக்கிளில் ஏற்றிச் சென்று யாழ்ப்பாண பஸ்ஸில் ஏற்றி விட்டான். நான் யாழ். வீடு போய்ச் சேர இரவு ஏழு மணியாகி விட்டது. போய்ச் சேர்ந்தவுடன், பிள்ளைகள் ஓடி வந்து "அம்மா பரதனைக் கண்டனிங்களோ? காசு கொடுத் தனிங்களோ..?" என்று ஆர்வத்தோடு கேட்டார்கள். நான் சந்தித்த விபரங்களையெல்லாம் சொன்னபடி கதிரையில் அமர்ந்திருந்தேன். சந்திரா ஓடிப்போய் சுடச்சுட தேநீர் போட்டுக் கொண்டு வந்து தந்தாள். அவனைச் சந்தித்து விட்டு வந்தேன் என்பதில் எல்லோருக்கும் ஒருவித ஆறுதலாக இருந்தது.*

*மூன்று நாட்கள் கடந்திருக்கும். அது 1989ம் ஆண்டு மே,1ம்திகதி. திங்கட்கிழமை. என் மைத்துனி சிவநேசமும் ஒன்று விட்ட சகோதரி வடிவமும் பருத்தித்துறையிலிருந்து பஸ்ஸில் பயணித்து வந்து எங்கள் பங்களாவிற்குள் நுழைவது தெரிந்தது. நான் யோசனையோடு பார்த்த படி நின்றிருந்தேன். என்னைக் கண்டதும் அவர்கள் இருவரும் விம்மி விம்மி அழத் தொடங்கினார்கள். "ஐயோ மச்சாள்... மொறிஸ் போயிட்டான்.." என்று கதறியழுதபடி ஓடிவந்து என்னைக் கட்டியணைத்தார்கள்! எனக்கு உலகமே இருண்டுகொண்டு வருவது போலிருந்தது.*

*கனவிலும் நினைத்திராத அந்தச் செய்தியை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. சிங்கள இராணுவத்துக்கு மிகச்சுலபமாகப் போக்குக் காட்டியவன் என் பிள்ளை. இந்திய இராணுவத் தின் ஐந்து தடவைகளிலான பெரிய பெரிய சுற்றிவளைப்புகளில் இருந்தெல்லாம் இலாவகமாகத் தப்பிக் கொண்டவன். ஒரு தடவை இராணுவத் துப்பாக்கிக் குண்டொன்று அவனது காலைத் துளைத்த பின்னரும் துணிகரமாகத் தாக்கிவிட்டுத் தப்பி வந்தவன். அப்படிப் பட்ட என் பிள்ளை அவர்களுக்கான அந்த இலக்கை அடையும் வரை தன்னுயிர் காப்பான் என்றல்லவா நம்பியிருந்தேன்!*

*என் கனவுகள் தோற்று விட்டனவா? என் நம்பிக்கைகள் தோற்கடிக்கப் பட்டு விட்டனவா? சிந்திக்கும் திறனை நான் முற்றிலுமாய் இழந்தேன். மிக மிகக் கொடுமையானதொரு தருணம் அது!*

*அன்று மாலை சந்திரா யாழ்.கச்சேரியால் வேலை முடித்து வந்தபின் கதைத்து முடிவுசெய்த படி மறுநாள் அதிகாலை நாம் எல்லோருமாகப் பருத்தித்துறைக்குப் புறப்பட்டோம்.*

*எந்நேரமும் எதுவும் நடக்கலாமென்ற அச்சம் பருத்தித்துறைப் பகுதியெங்கும் நிறைந்திருந்தது. வீதிகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. கடைகள் யாவும் அடைக்கப் பட்டிருந்தன. மொறிஸ் இல்லாத ஒரு நாளைக் கடப்பதற்குக் கூட பருத்தித்துறை மக்களனைவரும் அஞ்சினார்கள் என்பது தெரிந்தது. "இனி எங்களை யார் காப்பது? ஆமிக்காரர் தங்கள் எண்ணத்திற்கு வந்து எங்களையெல்லாம் சுட்டுத் தள்ளப் போகிறார்கள்.." என்றெல்லாம் பலரும் தமக்குள் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.*

*பருத்தித்துறை முழுவதும் கறுப்புக் கொடிகள் பறந்தன. வீதியெங்கும் தோரணங்கள். மதிற்சுவர்க ளெங்கும் அஞ்சலிச் சுவரொட்டிகள். பருத்தித்துறை மண் துயரத்தில் தோய்ந்து இருண்டு கிடந்தது!*

*"பருத்தித்துறை இராணுவ முகாமும் மந்திகை இராணுவ முகாமும் வியாபாரிமூலை இராணுவ முகாமும் இணைந்து முத்திசையில் சுற்றி வளைத்து நடாத்திய தாக்குதல் சண்டையில் மொறிஸ், தன்னோடு நின்றிருந்த எட்டுப் போராளிகளும் தப்பிப் போவதற்கான வழியைச் செய்து கொடுத்து விட்டு கடைசியாக றம்போவுடனும் சிறீயுடனும் மட்டும் நின்று இறுதிவரை போரிட்டு வீரமரண மடைந்தான்"*

*தாக்குதல் நடைபெற்ற இடங்களில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக எம்மைத் தேடிவந்து தமக்குத் தெரிந்த விபரங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.*

*இந்திய இராணுவம் மொறிஸின் வித்துடலை எடுத்துச் சென்று மந்திகை முகாமில் வைத்து, பாடசாலை மாணவர்களை அழைத்துச் சென்று பெருமையாகக் காட்சிப் படுத்திக் கொண்டிருக்கிறது என்ற செய்தியும் வந்து கொண்டிருந்தது.*

*மறுநாள், மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மொறிஸின் வித்துடலை எடுப்ப தற்காக நானும் என் மகள் சந்திராவும், திருநாவுக் கரசு மாஸ்ரரும் சென்றோம். எம்மோடு போஸ்ற் மாஸ்ரர் மகேந்திரமும் இணைந்து கொண்டார்.*

*´இராணுவத்தினரின் அனுமதியின்றி அவனின் வித்துடலை யாரும் எடுக்க முடியாது' என்ற கடுமையான உத்தரவை இராணுவம் வைத்திய சாலைக்கு விடுத்திருந்தது.*

*'எனக்கு என் பிள்ளையின்*
*வித்துடல் வேண்டும்'*

*நான் என் பிள்ளையின் வித்துடலை எடுப் பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக மந்திகை இராணுவ முகாமை நோக்கிச் செல்வதற்குத் தயாரா*

னேன். என் மகள் சந்திராவோ நான் தனியாக இராணுவ முகாமிற்குப் போவதை எண்ணி மிகவும் பதற்றப் பட்டாள். இராணுவம் நிச்சயம் என்னை ஏதாவது செய்து விடும் என்று எல்லோரும் அச்சப் பட்டார்கள், தயங்கினார்கள். நான் எல்லோரையும் அமைதிப் படுத்தி விட்டு இராணுவ முகாம் நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

இராணுவ சென்றிப் பொயின்ற்றுகளிலிருந்து துப்பாக்கிமுனைகள் என் பக்கம் திரும்புவது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அடுத்து வரும் நிமிடங்களில் எதுவும் நடக்கலாமென்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். ஆனாலும் என்னைத் தைரியமாக இயங்க வைக்கும் ஏதோ ஒரு சக்தி அப்போது என்னை ஆட்கொண்டிருந்தது. எதற்கும் முகம் கொடுக்கத் தயாராகவே நான் முகாம் நோக்கி நடந்துகொண்டிருந்தேன். அரைவாசித்தூரம் நடந்து கொண்டிருக்கும் போதே இராணுவக் கொமாண்டர் கள் முகாம் வாசலுக்கு வந்து, என் வருகையைப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டேன்.

வாசலை அண்மித்ததும்
"நான் மொறிஸின் அம்மா" என்றேன்.

அவ்வளவுதான். இராணுவக் கொமாண்டர் ஒருவர் அவசரமாக என் முன்னால் வந்து, என் கைகளைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்று என்னை ஒரு கதிரையில் அமர்த்தினார். உடனே சுடச் சுட தேநீர் தயாரித்து வந்து எனக்குப் பரிமாறினார்கள். பெரிய பதவிகளில் இருப்பவர்கள் போலத் தோன்றிய மூவர் என் முன்னால் வந்து நின்று குனிந்து என்னை வணங்கினார்கள். பிறகு என்னைப் பார்த்து,

"அம்மா... உங்கள் மகன் ஒரு பெரிய வீரன். அவனின் திறமையைக் கண்டு அவன் ஒரு வயதான பெரிய மனிதன் என்றுதான் இத்தனை நாளும் நாம் நினைத்திருந்தோம். ஆனால் அவன் வயதில்குறைந்த

*ஒரு இளைஞன் என்று அறியும் போது எங்களால் நம்பவே முடியவில்லை. அவன் மிகவும் நல்லவன். அதனால்தான் அவனை எல்லா மக்களும் நேசிக்கி றார்கள் என்பது எங்களுக்குப் புரிகிறது. இத்தனை வீரமும் துணிச்சலும் மிக்க ஒருவனைப் பிள்ளை யாகப் பெற்றதற்காக நீங்கள் பெருமைப் படுங்கள். உங்களுக்கு நாங்கள் மரியாதை செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். நீங்கள் ஒரு வீரத்தாய். உங்களை நாங்கள் வணங்குகிறோம்..." என்று ஆங்கிலத்தில் கூறிய படி இரு கைகளையும் குவித்து என்னை வணங்கினார்கள்.*

*என்னால் அந்த நிமிடத்தை*
*நம்பவே முடியவில்லை!*

*என் உடல் என்னையறியாமல் மெல்ல மெல்ல நடுங்கத் தொடங்கியது. அவ்வளவு நேரமும் எனக்குள் இறுகிப் போயிருந்த அத்தனை உணர்வு களும் பொங்கியெழுந்து என் கண்களைக் கண்ணீ ரால் மறைக்கத் தொடங்கியது! அந்தக் கணம் வரை நான் கட்டிக்காத்த என் தைரியம் அத்தனையும் ஒரு மேகம் நொருங்குவது போல் கீலம் கீலமாய் சிதறிப் போகத் தொடங்கியது!*

*நான் எழுந்து நின்றேன். பாதையைக் கண்ணீர் மறைத்தது. நான் அந்தக் கண்ணீரைத் துடைக்கவில்லை. அவர்களோடு சேர்ந்து என் மண்ணின் மைந்தனது வித்துடலை நோக்கி நடக்கத் தொடங்கினேன்!*

*–சிவா தியாகராஜா*

*(சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்கள் எழுதிய இப்பதிவு அவரது 'பெரு நினைவின் சிறு துளிகள்' நூலில் இடம் பெற்றது)*

# படங்கள்



## திருமதி. சிவகாமசுந்தரி தியாகராஜா

## *1934 - 2022*



*சிவகாமசுந்தரி அவர்கள் ஆறுவயதில்(1940)*

*அம்மாவின் இந்தப் படம் அம்மாவின் தாய்வழிப்பேரன் (பெத்தப்பா) வேலுப்பிள்ளைப்பரியார் அவர்களின் இறுதிச்சடங்கின் போது எடுக்கப்பட்ட குடும்பப்படத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது.*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*கணவர் மு.ச.தியாகராஜா அவர்களுடன்.*
*அவர்களது திருமணம் 13-12-1956 இல் நடைபெற்றது.*
*அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட படம் இது.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*முன்னம் வந்துதித்த மூத்த புதல்வன் பிறேமராஜன்*
*(கவிஞர் தீட்சண்யன்) குழந்தையாக - 1958*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் கணவர் மு.ச.தியாகராஜா அவர்களும் முதல் குழந்தை எ.ஸ்.ரி பிறேமராஜன் (கவிஞர் தீட்சண்யன்) அவர்களும் - 1958*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மூத்தமகள் சந்திரவதனா குழந்தையாக (1960)*



*சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த நான்கு பிள்ளைகள் –1964/1965*
*நிற்பவர்: எஸ்.ரி. பிறேமராஜன் (கவிஞர் தீட்சண்யன்)*
*இருப்பவர்கள்: சந்திரவதனா, சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி)*
*பார்த்திபன்(பார்த்திபராஜன்)*

*இந்தப் படம் எடுத்த நாள் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. படத்தில் அம்மா இல்லாவிட்டாலும் என் மனக்கண்ணில் அம்மா அப்படியே தெரிகிறா. தங்கை சந்திரா இரவீந்திரன் வீழ்ந்து விடக் கூடும் என்பதால் அவளை கமராவுக்குத் தெரியாமல் மெதுவாக இருகைகளாலும் பிடிக்கும் படி அண்ணனுக்குச் சொல்லி அண்ணனும் பிடித்திருக்கிறார். எனக்கு கமராவைப் பார்ப்பதில் ஏதோ பிரச்சனை. கமராவுக்குள் ஒரு கிளி வரும் என்று சொல்லி என்னைப் பார்க்கும் படி சொல்ல நானும் கிளியை எதிர்பார்த்தபடி தலையை நிமிர்த்தாமல் கண்ணை மெதுவாக உயர்த்தி கமராவைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். முன்னால் அம்மாவும் அப்பாவும் அன்பும் பாசமும் பொங்கி வழிய பெருமிதத்தோடு எங்களைப் பார்த்த படி நிற்கிறார்கள்.*

*இந்தப் படம் நான் ஈழத்தில் வாழும் வரை எங்கள் வீட்டு வரவேற்பறைச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. அம்மா யேர்மனிக்கு வந்த பின் அம்மா வாழ்ந்த இடங்களிலெல்லாம் அம்மாவோடு இந்தப் படமும் கூடவே இருந்தது.*
*–சந்திரவதனா*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மூத்தமகள் சந்திரவதனா (1976)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*கணவர் மு.ச.தியாகராஜா அவர்களும் (ஸ்ரேசன் மாஸ்ரர்)*
*பிள்ளைகளும் (1976)*

*இடமிருந்து வலமாக:*
*பாமா,*
*பாலசபாபதி(மாவீரன் கப்டன் மயூரன்),*
*பார்த்திபன்(பார்த்திபராஜன்),*
*பிறேமராஜன்(கவிஞர் தீட்சண்யன் - பிறேமராஜன் மாஸ்ரர்)*
*சந்திரா ரவீந்திரன்(சந்திரகுமாரி),*
*சந்திரபிரபா,*
*பரதராஜன்(மாவீரன் கப்டன் மொறிஸ்)*



*சிவகாமசுந்தரி அவர்கள் (1979)*




*சிவகாமசுந்தரி அவர்களுடன் பிள்ளைகள் (1979)*

*நிற்பவர்கள்: சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி), பரதராஜன்(மாவீரன் கப்டன் மொறிஸ்), சந்திரபிரபா*

*இருப்பவர்கள்: பாமா, சிவகாமசுந்தரி அவர்கள், பேரன் திலீபன், சந்திரவதனா(நிறைமாதக் கர்ப்பிணியாக), பாலசபாபதி(மாவீரன் கப்டன் மயூரன்)*



*அம்மா சிவகாமசுந்தரி அவர்களும் அப்பா தியாகராஜா அவர்களும் அவர்களது பிள்ளைகள் எண்மரும் 1960–1970களில்*



*சிவகாமசுந்தரி அவர்களின்*
*மூத்த புதல்வன் பிறேமராஜன் - கவிஞர் தீட்சண்யன்*
*(வி.பு.அமைப்பின் புலனாய்வு-மொழிபெயர்ப்புப் பிரிவு)*
*(30.01.1958-13.05.2000)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பிள்ளைகள் (1986)*

*நாங்கள் எண்மரும் அம்மாவுடன் ஒன்றாக நின்ற இறுதிநாள்.*

*நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக):*
*சந்திரவதனா, பார்த்திபன்(பார்த்திபராஜன்),*
*சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி), சந்திரபிரபா*

*இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக):*
*பரதராஜன்(மாவீரன் கப்டன் மொறிஸ்),*
*சிவகாமசுந்தரி அவர்கள், பாமா,*
*பிறேமராஜன்(கவிஞர் தீட்சண்யன்),*
*பாலசபாபதி (மாவீரன் கப்டன் மயூரன்)*




*சிவகாமசுந்தரி அவர்களின் பிள்ளைகளில் நால்வர்*

*இடமிருந்து வலமாக:*
*மூன்றாவது புதல்வி சந்திரபிரபா,*
*கடைசி மகள் பாமா,*
*மூன்றாவது புதல்வன் பரதராஜன் (மாவீரன் கப்டன் மொறிஸ்),*
*இரண்டாவது புதல்வி சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி)*
*(ஆத்தியடி, பருத்தித்துறை, தமிழீழம் – 1987)*

*இந்தப் படம் வடமராட்சி 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கை நிகழ்வுதற்கு சில நாட்களுக்கு முன்னர் எடுக்கப் பட்ட படம். அப்போது சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த மூன்று பிள்ளைகளும் ஊரில் இருக்கவில்லை. இவர்கள் நால்வருமே சிவகாமசுந்தரி அவர்களின் அருகில் இருந்தார்கள். கடைசி மகன் பாலசபாபதி அவர்களும் (மாவீரன் கப்டன் மயூரன்) விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். பரதன் (மாவீரன் கப்டன் மொறிஸ்) பருத்தித்துறையின் வி.பு அமைப்பின் பொறுப்பாளராக இருந்தார்.*



*சிவகாமசுந்தரி அவர்களின் மைந்தன்*
*பரதராஜன் - பரதன் (மாவீரன் கப்டன் மொறிஸ்)*
*வி.பு.அமைப்பின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்*



*சிவகாமசுந்தரி அவர்களின் மைந்தன்*
*பாலசபாபதி - சபா (மாவீரன் கப்டன் மயூரன்)*
*தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின்*
*நேரடி ஜாக்கெட் மெய்ப்பாதுகாவலர்*



*சிவகாமசுந்தரி அவர்களின் மைந்தன்*
*பரதராஜன் - பரதன் (மாவீரன் கப்டன் மொறிஸ்)*
*வி.பு.அமைப்பின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்*




*மாவீரன் கப்டன் மொறிஸின் முதலாவது நினைவு நாளில்*
*(01.05.1990)*

*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மூத்த புதல்வன்*
*எஸ்.ரி. பிறேமராஜன் (கவிஞர் தீட்சண்யன்),*
*மாவீரன் கப்டன் மயூரன் (சபா – பாலசபாபதி),*
*பேரக்குழந்தைகள் ஜனகன், கௌசிகன்*
*(எஸ்.ரி. பிறேமராஜன் அவர்களின் புதல்வர்கள்)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மைந்தன் மாவீரன் கப்டன் மயூரன்(சபா) - 01.05.1990*



*சிவகாமசுந்தரி அவர்களின் பேரன்*
*பரதன் பிறேமராஜன்.*
*(மாவீரன் லெப்டினன் மயூரன்)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*கடைசி மகள் பாமா*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரக்குழந்தைகள் (1992)*
*பேத்தி தக்சாயினி பிறந்திருந்த போது (31-10-1992)*

*இடமிருந்து வலமாக:*
*ஜனகன் பிறேமராஜன்,*
*பரதன் பிறேமராஜன் (மாவீரன் லெப்டினன் மயூரன்),*
*சிவகாமசுந்தரி அவர்கள்,*
*தக்சாயினி பிறேமராஜன் (மடியில்),*
*கௌசிகன் பிறேமராஜன்*

*சிவகாமசுந்தரி அவர்கள் தனது மூத்தமகன் எஸ்.ரி.பிறேமராஜன் (கவிஞர்-தீட்சண்யன்) அவர்களது ஒரே மகளான தன் பேத்தி தக்சாயினியைப் பார்க்கவென்று பல இடர்களின் மத்தியிலும் பருத்தித்துறையில் இருந்து முல்லைத்தீவு வற்றாப்பளையில் இருக்கும் தனது மகன் வீட்டுக்குச் சென்றிருந்த போது.*



*சிவகாமசுந்தரி அவர்கள், பேத்தி பகீந்துஷாவின் முதலாவது பிறந்தநாளில் (1994)*

*பகீந்துஷா, சிவகாமசுந்தரி அவர்களின் மூன்றாவது புதல்வியான சந்திரபிரபா அவர்களின் மூத்த புதல்வி*

*இடமிருந்து வலமாக:*
*சிவகாமசுந்தரி அவர்களின்*
*மருமகன் கணேசமூர்த்தி,*
*கணவர் மு.ச.தியாகராஜா,*
*சிவகாமசுந்தரி அவர்கள்,*
*பேத்தி பகீந்துஷா,*
*மகள் சந்திரபிரபா*



*சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த மருமகள்*
*மஞ்சுளா பிறேமராஜன் (1995)*



*சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த மகன்*
*பிறேமராஜன் அவர்களும் (ஷெல் தாக்குதலில் காலை இழந்த பின்)*
*மருமகள் மஞ்சுளா அவர்களும் பேத்தி தக்சாயினியும் (1995)*



*சிவகாமசுந்தரி அவர்களும்*
*கணவர் எம்.எஸ்.தியாகராஜா அவர்களும்*
*பேத்தி தக்சாயினியுடன்*
*தக்சாயினியின் மூன்றாவது பிறந்தநாளில் (31.10.1995)*

*தக்சாயினி, சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த புதல்வன் எஸ்.ரி.பிறேமராஜன் (கவிஞர் தீட்சண்யன் - மாஸ்டர்) அவர்களின் புதல்வி.*

*இதுவும் மிகமிகக் கடினமானதொரு பயணமாகத்தான் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அமைந்திருக்கும். போரும் வாழ்வுமாய் இருந்த அந்த நேரத்தில் பருத்தித்துறையிலிருந்து வற்றாப்பளைக்குப் பயணிப்பது என்பது அத்தனை சுலபமான காரியமல்ல.*

*இதுதான் அம்மா அண்ணனுடன் (எஸ்.ரி.பிறேமராஜன்) நின்ற கடைசிநாட்களில் ஒன்றாக இருக்கும். அதன்பின் வற்றாப் பளைக்குப் பயணிக்கக் கூடிய நிலை அங்கிருக்கவில்லை. அண்ணனும்(எஸ்.ரி.பிறேமராஜன்) வற்றாப்பளையைத் தாண்டி வெறெங்கும் பயணிக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை.*



*சிவகாமசுந்தரி அவர்களின் மாமியார்*
*(கணவர் எம்..எஸ்.தியாகராஜா அவர்களின் தாயார்)*
*அமரர் திருமதி இலட்சுமிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை*



*சிவகாமசுந்தரி அவர்களுடைய பெற்றோர்*
*அமரர் திரு குமாரசாமி ஆறுமுகம் (அப்பாவளவு ஆறுமுகம்)*
*அமரர் திருமதி விசாலாட்சி ஆறுமுகம்*
*(வேலுப்பிள்ளைப்பரியார் அவர்களின் இளையமகள்)*



சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகள் அருள்மதி ரஞ்சன்.
அருள்மதி, சிவகாமசுந்தரி அவர்களின் தம்பி குமாரசாமி
அவர்களது இளைய புதல்வி



சிவகாமசுந்தரி அவர்களுடன் மைத்துனர் சபாபதிப்பிள்ளை பரமகுரு.
பரமகுரு, சிவகாமசுந்தரி அவர்களின் கணவரது கடைசித்தம்பி.



*சிவகாமசுந்தரி அவர்களுடன் தங்கை*
*அமரர். திருமதி உமையாம்பிகை புவனேந்திரன் (1940)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*தங்கை அமரர். திருமதி உமையாம்பிகை புவனேந்திரன்*



*சிவகாமசுந்தரி அவர்களும் கணவர் எம்.எஸ்.தியாகராஜா அவர்களும் குடும்ப உறவுகளுடன்*

*படத்தில் இடமிருந்து வலமாக:*
*அப்பாவின் தங்கை அமரர் திருமதி யோகேஸ்வரி குமாரசாமி,*
*அப்பா மு.ச.தியாகராஜா,*
*அம்மா சிவகாமசுந்தரி,*
*அம்மாவின் தம்பியின் மகன் குமாரசாமி இளமாறன்,*
*அம்மாவின் தங்கை அமரர். திருமதி உமையாம்பிகை புவனேந்திரன்,*
*அம்மாவின் தம்பி ஆறுமுகம் குமாரசாமி,*
*அம்மாவின் தம்பியின் மகள் அருள்மதி ரஞ்சன்*

*அப்போது மாற்றுச்சம்பந்தம் என்றொரு வழக்கம் இருந்தது. அதன் படி எங்கள் அம்மாவினது தம்பி குமாரசாமி அவர்களும் அப்பாவினது தங்கை யோகேஸ்வரி அவர்களும் திருமணம் செய்து கொண்டார்கள்.*







*சிவகாமசுந்தரி அவர்களும்*
*கணவர் எம்.எஸ். தியாகராஜா அவர்களும்*
*இணைந்து வாழ்ந்த காலம்*
*13.12.1956 - 01.12.1997*



இது எங்கள் சந்தோசங்களாலும், துயரங்களாலும் நிரம்பி வழிந்த எங்கள் வீடு. எங்கள் அம்மாவின்(சிவகாமசுந்தரி) சின்னக் கைகளால் (மூன்று வயதில்) அத்திவாரத்துக்கான கற்கள் போடப்பட்டு, அம்மா வளர்ந்து, வாழ்ந்து, அதன் பின் அப்பா பார்த்துப் பார்த்துச் செதுக்கி வளர்த்த எங்கள் மாளிகை. நாங்கள் தவழ்ந்தும், தத்தித்தத்தி நடந்தும், சிரித்தும், கதைத்தும், சண்டை போட்டும்... என்று ஓடித்திரிந்த எங்கள் கூடு.
இங்கு எங்கள் அம்மாதான் மகாராணி, இளவரசி, சேவகி, நீதிபதி, பரோபகாரி, தோழி... எல்லாமுமே!
அம்மா யேர்மனியில் வாழ்ந்த காலங்களிலும் கனவுகளில் இந்த வீட்டிலேயே வாழ்ந்து கொண்டிருந்தா.





# மாவீரர் நாள் 2000

25.11.2000 சனிக்கிழமை 3.30 மணி

## மாவீரர் குடும்பம் இல: ~~56~~ 57

திரு.திருமதி சிவா தியாகராஜா (மொனிஸ்)

தயவு செய்து இவ் அட்டையை மண்டபத்திற்கு எடுத்து வரவும்

---

இல:- 56

# மாவீரர் நாள் 2001 யேர்மனி

# மாவீரர் குடும்ப அழைப்பிதழ்

தீயினில் எரியாத தீபங்களே, எங்கள் தேசத்தில் நிலையான வேதங்களே,
மண்ணினில் விதையான முத்துக்களே, நாங்கள் மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே
உங்கள் நினைவுகளைச் சுமந்து, உங்கள் கனவுகளைத் தாங்கி உறவுகள் நாங்கள் ஒன்றுகூடி வணங்குகின்றோம்.

திரு/ திருமதி/ செல்வன்/ செல்வி: சிவா தியாகராஜா அவர்களுக்கு,

01.12.2001 அன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும் மாவீரர் நாள் நிகழ்வில், மாவீரரின் திருஉருவப் படத்திற்கு ஈகச்சுடரேற்றி வழிபட மாவீரர் குடும்பத்தினராகிய உங்களை கௌரவித்து அழைக்கின்றோம்.



நடைபெறும் இடம்:- HELMUT-KÖRNIG HALLE
STROBELALLE 42
44139 DORTMUND

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

நன்றி
*தமிழர் ஒருங்கிணைப்புக் குழு யேர்மனி*

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு யேர்மனி TCC Postfach 101613, 46016 Oberhausen. Tel:-0208 20 59 91 03 Fax:- 0208 20 59 91 04



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*தேசியக்கொடியை ஏற்றும் போது*
*(மாவீரர்நாள் 1999 - டோர்ட்முண்ட், யேர்மனி)*



*சிவகாமசுந்தரி அவர்கள் ஈகைச்சுடரை ஏற்றும் போது*
*(மாவீரர்நாள் 2001 - டோர்ட்முண்ட், யேர்மனி)*



*சிவகாமசுந்தரி அவர்கள் ஈகைச்சுடரை ஏற்றும் போது*
*(மாவீரர்நாள் 2000 - டோர்ட்முண்ட், யேர்மனி)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*தேசியக்கொடியை ஏற்றும் போது*
*(மாவீரர்நாள் 2002 - டோர்ட்மூண்ட், யேர்மனி)*




*சிவகாமசுந்தரி அவர்கள் அகவணக்கம் செய்யும் போது*
*(மாவீரர்நாள் - டோர்ட்முண்ட், யேர்மனி)*



*சிவகாமசுந்தரி அவர்கள் மிகுந்த துயரோடு*
*நீண்ட அலைச்சல்களின் பின்*
*யேர்மனிக்கு வந்து சேர்ந்த போது*

*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் திலீபன் செல்வகுமாரன்,*
*பேரன் மொறிஸ் பார்த்திபராஜன்,*
*பேத்தி ராதை பார்த்திபராஜன்*

*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 1998)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் திலீபன் செல்வகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 1998)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மூத்த மகள் சந்திரவதனா*
*(டோர்ட்முண்ட், யேர்மனி - 1999)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*கடைசி மகள் பாமா அவர்களின் மூன்றாவது குழந்தை*
*சங்கீதனின் முதலாவது பிறந்தநாளில்*
*(மன்கைம், யேர்மனி - 2000)*





*படத்தில் இடமிருந்து வலமாக:*
*சிவகாமசுந்தரி அவர்களின் மருமகன் சிவநாதன்,*
*பேரக் குழந்தைகள் சங்கீதன், சயந்தன்,*
*மூத்தமகள் சந்திரவதனா, பேத்தி சயானி,*
*கடைசி மகள் பாமா, சிவகாமசுந்தரி அவர்கள்*
*(மன்கைம், யேர்மனி - 2000)*






*சிவகாமசுந்தரி அவர்கள் பேரக்குழந்தைகளுடன்.*
*மகள் பாமா அவர்களின் குழந்தைகள்*
*சயந்தன், சயானி, சங்கீதன்*
*(மன்கைம், யேர்மனி - 2000)*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் ஜனகன்*

*ஜனகன், சிவகாமசுந்தரி அவர்களின்*
*மூத்த புதல்வன் பிறேமராஜன் அவர்களது*
*(கவிஞர் தீட்சண்யன்) மூத்த புதல்வன்*
*(பிரான்ஸ் - 2000)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மூத்தமகள் சந்திரவதனா,*
*பேரன் திலீபன் செல்வகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2001)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் திலீபன் செல்வகுமாரன்.*
*(ஸ்வெபிஸ் ஹால்,*
*யேர்மனி - 2002)*

*சிவகாமசுந்தரி*
*அவர்களுடன்*
*பேத்தி தீபா*
*செல்வகுமாரன்.*
*(ஸ்வெபிஸ்*
*ஹால்,*
*யேர்மனி-2002)*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் துமிலன் செல்வகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2005)*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*நல்லநாதன் சந்திசேகரம் அவர்களும்*
*அவரது மனைவி சந்திரா நல்லநாதன் அவர்களும்.*
*(மன்கைம், யேர்மனி)*

*குழந்தைகள் சயந்தன், சயானி - சிவகாமசுந்தரி அவர்களின் பேரக் குழந்தைகள் (கடைசி மகள் பாமா அவர்களின் குழந்தைகள்)*

*நல்லநாதன் சந்திசேகரம் அவர்களும் சந்திரா நல்லநாதன் அவர்களும் ஆத்தியடியைச் சேர்ந்தவர்கள். சிவகாமசுந்தரி அவர்களின் நெருங்கிய உறவினர்கள். உறவு என்ற முறையையும் தாண்டி எப்போதும் சிவகாமசுந்தரி அவர்களுடன் நட்பையும் நல்லுறவையும் பேணி வந்தவர்கள்.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் திலீபன் செல்வகுமாரன், பூட்டி நதி. நதியின் முதலாவது பிறந்தநாளில்.*

*நதி, பேரன் திலீபனின் புதல்வி. (ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி-2005)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பூட்டி சிந்து. சிந்து, பேத்தி தீபா செல்வகுமாரன் அவர்களின் புதல்வி. (ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2005)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பூட்டி நிலா. நிலா, பேத்தி தீபாவின் புதல்வி. (ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2006)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*அவரது இளைய தம்பி வேல்முருகு (சேவையர்) அவர்களும்*
*மைத்துனி சகுந்தலா வேல்முருகு அவர்களும்,*
*கனடாவிலிருந்து யேர்மனிக்கு சிவகாமசுந்தரி அவர்களிடம்*
*வருகை தந்திருந்த போது*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2008)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் ஜனகன் பிறேமராஜன்,*
*ஜனகனின் மனைவி பரமேஸ்வரி.*
*ஜனகன், பரமேஸ் அவர்களின் பதிவுத் திருமணத்தின் போது*
*(சிங்கப்பூர் - 2008)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் தரணியன்.*
*தரணியன், சிவகாமசுந்தரி அவர்களின் இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி) அவர்களது மூத்த புதல்வன்.*
*(இலண்டன் - 2008)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 12.12.2009)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(மன்கைம், யேர்மனி - 2009)*



*சிவகாமசுந்தரி அவர்கள் பேரன் ஜனகன் பிறேமராஜன் அவர்களின் திருமணத்தில் (போட்ஸ்ஹைறம், யேர்மனி - 11.04.2010)*

*ஜனகன், சிவகாமசுந்தரி அவர்களது மூத்த புதல்வன் பிறேமராஜன்(கவிஞர் தீட்சண்யன்) அவர்களின் புதல்வன்*

*அம்மா மிகவும் சந்தோசமாக இருந்த நாட்களில் இந்த நாளும் ஒரு நாள்.*



*படத்தில்: சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,*
*தங்கை அமரர் திருமதி உமையாம்பிகை புவனேந்திரன்,*
*அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,*
*மன்னி திருமதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்*
*(சிவகாமசுந்தரி அவர்களது ஒன்று விட்டசகோதரன் அமரர்*
*பாலசுப்ரமணியம் அவர்களின் மனைவி),*
*அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரப்பிள்ளைகள்*
*(போட்ஸ்ஹைம், யேர்மனி - 11.04.2010)*

*இடமிருந்து வலமாக:*
*ராதை பார்த்திபராஜன் (கிருஷ்ணராதை)*
*தரணியன் இரவீந்திரகுமாரன்*
*தர்ஷியா (இரவீந்திரகுமாரன்) ராம்கிஷ்*
*திலீபன் செல்வகுமாரன்*
*ரிஷியன் இரவீந்திரகுமாரன்*
*சங்கீதன் சிவநாதன்*
*துமிலன் செல்வகுமாரன்*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரப்பிள்ளைகள்*
*(போட்ஸ்ஹைம், யேர்மனி - 11.04.2010)*

*இடமிருந்து வலமாக:*
*திலீபன் செல்வகுமாரன்*
*ரிஷியன் இரவீந்திரகுமாரன்*
*சங்கீதன் சிவநாதன்*
*துமிலன் செல்வகுமாரன்*
*சயந்தன் சிவநாதன்*
*மொறிஸ் பார்த்திபராஜன்*
*சயானி சிவநாதன்*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மருமகன் மாறன் குமாரசாமி (இளமாறன்),*
*மாறனின் மனைவி வித்யா.*
*(மன்கைம், யேர்மனி - 2010)*

*மாறன் மனைவியுடன் நியூசிலாந்திலிருந்து சிவகாமசுந்தரி அவர்களிடம் யேர்மனிக்கு வந்திருந்த போது.*

*மாறன், சிவகாமசுந்தரி அவர்களது மூத்த தம்பி ஆறுமுகம் குமாரசாமி அவர்களின் கடைசி மகன்.*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(இலண்டன் - 2011)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மைத்துனர் திருச்செல்வம் திருநாவுக்கரசு அவர்களும்*
*அவரது மனைவி ஜெனனீஸ்வரி அவர்களும்.*
*(இலண்டன் - 2011)*

*திருச்செல்வம் அவர்கள் சிவகாமசுந்தரி அவர்களது தாய் மாமன் திருநாவுக்கரசு அவர்களின் இரண்டாவது புதல்வன். சிறுவயதில் இருந்தே "மச்சாள், மச்சாள்" என்று அழைத்து சிவகாமசுந்தரி அவர்களுடன் மிக அன்போடு பழகியவர். இவர், இவரது மூத்த சகோதரி பிறேமா(அமரர்), இவரது சகோதரர்கள் அரசரத்தினம், சாந்தகுமாரன் அனைவருமே சிவகாமசுந்தரி அவர்களின் அன்புக்குரியவர்கள். எப்போதும் அன்போடும் பாசத்தோடும் பழகியவர்கள். திருச்செல்வம் அவர்கள் கனடாவிலிருந்து மனைவி ஜெனனீஸ் அவர்களுடன் யேர்மனி வரை வந்து சிவகாமசுந்தரி அவர்களுடன் சிலநாட்கள் தங்கிச் சென்றவர்.*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி),*
*பேரன் ரிஷியன் இரவீந்திரகுமாரன்,*
*பேத்தி தர்ஷியா (இரவீந்திரகுமாரன்) ராம்கிஷ்.*
*(இலண்டன் - 2011)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் இரண்டாவது புதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி) அவர்கள்.*

*சந்திரா இரவீந்திரன் அவர்கள் ஒவ்வொரு கோடைவிடுமுறைக்கும் இலண்டனிலிருந்து யேர்மனி வரை வந்து அம்மா சிவகாமசுந்தரி அவர்களுடன் ஓரிரு வாரங்கள் தங்கிச் செல்வது வழமை. அப்படி யொரு கோடைவிடுமுறையில்(2012) யேர்மனியில், மன்கைம் நகரில் அம்மாவுடன் மகிழ்ந்திருந்த தருணம்.*




*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*இரண்டாவது புதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி),*
*மூத்தபுதல்வி சந்திரவதனா,*
*இரண்டாவது புதல்வன் பார்த்திபன்(பார்த்திபராஜன்).*
*(மன்கைம் யேர்மனி - 2012)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேத்தி ராதை பார்த்திபராஜன் (கிருஷ்ணராதை),*
*பேத்தி தர்ஷியா (இரவீந்திரகுமாரன்) ராம்கிஷ்.*
*(மன்கைம், யேர்மனி - 2012)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேத்தி ராதிகா (பேரன் திலீபன் செல்வகுமாரனின் மனைவி)*
*பூட்டப்பிள்ளைகள் தீரன், நதி,*
*இரண்டாவது புதல்வன் பார்த்திபன்(பார்த்திபராஜன்),*
*மருமகள் மஞ்சுளா பார்த்திபராஜன்.*
*(மன்கைம், யேர்மனி - 2012)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேத்தி தர்ஷியா ராம்கிஷ்.*
*தர்ஷியா, சிவகாமசுந்தரி அவர்களின் இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி) அவர்களது புதல்வி.*
*(மன்கைம், யேர்மனி - 2012)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பூட்டப்பிள்ளைகள் தீரன், நதி.*
*(பேரன் திலீபன் செல்வகுமாரன் அவர்களது குழந்தைகள்)*
*(மன்கைம், யேர்மனி - 2012)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*(போட்ஸ்ஹைறம், யேர்மனி - 2012)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*அவரது இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*
*குடும்ப ஒன்றுகூடலின் போது.*
*(மன்கைம், யேர்மனி - 2013)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*
*பேத்தி ராதிகா திலீபன், பூட்டி நதி திலீபன்,*
*மூத்தபுதல்வி சந்திரவதனா*
*(மன்கைம், யேர்மனி - 2013)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*
*இரண்டாவது புதல்வன் பார்த்திபன்(பார்த்திபராஜன்)*
*(மன்கைம், யேர்மனி - 2013)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*றஜனா தர்மு, ராதிகா திலீபன், பூட்டி நதி திலீபன்,*
*பேரன் திலீபன் செல்வகுமாரன், தர்மு*
*(சுவிற்சலாந்து - 2014)*

*தர்மு, சிவகாமசுந்தரி அவர்களின் மைந்தன் பாலசபாபதி (கப்டன் மயூரன்) அவர்களது உற்ற நண்பன். சிவகாமசுந்தரி அவர்களை தன் சொந்த அம்மா போல நினைப்பவர். தர்மு, றஜனா இருவருமே சிவகாமசுந்தரி அவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்தவர்கள்.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேத்தி தர்ஷியா ராம்கிஷ். தர்ஷியா, சிவகாமசுந்தரி அவர்களின் இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி) அவர்களது புதல்வி. (போட்ஸ்ஹைறம், யேர்மனி - 2014)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் கௌசிகன் பிறேமராஜன்*
*(மன்கைம், யேர்மனி - 23.04.2014)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் கௌசிகன் பிறேமராஜன்*
*(மன்கைம், யேர்மனி - 23.04.2014)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பூட்டி நதி செல்வகுமாரன்,*
*பேத்தி சயானி சிவநாதன்,*
*பேத்தி ராதை பார்த்திபராஜன்*
*(மன்கைம், யேர்மனி - 23.04.2014)*

*சிவகாமசுந்தரி அவர்களுக்கும் பேரன் கௌசிகனுக்கும் ஒரே நாள்தான் பிறந்தநாள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளுமாக ஒன்று கூடி, மிகவும் எளிதான முறையில் ஆனால் நிறைந்த சந்தோசத்துடன் யேர்மனியில், மன்கைம் நகரில் கொண்டாடிய சிவகாமசுந்தரி அவர்களின் 80வது பிறந்தநாள் இது. கௌசியின் 28வது பிறந்தநாள். கௌசி, சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த புதல்வன் பிறேமராஜன்(தீட்சண்யன்) அவர்களது இரண்டாவது புதல்வன்*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மருமகள் வளர்மதி அவர்களும் அவரது கணவர் ஜெகன் அவர்களும்*
*(மன்கைம், யேர்மனி - 2014)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகள் வளர்மதி அவர்கள்*
*(மன்கைம், யேர்மனி - 2014)*

*வளர்மதி அவர்களும் ஜெகன் அவர்களும் அவுஸ்திரேலியாவில் இருந்து யேர்மனிக்கு சிவகாமசுந்தரி அவர்களிடம் வருகை தந்திருந்த போது. வளர்மதி, சிவகாமசுந்தரி அவர்களின் மூத்ததம்பி குமாரசாமி அவர்களது மூத்த புதல்வி.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் துமிலன் செல்வகுமாரன் அவர்களும்*
*துமிலனின் மனைவி செலினா அவர்களும்.*

*பேரன் துமிலனது திருமணத்தில்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2015)*



சிவகாமசுந்தரி அவர்கள்



சிவகாமசுந்தரி அவர்களுடன்
சுகிர்தா அவர்களும் சாந்தரூபன் அவர்களும்
குழந்தை விஷ்வாவும்

சுகிர்தா, சாந்தரூபன் இருவரும் "மாமி மாமி" என்றழைத்து, சிவகாமசுந்தரி அவர்களுடன் மிகுந்த அன்பையும் நட்பையும் பேணி வந்தவர்கள்.



சிவகாமசுந்தரி அவர்களுடன் ரோகிணி, சூட்டி... குழந்தைகள்.
ஸ்வெபிஸ் ஹால் யேர்மனி 29.08.2018)

சிறுவயதிலிருந்தே ரோகிணி, கேதீஷ், சூட்டி... அனைவருமே "ஆத்தியடி மாமி" என்றழைத்து சிவகாமசுந்தரி அவர்களோடு மிகவும் அன்போடு பழகியவர்கள். சிவகாமசுந்தரி அவர்களின் மல்லிகைக்கலட்டிச் சீனியம்மாவின் பேரக்குழந்தைகள்.





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பூட்டப்பிள்ளைகள் பிரியந்த், பிறேம்சிகா.*
*(பேரன் ஜனகன் பிறேமராஜன் அவர்களின் புதல்வர்கள்)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*ஜனகனின் மனைவி பரமேஸ்வரி*
*பூட்டப்பிள்ளைகள் பிரித்திகா, பிறேம்சிகா, பிரியந்.*
*(பேரன் ஜனகன் பிறேமராஜன் அவர்களின் புதல்வர்கள்)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் ஜனகன் பிறேமராஜன்,*
*பூட்டப்பிள்ளைகள் பிரித்திகா, பிறேம்சிகா, பிரியந்*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பரமேஸ்வரி ஜனகன்,*
*பூட்டப்பிள்ளைகள் பிரியந், பிரித்திகா, பிறேம்சிகா*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி)*

*ஜனகன், சிவகாமசுந்தரி அவர்களது மூத்தபுதல்வன் (தீட்சண்யன்) எஸ்.ரி.பிறேமராஜன் அவர்களின் மூத்த புதல்வன். ஜனகனின் மனைவி பரமேஸ்வரி, சிவகாமசுந்தரி அவர்களது ஒன்று விட்ட சகோதரன் சின்னராசா அவர்களின் புதல்வி.*





சிவகாமசுந்தரி அவர்களுடன்
கலையரசி (றஞ்சி) அவர்களும் யோகேஸ்வரன் அவர்களும்
குழந்தைகள் கயோனா, சுயானி, தமிழவன் ஆகியோரும்.
சிவகாமசுந்தரி அவர்களுடன் தாய், பிள்ளை போன்ற அன்பும் பாசமும்
நிறைந்த நெருக்கமான உறவைக் கொண்டிருந்தவர்கள்.



தக்சாயினி மோகனதாஸ்



பகீந்துஷா சுஜன்



பாலமயூரன் கணேசமூர்த்தி



சிவகாமி பார்த்திபன்

*சிவகாமசுந்தரி அவர்களது பேரப்பிள்ளைகள்.*
*தக்சாயினி, சிவகாமசுந்தரி அவர்களின் மூத்த புதல்வன் பிறேமராஜன் அவர்களது புதல்வி. பகீந்துஷா, பாலமயூரன், சிவகாமி மூவரும் மூன்றாவது புதல்வி சந்திரபிரபா அவர்களது புதல்வர்கள். தாயகத்தில் வாழ்கிறார்கள்.*




*சிவகாமசுந்தரி அவர்களுடன்
பேத்தி தர்ஷியா.
தர்ஷியா, சிவகாமசுந்தரி
அவர்களது
இளையபுதல்வி சந்திரா
இரவீந்திரன் (சந்திரகுமாரி)
அவர்களின் புதல்வி
(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி -
2018)*



*சிவகாமசுந்தரி
அவர்களுடன்
இளையபுதல்வி சந்திரா
இரவீந்திரன்
(சந்திரகுமாரி)
(ஸ்வெபிஸ் ஹால்,
யேர்மனி - 2018)*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேத்தி தீபா செல்வகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2018)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகள் மஞ்சுளா பார்த்திபராஜன், மகன் பார்த்திபன்(பார்த்திபராஜன்), பேத்தி தீபா செல்வகுமாரன், பூட்டி சிந்து (பேத்தி தீபாவின் மூத்த புதல்வி)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பூட்டன் ஒளி, பேத்தி தீபா செல்வகுமாரன், பூட்டி நிலா, பூட்டி சிந்து (பேத்தி தீபாவின் குழந்தைகள்) (ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - டிசம்பர் 2019)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகள் மஞ்சுளா பார்த்திபராஜன், மகன் பார்த்திபன்(பார்த்திபராஜன்), பேத்தி தீபா செல்வகுமாரன், பூட்டி சிந்து (பேத்தி தீபாவின் மூத்த புதல்வி), பேத்தி ராதை பார்த்திபராஜன், பேரன் மொறிஸ் பார்த்திபராஜன்.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேத்தி தீபா செல்வகுமாரன், பூட்டி சிந்து, யூலியன், பூட்டி நிலா, செலினா, பூட்டி மீனா, பூட்டி லானி (ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - டிசம்பர் 2019)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேத்தி தர்ஷியா, ராம்கிஷ்.*
*தர்ஷியா, ராம்கிஷ் இருவரும் இலண்டனில் இருந்து தமது*
*திருமணச்சேதியுடன் வந்து அம்மம்மாவின் ஆசியைப் பேற்றுச் பேன்ற போது.*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2020)*

*தர்ஷியா, சிவகாமசுந்தரி அவர்களின் இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி) அவர்களது புதல்வி*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*இளையபுதல்வி சந்திரா இரவீந்திரன்(சந்திரகுமாரி)*
*பேத்தி தர்ஷியா,*
*மருமகன் இரவீந்திரகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2020)*



சிவகாமசுந்தரி அவர்கள்





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*கடைசி மகள் பாமா, பேரப்பிள்ளைகள் சங்கீதன், சயந்தன்.*
*சிவகாமசுந்தரி அவர்களின் 86வது பிறந்தநாளன்று.*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 23.04.2020)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகன் சிவநாதன்,*
*பேரப்பிள்ளைகள் சயந்தன், சயானி, சங்கீதன்*
*சிவகாமசுந்தரி அவர்களின் 86வது பிறந்தநாளன்று.*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 23.04.2020)*
*அது கொரோனாக்காலம் என்பதால்*
*குடும்ப ஒன்றுகூடல் சாத்தியமற்றிருந்தது.*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரப்பிள்ளைகள் சயந்தன், சயானி, சங்கீதன்*
*(கடைசி மகள் பாமா அவர்களின் புதல்வர்கள்)*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2021)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரப்பிள்ளைகள் சயந்தன், சயானி, சங்கீதன்*
*(கடைசி மகள் பாமா அவர்களின் புதல்வர்கள்),*
*மருமகன் சிவநாதன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2021)*

*அப்போது கொரோனாக் கெடுபிடிகள் நடைமுறையில் இருந்ததால் குடும்ப ஒன்றுகூடல்கள் சாத்தியமற்றுப் போயின. மிகுந்த கட்டுப்பாடுகளின் மத்தியில் கடைசி மகள் பாமாவின் குடும்பம் மன்ஹைம் நகரிலிருந்து ஸ்வெபிஸ் ஹால் நகருக்கு வந்து சிவகாமசுந்தரி அவர்களோடு சில மணி நேரங்கள் நின்று சென்ற போது.*


சிவகாமசுந்தரி அவர்கள்

## சிவகாமசுந்தரி அவர்கள்



## இறுதிப் பத்து மாதங்களில்...



*சிவகாமசுந்தரி அவர்கள்*





*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரப்பிள்ளைகள் சயந்தன், சயானி, சங்கீதன்*
*(கடைசி மகள் பாமா அவர்களின் பிள்ளைகள்)*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2021)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகள் மஞ்சுளா பார்த்திபராஜன்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2021)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் மருமகன் இரவீந்திரகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால் யேர்மனி - 04.09.2021)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் ரிஷியன் இரவீந்திரகுமாரன்*
*(ஸ்வெபிஸ் ஹால் யேர்மனி - 04.09.2021)*




சிவகாமசுந்தரி அவர்கள்





சிவகாமசுந்தரி அவர்கள்



சிவகாமசுந்தரி அவர்கள்
சொற்கள் உருவாக்கும் விளையாட்டின் போது



சிவகாமசுந்தரி அவர்கள்



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரன் துமிலன் செல்வகுமாரன்,*
*பூட்டி லானி.*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 2022)*

*கொரோனாக் கட்டுப்பாடுகள் மிக இறுக்கமாக இருந்த பொழுதில் (பராமரிப்பு நிலையத்தில்)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன் பேரன் திலீபன் செல்வகுமாரன்.*
*அம்மா இறுதியாக எங்கள்(சந்திரவதனா)வீட்டுக்கு வந்த நாள்.*
*பராமரிப்புநிலையத்திலிருந்து திலீபன் அழைத்து வந்திருந்தான்.*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 19.02.2022)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேத்தி தீபா செல்வகுமாரன், பூட்டன் ஒளி.*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி)*




*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*பேரப்பிள்ளைகள் சயந்தன், சயானி, சங்கீதன்*
*(கடைசி மகள் பாமாவின் பிள்ளைகள்)*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி – 16.04.2022)*




*சிவகாமசுந்தரி அவர்களுடன் மூத்த புதல்வி சந்திரவதனா,*
*பேரப்பிள்ளைகள் சயந்தன், சயானி, சங்கீதன்.*
*(கடைசிமகள் பாமாவின் குழந்தைகள்)*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 16.04.2022)*

*கொரோனாக் கட்டுப்பாடுகள் மிக இறுக்கமாக இருந்த நாட்களில் ஒரு நாள் இது. தங்கை பாமா மன்கைம் நகரிலிருந்து தனது குழந்தைகளுடன் வந்து ஸ்வெபிஸ் ஹால் நகரில் மூன்று நாட்கள் தங்கி நின்று முடியுமானவரை தனது பொழுதுகளை அம்மாவுடன் கழித்துச் சென்ற சந்தோசமான நாட்கள் அவை. பராமரிப்பு நிலையத்தில் அம்மாவின் அறைக்குள் ஒருவர் மட்டுமே போவதற்கு அநுமதி இருந்தது. பாமா கதைத்ததில் பிள்ளைகளும் அம்மாவுடன் நிற்பதற்காக, முன்னுக்கு இருக்கும் வரவேற்பறையை எங்களுக்குத் தந்திருந்தார்கள். அம்மா மிகவும் மகிழ்ந்திருந்தா. தங்கை பாமாவின் கலகல பேச்சிலும் சிரிப்பிலும் நானும் மகிழ்ந்திருந்தேன். இரவு பத்துமணியளவில் அம்மாவைப் படுக்க விட்டு விட்டுப் புறப்பட்டோம். அடுத்த தரம் பாமா வரும் போது அம்மா இருக்க மாட்டா என்பது அப்போது எமக்குத் தெரிந்திருக்கவில்லை.* -சந்திரவதனா




*சிவகாமசுந்தரி அவர்கள்*
*88வது பிறந்தநாளில் (23.04.2022)*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி)*



*சிவகாமசுந்தரி அவர்கள்*
*88வது பிறந்தநாளில் (23.04.2022)*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி)*







*சிவகாமசுந்தரி*
*அவர்களுடன்*
*பேரன் திலீபன்,*
*பூட்டி லானி.*
*88வது பிறந்த*
*நாளில்*
*(23.04.2022)*



*சிவகாமசுந்தரி அவர்களுடன்*
*மூத்த புதல்வி சந்திரவதனா அவர்களது குடும்பம்*
*சிவகாமசுந்தரி அவர்களது 88வது பிறந்தநாளில்*
*(ஸ்வெபிஸ் ஹால், யேர்மனி - 23.04.2022)*

*படத்தில்: நதி, தீரன் ராதிகா, திலீபன், சந்திரவதனா, துமிலன் செலினா, மீனா.*


*அம்மாவுடன் சேர்ந்தெடுத்த கடைசிப் படம் இது. கொரோனா நடவடிக்கை காரணமாக பத்துப் பேர் மட்டுமே அம்மாவுடன் சேர்ந்திருக்க அநுமதி கிடைத்திருந்தது. அதிலும் வேற்று நகரங்களில் இருந்து மற்றைய பிள்ளைகள் வருவதற்கு அநுமதியிருக்கவில்லை. தம்பி பார்த்திபன் மட்டும் மன்கைம் நகரிலிருந்து வந்து அம்மாவைச் சந்தித்து விட்டுச் சென்றான். அதன் பின்னரே நாங்கள் அம்மாவுடன் அம்மாவின் 88வது பிறந்தநாளைக் கொண்டாடினோம்.*

*-சந்திரவதனா*





*சிவகாமசுந்தரி தியாகராஜா அவர்களின்*
*இறுதி வணக்க நிகழ்வு (23.05.2022)*












*23.05.2022*




Beloved Moothamami
You will live in our hearts forever


lieber Erinnerung
Thamilalayam Mannheim


Für Amm
Bhama+N


Puvanenthiran



*23.05.2022*

# நன்றி

*அம்மாவின் மீது தாம் கொண்டிருக்கும்*
*அன்பையும் பாசத்தையும் மரியாதையையும்*
*தம் நினைவுகளால் செதுக்கி*
*உணர்வுகளால் எழுத்துருவாக்கி*
*இந்நூலுக்காய் எமக்களித்த*
*அனைத்து உறவுகளுக்கும்*
*எங்கள் அன்பையும் நன்றியையும்*
*தெரிவித்துக் கொள்கிறோம்!*

*சந்திரவதனா செல்வகுமாரன்*
*சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி)*

ஈழத்தில் பிறந்து வளர்ந்த ஒரு சாதாரண பெண் எப்படி ஒரு உன்னதமான தாயாக வாழ்ந்தார் என்பதற்கு உதாரணமாகி நிற்கும் அன்னை சிவகாமசுந்தரி அவர்களின் மானுட நேயமும் காருண்யமும் தாய்மண் மீதான விடுதலை வேட்கையும் தமிழ்மொழிப்பற்றும் அர்ப்பணிப்புகள் நிறைந்த வாழ்வும் இச்சிறு நூலில் முடிந்தவரை பதிவாகியிருக்கிறது.

அவருடன் நெருக்கமாகப் பழகிய, அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட, அவரால் பாதுகாக்கப்பட்ட, அவரால் உயர்ச்சியடைந்த, அவரால் நேசிக்கப் பட்ட, அவரால் ஆறுதல் அளிக்கப்பட்ட, அவரால் நல்வழிப்படுத்தப்பட்ட, அவரால் அறிவூட்டப்பட்ட... வெவ்வேறு உறவுகளின் மறக்க முடியாத அனுபவ நினைவுப் பதிவுகளால் இந்நூல் நிரம்பியிருக்கிறது.

அவரின் வாழ்வு இப்பதிவுகளிற்குள் மட்டும் அடக்கி விட முடியாதது. இந்நூல் ஒரு கையளவான தென்றால் இன்னும் சொல்லப்படாதவை கடலளவு உண்டு எனலாம்.

ஈழப்போர் தின்றுவிட்ட பல மனிதர்களின் குரல்கள் இன்று ஒலிக்குமானால் அன்னை சிவகாமசுந்தரி அவர்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் இந்நூல் ஒரு பெரும் காவிய நூலாகியிருக்கும்.

ஒருவர் பிறந்தார், வாழ்ந்தார், மறைந்தார் என்ற சாதாரண மனித வாழ்வின் வடிவத்தைப் புரட்டிப் போட்டு விட்ட, அன்னை சிவகாமசுந்தரி அவர்கள் எண்ணுக்கணக்கற்றோரின் நினைவுகள் வழியாக, இப்பிரபஞ்சத்தின் ஏதோவொரு புள்ளியில் நெடுஞ்சுடராகப் பிரகாசித்துக்கொண்டேயிருப்பார்!

www.manaosai.com
ISBN 978-3-981300-29-1